
தொல்காப்பியப் பூங்கா



கலைஞர் மு. கருணாநிதி

தொல்காப்பியப் பூங்கா

தி.மு.க. அறக்கட்டளை
பேராசிரியர் ஆய்வக நூல் நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

கலைஞர் மு. கருணாநிதி

தமிழ்க்கனி பதிப்பகம்
சென்னை - 600 004

உரிமை – ஆசிரியருக்கே


முதற் பதிப்பு – சனவரி 2003



18269
தி 394.8111409

விலை – ரூ. 500

அச்சிட்டோர் : ஈகிள் அச்சகம், சென்னை.



அரசியல் கோடைத் தடையே நிலப் பரப்பைத்
தடித்திடும் தரு நிழலாக நாம் நிலவியற்றுக்
கருதுவதை உணர்ந்துள்ள என் சிந்தனைத் திறன்
தம்பி முதலான மாறன் தான்;

இந்தத் தொல்காப்பியப் புலவனை
உலகம் நிற்கும் வரை நாம் என்பதை நிலைநாட்டி
விடும் பொறுப்பு தம்பிகளுக்கு உண்டு.

17/12/2002

பதிப்புரை

தொல்காப்பிய நூற்பாக்கள் எல்லாவற்றையும் ஒவ்வொன்றாகக் குறிப்பிட்டு அவற்றுக்கு உரையெழுதும் முயற்சியில் ஈடுபடும் குறிக்கோள் இன்மையால் தொல்காப்பியத்தில் பகுக்கப் பெற்றுள்ள தலையாய அதிகாரங்கள், அந்த அதிகாரங்களில் வகுக்கப் பெற்றுள்ள இயல்கள் அனைத்தையும் எடுத்துக் கொள்ளாமல், சங்க இலக்கியங்களில் 135 பாடல்களுக்கு மட்டும், சொல்லோவியம் ஆகக் கவிதை நடையில் தீட்டிச் "சங்கத் தமிழ்" வழங்கியது போலவும் – திருக்குறளில் மொத்தமாக 354 குறட்பாக்களை வைத்துக் "குறளோவியம்" வழங்கியது போலவும், தொல்காப்பியத்திலும் குறிப்பிட்ட எண்ணிக்கையளவு நூற்பாக்களைத் திரட்டி ஒவ்வொன்றுக்கும் "மலர்" என எண் தந்து, "தொல்காப்பியப் பூங்கா" எனும் தலைப்பில் கலைஞர் அவர்கள் எழுதியுள்ள இந்நூல் தமிழர்தம் இதயங்களுக்கு எழுச்சியூட்டும் எனும் நம்பிக்கையுடன் வெளியிடப்படுகிறது.

தமிழ்க்கனி பதிப்பகத்தார்,
சென்னை.

பூங்காவின் உள்ளே...

மலர் எண்.	தலைப்பு	அதிகாரம்	இயல்	நூற்பா	பக்கம் எண்.
1.	எழுத்து	எழுத்து	நூல் மரபு	1, 2	41
2.	உயிரும் மெய்யும்	,,	,,	8, 9	46
3.	உயிர் மெய்	,,	,,	18	51
4.	மருந்து மாத்திரை	,,	,,	3, 4, 7,11	55
5.	இன ஒற்றுமை	,,	,,	19, 20, 21	62
6.	பிறப்பியல் பெருமை	,,	பிறப்பியல்	1	67
7.	உடம்படுமெய்	,,	புணரியல்	38	73
8.	மானம்	,,	உயிர் மயங் கியல்	69	78
9.	சோழன்	,,	தொகை மரபு	13	85
10.	எழுத்தின் அணி	,,	பிறப்பியல்	19	90
11.	இலக்கணத் துறவு	சொல்	கிளவியாக்கம்	27	94
12.	சொல்லோவியம்	,,	,,	62	99
13.	வணிகத் திறன்	,,	,,	35	104
14.	எனது மகனா ?	,,	வேற்றுமை மயங்கியல்	11	110
15.	கதம்பக் கனவு	,,	கிளவியாக்கம்	12	116
16.	பெண் மகன்	,,	பெயரியல்	10, 40	123
17.	வடித்துவிட்டேன்; வந்துவிட்டேன்	,,	வினையியல்	44	129
18.	முதல் பொருள்	பொருள்	அகத்திணை இயல்	5	134
19.	நிலமும் பொழுதும்	,,	,,	6,7,8,9,10,12	138
20.	தலைமைத் தகுதி	,,	,,	18,19,21,22,24	143
21.	நிலம் ஆண்ட நேர்த்தி	,,	,,	20,26,27,28,29	147
22.	மறுப்புக்குப் பரிசு	,,	,,	34	150
23.	மகளிர் மடல்	,,	,,	35	157
24.	இடையில் ஓர் எளிய விளக்கம்				162

மலர் எண்.	தலைப்பு	அதிகாரம்	இயல்	நூற்பா	பக்கம் எண்.
25.	அவள் தானே தாய்	பொருள்	அகத்திணை இயல்	36	167
26.	தோழியின் தொண்டு பெரிதே	,,	,,	39	172
27.	துன்பத்தில் இன்பம்	,,	,,	40	177
28.	தலைமகன் நிலைமையும் கடமையும்	,,	,,	41	185
29.	பூம்பொய்கையின் புலம்பல்	,,	,,	48	190
30.	மருதநாயகி	,,	,,	50	195
31.	பெருந்திணை	,,	,,	51	202
32.	மானமும் வீரமும் காத்த மறவர்	,,	புறத்திணை இயல்	2, 3	206
33.	நடுகல்லானவன்	,,	,,	5	213
34.	வல்லவனுக்கு வல்லவன்	,,	,,	7, 8	218
35.	அந்தப் பொற்காலம்	,,	,,	13	223
36.	எருமை மறம்	,,	,,	15,16,19	230
37.	வாகைத் திணை	,,	,,	20	237
38.	இருளிலும் ஒளி	,,	,,	21	246
39.	காஞ்சித் திணை	,,	,,	24	250
40.	தமிழ் வழி; தனி வழி	,,	களவியல்	1	257
41.	'தெய்வ மகள்' அவள் யாரோ ?	,,	,,	4	263
42.	விழியாலே மொழி பேசி	,,	,,	5,6,7,8	268
43.	காதலால் கசிந்துருகி	,,	,,	9	273
44.	எரிந்தது ஈர விறகு	,,	,,	11	279
45.	நாணமா ? மானமா ?	,,	,,	22	285
46.	இருபொருள் – ஒரு விளக்கம்!	,,	,,	44,45	291
47.	கற்பியல்	,,	கற்பியல்	1,2,3	297
48.	அய்யர் யாத்தனர் கரணம்	,,	களவியல் கற்பியல்	48,49 4	301
49.	களவும் கற்பும்	,,	கற்பியல்	5	308
50.	குடும்ப விளக்கு	,,	,,	5	315
51.	குமரன் தூது	,,	,,	5	321
52.	ஒரு பெண்ணின் வெற்றி	,,	,,	6	326

மலர் எண்.	தலைப்பு	அதிகாரம்	இயல்	நூற்பா	பக்கம் எண்.
53.	சுற்றுலா	பொருள்	கற்பியல்	50	332
54.	களத்தில் வீரன்	,,	,,	45	335
55.	போரில் மகளிர்	,,	,,	34, 35	338
56.	புரவியும் பறவையும் தோற்கும்	,,	,,	53	340
57.	பேறு எது.	,,	,,	51	343
58.	ஒரு பாற் கூற்று	,,	பொருளியல்	2	346
59.	உள்ளம் என்ன உரைத்தது ?	,,	,,	9, 10	350
60.	மகளிர் மாண்பு	,,	,,	15	353
61.	நரியை நனையாமல்..	,,	,,	16	358
62.	சொல்லுங்கள் கேட் கிறோம்;	,,	,,	23	363
63.	நாணம் எனும் உயிர்ப் பண்பு	,,	,,	25	368
64.	இன்பம் எங்கே ?	,,	,,	29	372
65.	விடை கிடைக்குமா.	,,	,,	31	376
66.	உயர்வும் பணிவும்	,,	,,	33	379
67.	மெய்யன்பர் அறியாத மெய்	,,	,,	35,36,37	383
68.	மாறும் மதிப்பு	,,	,,	51	391
69.	மன உணர்வினால் மட்டுமே!	,,	,,	53	395
70.	எட்டுச்சுவை கொட்டும் இயல்	,,	மெய்ப்பாட்டியல்	3	399
71.	மெய்ப்பாட்டுக்கு மேலும் விளக்கம்	,,	,,	1	402
72.	நகை நான்கு	,,	,,	4	406
73.	அழுகை நான்கு	,,	,,	5	412
74.	இளிவரல் நான்கு	,,	,,	6	418
75.	மருட்கை நான்கே	,,	,,	7	422
76.	அச்சம் நான்கு	,,	,,	8	426
77.	பெருமிதம் நான்கு	,,	,,	9	430
78.	வெகுளி நான்கே	,,	,,	10	434
79.	உவகை நான்கு	,,	,,	11	436
80.	முதல்நிலை மெய்ப்பாடுகள்	,,	,,	13	439
81.	இரண்டாம் நிலை மெய்ப்பாடுகள்	,,	,,	14	443
82.	மூன்றாம் நிலை மெய்ப்பாடுகள்	,,	,,	15	446

மலர் எண்.	தலைப்பு	அதிகாரம்	இயல்	நூற்பா	பக்கம் எண்.
83.	நான்காம்நிலை மெய்ப்பாடுகள்	பொருள்	மெய்ப்பாட்டியல்	16	449
84.	ஐந்தாம் நிலை மெய்ப்பாடுகள்	,,	,,	17	452
85.	ஆறாம் நிலை மெய்ப்பாடுகள்	,,	,,	18	457
86.	உவமை அறிவோம்	,,	உவமையியல்	2	460
87.	உவமையின் சிறப்பு	,,	,,	3	465
88.	உவமை நிலைக்களம்	,,	,,	4	467
89.	ஐந்தாம் நிலைக் களமிது	,,	,,	5	472
90.	காக்கையும் மயிலும்	,,	,,	8	476
91.	உருவகமா உவமையா ?	,,	,,	9	479
92.	வெள்ளைவாரணனார் விளக்கம்	,,	மரபியல்	6	482
93.	அன்றே வளர்ந்திருந்த அறிவியல்	,,	,,	27, 28, 29, 30	489
94.	வழக்கில் இருந்தது	,,	,,	48	493
95.	கலைநிகழ்ச்சியும் களிறு பரிசும்	,,	,,	35,36,47	497
96.	ஐந்து பூதங்கள்	,,	மரபியல்	91	501
97.	உணர்ந்தோர் அறிவர்; அறிந்தோர் உணர்வர்	,,	,,	92	504
98.	முதல் நூலும் வழி நூலும்	,,	,,	93,95,97,98	512
99.	குன்றத்து விளக்காகும்	,,	,,	109	518
100.	நூறாவது மலர்	,,	,,	111	523

அணிந்துரை



பேராசிரியர் அன்பழகனார்

தொல்லுலகில் தோன்றிய மூத்த குடியினர், வாயொலியால் குறிப்புணர்த்திப் பேசத் தலைப்பட்ட நாள்முதல், ஒரு மொழியாய் வடிவுகொண்டு வளர்ந்த, உலக மொழிகளின் தாய் எனவும், முதிர்ந்த நாகரிக மேன்மை காட்டும் தொன்ம இலக்கிய வளங்கொண்ட உயர்தனிச் செம்மொழி எனவும்; "என்று பிறந்தவளோ எங்கள் தாய்" என்று வியப்புறச் செய்வதாயினும் இன்றும் வழக்கிறவாது வாழும் தனித் தகுதியுடைய பண்பாட்டு மொழி எனவும், மொழி நூலறிஞர் பலராலும் பாராட்டப்படுவது, நம்மைத் தமிழர் என உலகிற்கு அடையாளம் காட்டி நிற்கும் நம் தாய்மொழி தமிழாம்.

ஒரு மொழியின் சிறப்பு, தொன்று தொட்டு வரும் அதன் இலக்கிய வளத்தாலும்,

செய்யுள் சிறப்பாலும், சிந்தை மகிழ்விக்கும்
அதன் கருத்து நலத்தாலும், மனம் களிப்புறச்
செய்யும் அதன் வழிப்பிறந்த கலைகளின்
திறத்தாலும் அமைவதெனினும், அந்த மொழி
காலத்தால் இடையீடுபடாதும் வழக்குத்
தொடர்ச்சியிழந்து திரிபடைந்து வேற்று மொழி
ஆகாமலும் இருப்பது, அந்த மொழியின்
மரபினைக் காத்து நிற்கும் இலக்கணத்தைப்
பெற்றிருப்பதாலேயே ஆவதாம்.

அவ்வகையில் தமிழில் பிறந்த சங்கத்
தொகை நூல்களின் செய்யுளுக்கும்,
எப்பாலவரும் போற்றும் அய்யன்
திருவள்ளுவரின் முப்பாலாம் திருக்குறளுக்கும்
முற்படத் தோன்றிய ஒல்காப் புகழ்
தொல்காப்பியம் ஓர் ஒப்பற்ற இலக்கண
நூலாய்த் திகழ்வதாம். "இலக்கியம் கண்டதற்
கன்றே இலக்கணம்" கூறலாகும் என்பதை
மெய்ப்பிக்கும் வகையில், அதற்கு முன்னரே
தமிழில் தோன்றி வழங்கிய செய்யுள்
இலக்கியங்களும் – இலக்கண நூல்களும் மிகப்
பலவாகும். முத்தமிழும் வளர்த்த
முச்சங்கங்களுள், தலை, இடைச் சங்கங்கள்
இரண்டின் காலத்திலும் வழங்கிப் பின்னர்
கடல்கோள் முதலானவற்றால் அழிவுற்ற
ஏடுகளின் பட்டியல், இன்று நாம் பெற்றுள்ள
தமிழ் ஏடுகளின் எண்ணிக்கையைவிடப்
பெரிதாகும். தொல்காப்பிய நூலினுள் பல
சூத்திரங்களில் சொல்லப்பட்ட செய்தி,
முன்னரும் பலரால் சொல்லப்பட்டுள்ளது எனக்

காட்ட "என்மனார் புலவர்; என்றிசினோரே" என்று பல இடங்களில் சுட்டுவதனால் தெளியலாம்.

அதனால் நீடித்த தொன்மையுடைய மரபு வழிப்பட்டதே தொல்காப்பியம். பரமசிவன் அறிவுறுத்தலின் பயனாய் அகத்தியர் படைத்த மொழி "தமிழ்" என்பதோ, அவர் இயற்றியதென்னும் அகத்தியம் என்னும் நூலே தொல்காப்பியத்திற்கு மூலநூல் என்பதோ உண்மையாவதற்கு ஏதுவில்லை. மேலும், தமிழ்மொழியின் தனித்தன்மையையும், தொன்மையையும் மறைக்க "அகத்தியர்" பெயரால் செய்த கற்பனையைக் குறிப்பாக மறுத்தற் பொருட்டே, "என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டான் அகத்தியன்" என்றார் கம்பரும்.

எனவே, தொல்காப்பியத்திற்கு முதல்நூல் அகத்தியம் என்று கொள்வதற்கு இடமில்லை. மாறாகச் செய்யுள் வழக்கினும், உலகோர் வழக்கினும் பலகாலமாய் இடம்பெற்று, நூல்கள் பலவற்றிலும் இடம் பெற்ற பல செய்திகளும், தொல்காப்பியரால் எடுத்தாளப் பெற்றிருத்தல் இயல்பே எனலாம். ஆயினும் எழுத்து, சொல், பொருள் மூன்றன் இலக்கணமும் விவரித்திடும் விரிவானதொரு நூல், அக்காலத்தில் வேறு இல்லையாதலின், அதுவே முதல்நூல் ஆகும் என்பதில் ஐயமில்லை.

மேலும், தொல்காப்பியர் வடமொழியிலும் தேர்ச்சியுடையவர் என்று கருதினும், வடமொழி இலக்கண நூல்கள் எனப்படும் ஐந்திரமோ, பாணினியமோ, தொல்காப்பியர் காலத்துக்கு முன் தோன்றியன அல்ல என்பதாலும், ஒருவேளை இருந்தன எனினும் வேற்றுமொழி எழுத்திலக்கணம், முன்னரே பிறந்த ஒரு மொழி எழுத்துக்கு இலக்கணமாக முடியாமையானும்; சொல்லும், அதன் புணர்ச்சிகளும், சொற்றொடர்களும் மக்கள் வழக்கில் மரபாக நிலைத்தவையாகலின் பிறமொழி இலக்கணம் பயன்படாமையானும்; "பொருள்" என்னும் அறிவுசால் வாழ்க்கை இலக்கணம், வடமொழியில் என்றும் தோன்றாமையானும், வடமொழி நூல் எதுவும் முதல் நூல் ஆக வழியில்லை. மேலும், பிறமொழி இலக்கண நூலார் எவரும் எழுத்துக்கும் – சொல்லுக்கும் மட்டுமே இலக்கணம் காண்பர்.

பிற்காலத்தில்தான் செய்யுள் யாப்பும் (கட்டும்), கருத்துக்கு அழகு செய்யும் அணியும் குறித்து இலக்கணம் செய்வாராயினர். ஆனால், தொல்காப்பியனார் விவரித்த "பொருள்" இலக்கணம் குறித்த சிந்தையே வடமொழியாளரிடத்தில், என்றும் எழவில்லை. "பொருள்" என்றது சொல்லின் பொருள் விளக்கம் கருதியது அன்று. அது வாழ்க்கை விளக்கம். அதுவும் இலக்கியத்தில் இடம்பெறும் முறையையும் வகையையும் விளக்குவது. அகமும் புறமுமாய்ப் பகுக்கப் பெற்ற இலக்கிய

உலகில் அகத்திணை, புறத்திணை எனவும், களவு – கற்பு எனவும் பிறவாரும் வகை செய்யப்பட்டு, உலகியல் வாழ்வில் இணையும் ஆடவரும் மகளிரும் ஆன இருசாரரும் எய்தும் உணர்வுகளைப் புலப்படுத்தும் காட்சிகளைச் செய்யுளாக்குவதற்கு உரிய இலக்கணத்தை விவரிக்கும் தனிச்சிறப்புடையதாம்.

வடவேங்கடம் – தென்குமரி
எல்லைகட்கு அப்பாலும் விரிந்து கிடந்த தமிழ்நிலத்தில், காலங்காலமாக வளர்ந்த நானில நாகரிகத்தின் வழிப்பட்டதாய் வளர்ந்த களவும் கற்புமாகிய தலைவன் தலைவி ஒழுக்கத்தினையும், அதனால் அவர்கள் எய்தும் மெய்ப்பாட்டினையும் குழப்பமின்றித் தெளிந்திடத் துணையாக, கூடுதல், இருத்தல், ஊடல், இரங்கல், பிரிதல் ஆகிய ஒழுக்கத்தை ஐந்திணைக் காட்சிகளால் புலப்படுத்த, ஐவகை நிலத்தையும் அதன் முதல், கரு, உரிப் பொருள்களையும் பின்னணியாகக் கொண்டதாகச் செய்யுள் இலக்கியம் படைப்பாராயினர்.

தமிழ் இலக்கணம் வகுத்த "பொருள்", வாழ்க்கையேயே பொருளாகக் கொண்டு, அதனைத் தெளியச் செய்வதையே நோக்கமாகக் கொண்டு, அதற்கெனவே திணையும் – துறையும் வகுத்து, அந்த மரபு கெடாமல் – செய்யுள் (பா) இயற்றுவதையே முறையெனக் கொண்டது எனில், அந்நாளில் தமிழர் "அறம் பொருள் இன்பம்" ஆகிய

மூன்றையே குறிக்கொண்ட "வாழ்வை"யே "பொருள்" என்றும், மாந்தர் வாழ்வில் அடைய வேண்டிய புருஷார்த்தம் என்னும் பேறே "பொருள்" என்றும் மதித்தனர் எனலாம். தமிழ் அறியாத ஆரிய மன்னன் பிருஹத்தனனுக்கும், தமிழ் கற்பிக்க முற்பட்ட கபிலர் "பொருள்" (வாழ்க்கை) அடியாகும் களவை விளக்கும், இறையனார் களவியலைக் கற்பித்தார் என்னும் கருத்தும், "பொருள்" இலக்கணம் வகுத்த தமிழின் தனிச்சிறப்பை உணர்த்தும்.

ஆம்! தமிழையே தமது மூச்சாகக் கொண்டு, "தமிழ் வாழ நாம் வாழ்வோம், தமிழ் தாழ நாம் தாழ்வோம்" என்னும் உணர்வுடன், தமிழிற்குத் தொண்டு செய்வதையே தமது குறிக்கோளாக ஏற்று, தமிழிற்குப் பெருமை சேர்க்கும் பணிகள் பலவற்றை நிறைவேற்றியவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் என்பதை நாடறியும்; அவரை எந்நாளும் போற்றி வாழ்த்திடவும் செய்யும்!

கலைத்துறையில், நாடகத்தில், திரைக்கதையில், தீட்டப்பட்ட வசனத்தில், பாடலில் இடம்பெறச் செய்த கருத்தின்மூலம், தமிழர்களிடையில் ஒரு மகத்தான மறுமலர்ச்சி கண்டவர் கலைஞர்.

எழுத்துலகில், ஏடு நடத்துவதில், சிறுகதை – புதினம் வரைவதில், மடல்கள் தீட்டுவதில், அரசியல் கொள்கை விளக்கம் செய்வதில், மேடைப் பேச்சில், நிருபர்களின்

வினாவுக்கு விடை அளிப்பதில், திராவிடர் இயக்கத்தை வழி நடத்துவதில், நண்பர்களுடன் உரையாடுவதில், சட்டமன்றத்தை இயக்குவதில், அரசு நிருவாக இயந்திரத்தைச் செயற்படுத்துவதில், மக்களுக்கான திட்டங்கள் தீட்டுவதில், முதலமைச்சர் பொறுப்பைக் கண்ணியத்துடன் மேற்கொள்வதில் என்று குறிப்பிடக் கூடிய ஒவ்வொரு கடமையிலும் தனித்திறமை காட்டி முத்திரை பதித்தவர் கலைஞர்.

தந்தை பெரியாருக்கும், அறிஞர் அண்ணாவுக்கும் பின்னர், அவர்தம் வழி நின்று அடியொற்றிப் பின்பற்றிச் செயற்படுபவர் எனினும், பல வகையில் பல துறையில் மாற்றமும் வளர்ச்சியும் கண்ட முன்னோடி அவர்.

தமிழ் இலக்கியத்துறையில், அவரது புதுக்கவிதை எப்படியெல்லாம் வடிவம் பெற்றுச் சுவை சேர்த்துள்ளது என்பதை நாமறிவோம்.

அவர் தீட்டிய சங்கத்தமிழ் – சங்ககால இலக்கியத்தின் பொருள் சுவையை இருபதாம் நூற்றாண்டின் இனிய தமிழில் இசைத்திட வைத்தது. அவரது "குறளோவியம்" படிக்கப் படிக்கத் தெவிட்டாதத் தேனாக, குறள் கருத்தாம், அருமருந்தைக் குழைத்தளித்து, தமிழர்தம் வாழ்வில் படிந்திருந்த நோயை மாற்றிடும் திறனுடையதாயிற்று.

அவர் இயற்றிய "பூம்புகார்" சிலம்பு தந்த இளங்கோ அடிகளாரின் குறிக்கோள் வெற்றி

பெற, அனைவர் உள்ளத்திலும் தமிழுணர்வு தழைக்க வைத்தது.

முத்தமிழ்க் காப்பியமாம் சிலம்பு,
இயற்கை எழில் தவழ தமிழரின் அகமும்–புறமும் மலரும் சங்க இலக்கியம், அறம் பொருள் இன்பம் மூன்றே வாழ்வின் பேறு எனப் புலப்படுத்தும் திருக்குறள் ஆகிய மூன்றினையும், கற்றோரும் கல்லாதவரும் ஒருங்கே உணர்ந்து மகிழுமாறும், நாடு நல்வழிப்பட்டுத் தமிழர் ஏற்றம் பெறுமாறும் வழங்கிய முத்தமிழ் வித்தகர் கலைஞர், இதுகாலைத் தமிழர் பலரும் அறிந்திருக்க வேண்டிய பயன்மிகு நூல் ஒல்காப்புகழ் தொல்காப்பியம் என்னும் உணர்வுடன் "தொல்காப்பியப் பூங்கா"வை நமக்கு வழங்கியுள்ளார்.

"ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப் பல் புகழ் நிறுத்தப் படிமையோனே" எனப் பனம்பாரனார் பாடிய சிறப்புப் பாயிரம் கூறுவதால், தொல்காப்பியன் எனத் தன் பெயர் விளங்கிடுமாறு தொல்காப்பியம் இயற்றியோன் என்று கருதவும் இடந்தருகிறது.

அவ்வகையில், தொன்மையாக வந்த மரபைக் காத்து நிற்கும் காப்பியமாகத் 'தொல் – காப்பு – இயம்' இயற்றியோன் – 'தொல்காப்பியன்' எனப்பட்டான் என்பது ஏற்புடையதாம்.

தொல்காப்பியம் உருக்கொண்ட சூழலில், ஆரிய வைதிக வழிப்பட்ட கருத்துக்களோ, பிற சமயக் கொள்கைகளோ அச்சார்பு நிலையால் மக்களைப் பிரித்திடுமாறு செல்வாக்குப் பெறவில்லை. தொல்காப்பியரும் ஓர் அறிவராகவே – சாதி, மத உணர்வுக்கு ஆட்படாதவராகவே விளங்கியவர் என்பதற்கு இந்நூலே சான்று.

ஆயினும் தொன்மையான இந்நூலில் இடம் பெற்றுள்ள சில பல சூத்திரங்களுக்குப் பொருள் காணும்வகையில் சில கருத்து வேறுபாடுகள் எழுகின்றன. குறிப்பாக – இந்நூலுக்கு உரை கண்ட பழைய உரை ஆசிரியர்கள் அனைவரும் மிகவும் பிற்காலத்தினராதலின், அவரவர் காலத்துச் சமயத் தாக்குரவுகளுக்கு ஏற்ப அவர்தம் உரைக் கருத்துக்கள் அமைந்துள்ளன. குறிப்பாக நச்சினார்க்கினியரின் உரை, தொல்காப்பியத்தின் தனிச் சிறப்பைச் சிதைப்பதாக உள்ளதெனப் பலரும் உரைப்பர். ஆயினும் – இடைக் காலத்தில் அறிஞர் பலர் உரை எழுத முற்பட்டமையினாலேதான், இந்த நூல் – கால வெள்ளத்தால் மறையாமல் காப்பாற்றப்பட்டுள்ளதையும், அதுவே இன்று தமிழன்னையின் மணி மகுடமாகவும், தமிழ் நாகரிகம் தழைத்த கடற்கரையின் கலங்கரை விளக்கமாகவும் நமக்கு வாய்த்துள்ளதை மறக்கலாகாது.

அந்நூலின் அருமையும் பெருமையும் எப்படிப்பட்டதாயினும் – தொன்மைக்கால நடையில் இயன்ற ஓர் இலக்கண நூல் என்பதால், பல நூல் கற்றவரேயாயினும் இதனைக் கற்க முற்படுவதில்லை. எனவே தமிழர்தம் தனிப் பெருமைக்கு ஏதுவாவதைத் தமிழர்களே அறிந்து கொள்ள ஆர்வம் கொள்ளாத நிலையில், தமிழர்கள் தங்களை அறிவதோ – தன்னம்பிக்கை கொள்வதோ, இனப் பெருமையைக் காக்கும் உள்ளத்து உரம் பெறுவதோ ஒல்லுவதல்லவே!

அதனால்தான் கலைஞர் மு. கருணாநிதி அவர்கள் தொல்காப்பியத்தினை மக்களிடம் கொண்டு செல்ல வேண்டும் என்னும் வேணவாவுடன், மக்கள் படிக்க விரும்பும் எளிய நடையில், படிப்பவர் ஆர்வத்தை வளர்க்கும் சுவையான கதைக் குறிப்புக்களுடனும், நினைவில் நிறுத்தத் துணையாகும் வரலாற்று விளக்கச் செய்திகளுடனும் இந்தப் பூங்காவை இயற்றியுள்ளார்.

தொல்காப்பியப் பூங்காவில் இடம்பெறும் சூத்திரங்களின் கருத்தை அவர் தெளியவைக்கும் நுண்மாண் நுழைபுலத்திறன் வியப்பளிப்பது.

தமிழில் 'க்' என்ற மெய்யெழுத்தே கருணாநிதி என்றும், அதனுடன் 'அ' என்னும் உயிர் சேர்ந்ததால்தான் – 'க' என்னும் உயிர்மெய் எழுத்தாகி, அவர் பெயரில் முதலாக அமைந்தது என்றும் கூறியுள்ளதை நோக்கின்,

அண்ணாவின் இதயத்தை இரவலாகப் பெற்ற கலைஞர் – அண்ணாவையே தமது உயிராகப் போற்றி ஏற்றிட்ட உணர்வுடையவர் என்பதை உணர்த்துகிறது "உயிர்மெய்" என்னும் மலர்.

'மருந்து மாத்திரை' என்னும் தலைப்பில் எழுத்து இசைக்கும் ஒலி அளவை மாத்திரையாகக் குறிக்கும் வழக்கை விளக்குவதற்கு நோயாளிக்கு மருத்துவச்சி – மாத்திரை தரும் செய்தியைப் பயன்படுத்துகிறார், படிப்பவர் மாத்திரையை மறவாமல் இருக்க.

'கதம்பக் கனவு', 'பெண் மகன்' முதலான பல மலர்கள், சுவையான கற்பனை ஓவியங்களாக அமைந்து – அது ஓர் இலக்கணத்தைத் தெளிவிப்பதற்கு என்பதையே மறக்கச் செய்கிறது.

'இடையில் ஓர் விளக்கம்' என்னும் "மலர்" தமிழர் நாகரிகத்தை விளக்கும் பொருள் இலக்கணத்தில் வரும் 'திணை' என்பது ஒழுக்கம் அடியாக அமைந்த பெயர் எனத் தெளிவாக்குவது மிகவும் பயன்தரும் விளக்கமாகும்.

'துன்பத்தில் இன்பம்' என்னும் மலரின் மணத்தை நுகர்ந்திட ஏதுவாக, சிறப்பானவை எவையாயினும் அவை பிறந்த இடத்திற்கே உரியதாகாமல் அவற்றினைப் பயன் கொள்வோர்க்கே உரிமையாவதை உணர்த்தும் பாலைக்கலி பாடலை எடுத்தாண்டிருப்பது தமிழ் மணம் பரப்பு கின்றது.

"பூம்பொய்கையின் புலம்பலில்"
உள்ளுறை உவமம் உணர்த்தும் பொருளைப்
படிப்பவர் தெளியும் முறையை விவரிப்பதினும்,
"மருதநாயகி" என்னும் தலைப்பில், துஷ்யந்தன்
– சகுந்தலை நாடகக் காட்சியுடன் துஷ்யந்தன்
ஆக நடிப்பவர் சகுந்தலையாக
நடிப்பவருக்கிடையில் நடந்த உரையாடலைச்
சித்தரிப்பதன் மூலம் – கைக்கிளையை
விளக்கி இருப்பதிலும் கலைஞரின் கற்பனை
சிறக்கின்றது.

"வாகைத்திணை" என்னும் மலரில்,
அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும் என்று
தொடங்கும் நூற்பாவைக் கொண்டு, பல
வரலாற்றுச் செய்திகளை விளக்கியுள்ளார்.
அறுவகைப் பட்டவர் என்பது – ஓதல்,
ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல்
என்னும் ஆறு தொழில்களை உடையவர் என்றே
பல காலமாகப் பொருள் செய்யப்பட்டு
வருவதாயினும், அவை ஒவ்வொன்றும் ஒரு
தொழில் எனல் தகுமா? என்னும் கேள்வியும்
எழுந்துள்ளது. ஐவகை மரபின் அரசு –
என்பதும் அவ்வாறே சில ஐயங்களை
எழுப்புகிறது. இவற்றைக் குறித்துச் சிந்திக்கத்
தூண்டுவதுடன், இதுகாறும் உணர்த்தப்பட்ட
கருத்தை எல்லாம் விவரமாக
எடுத்துக்காட்டுகின்றார் கலைஞர்.

இவ்வாறு ஒவ்வொரு மலரும் கலைஞரின்
அறிவுத்திறனாலும் – எழுத்தாற்றலானும் அது
ஓர் இலக்கியமாகவே இலங்கக் காண்கிறேன்.

பூங்காவின் மலர்கள் பலவும் புதுக்கவிதை வடிவிலேயே மலர்ந்து சூத்திரத்தின் விளக்கமாக அமைந்துள்ளன.

'கற்பியல்' தலைப்பில் தரும் விளக்கமும்; 'அய்யர் யாத்தனர் கரணம்' என்னும் தலைப்பில் எடுத்துரைக்கும் 'அய்யர்' என்னும் சொற் பொருள் விளக்கமும், 'கரணம்' என்பதன் பொருளும் மிகவும் சிறப்பானவை. அதனை அடுத்து வரும் "களவும் கற்பும்" பொருளதிகாரத்தின் உயிர்நாடியாய் விளங்கும் – தமிழர் வாழ்வின் மாண்பை உணர்த்துகின்றது.

'எட்டுச்சுவை கொட்டும் இயல்' என்னும் மலர் தொடங்கி, "மெய்ப் பாட்டுக்கு விளக்கமாகத் தொடரும், 'நகை நான்கு', 'அழுகை நான்கு', 'இளிவரல் நான்கு', 'மருட்கை நான்கு', 'அச்சம் நான்கு', 'பெருமிதம் நான்கு', 'வெகுளி நான்கே' 'உவகை நான்கு' ஆகிய மலர்களில், குறிப்பிட்ட மெய்ப்பாடு தோன்றுவதற்கான சூழ்நிலையையும், மன நிலையையும் விளக்குகின்ற கலைஞரின் திறம் வியப்பினை ஏற்படுத்துகின்றது.

ஓர் சுரைக் குடுக்கையில், மாம்பழச் சாற்றை நிறைத்து வைத்து விட்டு, அதன் எப்பக்கத்தில் துளையிட்டுப் பருகினும், அத்தனையும் இனிப்பது போன்று, "தொல்காப்பியப் பூங்கா" மலர்கள்யாவும் தெவிட்டாத தமிழின்பம் பயக்கின்றது.

கலைஞர் தமது பல்வேறு பணிகள், கடமைகள், கவலைகள் ஆகியவற்றுக்கிடையிலும், தொல்காப்பிய இலக்கணத்தின் சிறப்பை உணர்ந்து கொள்ளவும், படிக்கும் ஆர்வம் கொள்ளவும் தமிழ் மக்களைத் தூண்டும் திறன் மிக்கதாக, தொல்காப்பியப் பூங்காவை இயற்றியுள்ளது தமிழ் அன்னைக்குத் தலைமகன் ஆற்ற வேண்டியதொரு கடமையே எனினும், எம்மனோர்க்கு அரியதொரு செயலேயாகும். அதனால்தான் செயற்கரிய செய்வர் பெரியர் – என்பது கலைஞருக்குப் பொருந்தக் காண்கிறேன். தமிழ்நாடும் தமிழின மக்களும் தமிழ் ஆர்வலரும் கலைஞருக்கு மிகவும் கடமைப்பட்டுள்ளனர் எனல் மிகையாகாது.

வாழ்க முத்தமிழ் அறிஞர் கலைஞர்!

வளர்க அவரது தமிழ்த் தொண்டு!

சென்னை
20–12–2002

க. அன்பழகன்

அணிந்துரை

பேராசிரியர் மா. நன்னன், புலவர், எம்.ஏ., பிஎச்.டி.

நமக்குக் கிடைத்துள்ள நூல்களுள் தொல்காப்பியமே முதல் நூலாகும். அது ஒருவகைத் தொகை நூலுமாகும். தொல்காப்பியத்துக்கு முன் தமிழில் பல்வகை இலக்கண நூல்கள் இருந்துள்ளன என்பதும் அவற்றையும் தம் கருத்துகளுக்குத் துணையாகத் தொல்காப்பியர் பயன்படுத்திக் கொண்டுள்ளாரென்பதும் அவர்தம் நூலில் பற்பல இடங்களிலும் என்ப, என்மனார், என்றிசினோர் என்பன போலக் கூறியுள்ளமையால் புலப்படும் உண்மையாகும். தமிழரின் மொழி, பண்பாடு, வாழ்வு போன்ற அனைத்தையும் ஓரளவேனும் அறிந்துகொள்ள உதவும் சில்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட சரியான ஆதாரம் அது என்பதையும் நாம் புறக்கணித்து விடக்கூடாது. அதற்குத் துணை செய்யும் வகையில் தொல்காப்பியக் கருத்துகள் நாட்டில் பரவ வேண்டும் என்னும் நன்னோக்கத்துடன் உருவாக்கப்பட்டதே கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா எனும் நூல்.

இன்பச் சுவை பயக்கும் இல்லறத்தைச் "சம்சார சாகரம்" எனக் கூறியது போல், தொல்காப்பியத்தைக் கடத்தலாகாப் பெருங்கடல் என்றும், அணுகலாகாக் காடு என்றும், அளக்கலாகா மலை என்றும் கருதிக் கொண்டிருப்போர் பலரிருக்கக் கலைஞர் அதனைப் பூங்காவாகக் கொண்டு தாம் தும்பியாகித் தொல்காப்பியத்தேன் மாந்தித் தமிழ் மாந்தர்க்கும் அதனை இந்நன்னூல் வாயிலாக வழங்குகிறார்.

இந்நூலுள் இடம் பெற்றுள்ள சில பகுதிகளைப் பொதுவாகவும் "புகுமுன்" எனும் பகுதியைச் சிறப்பாகவும் பொறுப்புடன் படிப்போர்; கலைஞர் முயற்சியின் அருமையையும் பெருமையையும் நன்கு அறியக் கூடும்.

தொல்காப்பிய உரைகள் அனைத்தையும் பயன்படுத்தியுள்ளதோடு, நூல் பற்றியும் உரைகள் பற்றியும் வெளிவந்துள்ள ஆய்வு நூல்கள் பலவற்றையும் அகரமுதலிகள் போன்ற பிற ஆதாரங்களையும் நன்கு பயன்படுத்தி இந்நூல் உருவாக்கப்பட்டுள்ளது.

கற்பிக்கும் முறைகள் பலவும் இந்நூல் முழுதும் பின்பற்றப்பட்டிருப்பதை அம்முறை வல்லார் காண முடியும்.

தொல்காப்பியம் கடவுள் வாழ்த்தொடு தொடங்கப்பட்டிலது எனத் தொடங்கி வளரும்

இந் நூலின் போக்கும் இதன் விளைவும்,
தொல்காப்பியக் கருத்துகளை விளக்க முயன்று
பெருமளவு அதற்குத் துணை செய்த
திருக்கோவையார் போன்ற கோவைகள்,
நம்பியகப் பொருள், புறப்பொருள்
வெண்பாமாலை போன்றவற்றை நமக்கு
நினைவூட்டுகின்றன.

இந்நூலாசிரியராகிய கலைஞர்
கற்பிக்கும் முறையைக் கையாள்வதில் வல்லவர்
என்பதற்குச் சான்றுகளாக உயிர், மெய் ஆகிய
எழுத்துகளின் எண்ணிக்கையைக் கற்போர்
உள்ளத்தில் பதிவிக்கக் கையாளும் பாங்கையும்,
தமிழ் என்னும் சொல்லில் மெய்யெழுத்துகளின்
மூவினமும் அடங்கியிருப்பதை எடுத்தியம்பும்
பான்மையும், மானமில்லை, மாத்திரை
போன்றவற்றைக் குட்டிக் கதைகளின்
வாயிலாகத் தெளிவாக விளங்கச் செய்யும்
சிறப்பையும், காட்டலாம்.

நீர் மேல் எழுத்தை நாம் அறிந்திருக்கிறோம்.
ஆனால் கலைஞர் இந் நூலில் கால் (காற்று)
மேல் எழுத்தை உவமையாகக் காட்டி
அனைவரையும் திகைக்கச் செய்கிறார். கிணறு
வெட்டப் பூதம் புறப்பட்டாற் போல என்னும்
உவமையை அறிவியல் முறையில் விளக்கும்
சீர்மை கலைஞர் கலைஞர்தான் என நம்மை
வாய்விட்டுக் கூற வைக்கிறது. எழுத்து, சொல்,
பொருள் ஆகிய மூன்றுக்கும் முறையே
பலாக்கனியில், மேலுள்ள முள், சடை, சுளை

ஆகியவற்றை உவமைகளாகக் காட்டி நம்மை எண்ண வைக்கிறார் அவர்.

மற்றும் கூற்றுகள், துறைகள் போன்றவற்றை விளக்கி அவர் படைத்துள்ளவை இலக்கியத் தன்மை வாய்ந்தவையாகவும், கற்போர் நினைவிற் பதித்துக் கொள்ளத் தோதானவையாகவும் திகழ்கின்றன.

மலர்–39 இல் "காஞ்சித் திணையை விட்டு விட்டால், காஞ்சியே கனவில் வந்து கடிதோச்சி மெல்ல எறியாதா?" என்று அப்பகுதியைத் தொடங்கும்போது கலைஞர் வேறு காஞ்சி வேறு என்றிருந்த நிலை மாறிப் பிறகு கலைஞர் காஞ்சியிலேயே கரைந்து விடுகிறார். நம் நல்வாய்ப்பாக "இத் திணையை இதற்கு மேல் எழுத எனக்குத் தினைத் துணையும் தெம்பில்லை; அதனாலே நிறுத்துகிறேன்" என்னும் போதுதான் கலைஞர் அக் கரைசலிலிருந்து மிதந்து வந்து தனிப்படுகிறார்.

மாணாக்கர்கள் காஞ்சித் திணையை விளங்கிக் கொள்ளவும், என்றும் விலகாமல் அதனைத் தம் அகத்தே பதித்துக் கொள்ளவும் உதவும் விழுப்பம் சான்றது இப்பகுதி.

மலர்–45 இல் உயிரினும் நாணம் சிறந்தது, நாணத்தினும் கற்புச் சிறந்தது என்பதை விளக்கும் பகுதியும்

மலர்–60 இல் பெண்மை பற்றிய கருத்துகளை முட்டறுத்துத் தெளிவிக்கும் முறையும்

மலர்–22 இல் மகளிருடன் கடல் கடந்து செல்லும் வழக்கமில்லை என்பதையும்

மலர்–27 இல் கொண்டுதலைக் கழிதல், கண்டோர் கூற்று ஆகியவற்றைத் தெளிவிக்கும் திறமும் அதைப்போன்ற பலவும் படித்துப் படித்துச் சுவைத்துச் சுவைத்துத் திளைக்கும் பான்மையவாகும்.

பகுத்தறிவுப் பகலவனாகிய தந்தை பெரியாரும் பேரறிஞர் அண்ணாவும் நடத்திய திராவிடரியக்கத்தின் தொடர் முயற்சிகளால் தமிழ் எழுத்துத் துறை, பேச்சுத் துறை ஆகியன மலர்ச்சியடைந்து மணம் பரப்புவதை அறியாதார் அறியாதாரே. பெரியார் திருக்குறளுக்கு உரை எழுதி அதைத் தாமே பதிப்பித்து மிகக் குறைந்த விலைக்கு விற்றதாலும், திருக்குறள் மாநாடுகளையும் முத்தமிழ் மாநாடுகளையும் நடத்தியதாலும் இவர்களும் இந்த இயக்கத்தார் பிறரும் தொடர்ந்து எழுதியும் பேசியும் வந்ததாலும் திருக்குறளும், சங்க இலக்கியங்களும், சிலப்பதிகாரமும் நன்கு பரவின என்பதை யாரால் மறுக்க முடியும்?

அவ்வாறே கலைஞரின் குறளோவியமும், திருக்குறளுரையும், வள்ளுவர் சிலை, வள்ளுவர்

கோட்டம், பூம்புகார் போன்றனவும் செய்த தமிழ் மறுமலர்ச்சிப் பணியை இத்தொல்காப்பியப் பூங்கா தொடர்ந்து செய்து தொல்காப்பியத்தைத் தமிழ் மக்களிடம் நன்கு அறிமுகப்படுத்தும் என்பது உறுதி.

கலைஞர் தம் பதினான்காம் அகவைக்கு முன்னரே எழுதத் தொடங்கியவர். அவர் தம் பதினெட்டாம் அகவையில் முரசொலி ஏட்டைத் தொடங்கி இன்று வரை அதை வளர்த்துப் பெருக்கிச் சிறப்பாக நடத்திக் கொண்டிருப்பவர். அந்த ஆர்வமும், ஊக்கமும், முயற்சித்திறனும், அறிவு நுட்பமும், பல்வகை ஆற்றலும் இன்னும் வளர்ந்து கொண்டே இருக்கின்றன. தேக்க நிலை தோன்றும் அறிகுறியே காணப்படவில்லை. இதில் மற்றொரு சிறப்பு இந் நிலையை அவர் தெளிவாக உணர்ந்தவராகவும் இருப்பதுதான். **அவர் வளர்ச்சி நிலையிலேயே இருக்கும் முதிர்ச்சி பெற்றவர்.** சிலப்பதிகாரம், சங்க இலக்கியங்கள் போன்ற இலக்கியங்களைக் கற்றுத் தேர்ந்து ஒப்பற்ற படைப்புகளையும் உருவாக்கியுள்ளார். குறளோவியமும், திருக்குறளுரையும் அவர்தம் தமிழ்ப் புலமைக்கு எடுத்துக்காட்டுகளாகும். தமிழில் வெளிவந்துள்ள அகரமுதலிகள் அனைத்தையும் அவர் கையாள்கிறார்.

"நிகண்டு கற்று இலக்கியப் பயிற்சி செய்தபின் இலக்கணம் கற்க வேண்டும்"

என்னும் பழைய மரபின்படிப் பார்த்தாலும், இக் கால நிகண்டுகளாகிய அகரமுதலிகளை நன்கு ஆளும் திறன் பெற்றுத் தமிழ் இலக்கியப் பயிற்சியும் நிரம்பப் பெற்றுள்ள கலைஞருக்குத் தொல்காப்பியப் பூங்காவில் புக வேறு எத்தகுதி எஞ்சியுள்ளது? இவற்றாற்றான் கலைஞர் தமிழாய்ந்த தமிழர் என்றும், முத்தமிழறிஞர் என்றும் தகுதி மிக்க அனைவராலும் பாராட்டப்படுகிறார்.

"தொல்காப்பியத்தைத் தொடுவதற்கே தயங்கித் தயங்கி மலர் வனத்தில் நுழைந்த ஒரு மங்கை ஆங்குப் பூத்துக் கமழும் அனைத்து மலர்களையும் சூடிக் கொள்ள ஆசைப்படினும், தன் தலை தாங்கும் அளவே ஆய்ந்து மலர்களைப் பறிப்பது போலவே நானும் பறித்தெடுத்து சூடிக் கொள்ளச் சுழன்று சுழன்று தொல்காப்பியத் தோட்டத்திற்குள் குறிப்பாக நூறு மலர்களைக் கொய்திடவும் அதனால் இன்பம் எய்திடவும் விரும்புகிறேன்"

என்று தொல்காப்பியப் பூங்காவிற் புகும் கலைஞர் "காலத்தால் பாணினிக்கும் கௌடில்யருக்கும் முற்பட்ட தொல்காப்பியரின் இலக்கிய இலக்கண இன்பத்தில் நானும் மூழ்கித் திளைத்து உங்களையும் பூங்கா புக அழைத்தேன்; வந்தோரை வெறுங்கையுடன் அனுப்புவது தமிழர் பண்பாடல்ல என்ற முறையில் நூறு மலர்களை அள்ளித் தந்திருக்கிறேன் உங்கள் அழுதக் கைகளில்"

என்று கூறுவதன் வாயிலாக அவர் கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பியாகவும், சூடிக் கொடுத்த சுடராகவும் தம்மை உருக்காட்டிக் கொண்டுள்ளார்.

வளமும் வலிமையும் பெற்றோர் சிலர் தொல்காப்பியப் பொய்கையை வலிந்து திருத்தியும், மாற்றியும் குழப்பும் நிலையைக் காணும் எமக்குக் கலைஞரின் நேர்மை குன்றா அணுகுமுறை களிப்பூட்டுகிறது. கலைஞர் தமக்கெனத் தனிக் கோட்பாடுடையவ ரெனினும் மரபுகளை மதிப்பவர். எதையும் தாமே, தக்கவாறும், முறைப்படியும் முயன்று, உழைத்துக் கண்டுபிடித்து, ஆய்ந்து பயன்படுத்துபவர். அவர் தமக்குச் சரி என்று படாவிட்டால், எவர் கூற்றையும் ஏற்கமாட்டார். தாம் நாத்திகராயினும் பிறர் கருத்தை மதிக்கும் பேராண்மையால் இந்நூலுள் பல இடங்களில் ஆத்திகக் கருத்துகளை ஆளத் தயங்கவில்லை. இந்நூல் முழுதும் அவர் தமக்கென ஓர் அரங்கைத் தாமே அமைத்துக் கொண்டு அதில் நிற்கிறார். மேலும் அப்பெருமகன் நுனிக் கொம்பர் ஏறியும் இடைக்கண் முறியாது ஊக்கமுடன் உயர்பவர். மாணிக்கவாசகர் தம் திருக்கோவையாரில் "தீந்தமிழின் துறைவாய் நுழைந்ததால் மெலிவு ஏற்படும்" என்கிறார். ஆனால் நம் கலைஞர் இலச்சினை பதிக்குமளவுக்குத் தொல்காப்பியம் ஈறாக உள்ள தமிழ்த் துறையில் புகுந்து புறப்பட்டும் மெலியா வலிமையுடன்

திகழ்கிறார். அத்தகைய கலைஞர் அகம் புறம் எனும் இருவகை மலர்களையும் தொல்காப்பியப்பூங்காவிலிருந்து கொய்துத் தாம் சூடி மகிழ்வதோடு தேனீ போல் பிறர்க்கும் சூடக் கொடுத்தும் மகிழ்கிறார்.

இதனைத் **தொல்காப்பியத்தில் என்ன இருக்கிறது என எள்ளி ஒதுக்குவோரும்,** தொல்காப்பியம் எப்படி இருக்குமோ என அஞ்சி ஒதுங்குவோரும் கற்றால் அவர்தம் நிலை மாறித் தொல்காப்பியத்தைச் சுவைக்க முனைவர் என்பதில் அய்யமிராது.

சென்னை,
21–10–2002.

மா. நன்னன்

புறநானூறு

காலத்தால் மூத்த காப்பியம் தொல்காப்பியம். அது தொடங்குவது கடவுள் வாழ்த்துடன் அல்ல என்பது அதன் தனிச் சிறப்பு. தொல்காப்பியருடன் சேர்ந்து கற்ற ஒரு சாலை மாணவரான பனம்பாரனார் பாடியதே பாயிரமாக நின்று அந்த அற்புதக் காப்பியத்திற்குக் கட்டியம் கூறுகிறது. எல்லையினைத் தமிழ் நிலத்துக்குச் சுட்டிக் காட்டி, எல்லையில்லாப் பெருமை கொண்ட தமிழ் மொழிக்கு இலக்கணத் தோரணம் கட்டும் இந்தக் காப்பியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்தாலே நாம் நம்மையும் அறியாமல் செம்மாந்து நிற்போம்.

“வட வேங்கடம் தென் குமரி
ஆ இடைத்
தமிழ் கூறும் நல் உலகத்து
வழக்கும் செய்யுளும் ஆ இரு முதலின்
எழுத்தும் சொல்லும் பொருளும் நாடிச்
செந்தமிழ் இயற்கை சிவணிய நிலத்தொடு
முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப்



புலம் தொகுத்தோனே போக்குறு பனுவல்
நிலம் தரு திருவில் பாண்டியன் அவையத்து
அறம் கரை நாவின் நான் மறை முற்றிய
அதங் கோட்டு ஆசாற்கு அரில் தபத் தெரிந்து
மயங்காமரபின் எழுத்து முறை காட்டி
மல்கு நீர் வரைப்பின் ஐந்திரம் நிறைந்த
தொல்காப்பியன் எனத் தன் பெயர் தோற்றிப்
பல்புகழ் நிறுத்த படிமை யோனே”

எனப்பாடி; வட வேங்கடம் தென்குமரியைத்
தமிழகத்தின் எல்லையென எடுத்துக்காட்டி;
எழுத்து, சொல், பொருளுக்கு இலக்கணம்
இயம்பும் இந்நூல் நிலம் தரு திருவில்
பாண்டியன் முன்னிலையில், புலவர்கள் கூடிய
பேரவையில் ஐந்திரம் உணர்ந்த தொல்காப்பியர்
எனும் தூயவரால் அதங்கோட்டாசானின்
வாழ்த்துரையுடன் அரங்கேற்றப்படுகிறது எனப்
பாராட்டும் இந்தப் பாயிரத்தைப் படிக்கப் படிக்க
பலாச்சுளையின் சுவையின்பம் கிட்டுகிறது!

திருக்குறள் 1330க்கும் நான் உரையெழுதி
வெளியிட்டபோது, இமயமலைக்குப்
பொன்னாடை போர்த்துகிற முயற்சியில்
ஈடுபட்டிருக்கிறேன் என்று முகவுரையில்
குறிப்பிட்டிருந்தேன்.

இப்போது தொல்காப்பியத்தைத்
தொடுவதற்கே தயங்கித் தயங்கி, மலர் வனத்தில்
நுழைந்த ஒரு மங்கை ஆங்குப் பூத்துக் கமழும்
அனைத்து மலர்களையும் சூடிக் கொள்ள
ஆசைப்படினும்; தன் தலை தாங்கும் அளவே
ஆய்ந்து மலர்களைப் பறிப்பது போலவே நானும்
பறித்தெடுத்துச் சூடிக் கொள்ளச் சுழன்று

சுழன்று தொல்காப்பியத் தோட்டத்திற்குள்
குறிப்பாக நூறு மலர்களைக் கொய்திடவும்
அதனால் இன்பம் எய்திடவும் விரும்புகிறேன்.

1330 குறளுக்கும் உரை எழுதினேன்
எனினும்; குறளோவியம் எனுமோர் புதுமையான
எழுத்தோவியம் தீட்டிட ஏறத்தாழ நானூறு
குறட்பாக்களையே பயன்படுத்திக் கொண்டேன்.
அதைப் போலவே தொல்காப்பியத்
தோட்டத்திலும் சிறப்புறு சில செழுமலர்களைத்
தேர்ந்தெடுத்து வழங்கிடவும், முயற்சி
மேற்கொள்கின்றேன்.

வழங்கிடப் போகிறாயா? நீ சூடியதைக்
கொடுக்கப்போகிறாயா என்பீர்! சூடிக் கொடுத்த
நாச்சியார் செயலை இறைவனே ஏற்றுக்
கொண்ட கதை உலவும் நாட்டில்; நான் ஏட்டில்
தானே சூடிக் கொடுக்கப் போகிறேன்; எனவே
எனைப் பொறுத்து ஏற்றிடலாகாதா!

> "இடைக்காலத்தே ஒரு பெரும் மறுமலர்ச்சி
> ஏற்பட்டபோது பழந்தமிழ் நூல்கள் மீண்டும்
> கற்கப்படத் தொடங்கின. இளம்பூரணர்,
> நச்சினார்க்கினியர், சேனாவரையர்,
> கல்லாடர் போன்ற சான்றோர் பலர்
> தொல்காப்பிய மூலத்தையும் காத்து, உரை
> விளக்கமும் தந்துள்ளனர். அவர்கள் ஏற்றி
> வைத்த விளக்கு சுடர் விட்டு ஒளி வீசியது
> எனினும்; மீண்டும் நம் காலத்தே
> தொல்காப்பியம், சங்க இலக்கியம்,
> சிலப்பதிகாரம், மணிமேகலை, திருக்குறள்
> போலும் பழந்தமிழ் நூல்கள் மக்களால்
> பயிலப்படத் தொடங்கின. இவற்றுள்

தொல்காப்பியம் அதற்குரிய சிறப்பினைப்
பெற்று இன்னும் தமிழ் மக்களிடையே
உரிய அளவு பரவவில்லை”

எனும் கருத்தமைந்த கவலையைப்
பெருமதிப்புக்குரிய தமிழறிஞர் முனைவர்
தமிழண்ணல் அவர்கள் எழுதிய தொல்காப்பிய
அணிந்துரையொன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.
அவர் அணிந்துரை இடம் பெற்ற அந்த
நூல்; “தொல்காப்பியம் தெளிவுரை”
என்பதாகும். அதனை எழுதியவர் முனைவர்
திரு. ச.வே. சுப்பிரமணியன் அவர்களாவார்.
அவர் கேரளப் பல்கலைக் கழகத்தில்
தமிழ்ப்பணி ஆற்றியவர். பேராசான் பெருந்தகை
வ.அய். சுப்பிரமணியனார் வழியில் தமிழ்
ஆய்வு நடாத்தி, புதிய நெறிகளில் மொழி இயல்
பார்வைகளில் வளர்த்திட்ட பெருமைக்குரியவர்.

இந்தத் தெளிவுரை உள்ளிட்ட
நல்லறிவாளர்கள் தீட்டிய உரைகள்
அனைத்தையும், ஆய்வுகள், ஆக்க பூர்வமான
கட்டுரைகள் அனைத்தையும் துணைக்கு
வைத்துக் கொண்டுதான் துணிந்து
நுழைந்தேன், தொல்காப்பியத் தோட்டத்திற்குள்!

பலாப்பழத்தின் முள்; மேல்
பகுதியிலிருக்கும். குத்திக் கிழிக்காது,
ஆனால் கரடுமுரடு! தொல்காப்பியப் பலாக்
கனியில் அந்தக் கரடுமுரடுதான்
எழுத்ததிகாரம் எனலாம்!

சொல் உருவாக்க எழுத்து வேண்டுமே;
வெறும் ஒலி மட்டும் போதாதே!

சொல்லாரம் பூட்டினால்தான் பொருள்
இலக்கணமெனும் நல்லாரம் கிடைக்கும்!

சுளை போலப் பொருளதிகாரத்தை
எடுத்துச் சுவைத்திட இடையே
சொல்லதிகாரத்தை எட்டிப் பார்த்தால்
பலாச் சுளையைப் பாதுகாக்கும் பொறுப்பை
அது ஏற்றிருப்பது புரியும்!

இரண்டையும் கடந்து கைவரிசை
காட்டினால்; இலக்கியத் தேனில் நனைந்த
இலக்கணச் சுளைகளைக் காணலாம். ஆம்;
அதுவே பொருள் இலக்கணம்!

பொருள் இலக்கணம் சொல்வதற்காகத்தான்,
சொல் இலக்கணத்தையும், எழுத்திலக்கணத்தையும்
தொல்காப்பியர் சொன்னார் என்று
உரைக்கின்றார் ச.வே. சுப்பிரமணியனார்.

உலகத்தோற்றம், உயிர்களின் வகைப்பாடு,
வளர்ச்சியடைந்த மக்களின் வாழ்க்கை
முறைகள், அவற்றுள் வீட்டில் வாழும் அகவாழ்வு
நெறி, சமுதாயத்துடன் பொருந்தி வாழும்
புறவாழ்க்கை முறை, ஆடவர்க்கும்,
பெண்டிர்க்குமுரிய பண்புகள், அவர்களுக்குரிய
குணநலன்கள், தேவையற்ற செயல்கள்
போன்றவற்றைத் தொகுத்துக் கூறுகிறது
பொருளதிகாரம். பொதுவாக மனித இன
வளர்ச்சி பற்றித் தொல்காப்பியம் விளக்குகிறது.

இன்று முகிழ்த்துள்ள சமுதாய
முற்போக்குப் பேரொளியில் சங்க காலத்திற்கு
முன்பு தமிழ் மக்கள் கடைப்பிடித்த வாழ்க்கை
முறையில் பிற்போக்கு நிழல் படிந்தது போன்ற

தோற்றம் காணப்படும். ஏற்க இயலுமா என்ற கேள்வி எழக்கூடும். இன்றைக்குத் திருத்தம் செய்து கொள்ளப்பட வேண்டிய பழைய பண்பாடுகள், வாழ்க்கை முறைகள், ஆடவர் பெண்டிர் உரிமைகள் பல இருப்பினும் பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பிருந்த நமது சமூக அமைப்பின் பண்பாட்டு அடிப்படையை அறிந்து கொள்ளத் துடிப்பதைத் தொல்பொருள் ஆய்வில் காட்டும் ஆர்வம் போன்றது எனக் கொள்வதில் என்ன தவறு இருக்க முடியும்?

அணைகள் கட்டுகிறோம்; ஆலயங்கள் எழுப்புகிறோம்; அவை புதிய பாணியில் நவீன மிடுக்குடன் காட்சியளித்து நம்மைக் கவர்ந்த போதிலும்; ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராஜராஜ சோழன் எழுப்பிய தஞ்சைக் கோயிலும், கரிகால் சோழன் எழுப்பிய கல்லணையும் புறந்தள்ளக் கூடியவைகளா; இல்லையே!

அப்படி எண்ணிக் கொண்டுதான் தொல்காப்பியப் பூங்காவுக்குள் நுழைய வேண்டுமென அழைக்கின்றேன்.

தமிழ் மொழிப் போராளிகளில் ஒருவரான தமிழ் ஆசான் முனைவர் இலக்குவனார் அவர்கள் தொல்காப்பிய ஆராய்ச்சி நூலில் பின்வருமாறு குறிக்கிறார்.

> “நமக்குக் கிடைத்துள்ள பழந்தமிழ் நூல்களுள் தொல்காப்பியமே தமிழர் வாழ்வின் பல்துறை பற்றி அறிவதற்குத் துணை புரிவதாகும். இதனைத் தமிழ்ப் புலவர்கள் மட்டுமே தேர்வு கருதிக்

கற்று வருகின்றனர். இது இலக்கண
நூல்தான் என்றாலும் ஏனைய
மொழிகளில் உள்ள இலக்கண நூல்
போன்றதன்று! அண்மை நூற்றாண்டில்
தோன்றி வளர்ந்து வரும் மொழி
ஆராய்ச்சியும், மேலை நாட்டவரால்
விரும்பிப் போற்றப்பட்டு வரும்
இலக்கிய ஆராய்ச்சியும், பண்பாட்டுக்
கலைகளாம் உயிரியல், உளவியல்,
வாழ்வியல் முதலியனவும் தன்னகத்தே
கொண்டு இயங்குகிறது.

..... ஆகவே தொல்காப்பியர் வழி
நின்று எழுத்தும் சொல்லும்
பொருளும் (இலக்கியமும்)
ஆராய்ந்து தமிழகத்தின் ஏற்றம்
காண்போம்.”


இலக்குவனாரைத் தொடர்ந்து என்னைத்
தமிழாற்றலால் வயப்படுத்திய மூதறிஞர்
வ. சுப. மாணிக்கனார் அவர்கள்,
தொல்காப்பியத்தைத் தமிழரின் உயிர் நூல்
எனக் கூறுகிறார்.

தொல்காப்பியம் தோன்றிய காலத்தில்
இந்திய மொழிகளிலோ, ஏன், உலக
மொழிகளிலோ அதுபோன்ற ஒரு நூல்
தோன்றியதில்லை என்பது ஆன்றோர் கருத்து –
நூல்கள் தோன்றியிருக்கலாம், ஆனால்
தொல்காப்பியம் போல் தோன்றியதில்லை.
எனவே நமக்கு, காலத்தால் மூத்ததும் கடித்துத்
தின்றால் மட்டுமே சுவை வழங்கும்
கரும்பனையதும் எளிதாகவும் இனிப்பு

தரக் கூடிய கனிக்குவியல் கொண்டதும்
தொல்காப்பியம் எனலாம்.

அருந்தமிழாற்றல் உடையவனாக வளர
எனக்கு உற்சாகமூட்டிய பேரறிஞர்
அண்ணாவுக்கும், புரட்சிக் கவிஞர்
பாரதிதாசனுக்கும் அவர்கள் துயிலும்
திக்குநோக்கித் தொழுது வணங்கி,
நலங்கிள்ளி நெடுங்கிள்ளிக்குப்
பிறகு நாடும் ஆண்டு தமிழ் ஏடும்
ஆண்டு வருகிறேன் என எழுதி
எனக்கு ஊக்கம் பெருக்கிய
அறிஞர் மு. வரதராசனார்க்கு
நன்றி நவின்று, என் தமிழ் ஆசிரியர்கள்
மகாவித்துவான் தண்டபாணி தேசிகர்,
முத்துகிருட்டிண நாட்டார், முனைவர் சி.
இலக்குவனார், இராசகோபால் பிள்ளை
ஆகியோரை நினைவுகூர்ந்து, முதலில்
'எழுத்தை' நெருங்குகிறேன். தொடர்ந்து
'சொல் மலர்', 'பொருள் பூங்கொத்து' மணம்
நுகரமனங் கனிந்து என்னுடன் வாருங்கள்!

அன்புள்ள,




(மு. கருணாநிதி)

தங்கல் : கோவா

செப்டம்பர் 1, 2002.

பேராசிரியர்
ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

மலர் (1)



எம்மான் தொல்காப்பியர், 'எழுத்து' என ஓலையில் தலைப்பு எழுதி விட்டு, சிந்தனை உறக்கத்தில் ஆழ்ந்தார். அவர் எழுதப்போகும் இலக்கண இலக்கியக் கருவூலத்திற்கான கனவில் மிதக்கத் தொடங்கினார்.

இமைகள் மூடியிருந்தன எனினும்;
நெடுநேரம் மழை நீரில் ஊறிய
நெல்லுக்குள்ளிருந்து அரிசி தலை காட்டுவது
போல வெள்ளை
விழிகள் இமைகளின் இடுக்குகளில்
ஒளிகாட்டிய வண்ணமிருந்தன.

ஏட்டில் பதிந்து உழவு செய்வதற்கு முன்பு, கையிலிருந்த எழுத்தாணியைக் காத்திருக்கச் செய்து விட்டு அவர் இதயத்தில் ஆழ உழுதிடும் பணி நடைபெற்றுக் கொண்டிருந்தது.

செதுக்கிச் சிலை வடிக்க உளியும்,
ஓவியம் தீட்டத் தூரிகையும் போல 'எழுத்து'
தேவையன்றோ நூல் படைக்க!

எல்லா மொழிகளுக்கும் ஒலிதான் மூலம் என்பதாலும் இஃது எழுத்ததிகாரம் என்பதாலும் முதல் நூற்பா எழுத்து எனத் தொடங்குகிறது. தொல்காப்பியரைப் பின்பற்றித்தான் போலும் அய்யன் வள்ளுவரும் "அகர முதல எழுத்தெல்லாம்" என்று திருக்குறளை எழுத்திலேயே தொடங்கியிருக்கிறார்.

தமிழ் மொழியில் உள்ள பல்லாயிரக்கணக்கான சொற்களை அலசி ஆய்ந்து பார்க்கும்போது, அவையனைத்தும் முப்பது எழுத்தொலியில் அடங்கிடும் என்ற வரம்பு, தொல்காப்பியக் காலத்திற்கு முன்பே வழி வழியாக வந்த ஒன்றாகும்.

அதனால்தான் காப்பியரின் அந்தக் கனவில் ஒலியெழுப்பியவாறு எழுத்துகள் அணிவகுத்து வீறுநடை போட்டு வந்து கொண்டிருந்தன.

ஒவ்வொரு முதலெழுத்தும் அவர் முன் நடந்து வந்து; வணக்கம் தெரிவித்து விட்டு வரிசையில் நின்றன.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என ஒரு முன் வரிசை அமைந்தது. பின் வரிசையில் க், ங், ச், ஞ், ட், ண், த், ந், ப், ம், ய், ர், ல், வ், ழ், ள், ற், ன் ஆகிய எழுத்துகள் அணி வகுத்தன.

அப்போது சுவர் ஓரமாக ஒரு நிழல் தென்பட்டது. அதைத் தொடர்ந்து இன்னொரு நிழலும் தென்பட்டது. அந்த இரு நிழல்கள் எழுப்பிய ஒலி சற்று குறுகியதாகக் கேட்டமையால், அந்த வேறுபாட்டை உணர்ந்த தொல்காப்பியர் விழி திறந்து நோக்கினார்.

ஒரு நிழல்; என் பெயர் 'இ'கரம் என்றது!

இன்னொரு நிழல்; என் பெயர் 'உ'கரம் என்றது!

தொல்காப்பியர் அந்த நிழல்களைப் பார்த்து; "நீங்கள் குற்றியலிகரம் – குற்றியலுகரம் என்ற வரிசையில்தான் இடம் பெறுவீர்கள். உங்களை முதல் எழுத்துகள் முப்பதின் வரிசையில் வைக்க முடியாது" என்று கண்டிப்பாகக் கூறிவிட்டார். அப்போது கையில் ஒரு கம்புடன் ஒரு புதுமையான எழுத்துருவம் அங்கே தோன்றி "இந்த முப்பதோடு என்னை இணைக்க ஒப்புகிறீர்களா?" என்று கேட்டது.

உடனே தொல்காப்பியர் "என்ன; என்னை மிரட்டுகிறாயா? நீ ஆயுத மேந்தி ஆய்த எழுத்தாக வந்தால்; நான் அஞ்சி நடுங்கி உன்னை முதல் எழுத்துகள் வரிசையில் நிற்க வைத்து விடுவேன் என்ற நினைப்பா?"

அவரது சீற்றம் உணர்ந்த ஆய்த எழுத்து; "அய்யனே! என்னைத் தங்கள் விருப்பம்போல்

அமர வைக்கலாம். முதல் எழுத்து வரிசையில் எனக்கு இடமளிக்காவிடினும், தேவைப்படும் முக்கியமான சமயங்களில் நான் உதவிக்கு வருவேன்!'' என்று அடக்கமாகக் கூறியது.

தொல்காப்பியர் கேலியாகச் சிரித்துக் கொண்டே, எழுத்ததிகாரத்தின் முதல் நூற்பாவை எழுதி முடித்துவிட்டு; ''நீ எனக்கு உதவிட வருகிறேன் என்கிறாய்; நல்ல வேடிக்கை!'' என்று புன்னகை புரிந்தவாறு கூறினார்.

''ஆமாம்! தாங்கள் எழுதிய முதல் நூற்பாவிலேயே எனக்கு இடம் கொடுத்து விட்டீர்களே; என் திறமையைப் பார்த்தீர்களா?'' என்று ஆய்த எழுத்து மகிழ்ச்சியால் துள்ளிக் குதித்தது. தொல்காப்பியர்; அவர் எழுதியதைத் திரும்பப் படித்துப் பார்த்தார்.

''எழுத்தெனப் படுப
அகர முதல் னகர விறுவாய்
முப்பஃ தென்ப
சார்ந்து வரன் மரபின் மூன்றலங் கடையே''

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – 1)

''முப்பஃ தென்ப'' என்னும் தொடரில் ஆய்த எழுத்து வந்து அமர்ந்து கொண்டதை அவரும் வியப்புடன் நோக்கி நிறைவான மகிழ்ச்சி கொண்டார்.

தமிழ் எழுத்துகள் ‘அ’ முதல் ‘ன’ இறுதியாக முப்பது எழுத்துகள் எனக் கூறுவர்; சார்பு எழுத்துக்களான குறுகிய ஒலியுடைய ‘இ’கரம், குறுகிய ஒலியுடைய ‘உ’கரம், ஆய்த எழுத்து ஆகிய மூன்றும் இல்லாமல் முப்பது எழுத்துகள்.

★

“அவை தாம்
குற்று இயல் இகரம், குற்று இயல் உகரம்,
ஆய்தம் என்ற
முப்பால் புள்ளியும் எழுத்து ஓர் அன்ன”

(நூற்பா : 2)

அலங்கடை = அல்லாத இடத்து

குறிப்பு:– மூன்று எழுத்துகள் இல்லாமல் முப்பது எழுத்துகள் தமிழின் முதல் எழுத்துகள் என்பதால்; அவ்வாறு விடப்படும் அந்த மூன்று எழுத்துக்களைக் குற்றியல் இகரம் என்றும் குற்றியல் உகரம் என்றும் ஆய்த எழுத்து என்றும் இந்த நூற்பா குறிப்பிடுகிறது.



பயிற்சி

ஆசிரியர் வகுப்பறையில் மாணவர்களைப் பார்த்துக் கேட்டார். "உயிர் எழுத்துக்களை எப்படி நினைவு வைத்துக் கொள்கிறீர்கள்?" என்று!

"அய்யா நான் சொல்லட்டுமா?" எனக் கேட்டான் மாணவன் மணிவாசகன் – சொல்லேன் பார்க்கலாம்' என்றார், ஆசிரியர்!

"பன்னிருகை முருகனை நினைவில் வைத்துக்கொண்டு; உயிர் எழுத்து பனிரெண்டு என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறேன்" எனப் பதில் வந்தது.

"ஓ! பக்தி பூர்வமாகப் பதில் அளித்திருக்கிறாய்; நல்லது!" எனப் புன்னகை புரிந்தார் ஆசிரியர்.

பூங்கொடி என்ற மாணவி பதில் சொன்னாள்; "அய்யா! குறிஞ்சி மலர்

பனிரெண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறைதான் பூக்கும் என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்கிறேன். அப்போது உயிர் எழுத்து பனிரெண்டு என்பதும் ஞாபகத்திற்கு வந்துவிடும்''

ஆசிரியர், ஓர் உழவர் மகனைக் கூப்பிட்டு; அதே கேள்வியைக் கேட்டார்; ''தம்பீ; நீ எப்படி உயிர் எழுத்துக்கள் எத்தனை என்பதை மனத்திற் பதிய வைத்துக் கொள்கிறாய்?''

அவன் சொன்னான்; ''தை மாதம் தமிழர் திருநாள் பொங்கல் வந்தால்; புத்தாடை புனைவோம் – இல்லம் புதுக்குவோம் – கதிர் வணங்குவோம் – காளை மாட்டுக்கும் பசுவுக்கும் அணிமணி பூட்டுவோம் – இந்த ஆண்டு அந்த விழா முடிந்தால் அடுத்த ஆண்டு அந்த விழா எப்போது வருமெனப் பனிரெண்டு மாதங்களை எண்ணிக் கொண்டிருப்போம் – அதே போல் பனிரெண்டு எழுத்துகள் உயிர் எழுத்துகள் என நினைவில் வைப்போம்.''


ஆசிரியர் நிமிர்ந்து உட்கார்ந்து; ''சரி – மெய் எழுத்துக்கள் எத்தனையென்று எவ்வாறு நினைவில் கொள்ளுகிறீர்கள்?'' என்று வினவினார்.

''சபரிமலை அய்யப்பன் கோயில் பதினெட்டு படிகளை நினைத்துக் கொண்டால்,

மெய் எழுத்துக்கள் பதினெட்டு என்ற எண்ணிக்கை எளிதில் நினைவுக்கு வந்துவிடும் அய்யா'' என்றான் அதே மணிவாசகன்!

பூங்கொடி, வேகமாக எழுந்து விவேகமுடன் விளக்கினாள் ''சேரன் செங்குட்டுவன், கண்ணகிக்குக் சிலையெடுத்திட கல் கொண்டு வர குயிலாலுவம் என்ற இடத்தில் கனக விசயர் என்ற ஆரிய மன்னருடன் போரிட்டு வென்றான். அவர்கள் தலையில் கல்லேற்றச் செய்தான். அப்போது அவன் முழக்கமிட்டான்; ''தேவாசுரப் போர் பதினெட்டு ஆண்டுகள் நடந்தது! இராமாயணப் போர் பதினெட்டு மாதங்கள் நடந்தது! பாரதப் போர் பதினெட்டு நாட்கள் நடந்தது! இமயம் வந்து இந்தச் செங்குட்டுவன் நடத்திய போர் பதினெட்டு நாழிகையில் முடிந்து விட்டது'' என்று! அந்த வீர உரையை நான் நினைவில் எப்போதும் வைத்திருப்பதால் அந்த உணர்வோடு, மெய் எழுத்துக்கள் பதினெட்டு என்பதை நீங்கள் கேட்டவுடன் சொல்லி விடுவேன்''

ஆசிரியர் பூரிப்பு தவழப் பூங்கொடியின் முதுகில் தட்டிக் கொடுத்து, பக்தி பூர்வமாகவோ அல்லது பகுத்தறிவு அடிப்படையிலோ பதில்கள் அளிக்கப்பட்டாலும் இரண்டுமே பொருத்தமானவைகளாக இருக்கின்றன எனக்



கூறி அந்த மாணவர்களுக்கு அவர் வாழ்த்து தெரிவித்தார்.

★

“ஔ கார இறுவாய்ப்
பன் ஈர் எழுத்தும் உயிர் என மொழிப.”

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 8)

‘அ’ முதல் ‘ஔ’ வரை
உயிர் எழுத்துகள்.

“ன கார இறுவாய்ப்
பதின்எண் எழுத்தும் மெய் என மொழிப.”

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 9)

‘க்’ முதல் ‘ன்’ வரை
மெய் எழுத்துகள்.

உயிர் மெய்!

கடற்கரை மணல்வெளியில்
நண்பர்களுடன் காற்றின் தழுவுதலைக்
கண்மூடியவாறு அனுபவித்துக்
கொண்டிருந்தேன்.

மாலை மறையும் நேரம். "அட,
விளக்கெல்லாம் போட்டு விட்டார்கள்" என ஒரு
நண்பர் கூறவே மெல்ல இமை திறந்தேன்.

காந்தியடிகள் சிலையருகே அமர்ந்திருந்த
என் பார்வை அங்கிருந்து வடதிசையில் நேராக
இருக்கும் அண்ணா நினைவிடத்தை
வட்டமிட்டது.

அந்த நினைவிடத்தில் வானோக்கி
நிமிர்ந்து நிற்கும் உயர்ந்த கம்பத்தின் உச்சியில்
மின் விளக்கு ஒளியுமிழ்ந்து கொண்டிருந்தது.

அவர் மறைந்தபோது வானொலியில் நான்
வாசித்த கவிதாஞ்சலி நினைவுக்கு வந்தது.

மன்னிக்கவும்; மறந்து போனால் அல்லவா
நினைவுக்கு வர!

“நிழல் நீ தான் என்றிருந்தோம்; நீ கடல்
நிலத்துக்குள் நிழல் தேடப் போய்விட்டாய்!
நியாயந்தானா?

கடலடியில் இருக்கின்ற முத்தெல்லாம்
முத்தல்ல;

நான் தானடா நன்முத்து எனச் சொல்லிக்
கடற்கரையில் உறங்குதியோ?

நாத இசை கொட்டுகின்ற
நாவை ஏன் சுருட்டிக் கொண்டாய்?

.....

.....

எதையும் தாங்கும் இதயம்
வேண்டுமென்றாய்;
இதையும் தாங்க ஏதண்ணா எமக்கிதயம்?

.....

.....

இயற்கையின் சதி எமக்குத் தெரியும்
அண்ணா.....நீ
இருக்குமிடந்தேடி யான் வரும் வரையில்
இரவலாக உன் இதயத்தைத் தந்திடண்ணா....

நான் வரும்போது கையோடு கொணர்ந்து

அம்மை

உன் கால் மலரில் வைப்பேன் அண்ணா.....”

என் உதடுகள் இந்த வரிகளை
உச்சரித்துக் கொண்டிருந்தபோதே கண்ணீர்
நனைத்தது என் கன்னங்களை! துடைத்துக்
கொண்டதைப் பார்த்துத் துணுக்குற்ற
தோழர்கள் என் நினைவை திசை திருப்ப
முயன்று ஏதேதோ ஊர்க்கதை பேசித் திரும்பவும்
அந்த இடத்துக்கே வந்தனர்.

ஒரு நண்பர் : என்ன இருந்தாலும் தமிழ் தந்த
அருங் கொடையைப் பாருங்கள்.
‘அ’ வை முதல் எழுத்தாகக்
கொண்ட அண்ணா நமக்குத்
தலைவர் – இன்றைக்குக் ‘க’
வை முதல் எழுத்தாகக்
கொண்ட கலைஞர்
கருணாநிதி நமக்குத் தலைவர்.

நான் குறுக்கிட்டுச்

சொன்னேன் : அய்யா! தமிழில் ‘க்’ என்ற
மெய் எழுத்து தான் நான்!
அத்துடன் ‘அ’ என்ற உயிர்


எழுத்து சேர்ந்ததால்தான் ‘க’
என்ற உயிர்மெய் எழுத்து, என்
பெயரில் முதலாக அமைந்தது.
அதனால் புரிந்து
கொள்ளுங்கள்; ‘க்’ எனும்
மெய்யுடன் ‘அ’ எனும் உயிர்
சேர்ந்தே கருணாநிதியாக
இயங்குகிறது.

★

“மெய்யின் வழியது
உயிர் தோன்றும் நிலையே”

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 18)

(உயிர்மெய் எழுத்துக்களில்
முதலில் மெய்யும் பின்பு
உயிரும் ஒலிப்பைத் தருகின்றன)



மருதநிலம்

மேற்குத் திசையில் வெள்ளித்
தட்டுக்குத் தங்கமுலாம் பூசியது போன்று
ஒளியுமிழ்ந்து கொண்டிருந்த கதிரவன் இருளில்
மூழ்கிட; தொடர்ந்து பிறை நிலா, பிள்ளையார்
கோயில் வாசலில் உடைத்த தேங்காயில் சிதறிய
துண்டு போல வானில் மிதந்த முன் இரவு நேரம்.
அந்தச் சிற்றூரின் திருக்குளத்தில்
தவளைகளின் 'அரகரா' குரல் கூட
அரைகுறைக் குரலாகவே கேட்டுக்
கொண்டிருந்தது.


தலையில் ஒரு கிழிந்த குல்லாய் கறுப்பு நிறத்தில், உடலில் ஓட்டைகள் நிறைந்த காக்கிச் சட்டை. வரிந்து கட்டிய அழுக்கு வேட்டி இப்படி ஒரே மாதிரியாக இரண்டு பேர். நடுத்தர வயதினர். இருவர் கைகளிலும் சற்று நீண்ட

பளபளக்கும் கத்தி. தெருவின் ஓரமாகத் திருக்குளத்தை ஒட்டியுள்ள புதர்களில் ஒளிந்தும் மறைந்தும், சுற்றுமுற்றும் பார்த்துக் கொண்டும், குடிசைகள் மட்டுமே நிறைந்த அந்தப் பகுதியில் நடு நாயகமாக விளங்கிய ஒரே ஒரு மச்சு வீட்டின் பக்கமாக அவர்கள் இருவரும் வந்து சேர்ந்து வீட்டின் சுவர் ஓரம் பதுங்கிப் பதுங்கி நடந்து கொண்டிருந்தனர்.

எளியவர்களே வாழும் அந்த வட்டாரத்தில் அவர்கள் தேட்டை போடுவதற்குத் தேர்ந்தெடுத்தது அந்த மச்சு வீடுதான் போலும். இருவரும் ஒருவருக்கொருவர் சாடைகாட்டிக் கொண்டு; இருவரில் ஒருவன் மட்டும் துணிவை வரவழைத்துக் கொண்டு பலகணி வழியாக உள்ளே பார்வையைச் செலுத்தினான். கண்களுக்கு எதுவும் தென்படவில்லை. எண்ணெய் விளக்கின் வெளிச்சம் மட்டும் வீட்டுக்குள் நிறைந்திருப்பது தெரிந்தது. கண்ணில் எதையும் காணவில்லையென்றாலும் காதில் ஏதோ ஒரு ஒலி!

அதுவும் வலியினால் முனகுதல் போன்ற ஒலி – அ, இ, உ, எ, ஒ என்று ஒரு இளம் பெண்மணியின் குரல் ஒலி!

பலகணியருகில் நின்று கொண்டு அந்த ஒலியைக் கேட்ட ஒருவன் மற்றவனிடம்



சொன்னான்; "பிள்ளைப் பேறு போல இருக்கு இடுப்பு வலி வேதனை" என்று! இருவரும் கூர்ந்து கவனித்தனர். தொடர்ந்து இன்னொரு முதியவளின் குரல் "ஒரு மாத்திரை! ஒரு மாத்திரை!" என்று கேட்கவே; திருடவந்தவர்கள் பேசிக்கொண்டனர்.

"ஏய், மருத்துவச்சி, மாத்திரையொன்றைக் கொடுத்து அந்தப் பெண்ணை விழுங்கச் சொல்கிறாள் போல இருக்கிறது!"

இருவரும் மெல்லப் பேசிக் கொண்டிருக்கும்போதே அந்த இளம் பெண்ணின் குரல், ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ என்று முனகல் போல ஒலிப்பதாக அவர்களுக்குக் கேட்டது. இப்ப இதுக்கு இரண்டு மாத்திரை என்றாள் முதியவள்.

"ஏய், ஒரு மாத்திரையில் வலி குறையவில்லை. மருத்துவச்சி இப்போது இரண்டு மாத்திரை கொடுக்கிறாள்"

என்று இருவருமே கருத்து பரிமாறிக் கொண்டு; "சரி, சரி வா போகலாம். பிரசவ நேரத்திலே போயி, பாவம் பெண்களைத் துன்பப்படுத்துவது கூடாது" என முடிவு செய்து கொண்டு அங்கிருந்து புறப்பட்டனர். அவர்கள் சென்ற பிறகு வீட்டுக்குள் இளையவளும் முதியவளும் பேசிக்கொண்டார்கள்.

"அதாவது பெண்ணே; அ, இ, உ, எ, ஒ, ஆகிய ஐந்து எழுத்துக்களும் ஒரு மாத்திரை ஒலிக்கும் குறில் எழுத்துகள்; ஆ, ஈ, ஊ, ஏ, ஐ, ஓ, ஔ ஆகிய ஏழு எழுத்துக்களும் இரண்டு மாத்திரை ஒலிக்கும் நெடில் எழுத்துகள். அஃதன்னியில் மெய் எழுத்துகள் ஒவ்வொன்றுக்கும் ஒலி அளவு அரை மாத்திரை!"

"வாத்தியாரம்மா! எழுத்துக்களை வகை பிரித்து நன்றாகச் சொல்லிக் கொடுத்தீர்கள்! ஒரே ஒரு சந்தேகம்!"

"கேளடி பெண்ணே; என்ன சந்தேகம்?"

"மாத்திரை, ஒரு மாத்திரை, இரண்டு மாத்திரை, அரை மாத்திரை என்கிறீர்களே; என்ன அது?"

"சாதாரணமாக கண்களை இமைப்பதும், விரலை நொடிப்பதும் ஒரு மாத்திரை என்ற ஒலி அளவாகும். இப்போது புரிகிறதா?"

"புரிகிறது அம்மா – தொல்காப்பியத்திலே நீங்கள் சுட்டிக்காட்டிய இந்த மாத்திரைகளை; ஏதோ மருந்து மாத்திரை; வீட்டில் யாருக்கோ வலித்தொல்லை – பிரசவ வேதனை – என்று

நினைத்து இரண்டு திருடர்கள் பரிதாபப்பட்டு ஓடிவிட்டார்கள்”

“அப்படியா? உனக்கு எப்படித் தெரியும்?”

“அம்மா; உங்களுக்குப் பார்வை கொஞ்சம் மங்கல் – நான் அவர்களைப் பலகணிப் பக்கம் பார்த்தேன் – அவர்கள் பேசியதையும் கேட்டேன்!”

“பார்த்தாயா? தமிழ் இலக்கணம் நம்மைக் காப்பாற்றியிருக்கிறது – பெண்ணே! மருந்தையும் மாத்திரை வடிவில் தருவதுண்டு! ஆனால் இலக்கணத்தில் ஒலி அளவை ‘மாத்திரை’ என்று கூறுகிறார் தொல்காப்பியர்! அதற்குரிய நூற்பாக்களைக் கேள்!

★

“அவைதாம்
அ, இ, உ, எ, ஒ என்னும்
அப்பால் ஐந்தும்
ஓர் அளவு இசைக்கும் குற்றெழுத்து என்ப”

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 3)

“ஆ, ஈ, ஊ, ஏ, ஐ. ஓ, ஔ என்னும்
அப்பால் ஏழும்
ஈர் அளவு இசைக்கும் நெட்டெழுத்து
என்ப”

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 4.)

"மெய்யின் அளவே அரை என மொழிப"

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 11)

(அளவு = மாத்திரை)

"கண் இமை நொடி என அவ்வே மாத்திரை
நுண்ணிதின் உணர்ந்தோர் கண்ட ஆறே."

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 7)

இனஒற்றுமை!

பழங்காலத் தமிழ்ப் பெருமன்னர்கள், புலவர் பெருமக்கள் எனப் பலரின் திருவுருவப் படங்கள் நிறைந்திருந்த பொலிவுமிகு மண்டபத்தில் தமிழ்த்தேன் பருகிடத் தவித்திருக்கும் ஒரு கூட்டத்தின் மத்தியில் "இனம்" எனும் தலைப்பில் விரிவுரையாற்றிக் கொண்டிருந்தார், விரிந்த நெற்றியும் விழிகளில் கூர்மையும், சற்றே நரைத்த இளந்தாடியும் கொண்ட வளவன் எனும் பெருமகன். வற்றாத நதிபோலக் கருத்துக்களை வாரி வழங்கும் ஆற்றல்மிகு அறிஞன்.

உலகிற் தோன்றிய இனங்கள், அவை உயர்ந்து நிற்கும் விதங்கள், அந்த இனங்களுக்கிடையே விளைந்த இரணகளங்கள் – இவற்றையெல்லாம் ஆண்டுவாரியாகவும், ஆதாரபூர்வமான வரலாற்றுச் சான்றுகளுடனும்,

ஆய்வாளர்களின் அழுத்தம்திருத்தமான கருத்துக்களுடனும் விருந்தாகவும் மருந்தாகவும் வழங்கிக்கொண்டிருந்த வளவன்; இனி நமது தமிழினத்தின் மாட்சியும் வீழ்ச்சியும் பற்றிப் பேசப் போவதாக அறிவித்து அவையோரை அரைக்கண் பார்வையில் நோக்கியபோது அவர்கள் தம்மை அறியாமல் தலை கவிழ்ந்து கொண்ட காட்சி, காம்பு கனம் தாங்காத காரணத்தால் குனிந்து கொண்ட கமல மலர் கூட்டம் போல் இருந்தது.

வளவன் பேசினார்; தமிழர்கள் என்போர் ஒரே இனம் – ஆனால் தமிழ்தான் மூன்று இனங்களைக் கொண்டது. மொழி பேசுவோர் ஒரே இனமாக இருக்கும்போது அவர்கள் பேசும் மொழி எப்படி மூன்று இனங்களாகப் பிரிந்து விளங்குகிறது.

ஆமாம் பெரியீர்; அடியேன் கூறுவது அசைக்க முடியாத உண்மை! நமது தமிழ் மொழியின் மெய் எழுத்துக்கள் மூன்று இனங்களாகப் பிரிந்து காண்பதை, இதோ விளக்குகிறேன்.

க, ச, ட, த, ப, ற எனும் மெய் எழுத்துகள்

வல்லினம்!

ங, ஞ, ண, ந, ம, ன எனும் மெய் எழுத்துகள்

மெல்லினம்!

ய, ர, ல, வ, ழ, ள எனும் மெய் எழுத்துகள்
இடையினம்!

இப்படி மூன்று இனமாக நமது
தமிழ் எழுத்துகள் பிரிந்திருக்கின்றன.
அதனால்தான் சொன்னேன்; 'தமிழர்கள் ஓரினம்
– தமிழ் மொழி மூன்று இனம்' என்று!"

இது கேட்டு இன்னமும் இலக்கண
வாயிலில் முழுமையாக நுழையாத இளைஞர்கள்
சிலர் எழுந்து சீற்றமுடன் முழக்கமிட்டனர்.

"என்ன அய்யா இது; மொழியின்
எழுத்துக்களே மூன்று இனமெனில்; இது
தமிழின் பெருமைக்கே குறைவன்றோ?"

அந்த அமளி கண்டு அஞ்சாத வளவன்,
அமைதியாக விடையளிக்க முன் வந்தார்.

"இளம் அடலேறுகளே!
மொழிக்குள் களங்கமெனத் தவறாகக்
கருதிச் சீற்றம் கொண்டு சீறுகிறீர்கள் –
இக்காட்சி என்னைப் புல்லரிக்கச்
செய்கிறது. ஆனால் தமிழுக்கே களங்கம்
கற்பிப்போர் செயல்கண்டு இந்தச் சீற்றம்
கொள்வீரேல், ஐந்தடி உயர மனிதன் நான்
ஆறடியாக உயர்ந்து நிற்பேன் – தமிழ்
மொழி; தமிழர் கூட்டத்தைவிட மிகுந்த
அக்கறையுடன் வல்லினம், மெல்லினம்,

இடையினம் மூன்று இனத்தையும் தன்னகத்தே ஒன்றுபடுத்தி "தமிழ்" என்று தலைநிமிர்ந்து நிற்கிறது பாரீர்!"

"எப்படி ? எப்படி ?" என்றது இளைஞர் கூட்டம்.

"தம்பிகளே! தங்கைகளே! தமிழ் என்ற சொல்லில் "த" என்பது வல்லினம்! "மி" என்பது மெல்லினம்! "ழ்" என்பது இடையினம்! இப்படி மூன்று இனத்தையும் மொழி இணைத்துக்கொண்டு வேறுபாடு விலக்கித் திகழ்கிறது! ஆனால் அந்த மொழி பேசும் தமிழர் எத்தனை முரண்பாடு கொண்ட பிரிவுகளாகப் பிளவுபட்டுக் கிடக்கிறோம் – அதனை சிந்தித்துப் பாருங்கள். வல்லினம், மெல்லினம், இடையினம் ஒன்றுபட்டு "தமிழ்" என்றே தகத்தகாய ஒளி பரப்பிடும் போது; தமிழர்கள் பல கூறுகளாகப் பிளவுபட்டுப் பாழ்பட்டுக் கிடப்பது நியாயந்தானா ?"

அவை கலைந்தது – அவையோரும் – இளைஞர்களும் கலந்துரையாடியவாறு விடைபெற்றுக் கொண்டு பிரிந்தனர்.

இனத்துக்கு ஓர் எழுத்து இணைந்து "தமிழ்" உருவாகியிருக்கும்போது; ஏற்கனவே உருவான தமிழர் இனம் ஏன் சிதைந்து சிதறவேண்டும் ?

இக்கேள்வியே அனைவரது இதயத்திலும்
பேருருக்கொண்டு பெருமூச்சாய்க் கிளம்பியது!

★

- வல் எழுத்து என்ப க, ச, ட, த, ப, ற

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 19)

- மெல் எழுத்து என்ப ங, ஞ, ண, ந, ம, ன

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா : 20)

- இடை எழுத்து என்ப ய, ர, ல, வ, ழ, ள

(எழுத்ததிகாரம் – நூல் மரபு – நூற்பா :– 21)

தமிழ்ப் பெருமை

பாண்டியன் கொலு மண்டபத்தில்
அதங்கோட்டாசான் சீரிய தலைமையில் கூடிய
புலவர் பேரவையில்; தொல்காப்பியன் எனத்
தம் பெயரை அமைத்துக் கொண்டு பழம்
பெருமைக்கும் பண்பாட்டுக்கும் காப்பாக நூல்
இயற்றிய தொல்காப்பியர் அந்த நூலை
அரங்கேற்றியபோது, சிறப்புப் பாயிரம் பாடிய
பனம்பாரனார் கடற்கரை யோரத்தில் உலவிக்
கொண்டிருப்பது போன்ற ஒரு கற்பனைக் காட்சி.

மெல்ல நடந்து கொண்டிருக்கும் அவரது
செவிகளில் வெல்லத் தமிழில் நடைபெறும்
விவாத உரையாடல் ஒன்று வீணை இசையெனக்
கடற்காற்றோடு கலந்து தவழ்ந்தது.

திரும்பிப் பார்த்தார் பனம்பாரனார்! உற்று
நோக்கினார்! கடற்கரைக் காற்று வாங்கும்
மண்டபத்தில் ஐந்தாறு புலவர் பெருமக்கள்

அமர்ந்து பேசிக் கொண்டிருந்தனர். இவரைக் கண்டதும் எழுந்து வணங்கி வரவேற்றனர்.

"என்ன உரையாடல்? ஏதேனும் கருத்து மோதலோ?" எனக் கேட்டவாறு பனம்பாரனார் அருகிற் சென்று மண்டபத்தில் அவர்களிடை அமர்ந்தார்.

ஒரு புலவர் கூறினார்: "மோதுதல் ஒன்றுமில்லை. அண்மையில் அரசவையில் அரங்கேற்றப்பட்ட தொல்காப்பியரின் தொல்காப்பிய நூலில் எழுத்ததிகாரத்தில் எழுந்துள்ள ஐயப்பாடு குறித்துப் பேசிக் கொண்டிருக்கிறோம்"

"என்ன ஐயப்பாடு?" என வினவினார் பனம்பாரனார்.

"ஒலி எழுத்துக்களின் பிறப்பிடங்களைக் கூறும் பகுதியில் அதாவது 'பிறப்பியல்' எனும் தலைப்பில் ஒவ்வொரு வகை எழுத்தும் தெளிவான அறிவியல் அடிப்படையில் வெவ்வேறு தன்மையில் தோன்றுமென்று குறிப்பிடுகிறார்"

என்று ஒரு புலவர் தொடங்கியவுடன்; பனம்பாரனார் புன்னகை புரிந்து கொண்டே,

"ஆமாம். மொழியில் முதலில் தோன்றியது ஒலி மட்டும்தானே – பின்னர்தானே ஒலிக்குரிய எழுத்துகள் தோன்றின. அந்த



எழுத்துக்களையோ அந்த எழுத்துகள் சேர்ந்த சொற்களையோ உச்சரிக்கும்போது மனித உடலில் அவற்றின் பிறப்பிடம் எது என்று கண்டு, அதனைக் குறிப்பிடுவது அறிவியலின் அடிப்படையில் அமைந்ததுதானே! வா, போ, என ஒலிக்கும்போது 'வா' என்ற எழுத்தின் ஒலி, மேல் வாய்ப்பல் வரிசைக்கிடையே கீழ் உதடு மடங்கிய நிலையில் வெளிப்படுகிறது. 'போ' என்ற எழுத்தின் ஒலியோ மேல் உதடும் கீழ் உதடும் ஒட்டிப் பிரிந்து திறந்தபின் வெளிப்படுகிறது. இதைத்தான் தொல்காப்பியர், உந்திக் கமலத்திலிருந்து காற்றுத் தோன்றி, அது மேலே வந்து தலை, கழுத்து, நெஞ்சு இவற்றில் நின்று, பல், உதடு, நாக்கு, மூக்கு, அண்ணம் (உள்நாக்கு மேல்வாய்) எனும் எட்டு உறுப்புக்களிலும் தொடர்புற்று எல்லா ஒலி எழுத்துக்களும் தோன்றும் என்று விவரித்துள்ளார். அவற்றில் பனிரெண்டு உயிர் எழுத்துக்களும், தொண்டையிலிருந்து எழுந்திடும் ஓசைக் காற்றினால் பிறக்கும். அவற்றில் அ, ஆ, இரண்டு ஒலிகளும் வாயைத் திறத்தலால் பிறக்கும். உ, ஊ, ஒ, ஓ, ஔ என ஒலிக்கும் ஐந்து உயிர் எழுத்துக்களும் உதடுகளைக் குவித்துச் சொல்லப் பிறக்கும். அடி நாக்கு அடி அண்ணத்தைப் பொருந்தி 'க' வும் 'ங' வும் பிறக்கும். சிலர் 'ல' வுக்கும், 'ள' வுக்கும் வேறுபாடின்றி; குலத்தை குளம் என்றும் – களத்தை கலம் என்றும் பிழைபடப்

பேசுகிறார்களே; அதைத்தான் தொல்காப்பியர் கவனமாக எடுத்துக்காட்டி, அண்ணத்தை ஒற்றி 'ல'வையும், அண்ணத்தை நாவால் வருடியவாறு 'ள' வையும் உச்சரிக்க வேண்டுமென்கிறார். இப்படி உடல் உறுப்புகளுடன் ஒட்டியும் ஒட்டாமலும் மெல்லப் பொருந்தியும் அழுத்தமாக அழுந்தியும் பிறக்கும் எழுத்தொலிகள்தான் செவிக்கு இனிமை தரும். இல்லையேல் "நமது தமிழ் மொழியை எடுத்துக் கொள்ளுங்கள்" என்பதை "எடுத்துக் கொல்லுங்கள்" என்றோ; தமில் மொளியை என்றோ உச்சரித்தால், இனிமையா காதுக்கு? இடியல்லவா விழுந்தது போலிருக்கும்!"

பனம்பாரனாரின் சொற்கேட்டு, பாவாணர்கள் 'பளார்' என வெடிச் சிரிப்பு சிரிக்கிறார்கள்.

ஒரு பாவலர் குறுக்கிட்டு; "அய்யன்மீர் – எல்லா மொழியறிஞர்களும் இது போல் இலக்கணம் வகுத்துள்ளனர் அல்லவா; அதிலும் சிறப்பாக வடமொழிப் புலவர் வகுத்துள்ளதைத் தானே;

"அகத்து எழு வளி இசை அரில் தப நாடி
அளவிற் கோடல் அந்தணர் மறைத்தே...."

என்று தொல்காப்பியர் குறிப்பிடுகிறார்.

இதைக் கேட்டு சீற்றம் கொள்கிறார் பனம்பாரனார் – "தவறு அய்யனே, தவறு!

அந்தணர் என்பது ஆரியரைக் குறிப்பது மல்ல;
மறை என்பது அவர்களது வேதமுமல்ல!
தமிழரில் அறிவுசால் நல்லோர் அந்தணர்
எனப்படுவர் – தமிழர் அறநெறி நூலை மறை
யென்றும் போற்றுவர் – எனவே அறிவு நூல்கள்,
அறிஞர் தந்த இலக்கிய இலக்கணம்,
இவற்றுக்கு யாருக்கோ பெருமை சேர்க்காதீர்!
தமிழுக்குத் தமிழர்க்கு உரிய சிறப்பை, நமக்கு
நாமே மறப்பதும், மறைப்பவர்க்குத் துணை
நிற்பதும் தீதினும் தீது பெருந்தீது!''

என்றவாறு விடைபெற்றுப் புறப்பட்டார்
பனம்பாரனார் – பின்னர் அந்த மண்டபம்
அமைதி சூழ்ந்து காணப்பட்டது.

★

''உந்தி முதலா முந்து வளித் தோன்றித்
தலையினும் மிடற்றினும் நெஞ்சினும் நிலைஇப்
பல்லும் இதழும் நாவும் மூக்கும்
அண்ணமும் உளப்பட எண்முறை நிலையான்
உறுப்புற்று அமைய நெறிப்பட நாடி
எல்லா எழுத்தும் சொல்லும் காலைப்
பிறப்பின் ஆக்கம் வேறு வேறு இயல
திறப்படத் தெரியும் காட்சியான....''

(எழுத்ததிகாரம் – பிறப்பியல் – நூற்பா : 1)

மலர் (7)

உடம்பதுமெய்!

சித்திரை நிலவு அவள்! நெற்றிக்கண் படைத்தவனாயினும் அவன் நித்திரையைக் கலைத்திட கனவில் வந்து ஆடக்கூடிய கட்டழகி! மொட்டவிழ்ந்த பருவமும்; மொட்டவிழா உருவமும் கொண்டவள்!

கொட்டிக் கொண்டிருக்கும் அருவியின் அருகில் நிற்கிறாள். அவள் விழிகளோ அருவியில் குளித்துக் கொண்டிருக்கும் அந்த ஆணழகனின் உருண்டு திரண்ட மேனியையே உற்று உற்றுப் பார்த்துக் கொண்டிருக்கின்றன. அவன், அவள் அங்கு வந்து நிற்பது அறியாமல் அருவி நீரையே ஆடையாகக் கொண்டு நீராடும் காட்சி, அவளின் வெட்கத்துக்கு விடை கொடுத்து விட்ட காம உணர்வுக்குத் தூபம் போடுகிறது.

நல்ல உடை நனைந்து விடுமே என்ற கவலை, கடுகளவுமின்றி, அவன் மீது

பாய்ந்தாள். அருவிக்குள் இருந்த அவன் நடுங்கிப் போனான். "நாயகனே! நடுக்கமேன்?" என்றபடி அந்தத் துடுக்குக்காரி; ஆனாலும் தோகைமயில், அவனை இழுத்து உதட்டில் ஒரு முத்திரை பதித்து விட்டாள்.

அவளைத் தள்ளிவிட்டு, தொலைவில் கிடந்த துண்டை எடுத்து இடுப்பில் சுற்றிக் கொண்டு; "என்ன காரியம் செய்தாய்?" என்று கடுமொழி கூறினான். சுடுமொழிகள் வாரி இறைத்தான்.

"நான் என்ன செய்து விட்டேன்? ஆசிரியர் சொல்லிக் கொடுத்ததைத்தான் ஆராய்ச்சி செய்து பார்த்தேன்!"

"அடியே, பெண்ணே! நான் உனக்கு ஆசிரியர்தான்; ஆனால் பில்கணீயத்தில் வருகிற உதாரனும் நானல்ல! நீயும் அந்தக் கவிஞனிடம் பாடம் கற்ற அமுதவல்லியும் அல்ல!"

"அத்தான்! நம் பெயர்கள் மாறியிருக்கலாம். அமுதவல்லி இடத்தில் நானும், உதாரனிடத்தில் நீங்களும் இருப்பதை இங்கே யார் தடுத்தார்கள்?"

இப்படிச் சொல்லிக் கொண்டே, அவனைப் போய் மீண்டும் தழுவிக் கொண்டாள்.



"சே சே! விடு, என்னை! ஆசிரியரிடம் ஒரு மாணவி நடந்து கொள்ளும் முறையா இது? நாணமில்லையா உனக்கு?"

"நிறைய இருக்கிறது – அதைவிடக் காமன் விடுத்த பாணம் நெருப்பாய்த் தகிக்கிறதே!"

"விலகிச் செல்! விதண்டாவாதம் செய்யாதே!"

"நீங்கள்தானே சொன்னீர்கள்?"

"என்ன சொன்னேன்? சொல்லித்தொலை!"

"எல்லாச் சொற்களிலும் உயிர் ஈற்று முன், உயிர் வரும்போது உடம்படுமெய் தோன்றும் என்றும், அதன் வடிவை நீக்கார் என்றும், ஏற்றுக் கொள்வர் என்றும் சொல்லி விட்டு "மா + இலை = மாவிலை" என்பது உடம்படுமெய் ஆயிற்று என்றீர்களே; நம்மைப் பாருங்கள், அந்த உடம்படுமெய்தானே இது! உயிர் ஈற்று முன் உயிர் கலக்கும்போது நம் மெய் இரண்டும் கலத்தல் இலக்கணப்படி ஏற்கத் தக்கதுதானே! உருபு கொளல் வரையார் என்றுதானே கற்பித்தீர்கள்?"

"ஓ! முட்டாள் பெண்ணே; கற்ற பாடத்தை சோதித்துப் பார்க்கிறாயா? நான் எழுத்துக்குச் சொன்னால்; நீ என் கழுத்துக்கு.....!"

"அஞ்சாதீர் அன்பே! ஒழுங்காகத்தானே
கற்றுக் கொண்டிருக்கிறேன்! நான் ஒப்பித்த
தொல்காப்பிய இலக்கணம் தவறா?"

"தவறு ஏதுமில்லை; அந்த
இலக்கணத்தைச் செயல்படுத்த இதுவா
இடம்?"

"அடடா! நீங்கள் அப்படிச்
சொல்கிறீர்களா? மன்னித்துக் கொள்ளுங்கள்
– மண்டபம் பக்கத்தில்தான் இருக்கிறது"

அவனை இழுக்கிறாள்;
அவனும் அவளுடன் போகிறான்
மண்டபம் நோக்கி!

★

"எல்லா மொழிக்கும் உயிர் வரு வழியே
உடம்படு மெய்யின் உருபு கொளல் வரையார்"

(எழுத்ததிகாரம் – புணரியல் – நூற்பா : 38)

உடம்படுமெய் = இரு உயிர் (எழுத்து) களைச்
சேர்க்கும் மெய் (எழுத்து)
வரையார் = நீக்கமாட்டார்.

சாரியை


இலக்கணம் பற்றி மட்டுமே கூறுவது என் நோக்கமில்லை என்பதாலும், இலக்கணத்தில் முக்கியமான சிலவற்றை நினைவுவைத்துக் கொள்வதற்காக எடுக்கும் முயற்சியின் தொடர்பாகச் சாரியைக்கு வழங்கப்பட்டுள்ள விளக்கம், ஒரு காட்சியாகச் சித்தரிக்கப்படுகிறது.

அகராதியில் 'அங்கதம்' என்ற சொல்லுக்கு, மார்பு – தோளணி – பழிச்சொல் – பாம்பு – பொய் – யானையின் உணவு எனப் பல பொருள் உண்டு.

அஃதே போல் 'மானம்' என்பதற்கு, தன் மதிப்பு, அகங்காரம், வலி, குற்றம், நேசம், அன்பு, கற்பு எனப் பொருள்கள் கொள்ளலாம்.

சாரியை எனும் இலக்கணச் சொல்லுக்குச் சார்ந்து வரும் இடைச் சொல் என்பது மட்டுமன்றிப் 'புறக்கூத்துக்குரிய' ஆடல் எனும் பொருளும் உண்டு.

ஆடூஉ எனிலோ ஆண் – மகடூஉ எனிலோ பெண்.



இவற்றை நினைவில் பதித்துக் கொண்டு இம்மலரை, நுகர்வது சிறப்பாக இருக்கும்; சிரிப்பாகவும் இருக்கும்.

இதோ நல்லதம்பியும், நல்லதங்கை யென்ற அவனது உடன் பிறப்பும், தங்களின் தாய் தந்தையரிடம் விடைபெற்றுக் கொண்டு புறக்கூத்து நடத்துவதற்காகப் புறப்பட்டுச் செல்கின்றனர்.

செல்லும் வழியில் இருவரையும் சந்தித்த செந்தமிழ்ப் பண்டிதர் – சற்றுச் சிந்தனைத் தடுமாற்றமுள்ள செல்லய்யாப் புலவர்; அவர்களை அனுப்பி வைத்து விட்டு, அந்த உடன்பிறப்புக்களின் பெற்றோரிடம் வந்து எங்கே செல்கின்றனர் உமது பிள்ளைகள் எனக் கேட்கிறார்; ஏற்கனவே அந்தப் பிள்ளைகளிடம் கேட்டறிந்த பிறகும்!

“இன்றைக்கு ஆடிப்பெருக்கல்லவா! ஆறுகள் எல்லாம் கரை புரண்டு ஓடி ஆட்சியின் மாட்சியை அறிவிக்குமே; ஆடவரும் பெண்டிரும் ஆனந்தக் கூத்தாடிடும் அந்தத் திருவிழாவில் எம் மகனும் மகளும் புறக்கூத்து ஆடி அவர்களை மகிழ்விக்கவும், தாங்களும் மகிழ்ந்திடவும் சென்றிருக்கிறார்கள்” என விளக்கம் கிடைக்கிறது பண்டிதருக்கு!

"அண்ணனும் தங்கையும் புறக்கூத்தில் என்ன பாத்திரங்கள் ஏற்று ஆடப் போகிறார்கள் ?"

"நல்லதம்பி, கோவலனாகவும்; அவன் தங்கை, மாதவியாகவும் பாத்திரமேற்றுக் கானல்வரி ஆடப் போகிறார்கள்"

"அண்ணனும் தங்கையுமா ? கோவலன் மாதவியாகவா ?" என்று வியப்புடன் வினவிய செல்லய்யாப் புலவர், சற்று யோசித்துவிட்டு; "மானமில்லை" என்று சிரித்துக் கொண்டே சொன்னார்.

அதுகேட்டு ஆத்திரத்தால் துடித்துப்போன அந்தப் பெற்றோர், "பண்டிதரே! யாரைப் பார்த்து மானமில்லையென்று தடித்த வார்த்தை, இழிந்த வார்த்தை கூறினீர் ?" எனக் கூச்சலிட்டவாறு தந்தை அரிவாளையும், தாயானவள் ஒரு தடியையும் தூக்கிக் கொண்டனர்.

பதறிப் போன பண்டிதர்; "ஏன் இவ்வளவு பதைப்பு ? நான் என்ன சொல்லிவிட்டேன் இப்போது ?" என நடுங்கிக் கொண்டே கேட்டார்.

"பிறகென்ன ? எம் பிள்ளைகளைப் பற்றி விசாரித்துவிட்டு, மானமில்லை என்கிறீரே! பொறுத்துக் கொள்ள முடியுமா ?"

“இப்போதுதான் நான் கல்விக்கூடத்தில் பிள்ளைகளுக்குத் தொல்காப்பியம் சொல்லிக் கொடுத்துவிட்டு வருகிறேன். அந்த நினைவு அப்படியே மனத்தில் படிந்திருந்ததால் ஏதோ தடுமாறி விட்டேன். நான் சொன்னதும் ஒன்றும் தவறில்லை”

“என்ன ? தவறில்லையா ?”

“சற்றுப் பொறுத்திடுக! முதலில் என் விளக்கத்தைக் கேளுங்கள். தொல்காப்பியம் எழுத்ததிகாரத்தில் சாரியை பற்றிக் கூறப்பட்டிருக்கிறது.

“ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினும் மானமில்லை”

என்பது அந்த நூற்பா. சாரியை என்றால் புறக்கூத்து என்ற பொருள் மட்டுமல்ல; சார்ந்து வரும் இடைச்சொல் என்றும் பொருள் உண்டு. தொல்காப்பியத்தில் எழுத்ததிகாரத்தில் வரும் நூற்பா என்ன சொல்கிறதென்றால், ஆணையும் பெண்ணையும் குறிக்கின்ற ஆடூஉ, மகடூஉ, எனும் இரு பெயர்களில் வல்லெழுத்தேயன்றி ‘இன்’ சாரியையும் வரலாம் – அதனால் குற்றமில்லை என்கிறது. ஆடூஉவின் தங்கை, மகடூஉவின் அண்ணன் – மாதவியாகவும், கோவலனாகவும் நடிப்பது குற்றமில்லை என்று

சொல்ல வந்த நான், வல்லெழுத்தேயன்றி
'இன்' சாரியை, இடை வரினும் மானமில்லை
என்ற வார்த்தையை நூற்பாவில் உள்ளதை
அப்படியே மாணவர்க்குச் சொன்னதை, அதே
நினைவில் இங்குச் சொல்லிவிட்டேன். மானம்
என்றால் குற்றம் – மானமில்லையென்றால்
குற்றமில்லை என்றுதான் பொருள்!''

அந்தப் பெற்றோர், பெருமூச்சு விட்டவாறு
பண்டிதரைப் பார்த்து;

''அய்யா புலவரே! அண்ணனும்
தங்கையும் அப்படி நடிப்பதால் அது ஒரு
கலைதானே; அதில் ஒன்றும் குற்றமில்லை
என்று சொல்வதற்கு நல்ல வார்த்தை
இருக்கும்போது ''மானமில்லை'' என்று சொல்லி
எங்கள் மண்டையை ஏன் குழப்பினீர்கள்?''

''அதுதான் சொல்லுகிறேனே; ஆடூஉ,
மகடூஉ, இரு பெயர்க்கிடையே வல்லெழுத்து
மிகுதலன்றி 'இன்' சாரியையும் வரலாம்;
அதனால் ஒன்றும் மானமில்லை; அதாவது
குற்றமில்லையென்று மாணவர்க்குக் கற்பித்த
நினைவிலேயே இருந்துவிட்டேன். அதனால்
விளைந்த தவறு. வருகிறேன்''

குழைந்து பேசிக்கொண்டே கும்பிட்டவாறு
விடைபெற்றார் பண்டிதர்! காப்பியச் செய்யுள்

ஒன்றை அவர்கட்கும் கவனப்படுத்தினோம்
என்ற மனநிறைவுடன்!

★

"ஆடூஉ மகடூஉ ஆயிரு பெயர்க்கும்
இன்னிடை வரினும் மானமில்லை"

(எழுத்ததிகாரம் – உயிர் மயங்கியல் –
நூற்பா : 69)



மலர் (9)

சிகரமுகம்

பத்தாண்டுகளுக்கு முன்பு கொள்ளிடம்
ஆற்றங்கரையில் காலூன்றிக் கம்பீரமாக நடக்க
முடியாமல், கடுமையான வெயில் கொளுத்தும்
வேளையில் கம்பூன்றி நடந்து கொண்டிருந்தாள்
ஒரு கிழவி. அங்கே மரத்தடியில் அமர்ந்து
மாடு மேய்த்துக் கொண்டிருந்த ஓர் இளைஞன்
அவளைப் பார்த்துப் பரிதாபப்பட்டுக் கையில்
கொஞ்சம் பழங்களுடன் கிழவியின் அருகில்
வந்து, அவளது எலும்பும் தோலுமான கையைப்
பற்றிக் கொண்டு "பாட்டீ! இந்தக் கொளுத்தும்
வெயிலில் எங்கே போகிறாய்? உன்னால் நடக்கக்
கூட முடியவில்லை. இந்தா பழம் சாப்பிடு" என்று
கையிலிருந்த நாவற் பழங்களைக் கொடுத்தான்.
அதைப்பாட்டி உற்றுப் பார்த்துவிட்டு
இளைஞனை நோக்கிச் "சுட்ட பழமா?
சுடாத பழமா?" என்றாள் குறும்பாக!

"கிழங்களுக்குக் கிண்டல் கேலி மட்டும் போகாதே! நான் ஒன்றும் முருகனில்லை! முதலில் பழத்தைச் சாப்பிடு!"

கிழவி, பழங்களைச் சுவைத்துக் கொண்டே, அவனைத் தோளில் தொட்டு,

"ஏன் தம்பி, இந்த வயதில் படிக்காமல், இப்படி மாடு மேய்க்கிறாயே; ஏன்?" என்றாள்.

"படித்துக் கொண்டுதான் இருக்கிறேன். விடுமுறை நாட்களில் மட்டும் இந்த வேலை"

"வீட்டில் யாருமில்லையா?"


"அப்பாவுக்குக் காசநோய் – நான் பள்ளிக்குப் போகும் நாளில் அம்மாதான், மாடு மேய்த்து, பராமரித்து, பால் கறந்து வீட்டைப் பாதுகாக்கிறாங்க!"

"அய்யோ பாவம்! இந்தக் கஷ்டத்திலே என்ன படிக்க முடியும் நீ? என்ன படிச்சு என்ன வேலைக்குப் போகப் போறே?"

"தமிழ் படிக்கிறேன். தமிழ் ஆசிரியராக வேலை பார்க்க ஆசை!"

"அப்படியா? நல்லது! உன் தமிழ் ஆசான் இலக்கியங்கள் சொல்லித் தருகிறாரா?"

"ஓ! திருக்குறள் – தொல்காப்பியம் எல்லாம் சொல்லிக் கொடுக்கிறார்!"



“அப்படியானால் எனக்கும் கொஞ்சம் இலக்கியம் தெரியும் – நானும் ஓய்வு பெற்ற தமிழ் ஆசிரியைதான் – உன்னை ஒரு கேள்வி கேட்கிறேன், பதில் சொல்கிறாயா?”

“கேள் பாட்டி; பதில் சொல்கிறேன்!”

“என்னை அழைத்துக் கொண்டு போகச் சோழன் வரும் என்கிறேன். இப்போது சோழன் உயர்திணையா? அஃறிணையா?”

“பாட்டி நீ சொல்லும் சோழன், உன் மகனாகவோ, பேரனாகவோ இருந்தால் உயர்திணை! அல்லது அந்தச் சோழன் பேருந்தாக இருந்தால் அஃறிணை!”

“தம்பி; எப்படிச் சொல்கிறாய்? இலக்கணம் என்ன?”

“பாட்டீ; இதோ தொல்காப்பியம் எழுத்ததிகாரம் கூறுகிறது;

“அஃறிணை விரவும் பெயர்
இயல்பு மாருள வே”

அதாவது இரு திணைக்கும் உரிய பெயரை பொதுப் பெயர் என்பார். அதனால் நான் சொல்வது பொருந்துகிறது. ஆண்பால் உயர்திணையான சோழன், அஃறிணையாவது இப்போது இயல்பு”

"அன்புப் பேரனே! அன்று ஔவையிடம் ஆற்றலைக் காட்டியதாகக் கூறப்படும் அந்த முருகனைக் காட்டிலும் நீ சிறந்தவன். அவன் தமிழாற்றலைப் பழத்தில் காட்டினான். நீயோ பழந்தமிழ் இலக்கணத்தில் காட்டியுள்ளாய்! வாழ்க! வாழ்க!"

வாழ்த்திக் கொண்டிருக்கும்போதே சோழன் வந்துவிட்டான்; இல்லை, இல்லை, வந்து விட்டது. இளைஞன் உச்சியில் முத்தமீந்து கிழவி, பேருந்தில் அவன் உதவியுடன் ஏறிக் கொண்டாள்.

★

"அஃறிணை விரவும் பெயர்
இயல்பு மாருளவே"

(எழுத்ததிகாரம் – தொகை மரபு – நூற்பா : 13)

எழுத்தின் அணி!

இலக்கியத்தில் அரசியலைக் கலக்கக் கூடாது என்ற உறுதிப்பாட்டுடன் தொல்காப்பியப் பூங்காவுக்குள் நுழைந்துள்ளேன். ஆங்குள்ள மலர்களை நுகருகிறேன் எனினும்; இயற்கையாகவே சில எடுத்துக்காட்டுகள் கட்சி அரசியலாக இல்லாமல் பொது அரசியலாக அமைந்திடுவது ஒதுக்க முடியாததாகிவிடுகிறது.

இரண்டாம் உலகப் போர் நடந்த போது அமெரிக்காவைச் சார்ந்து சில நாடுகளும், இட்லரின் ஜெர்மனியைச் சார்ந்து சில நாடுகளும் போரில் ஈடுபட நேரிட்டது. இருபுறமும் தலையாய நாடுகளாக இறுதி முடிவெடுக்கும் செல்வாக்குடன் இருந்த நாடுகளைச் சார்ந்துதான் நேசநாடுகளின் வரிசையும், அச்சு நாடுகளின் வரிசையும் அமைந்தன என்பதை கடந்த கால வரலாறு மறக்காது! மறுக்காது!



இது நடந்து முடிந்த இரண்டாவது
உலகப் போர்க்காலம் பற்றியது.

இந்நாளில் நாடுகள் என்ற
நிலையில் இல்லாவிடினும், ஒரு நாட்டில்
உள்ள அரசியல் இயக்கங்கள்,
அந்நாட்டின் ஆளுங்கட்சிகளையோ
அதிபர்களையோ தேர்வு செய்திட,
அணிகள் அமைகின்ற இன்றியமையாமை
ஏற்படுகிறது.

தனித்து நின்று போட்டியிடுகிற
வலிமை, பேரியக்கங்களுக்கு இருப்பினும்;
மேலும் வலிவுடன் இருப்பது தவறில்லை
எனும் எச்சரிக்கையுடன் பல்வேறு
இயக்கங்கள் கொண்ட அணிகள்
உருவாகின்றன.

அந்த அணிகளில் இடம் பெற்றாக
வேண்டிய அவசியமும் கட்டாயமும்,
தமக்கெனத் தனித்தன்மையே இல்லாத,
சார்ந்து மட்டுமே இருக்கக் கூடிய
நிலை இயக்கங்களுக்கு ஏற்பட்டு
விடுகிறது.

அந்த இயக்கங்களின் நிலைமைதான்
குற்றியலிகரம், குற்றியலுகரம், ஆய்தம்
என்ற மூன்று எழுத்துக்களுக்கும்
அமைந்துள்ளது என்பது தெளிவான
உண்மையாகும்.

தமக்கென்று தனித்தன்மை
இல்லாததும், சார்ந்துதான் இயங்கிட
வேண்டுமென்பதுமான நிலையுடைய
குற்றியலிகரம் (இ) குற்றியலுகரம் (உ) –
ஆய்தம் (ஃ) எனும் மூன்று எழுத்துக்களும்,
தாம் சார்ந்திடும் முதல் எழுத்துக்களின்
பிறப்பிடமே தம் பிறப்பிடமாகக் கொண்டு
ஒத்த அளவில் தமக்குரிய இயல்பில்
இயங்கும்.

★

"சார்ந்துவரின் அல்லது தமக்கு இயல்பு இல எனத்
தேர்ந்து வெளிப்படுத்த ஏனை மூன்றும்
தம் தம் சார்பில் பிறப்பொடு சிவணி
ஒத்த காட்சியில் தம் இயல்பு இயலும்"

(எழுத்ததிகாரம் – பிறப்பியல் – நூற்பா : 19)

எடுத்துக்காட்டு :–

குற்றியலிகரம் :– கேண்மியா, சென்மியா,
நாடு + யாது = நாடியாது,
முருகு + யாது = முருகியாது.

குற்றியலுகரம் :– ஒடு, முரடு, மூழ்கு, அஃது,
சுக்கு, அங்கு

அரண்மனை போன்ற தோற்றமும், ஆதிசேடன்மீது அறிதுயில் கொள்வது போன்ற முகப்பு மண்டபமும் கொண்ட அந்த மடத்தின் திண்ணையில் ஒரு குட்டிச் சாமியார் அமர்ந்து வெளியிலிருந்து யாரோ வருவதற்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

அதுமட்டுமல்ல; அருகில் உள்ள பூசை அறையின் கதவு, உள்ளிருந்து திறக்கப்படும் தாழ்ப்பாள் ஒலி கேட்கிறதா என்று காதைத் தீட்டிக் கொண்டும், கண் இமை கொட்டிக் கொண்டும் கவனித்திடவும் தவற வில்லை.

கதவு திறக்கப்படவில்லை. ஆனால் அவர் எதிர்பார்த்துக் கணக்கிட்டிருந்த நேரத்திற்கு முன்பே, ஆதினகர்த்தருக்கு இலக்கியப் பாடம் கற்பிக்கும் ஆசான், நெற்றியில் பட்டை

நாமத்துடனும், கையில் புத்தக அடுக்குடனும் குட்டிச்சாமியின் அருகில் வந்தவாறு,

"என்ன சின்னச்சாமி; நலந்தானே?"
என்றார்.

"அய்யா, ஆசான்! நான் இந்த மடத்தின் இளையவர்! என்னை என்னவோ; தீக்குளித்துச் செத்தானே கீழப்பழுவூர் சின்னச்சாமி; அவனை அழைப்பது போல் அழைக்கிறீரே?"

"மன்னிக்கவும்; அவன் சிங்கத் தமிழனாச்சே!"

"நான் இங்கே காவல் இருப்பதால் அசிங்கத் தமிழனா?"

"அதிருக்கட்டும்; இரவுக்கிளி வந்திருப்பார்களே; பறந்து போய் விட்டார்களா?"

"ஓய், ஆசான்! இதென்ன பயம் கொஞ்சம்கூட இல்லாமல் கேட்கிறீர்?"

"இதற்கென்ன பயம்? அரியைப் பூசிக்கும் மடாதிபதிகள் அயர்ந்து போய்த் துயில் கொள்கிறார்களா? அல்லது தொடர்ந்து தியானமா? என்று கேட்கிறேன்"

"அதற்காக இலக்கணத்தை மீறிக் கேள்வி எழுப்புவதா?"

"துறவிகள் சிலர், துறவு இலக்கணத்தையே மறந்தும் துறந்தும் எவ்வளவோ காலமாகிறதே! ஆமாம்;

சின்னசாமீ! நான் எந்த இலக்கணத்தை மீறிவிட்டதாகக் கூறுகிறீர்?"

"இரவுக்கிளி போய் விட்டார்களா? என்று பன்மையிலே கேட்கிறீர்! ஒரு மடாதிபதிதான் உள்ளே இருக்கிறார்; மடாதிபதிகள் என்று பன்மையில் உரைக்கிறீர்! உமது கூற்றுப்படி அறைக்குள்ளே எத்தனை மடாதிபதிகள்? எத்தனை கிளிகள்? ஒரு மடாதிபதியும் பல கிளிகளுமா? அல்லது ஒரே கிளியும் பல மடாதிபதிகளுமா?"

"சின்னச்சாமி; குழப்பாதீர்! நான் இலக்கணப்படி தான் கேட்டுள்ளேன். ஒருவனையும் ஒருத்தியையும் சுட்டிச் சொல்லும் பன்மைச் சொல்லும், ஒன்றனைச் சொல்லும் பன்மைச் சொல்லும், உலக வழக்கில் உயர்த்திச் சொல்லும் சொல்லாம். இலக்கண வழக்கல்லவாம் என்று, தொல்காப்பியர் 'பால்வழுவமைதி' என இலக்கணம் கூறியிருக்கிறார்"

"அப்படியா; என்று குட்டிச்சாமியார் வாயை அகலமாகத் திறக்கவும், அறையின் கதவு மெல்லத் திறக்கவும் சரியாக இருந்தது. பஞ்சணையிலிருந்து விடுபட்ட



பஞ்சவர்ணக்கிளி, நடக்க முடியாமல்
நடந்து, மடத்தின் பின்புற வழியாக
வெளியேறியது.''

அப்போதும் ஆசான், குட்டிச்சாமியைக்
கெட்டியாகப் பிடித்துக் கொண்டு – அந்த
நூற்பாவினைச் சொல்லித்தான் முடித்தார்.

★

''ஒருவரைக் கூறும் பன்மைக் கிளவியும்
ஒன்றனைக் கூறும் பன்மைக் கிளவியும்
வழக்கினாகிய உயர்சொல் கிளவி
இலக்கண மருங்கில் சொல்லாறு அல்ல''

(சொல்லதிகாரம் – கிளவியாக்கம் – நூற்பா : 27)

கிளவி :– சொல், மொழி.

ஓவியமும் சிற்பமும்

காதலன், காதலியிடம் கேட்டான்.

“கண்ணே; நீ ஓவியக் கலையில் உயர்ந்த விருதுகள் பெற்றிருக்கிறாயே; யாரும் பார்க்காத இடத்தில்; நம் இல்லத்து அறையில் நாமிருவர் மட்டுமே பார்த்துப் பார்த்துக் களித்திட நீயும் நானும் தழுவிக் கொண்டிருக்கும் ஓவியம் ஒன்று வரைந்து கொடேன்” என்று!

“ஓவியம் வரைந்து கொடுக்கிறேன். சிற்பியாயிற்றே நீங்கள். நீங்கள் விரும்பும் ஓவியம் போலவே சிலையொன்று வடித்துக் கொடுங்களேன்.”

“ஓவியம், முதலில்!
சிலை, அடுத்ததாக!”

காதலி, காதலன் கேட்டது போலவே ஓவியம் தீட்டி முடித்து, அவனை அறைக்குள் அழைத்து ஓவியத்தைக் காட்டினாள்.

அறிவால

காதலன் காதலி கட்டித் தழுவியிருக்கும் கவின்மிகு ஓவியம். இறுகத் தழுவியிருந்ததில் அவளது ஒரு மார்பகம் மட்டுமே எடுப்பாகத் தெரிந்தது. இருவிழிகளில் ஒரு விழி கன்னத்தோடு கன்னம் வைத்திருந்த காதலனின் கன்னத்தில் மறைந்திருந்தது. காதலனின் தோளில் அவளது அவிழ்ந்த கூந்தல், மல்லிகைச் சரத்துடன் புரண்டு கொண்டிருந்ததால் அவன் தோள் ஒன்று மட்டுமே தெரிந்தது. அவளது மற்றொரு தோளையும் அவன் கரங்கொண்டு அணைத்திருப்பது போல அந்த ஓவியம் விளங்கியது.

"இலக்கணப்படியே இந்த ஓவியம் வரைந்திருக்கிறாய்"

என்றான் காதலன்! மேலும் சொன்னான்:

"இரண்டு கண்கள் இருப்பினும் ஓவியத்தில் ஒன்றுதான் தெரிகிறது. ஓவியத்தில் இரண்டு மார்பகங்கள் காணப்படவில்லை. ஒன்றுதான் உள்ளது. மூங்கிலனைய உன் தோளையும் அவ்வாறே தீட்டியுள்ளாய். கண்கள், தோள்கள், மார்பகங்கள் என்றில்லாமல்; கண்ணும், தோளும், மார்பகம் மட்டுமே காண்கிறேன்.



அதாவது தொல்காப்பியர் கூற்று அப்படியே தோய்ந்திருக்கிறது இந்த ஓவியத்தில்!"

"என்ன கூற்று?"

"என்னவென்று சொல்லட்டுமா? கண், தோள், மார்பகம் – இவையும் இவை போன்ற பிறவும், பன்மைப் பொருளை உணர்த்தும் சொற்கள் என்றாலும் – இரண்டு கண்கள், இரண்டு தோள்கள் என்பது போல் பன்மையாகவே உணர்த்தப்பட வேண்டுமென்ற வரையறை கிடையாது. இவற்றையும், இவை போன்ற பிறவற்றையும் ஒருமையில் உணர்த்தினாலே பன்மையென விளங்கிவிடும். வினைக்கேற்பப் பன்மையிலும் உணர்த்துவதில் தவறில்லை".

"அப்படியா? என் ஓவியம்; அந்த இலக்கணத்தை எடுத்துக் காட்டப் பயன்படுகிறதா? எங்கே, அந்த நூற்பாவினைச் சொல்லுங்கள்".

"ஓ! உள்ளது உள்ளபடியே சொல்லுகிறேன்; நான் சொல்லப்போவது சொல்லதிகாரம்! நீ தீட்டியுள்ளதோ அந்தச் சொல்லின் ஓவியம்!

★

“கண்ணும் தோளும் முலையும் பிறவும்
பன்மை சுட்டிய சினைநிலைக் கிளவி
பன்மை கூறும் கடப்பாடிலவே
தம் வினைக் கியலும் எழுத்தலங் கடையே”

(சொல்லதிகாரம் – கிளவியாக்கம் –

நூற்பா : 62)

வணிகத் திமிங்

இடுப்பில் தூய கைத்தறி ஆடை, தோளில் குட்டையான ஒரு கைத்தறித் துண்டு, சட்டையில்லாத உடம்பு, வியர்வையோ, குளிர்காற்றோ இரண்டையும் சட்டை செய்யாத இயல்பு. பக்கத்தில் சின்னாளப்பட்டி சேலை யணிந்து அவரது நடுத்தர வயது மனைவி. அவர்களுடன் கைகளில் சில புதிய புத்தகங்களுடன் அவர்களின் ஆசை மகள் கண்ணகி. கல்லூரியில் படித்துக் கொண்டிருக்கும் பெண். இந்தக் கச்சிதமான குடும்பம், கடைத்தெருவில் சில புத்தகக் கடைகளைப் பார்த்துவிட்டு; பரபரப்பாக வியாபாரம் நடந்து கொண்டிருந்த கோகலே புத்தகக் கடைக்குள் நுழைந்தார்கள். புத்தகக் கடை உரிமையாளர் பெயரும் கோகலே தான். பழுத்த தேசியவாதி போலத் தோற்றமளித்தார். அவருடைய மகன், அருணன் பட்டுச் சொக்காயுடனும் பகட்டான கைக்கெடிகாரத்துடனும் தனது சுருண்ட



கேசத்தை அடிக்கடி தடவி விட்டுக் கொண்டு, அவனும் தந்தைக்குத் துணையாக, புத்தக வியாபாரத்தில் விறுவிறுப்பாக ஈடுபட்டிருந்தான். இருந்தாலும்கூட கண்ணகி அந்தக் கடையில் நுழைந்தவுடன், அவன் கவனம் வியாபாரத்தில் அவ்வளவாகத் திரும்பவில்லை.

ஆனால் அவனை முந்திக் கொண்டு அவன் தந்தை கோகலே, கண்ணகியின் தந்தையைப் பார்த்து; "தங்களுக்கு என்ன புத்தகம் வேண்டும்?" என்று ஆவலுடன் வினவினார்.

"நேரு எழுதியது 'உலக சரித்திரம்' இருக்கிறதா?"

கோகலே சற்று யோசித்து தலையைச் சொரிந்து கொண்டு;

"காந்தியடிகளின் சத்தியசோதனை" இருக்கிறது என்றார்.

கண்ணகியின் தந்தை, "அது என்னிடமே இருக்கிறது; அதனால் வேண்டாம்! சரி போகட்டும்; அண்ணா எழுதிய 'இரு பரம்பரைகள்' புத்தகம் இருக்கிறதா?"

கோகலே, மீண்டும் தலையைச் சொரிந்து கொண்டு;

"புத்தம் புதிய பதிப்பு வந்திருக்கிறது; அண்ணா எழுதிய 'வெள்ளை மாளிகையில்' வேணுங்களா? அந்தப் புத்தகம் இருக்கிறது"

“ ‘இரு பரம்பரைகள்’ இல்லையா? பரவாயில்லை; நீங்கள் சொன்ன ‘வெள்ளை மாளிகையில்’ எங்க கண்ணகி நூல் நிலையத்திலேயே இருக்கிறது!”

“ஓ; நீங்க நூல் நிலையமே வைத்திருக்கிறீர்களா? ஆயிரம் நூல்களாவது இருக்குமா?” என்று கண்ணகியைப் பார்த்து அருணன் கேட்டவாறு விழிகளை அவள் மீது மேயவிட்டான். அவளுக்கு அதைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. வேறு பக்கம் திரும்பி, புத்தகங்களைத் தேடினாள்!

அப்போது அருணனின் தந்தை; வந்த வியாபாரத்தை விட்டு விடக் கூடாது என்ற முடிவோடு; கண்ணகியின் பெற்றோரைப் பார்த்து,

“திருக்குறள் உரை நிறைய இருக்கிறது!” என்றார்.

“புலவர் குழந்தை எழுதிய ‘இராவண காவியம்’ இருந்தால் கொடுங்கள்!”

“இராமாயணம் இருக்கிறது, அது தான் எல்லோரும் படிப்பது!”

கண்ணகி, இடைமறித்து “அது வேண்டாம் – பாரதிதாசனின் ‘பாண்டியன் பரிசு’ இருக்கிறதா?”

அருணன், இதுதான் சமயமென்று நினைத்து; " 'எதிர்பாராத முத்தம்' இருக்கிறது. வேண்டுமா?" என்றான், முகத்தில் அசடு வழிய; ஆனால் குறும்புத்தனமாக! கண்ணகியைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டே!

கண்ணகி கடுமையான குரலில், "என்னிடம் 'தமிழச்சியின் கத்தி' இருக்கிறது" என்று சொல்லிவிட்டு, சற்று நிறுத்தி "அதுவும் பாரதிதாசன் எழுதியதுதான்" என்றாள். கண்களில் கனல் பறந்தது. அருணன் அடங்கி விட்டான்.

அவளது தந்தை, கடை உரிமையாளர் கோகலேயைப் பார்த்து, "ஆமாம், எது கேட்டாலும் கேட்ட புத்தகத்தை விட்டு விட்டு, வேறு புத்தகம் இருப்பதாகச் சொல்கிறீர்! இது என்ன வேடிக்கை?" என்று எரிச்சலாகக் கேட்கவே;

உரிமையாளர் கோகலே, புன்னகை புரிந்தவாறு,

"அய்யா! இது தொல்காப்பியத்தின் வழிகாட்டுதல்! அதைத்தான் வணிகர்கள் பின்பற்ற வேண்டும்.

கடையை நாடி வந்து எந்தப் பொருளும் கேட்பவர்களிடம் எதையும்

"இல்லை" என்று சொல்லாமல்; என்ன இருக்கிறதோ அதைச் சொல்லி, அதை வாங்க வைத்தால் வணிகம் பெருகும் என்று அவர்தான் சொல்லியிருக்கிறார்".

இதுவரையில் மௌனமாக இருந்த கண்ணகியின் தாய், "அப்படியென்றால் தொல்காப்பிய உரையாவது இருக்கிறதா?" என்று கேட்கவே – உடனே உரிமையாளர் கோகலே, "மகாபாரதம் மலிவுப் பதிப்பு இருக்கிறது" என்றார்.

★

"எப்பொருளாயினும் அல்லது இல் எனின்
அப்பொருள் அல்லாப் பிறிதுபொருள் கூறல்"

(சொல்லதிகாரம் – கிளவியாக்கம் – நூற்பா : 35)

எனது மகனா?

மயிலைக் காளைகள் பூட்டிய வில்வண்டியில் சாய்ந்தவாறு சவாரி செய்து கொண்டு வந்த கலியபெருமாள், "கருணையானந்த அச்சகம் வந்துவிட்டது அய்யா" என்று வண்டிக்காரன் மாடுகளை இழுத்துப் பிடித்து வண்டியை நிறுத்தியதும் கீழே இறங்கினார் கையில் ஒரு பையுடன்!

அச்சகத்து முகப்பில் உள்ள மேலாளர் அறைக்குள் நுழைந்ததும் அங்கே மேலாளர் மெய்யப்பன், 'வரவேண்டும்! வரவேண்டும்!' என்று கலியபெருமாளைக் கைகூப்பி வணங்கி அமரவைத்தார்.

கலியபெருமாள், கையிலிருந்த பையை எடுத்து, அதற்குள்ளேயிருந்து ஐந்தாறு அகலமான தாள்களை வெளியே இழுத்தபடியே, "ஒரு நல்ல காரியம் நமது வீட்டில் நடக்கப் போகிறது. அதற்காக வந்தேன்" என்றதும்;

"ரொம்ப மகிழ்ச்சி, பையனுக்குத் திருமணம் போல இருக்கு – பத்திரிகை அடிக்க வந்திருக்கீங்க! செய்தி படித்தேன்!"



"ஆமாம் – அவசரமாக முடிவான திருமணம். ஆயிரம் அழைப்பிதழ் அச்சியற்றிக் கொடுக்கணும். பையன் பெயர் – பெண்ணு பெயர் பாக்கி விபரமெல்லாம் இதிலே இருக்குது! தேவையான திருத்தங்களை நீங்களே செய்து கொள்ளுங்க!"

அவர் நீட்டிய தாளை அச்சக மேலாளர் வாங்கி விபரங்களைப் படித்துப் பார்த்துவிட்டு;

"ஆமாம்! சீர்திருத்த முறையிலே திருமணம்னு பத்திரிகையிலே எழுதியிருக்கு – அழைப்பிதழிலே விவாக சுப முகூர்த்தம்னு மஞ்சள் தடவி, அய்யர் தேதி, லக்னம் எல்லாம் குறித்துக் கொடுத்திருக்கிறாரே?"

"அப்படியா? விவாக சுப முகூர்த்தம்னா எழுதியிருக்கிறாரு? பார்த்தீங்களா? அய்யர் அவர் வேலையைக் காட்டியிருக்காரு! பரவாயில்லை; அய்யர் வந்து நாள் குறிச்சிருந்தா கூட, இது பெரியார் சொன்ன முறைப்படி நடக்கிற மணவிழாதான் – அதனால "மணவிழா அழைப்பிதழ்" என்றே தலைப்புப் போடுங்க!"

"சீர்திருத்தத் திருமணம்! அப்புறம் ஏன்; நாள் நட்சத்திரம் பார்க்கிறீங்க?"

"உமக்குத் தெரியாதா? சில நேரங்களிலே மணமகன் வீட்டிலே வைதீகப் பிடிவாதம் இருக்கும் – சில நேரத்திலே மணமகள் வீட்டார் அப்படி இருப்பார்கள். இங்கே மணமகள்

வீட்டார் விருப்பத்துக்கு நாள் நட்சத்திரம் – நமது விருப்பத்துக்கு, சீர்திருத்தத் திருமணம்!”

மேலாளர், மெல்லப் புன்னகை புரிந்து கொண்டே; அச்சியற்றுவதற்காகக் கலியபெருமாள், அவரிடம் தந்த மணவிழா அழைப்புத்தாளைக் கவனமாகப் படித்துப் பார்த்தார்.

“எல்லாம் சரியா இருக்கா? ஏன் கேட்கிறேன் தெரியுமா? நீர் தமிழிலே பாண்டித்தியம் பெற்றவர் – எதிலும் ஒரு சின்னப் பிழை கூட வராமல் பார்க்கக் கூடியவர்! அதனால்தானே இந்த அச்சகத்திற்கு வருவது!”

“எல்லாம் சரியா இருக்கு! ஒரே ஒரு பிழைதான்!”

“என்ன அது?”

“ஒண்ணும் பெரிய விஷயமில்லை. மணமகன் பெயரைக் குறிப்பிடும்போது ‘எனது மகன்’ என்று எழுதியிருக்கிறீர்களே.....”

“ஆமாம் – மணமகன் எனது மகன்தான்.....”

“அதுதான் அய்யா தவறு!”

“என்ன சொல்கிறீர் மெய்யப்பன்? அவன் எனது மகன் இல்லாமல் வேறு யார்?”

“அதுதான் சரியாக இல்லை!”

“ஓய்! கொடுமய்யா அந்தத் தாளை! என்ன பேச்சு இது? சே! சே!”

மெய்யப்பன் கையிலிருந்த தாளை வேகமாகப் பிடுங்கிக் கொண்டு கலியபெருமாள் எழுந்தபோது; மெய்யப்பன் அவர் கையைப் பிடித்துக் கொண்டு;

"மன்னிக்கவும். நீங்க தானே என்னுடைய தமிழ்ப் புலமையைப் பாராட்டினீர்கள் – அதற்குள் ஆத்திரப்பட்டால் எப்படி?"

"சரி; என்ன சொல்கிறீர்? சொல்லும்!"

"எனது மகன் என்று எழுதும்போது; உயர்திணையுடன் "அது" என்ற ஆறாம் வேற்றுமை உருபுக்குப் பதிலாக, நான்காம் வேற்றுமையாகிய "கு" உருபு வருதல் வேண்டும். இல்லையேல் "எனது" என்று குறித்திடும் போது திணை தவறாகிவிடும். எனவே 'கு' உருபை இணைத்து "எனக்கு மகன்" என்பதே சரியாகும்"

கலியபெருமாள், கோபம் தணிந்து கலகலவெனச் சிரித்தபடி;

"அதென்னமோ, வேற்றுமையோ, உருபோ, உயர்திணை, அஃறிணையோ, நீர் சொன்னாச் சரி!"

"நான் சொல்லவில்லை! தொல்காப்பியம் சொல்லுது!"

"எது சொன்னாலும், யார் சொன்னாலும், அவன் எனக்கு மகன்தான்! சீக்கிரம் அழைப்பிதழை அச்சடித்து முடியுங்கள்.

இந்தாரும் முன் பணம்! வருகிறேன்!
வணக்கம்!”. (இருவரும் வணங்குதல்)

★

“அது என் வேற்றுமை உயர்திணைத்
தொகைவயின்

அது என் உருபு கெடக் ‘குகரம்’ வருமே”

(சொல்லதிகாரம் – வேற்றுமை மயங்கியல் –

நூற்பா : 11)

கதம்பக் கனவு!

ஒன்றுபட்டிருந்த தென் ஆற்காடு மாவட்டத்தில் ஆண்டுதோறும் அரவானைப் பலியிடும் கூவோகம் திருவிழாவில் வழக்கம்போல் நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து ஏராளமான அரவாணிகள் கூடியிருந்தார்கள். கூத்தும் கும்மாளமும் நிறைந்த அந்த கோலாகல உற்சவத்தில் அலிகள், விதவிதமான அலங்காரங்களுடன், அவர்கள் விருப்பத்துக்குப் பல்வேறு வேடங்களுடன் ஆடிப்பாடியும், அணிஅணியாக வட்டமிட்டுக் குனிந்து வளைந்து கும்மியடித்தும் அவற்றைக் காண வந்த இளவெட்டுக்கள் கிழவெட்டுக்கள் அனைவரையும் வாய்பிளக்க வைத்தனர்.

பாரதப் போரில் அரவானைக் களப்பலி கொடுத்து போர் தொடங்குவதாகவும், அவன் இறந்தவுடன் மஞ்சள், குங்குமம், மாங்கல்யம் இழப்பதற்காகவே அந்த விழாவில் அலிகள் கலந்து கொண்டு மாரடித்து அழுது புலம்பி மாங்கல்யம் அறுப்பது என்பது ஓர் அய்தீகம்!



ஆட்டபாட்டங்கள் அமர்க்களப்பட்டு விழா முடிந்து, களைத்துப் போன அரவாணிகள் எனும் அலிகள் அங்கு அமைக்கப்பட்டிருந்த தங்கு மிடங்களில் படுத்துத் தூங்கினர்.

புயல் அடித்து ஓய்ந்தது போன்று, திருவிழா அமளி முடிந்து எழுந்த அந்த அமைதியான இரவில் 'இராதா' என்ற அலி நன்றாகக் குறட்டை விட்டுத் தூங்கிக் கொண்டிருக்கும்போது; அந்த உறக்கத்தில் ஒரு கனவு. 'இராதா' என்று ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருந்தக்கூடிய ஒரு பெயரே அந்த அலியின் பெயர்.

கனவில் கண்ணபிரான் வருவது போலவும் அவனுடன் பஞ்ச பாண்டவர்களும் பாஞ்சாலியும் இருப்பது போன்றதுமான காட்சி – பாண்டவர்களின் வனவாசத்தில் ஒரு கட்டமாக, யாருமறியாமல் மாறுவேடத்தில் அவர்கள் அஞ்ஞாத வாசம் செய்ய வேண்டுமென்பது நிபந்தனை! இல்லையேல் தருமன், துரியனுடன் ஆடிய சூதாட்டத்தில் வைத்து இழந்த நாடு கிடைக்காது. எனவே பாண்டவர்கள் ஒவ்வொருவரும் மாறுவேடம் பூண்டு மறைந்து வாழ்கிறார்கள். அவர்களில் அலியாக மாறி, மறைந்து திரியும் அர்ச்சுனன், கண்ணபிரானைத் தனியாகச் சந்திக்கிறான்; ஆம்; அரவாணி இராதாவின் கனவில்!

"கண்ணா! எனக்கொரு சந்தேகம்!"

"என்ன அர்ச்சுனா? சொல்!"

"நான் இப்போது ஆண்பாலா? பெண்பாலா?"

"திடீரென இது என்ன உனக்கு இலக்கணக் குழப்பம்?"

"என்னை, அவன் என்பார்களா? அவள் என்பார்களா?"

"சற்றுப் பொறு! தொல்காப்பியத்தைப் பார்த்துச் சொல்லுகிறேன்!"

என்றவாறு கண்ணபிரான், எதிர்த்திசையில் கையை நீட்டுகிறார். திடீரென அவர் கையில் தொல்காப்பியச் சுவடி தோன்றுகிறது.

அலி உருவில் இருக்கும் அர்ச்சுனன் கண்ணனைப் பார்த்து,

"என்ன கண்ணா இது; இந்தக் காலத்தில் தொல்காப்பியம்?" என வினவிட;

"காண்டீபா! கனவு தானே இது! எல்லாம் நடக்கும்!"

என்று கூறிக் கொண்டே சுவடியைப் புரட்டுகிறார் கண்ணபிரான்.

"இதோ பார்! உன் கேள்விக்குத் தொல்காப்பியத்தில் விடை இருக்கிறது!"

"என்ன விடை ? நான் ஆணா ? பெண்ணா ?"

"இரண்டுமில்லை. 'பேடி' என்று இருக்கிறது."

"நான் ஆண் தானே!"

"அர்ச்சுனா! ஆண்மை திரிந்த பேடியைப் பற்றி இலக்கணம் சொல்லும் தொல்காப்பியம், ஆண்மை திரிந்த பிறகு அவர்களை ஆண்மைத் தன்மையை சுட்டுகிற சொல்லுடன் சேர்த்துச் சொல்லக்கூடாது. அதாவது பேடி வந்தான், போனான், பேசினான், என்று சொல்லாமல், பேடி வந்தாள், போனாள் என்றே சொல்ல வேண்டுமென்கிறார்"

"அதற்கு என்ன செய்யுள் இருக்கிறது ?"

"இதோ; படிக்கிறேன் கேள்!

'ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறி சொற்கு ஆகு இடன் இன்றே."

இதைக் கேட்ட அர்ச்சுனன் முகவாட்டத்துடன்,

"கண்ணா, எல்லாம் சரி, தொல்காப்பியக் கூற்றுப்படி ஆண்மை திரிந்து அதாவது மாறிப் போய்ப் பேடி உருவம் பெற்றால் பெண்பாலில் தான் குறிப்பிடவேண்டும். ஆனால் என்னைப் பொறுத்தவரையில், பால் திரிந்து போய் உருமாற்றம் பெற்றது போல என் ஆண்மை திரிந்து பேடியாகவில்லையே! சூதாட்ட

நிபந்தனைப்படி பேடி உருவில் மறைந்துதானே
வாழ்கிறேன்!''

''அதனால் உன்னை ஆணை அழைப்பது
போல் வந்தான், போனான் என்றே
அழைக்கலாம் என்கிறாய்; அப்படி
அழைத்தால் நீ மாட்டிக் கொள்வாய்! எனவே
பெண்ணாகவே உன்னைப் பாவிப்பதைப்
பேடியாகவே இருந்து சகித்துக்கொள்''

''பரந்தாமா! நானாவது பஞ்சத்துக்கு ஆண்டி!
சகித்துக் கொள்கிறேன். ஆனால் பாவம்
ஆண்மை திரிந்து பேடியாக மாறியவர்கள்
எத்தனை ஆயிரம் பேர்; தங்களைப்
பெண்பாலில் அழைக்கும்போது எப்படிச்
சகித்துக் கொள்வார்கள்?''

''பார்த்திபா! பெண்பால் என்றால் ஏன்
இழிவாகக் கருதுகிறாய்? பாவம் உனக்கு
பெண் என்றாலே பிடிக்காது! பாஞ்சாலி,
அல்லி, பவளக்கொடி, சுபத்திரை, இன்னும்
யார் யாரோ எல்லாரும் பெண்பாலர்தானே?''

அர்ச்சுனன் நாணத்தால் தலைகுனிகிறான்.
உடனே கண்ணபிரான்,

''அடடே; தொல்காப்பிய இலக்கணம்
இப்போது உன்னிடம் நூற்றுக்கு –
தொண்ணூறு சதவிகிதம் பொருந்துகிறதே!''

திடுக்கென அரவாணி இராதா விழித்துக்
கொள்ள,

அவள் கண்ட கதம்பக் கனவு கலைகிறது.

★

“ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகுஇடன் இன்றே”

(சொல்லதிகாரம் – கிளவியாக்கம் –

நூற்பா : 12)

திரிந்த = மாற்றம் பெற்ற

கிளவி = சொல்.

மலர் (16)

பெண் மகன்

தோட்டத்து முல்லைப் புதரோரம்
அமர்ந்து மரகதமும், தங்கமும் ஊர்க்கதை
பேசிக் கொண்டிருந்தார்கள். "ஏய், தங்கம்
தெரியுமாடி சேதி! நம்ப அன்னத்துக்குக்
கொஞ்ச நாட்களாகவே மனநலம்
அவ்வளவாகச் சரியில்லை என்கிறார்கள்"

"ஏன்; ஏதாவது காதல் தோல்வியா?
அப்படி அவள் யாரையும் காதலிப்பதாகவோ –
அல்லது இவளைத்தான் யாரும்
காதலிப்பதாகவோ நான்
கேள்விப்படவில்லையே!"

"நானும் அப்படி சந்தேகப்பட்டுத்தான்
நேற்று அவளைப் போய்ப் பார்த்தேன்"

"நேரிலேயே பார்த்தாயா?
எப்படியிருக்கிறாள்? ஏதாவது தாறுமாறாகப்
பேசினாளா?"

"நேரில்தான் பார்த்தேன்! அவளைச் சுற்றி
ஒரே புத்தகங்களின் குப்பை!"

"புத்தகங்களின் குப்பையா? அல்லது
குப்பைப் புத்தகங்களா?"

"அதெல்லாம், அன்னம் கையால் கூடத் தொட மாட்டாளே! அந்த வகை புத்தகமோ, அல்லது வார இதழ்களில் வரும் வக்கிரம் பிடித்த கதைகளோ அவளுக்கு அறவே பிடிக்காது. யாராவது கொடுத்தால்கூட வாங்கி, வீசி எறிவாள்!"

"அது கிடக்கட்டும். இது போல பெண்களும், ஆண்களும் அந்த விஷயங்களை வெறுப்பது போல் நடந்து கொண்டாலும்; ரகசியமாக வாங்கிப் படிக்காமல் இருக்கமாட்டார்கள். சரி, மரகதம்! அன்னம் எப்போதும் இலக்கியங்களில்தான் மூழ்கியிருப்பாள் – இப்போது என்ன ஆச்சு அவளுக்கு?"

"அதனால்தான் இலக்கியப் பைத்தியம் பிடித்துவிட்டது!"

"நீயும்தான் இலக்கிய ரசிகை!"

"இருந்தாலும் இப்படியா? தன் தலையும் சுற்றி, மற்றவர்கள் தலையையும் சுற்ற வைப்பதற்கு?"

"சொல்லுடி; என்ன விஷயம்?"

"அதாவது – ஆண்மை திரிந்து பேடியானால் – அந்தப் பேடியை ஆண்பாலால் குறிப்பிடக் கூடாது. 'வந்தாள், பேசினாள்' என்றே பெண் பாலால் சொல்லவேண்டும் என்று இலக்கணம்!"



"ஆமாம்! அதற்கென்ன? அன்னம் என்ன சொல்லுகிறாள்?"

"என்ன அது?"

"பெண் மகன் வந்தாள் என்று சொல்லலாமாம்!"

"அது எப்படி? பெண் மகனா? பேடியைச் சொல்கிறாயா?"

"இல்லை யில்லை! முன்பெல்லாம் பருவமடையாத பெண்ணைப் பெண் மகன் என்று அழைக்கும் வழக்கு இருந்ததாம். அதனால் பெண் மகன் வந்தாள் என்று கூறலாம் என்று அன்னம் கூறுகிறாள்!"

"சரி; சரி; சந்தேகமில்லாமல் அவளுக்கு மூளைக் கோளாறு தான்! நல்ல கற்பனை செய்கிறாள்; பைத்தியம், பைத்தியம், பைத்தியமே தான்!"

"யாருக்கடி பைத்தியம்? ஏய், தங்கம்! மரகதம்! நானாகச் சொல்வதல்லடி இது!" என்று உரக்க ஒலித்தவாறு அன்னம் அங்கே நுழைந்து, தன் கையிலிருந்த தொல்காப்பியப் புத்தகத்தைத் திறந்து,

"இதோ இதை நன்றாகக் கண்ணைத் திறந்து படியுங்கள்"

என்று பக்கத்தைப் புரட்டிக் காட்டினாள்.

“எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகன் என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்”

மற்றும்;

“மகடூஉ மருங்கின் பால் திரிகிளவி
மகடூஉ இயற்கை தொழில் வயினான”

சொல்லதிகாரத்தில் உள்ள இந்த நூற்பாவிற்கு பொருள் என்ன தெரியுமா?

சுருக்கமாகச் சொன்னால்; “பால் திரிந்து வழங்கும் பெண்மகன் என்ற சொல், பெண் மகன் வந்தாள் என்று பெண் பால் வினை கொள்ளும்”

அன்னம் மேலும் சொன்னாள்;

“எல்லாரும் எல்லீரும் பெண்மகன் போன்ற சொற்களும் உயர்திணைப் பெயர்கள் என்பர். முன்பெல்லாம் பருவம் வராத பெண்ணைப் பெண்மகன் என அழைக்கும் வழக்கம் இருந்தது”

தங்கமும் மரகதமும் அன்னத்தை விழி மூடாமல் பார்த்து வியந்து போயினர்.

“தொல்காப்பிய நூற்பா, மற்றும் உரை, அதற்கான விளக்கம் இவற்றைப் படியுங்கள்;

பிறகு தீர்மானம் செய்யுங்கள் அன்னம் பைத்தியமா என்று!'' இவ்வாறு கூறிக் கொண்டே அன்னம் வெளியேறினாள்.

★

''எல்லாரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
எல்லீரும் என்னும் பெயர்நிலைக் கிளவியும்
பெண்மை அடுத்த மகன் என் கிளவியும்
அன்ன இயல என்மனார் புலவர்''

(சொல்லதிகாரம் – பெயரியல் – நூற்பா : 10)

''மகடூஉ மருங்கின் பால் திரிகிளவி
மகடூஉ இயற்கை தொழில் வயினான''

(சொல்லதிகாரம் – பெயரியல் – நூற்பா : 40)

விருந்துக்கு வந்துவிட்டேன்

விருந்துக்கு நண்பர்களை அழைத்திருந்தான். இரு நண்பர்கள் உச்சியில் கதிரவன் உயர்ந்து நிற்பதற்கு முன்பே வந்துவிட்டனர். "என்னங்க; என்னிடம் முன்கூட்டி ஒரு வார்த்தை சொல்லாமலே விருந்துக்கு வரச் சொல்லி விட்டீர்களே?" என்று செல்லமாய்க் கோபித்துக் கொண்டாள் வீட்டுக்காரி.

"விரால் மீன்கள் கிடைத்தன. நண்பர்களுடன் சாப்பிட்டால் எனக்கும் மகிழ்ச்சி; உனக்கும் பிடிக்குமே என்பதற்காகத்தான் அவர்கள் இருவரையும் கூப்பிட்டேன். சீக்கிரம் சமையலைக் கவனி!"

அரிசி புடைத்து, நீரில் களைந்து அதை உலையிலிட்டு அடுப்பை மூட்டிவிட்டு, அதன் தொடர்ச்சியாக விரால் மீன்களைத் துண்டங்களாக நறுக்கி, அளவு மீறாமலும் குறையாமலும் உப்பு, புளி, மிளகாய்த்தூள் போட்டுச் சட்டியில் கொதிக்கும் குழம்பில் மீன்

துண்டங்களை மெதுவாகப் போட்டு, இரண்டு அடுப்புகளையும் மாறி மாறிக் கவனித்துக் கொண்டு சமையல் வேலையை விரைவுபடுத்தினாள் வீட்டுக்கு அரசி!

விருந்தினர்க்கு உணவு பரிமாறித் தானும் உண்பதில் அவளுக்கும் தனி இன்பம்தான்!

கணவன், வீட்டுத் திண்ணையிலிருந்தவாறு துணைவியை அழைத்து அழைத்து, "என்ன சமையல் ஆச்சா? எவ்வளவு நேரம்? எவ்வளவு நேரம்?" என்று உரத்த குரலில் கேட்டுக் கொண்டேயிருந்தான்.

அவன் சப்தம் போடுவது அவளுக்குப் பிடிக்கவில்லை.

திருக்குறள் விருந்தோம்பல் அதிகாரம் – "மோப்பக் குழையும் அனிச்சம் முகந்திரிந்து; நோக்கக் குழையும் விருந்து" எனும் வரிகள் அவள் நெஞ்சில் எச்சரிக்கை மணியாக ஒலித்துக் கொண்டிருந்தன. பறந்து பறந்து சமையற்பணி ஆற்றிக் கொண்டிருந்தவளின் செவிகளில்; வெளியிலிருந்து கணவனின் கடுமொழி விழுந்தது!

"எந்தக் காலத்தில் சமைத்து முடிப்பது? எந்தக் காலத்தில் பரிமாறுவது? எந்தக் காலத்தில் நாங்கள் சாப்பிடுவது?"



வீட்டுக்காரி, தாழ்வாரத்தில் இலை போட்டுக் கொண்டே, புன்னகை புரிந்தவாறு சொன்னாள்:

"எதிர்காலத்தையும், நிகழ்காலத்தையும் கடந்த காலக் குறிப்புடன் கூறுகிறேன் – இதோ சமையல் முடித்து விட்டேன்! பரிமாற வந்து விட்டேன்! நீங்கள் மூவரும் வந்து சாப்பிடலாம்!"

"ஆகா! இந்த இல்லத்தரசி ஓர் இலக்கிய அரசிதான் போலும்!" ஒரு நண்பன் பாராட்டினான்.

"அரசி ஒன்றுமில்லை நான் – இல்லறக் கடமையுடன் இலக்கியமும் கற்ற ஒரு பெண்; அவ்வளவுதான்!"

கணவன் அவளைப் பார்த்து அன்பும் பூரிப்பும் அளவுகடந்து பொங்கிடக் கேட்டான்;

"இது தொல்காப்பியம் தானே? முழுமையாக அந்தச் நூற்பாவைச் சொல்லலாமே–"

"முதலில் உணவு வேலை முடியட்டும். பிறகு ஆகட்டும்" என்றாள்.

விருந்து அருந்தியபின் அந்தத் தொல்காப்பிய இலக்கண விருந்தையும் படைத்தாள்!

★

“வாராக் காலத்தும் நிகழுங் காலத்தும்
ஓராங்கு வரூஉம் வினைச்சொற் கிளவி
இறந்த காலத்துக் குறிப்பொடு கிளத்தல்
விரைந்த பொருள என்மனார் புலவர்”

(சொல்லதிகாரம் – வினையியல் –

நூற்பா : 44)

குறிப்பு :– வருங்காலம், நிகழ் காலத்தை ஒருங்கிணைத்திடும் நிகழ்ச்சியைக் கடந்த காலக்குறிப்புடன் கூறுதல், விரைவு கருதிக் கூறுவதாகும்.

தமிழ் பொருள்

டார்வின் சித்தாந்தம், குரங்கிலிருந்து மனிதன் தோன்றிய விதம் பற்றி அறிவியல் ரீதியில் விளக்கி வெற்றி கண்டிருக்கிறது. உலகில் பரிணாம வளர்ச்சி காரணமாக பல்கிப் பெருகிய மனித சமுதாயத்தில் ஏறத்தாழ ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, முறையான வாழ்வுக்கு மெல்ல மெல்லத் தயாராகிக் கொண்டது தமிழ் இனம்.

உயிர் வாழ்வது வேறு; அந்த வாழ்வை வரையறுத்து வாழ்க்கை நடத்துவது என்பது வேறு. அத்தகைய வாழ்க்கை அமைந்திட தொடர்புச் சாதனங்கள் தேவை. அந்தத் தொடர்புச் சாதனங்களில் முதன்மையானதும்; காலம் கனியக் கனிய இன்றியமையாததுமாக மொழியே இருந்தது.

உலகில் பல பகுதிகளில் உருவான இனங்கள் மொழிச் சாதனத்தைப் பயன்படுத்திக் கொள்ளத் தொடங்கின எனினும்; அவற்றில் மொழியில் இலக்கியம் கண்டு, அதற்கு

இலக்கணமும் கண்டு, ஐயாயிரம் ஆண்டுக்கு முன்பே ஆரம்பமான வளர்ச்சிக்கு இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னரே மெருகேற்றிக் கொண்ட பெருமையும் வரலாற்றுச் சிறப்பும் தமிழ் இனத்துக்கே உண்டு.

அதற்கு எடுத்துக்காட்டாக விளங்குவதே தொல்காப்பியத்தின் பொருளதிகாரமாகும். இதில் சொல்லப்பட்டிருக்கும் பழங்கால வாழ்க்கை முறைக் குறிப்புகள், ஒழுக்கம் பற்றிய பல செய்திகள், தொல்காப்பியத்திற்கு முன்பே தமிழ் நிலத்தில் நடைமுறையில் இருந்தன எனினும்; அவற்றையும் செப்பனிட்டுச் சேர்த்து தம் காலத்து வாழ்க்கை முறை நிலைமைகளையும் தொல்காப்பியர் தொகுத்து, இலக்கிய மணம் வீசும் இலக்கணப் பூங்கொத்தாக வழங்கியிருக்கிறார் என்பதுதான் நம்மைப் பெருமிதம் கொள்ளச் செய்வதாகும்.

அந்தக் காலத்தில் இந்த இனம் கொண்டிருந்த கோட்பாடுகள், நம்பிக்கைகள், காதல், வீரம், அவற்றில் வெற்றி கொள்ளப் பின்பற்றிய வழி முறைகள்; இந்தக் காலத்திற்கு எந்த அளவுக்கு ஏற்றுக் கொள்ளப்படக் கூடியவை என்பது விவாதத்திற்குரியதாக இருப்பினும்; தொல்காப்பியம் போன்ற நூல்கள் இல்லையேல் நாம் காலக் கண்ணாடிகளை இழந்தவர்களாயிருப்போம்.

அந்த அடிப்படையிலும், பின்னணியிலும், தொல்காப்பியப் பொருளதி காரத்தில் சில மலர்களின் மணம் நுகர்வோம்.

முதற்பொருள், கருப்பொருள், உரிப்பொருள் என இலக்கியத்தில் வழங்குவதை முறையாகச் சொல்லும் வகையில் அமைத்துக்கொண்டு, இந்த மூன்றில் முதல் பொருள் எனப்படுவதை நிலம், பொழுது என இரண்டாகப் பிரித்து அவற்றின் தன்மையும் இயல்பும் கூறப்படுகிறது.

"முதல் எனப்படுவது நிலம் பொழுது இரண்டின்
இயல்பு என மொழிப இயல்பு உணர்ந்தோரே!"

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 4)

நிலத்தை முல்லை, குறிஞ்சி, மருதம், நெய்தல் எனப் பிரித்து ஒவ்வொன்றிலும் முறையே கண்ணன், முருகன், இந்திரன், வருணன் என வழிபடு தெய்வங்களைக் கற்பித்துக் கொண்டு போற்றி வாழ்ந்தனர்.

"மாயோன் மேய காடுறை உலகமும்"

கண்ணன் விரும்புகிற காடுடைய முல்லை நிலமும்,

"சேயோன் மேய மைவரை உலகமும்"

முருகன் விரும்புகிற மேகம் சூழ்ந்த மலைகளை உடைய குறிஞ்சி நிலமும்,

"வேந்தன்மேய தீம்புனல் உலகமும்"

இந்திரன் விரும்புகின்ற மிகுதியான நீர் வளம் கொண்ட மருத நிலமும்,

"வருணன் மேய பெருமணல் உலகமும்"

வருணன் விரும்புகின்ற பெருமணல் நிரம்பிய நெய்தல் நிலமும்,

அந்தத் தெய்வங்களின் அருட்பார்வையில் இருப்பதாக நம்பினார்கள்.

ஆனால் வறண்டு வளம் திரிந்துவிட்ட 'பாலை' நிலங்களுக்குத் தான் எந்தத் தெய்வமும் இல்லை என்பது, இந்தச் செய்யுளில் இருந்து தெரிகிறது.

பாலை நிலத் தெய்வமாக வர யாரும் விரும்பவில்லை போலும்!

★

"மாயோன் மேய காடுறை உலகமும்,
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே"

(சொல்லதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 5)

நிலமும் பொழுதும்

முனைவர் பால்காப்பியப் பூங்கா
தமிழ்த்துறைத் தலைவர்

தலைவனும் தலைவியும் புணரும் நிமித்தமும், பிரிதல் நிமித்தமும், பிரிந்த தலைவி இருத்தல் நிமித்தமும், அதற்கென இரங்கல் நிமித்தமும், ஊடல் நிமித்தமும், தலைவன் தலைவியைத் தன்னுடன் அழைத்துச் செல்லும் நிமித்தமும், சுற்றத்தினர் குறுக்கிடுதல் நிமித்தமும், அவர்கள் இவர்களைப் பிரித்தமை கண்டு கலங்குதல் நிமித்தமும், கற்றிடவும், பொருள்தேடவும், போர்புரியவும் காரணங்கள் அமைந்து விடை பெறும் நிமித்தமும் அமையும் நிகழ்வுகள் எந்தப் பொழுதில், எந்த நிலத்தில் என்பதெல்லாம் இனி வருபவை என்பதால் – அவற்றுக்கான விபரங்களை முன்கூட்டியே தெரிந்து வைத்துக் கொள்ளுதல் நலம்.

முல்லை நிலத்தில் பெரும்பொழுது கார் காலமாகவும், சிறுபொழுது மாலைக் காலமாகவும் இருக்கும்.

குறிஞ்சி நிலத்தில் பெரும்பொழுது குளிர்காலமாகவும், சிறுபொழுது



யாமம் எனப்படும் இரவுக் காலமாகவும் இருக்கும்.

மருத நிலத்தில் சிறுபொழுது வைகறை விடியல் என இருக்கும்.

நெய்தல் நிலத்தில் சிறுபொழுது காலை நேரமாக இருக்கும்.

நால்வகை நிலம் என்ற பட்டியலில் இடம் பெறாமல் – நடுவு நிலைத் திணையாக அமைந்துள்ளதும், வளம் சுருங்கி இயல்பு இதுவே என முல்லையும், குறிஞ்சியும் திரிந்த பாலை நிலத்தில், சிறுபொழுது பகலாகவும், பெரும்பொழுது இளவேனில், முதுவேனிலுடன் பின்பனியும் இருக்கும்.

★

"காரும் மாலையும் முல்லை; குறிஞ்சி
கூதிர் யாமம் என்மனார் புலவர்"

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 6)

"பனிஎதிர் பருவமும் உரித்தென மொழிப"

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 7)

"வைகறை விடியல் மருதம்; எற்பாடு
நெய்தலாதல் மெய்பெறத் தோன்றும்"

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 8)

“நடுவு நிலைத் திணையே நன்பகல்

வேனிலொடு

முடிவு நிலை மருங்கின் முன்னிய நெறித்தே”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 9)

“பின்பனி தானும் உரித்தென மொழிப”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 10)

கார் = கார்காலம் வேனில் = கோடை வெயில்

யாமம் = நள்ளிரவு

நெறித்தல் = முறிப்புக் கொள்ளல்

எற்பாடு = காலை நேரம் முன்னிய = முற்பட்ட

நடுவு நிலைத் திணை = பாலை நிலம்

இத்தனையும் கூறியுள்ள தொல்காப்பியர், திணைக்குரிய ஒழுக்கங்கள் அவற்றுக்கு மாறுபட்டு நிகழ்வதும் தவிர்க்க முடியாத ஒன்று எனக் கூறிவிட்டு; ஆனால் நிலங்கள் தம்முள் மாறுபடுதல் இல்லையென்று இலக்கணமுணர்ந்த அறிஞர்கள் கூறுவார்கள் என்கிறார்.

★

“திணை மயக்குறுதலும் கடிநிலை இலவே

நிலன் ஒருங்கு மயங்குதல் இன்றென

மொழிப

புலன் நன்குணர்ந்த புலமை யோரே''

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 12)

மயக்குறுதல் = மாறுபடுதல்

கடிநிலை = நீக்கும் நிலை

ஒருங்கு மயங்குதல் இன்றென = உடன்சேர்ந்து மாறுவது இல்லை

குறிப்பு :– உரிய ஒழுக்கத்தில் விதி விலக்கானோர் உலகில் எக்காலத்திலும் இருப்பார்கள்.

திணைமத் தகுதி

முதல் பொருளான நிலம் பொழுது இவற்றைத் தொடர்ந்து, உரிப் பொருளில் நிகழ்வுகள் குறித்து தெளிந்த பின்னர், கருப்பொருள் விளக்கம் அறிந்திடுவதும் இனி வரும் நிகழ்வுகளுக்குப் பின்னணி எனலாம்.

வழிபடுதெய்வம், வயிற்றுக்கு உணவு, விலங்கினம், மரம் செடி கொடிகள், பறவையினம், தோல் கருவிகள், தொழில், யாழ் அனைய நரம்புக் கருவிகள், இன்ன பிறவும் கருப்பொருள் என்பதில் அடக்கம். ஊர், நீர், பூ போன்றனவும் கருப்பொருள் என்பார்.

“தெய்வம், உணாவே, மா, மரம், புள், பறை,
செய்தி, யாழின் பகுதியொடு தொகைஇ
அவ்வகை பிறவும் கரு என மொழிப”

இந்தக் கருப்பொருள் பட்டியலில் பூவும், பறவைகளும் எந்த நிலத்திற்கு உரியவை என்று கூறப் பெற்றிருந்தாலும் – அவை பிற

நிலங்களில் வரினும், அந்நிலத்தின்
கருப்பொருளாகவே கொள்ளப்படும்.

★

“எந்நில மருங்கில் பூவும் புள்ளும்
அந்நிலம் பொழுதொடு வாரா ஆயினும்
வந்த நிலத்தின் பயத்தவாகும்”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 18, 19)

ஆயர், வேட்டுவர் என முல்லை நிலத்து மக்கள் போலவும் அவர்க்குத் தலைவர்கள் போலவும் – ஏனைய நிலத்து மக்களைப் பற்றியும் ஆராயும்போது அவ்விடங்களிலும் உழவர், உழத்தியர், ஊரன், மகிழ்நன் என்று திணைப் பெயர்கள் உள்ளன.

★

“ஆயர் வேட்டுவர் ஆடூஉத் திணைப்பெயர்
ஆவயின் வரூஉம் கிழவரும் உளரே”

“ஏனோர் பாங்கினும் எண்ணுங் காலை
ஆனா வகைய திணைநிலைப் பெயரே

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 21, 22)

ஆவயின் = அவ்விடம்

கிழவர் = தலைவர்கள்



“ஏவல் மரபின் ஏனோரும் உரியர்
ஆகிய நிலைமை அவரும் அன்னர்”
(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 24)

உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற நிலையினைக் கொள்ளாமல் பன்னெடு நாட்களுக்கு முன்பே பழந்தமிழர் காலத்தில் ஏவல் மரபினரெனப்படும் பணிவிடை புரிவோருங்கூடத் தலைவர்களாக உரிமையுடையவர்களாக இருந்தனர் என்கிறது தொல்காப்பியம்.

ஏவல் மரபு என்பதற்குப் பணியாளர் மரபு என்பதை விடுத்து; பணி ஏவுகின்ற மரபு என்றும் பொருந்தாப் பொருள் உரைப்போரும் உண்டு.

ஏனோர் = மற்றவர்.

மலர் (21)

நிலம் ஆண்ட நேர்த்தி

காடுறை உலகம், தீம்புனல் உலகம் என்று நிலங்களை உலகம் என்றே குறித்துத் தொல்காப்பியர் காட்டுவதைக் காணும்போது தமிழ் இனத்துக்கு இணையான, தனித்த பெருமையும், சிறப்பும் இல்லா விடினும் உலகம் எனும் பொதுவான கண்ணோட்டத்துடனேயே மாந்தர் தம் வாழ்வை, அவர் வகைப்படுத்துகிறார் என்பது புலனாகிறது.

ஒவ்வொரு நிலத்திலும் உள்ள மரபும், தொழிலும் திட்டவட்டமாக அந்த நிலங்களில் மட்டுமே அல்லாமல் மற்ற நிலங்களுக்கும் ஊடுருவின எனினும்; சிறிது தலைகாட்டிப் பரவின எனினும் பெரும்பாலும் குறித்துணர்த்தப்பட்ட அந்த வகை நிலங்களுக்கே உரியதாகக் கருத வேண்டியுள்ளது.

ஒவ்வொரு திணைக்கும் மரபு பற்றி வரும் பெயரும், தொழில் பற்றி வரும் பெயரும் என்று இருவகைப்படும்.

★

"பெயரும் வினையும் என்று ஆ இருவகைய;
திணைதொறும் மரீஇய திணைநிலைப் பெயரே"
(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 20)

"ஓதலும் தூதும் உயர்ந்தோர் மேன"
(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 26)

இரு செயலிலும்; அறிவிலும், ஒழுக்கத்திலும், ஆற்றலிலும் உயர்ந்தோர் பொறுப்பேற்க விட வேண்டுமென்கின்றார்.

அரசனோ அல்லது தனது தானைத் தலைவர்களோ அரசனின் விருப்பத்திற்கேற்பப் போருக்குச் செல்லலாம்; அது அரசனின் பொறுப்பு என்கிறார்.

★

"தானே சேறலும் தன்னொடு சிவணிய
ஏனோர் சேறலும் வேந்தன் மேற்றே"
(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 27)

எனவே தலைமை ஏற்பதற்கு, நிலம் ஆள்வதற்கு, போர் புரிதல், ஓதுதல், தூது எனும் அரிய பணிகளுக்கு, உரிய ஒழுக்கத்திலும் ஓங்கிய அறிவிலும் வீரத்திலும் உயர்ந்த சிறந்தோர் இருந்திடல் வேண்டும் என்பதோடு;

'முல்லை' முதலாகச் சொல்லப்பட்ட எல்லா நிலங்களிலும், தெய்வவழிபாடும், விழாக்களும் செம்மையாக நடைபெறவும் மக்கள் தவறான வழியிற் செல்லாமல் தடுத்து நிறுத்தப்படவும்,

பொருள் ஆக்கப்படுவதற்கும்
காக்கப்படுவதற்கும் பிரிவுகள் அமைவதைக்
குறிப்பிடுகிறது இந்த நூற்பா.

★

“மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய,
முல்லை முதலாச் சொல்லிய முறையால்
பிழைத்தது பிழையாதாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே”
(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 28)

இவ்வாறு,

குறிப்பிட்ட நிலத்துக்குரிய,
ஆளுமையானது; தலைமக்கள், நிலமக்கள்,
அடியோர், வினையாற்றுவோர் என
நால்வருக்கும் உரியதாகும்.

★

“மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்து”
(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 29)

நால்வருக்கும் என்பதை உரையெழுதிய
ஒரு சாரார் “நால்வருணத்தார்” எனத் திரித்துக்
கூறுவர்.

ஆளுமைக்காக அமைக்கப்பட்ட எல்லாப்
பிரிவுகளுமே வருணம் காரணமான பிரிவுகள்
என்பது குறுகிய நோக்குடன் வாதாடும்
‘பெரியோர்’(?)களின் வக்கிரச் சிந்தனையே
தவிர வேறில்லை.

❀

மறுப்புக்குப் பரிசு!

கல்லூரி வகுப்பறையில் தமிழ்ப் பேராசிரியர் ஓர் அறிவிப்பு செய்தார்.

“மாணவ மணிகளே; தமிழ்த் தென்றல் திரு.வி.க. அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு ஒரு பரிசுப் போட்டி அறிவிக்கிறேன். பழந்தமிழ் இலக்கிய மரபுக்கும், வரலாற்றுண்மைக்கும் மாறுபாடு இல்லாத முறையில் உங்களில் யார் ஒருவர், கவரும் நடையில் கற்கண்டுத் தமிழில் ஓர் ஆணையும் பெண்ணையும் கதாபாத்திரங்களாக்கிக் கவின்மிகு காட்சியொன்றைச் சித்தரிக்கிறீர்களோ அதில் முதல் பரிசு பெறுபவருக்கு ஐயாயிரம் ரூபாய்க்கான இலக்கிய நூல்கள் வழங்கப்படும். உம்; இப்போதே எழுதத் தொடங்கி வகுப்பு நேரம் முடிவதற்குள், என் முன் வந்து படித்துக்காட்ட வேண்டும்.”

அந்த அறிவிப்பை வரவேற்ற மாணவர்கள், பரிசைப் பெற்றிட ஆர்வமுடன் நான் முந்தி நீ முந்தி என அங்கேயே எழுதத் தொடங்கி விட்டார்கள்.

“பரிசு பெறுவதற்கு மற்றொரு நிபந்தனை! முதலில் எழுதி முடிக்கவேண்டும். எழுதியது பரிசுக்குரியதாகவும் இருக்க வேண்டும்”

அறிவிப்பு முடிந்து ஒரு மணி நேரத்திற்கெல்லாம், போட்டியில் கலந்து கொள்ளும் முதல் மாணவனாக “பேராசிரியர் அய்யா! எழுதி முடித்து விட்டேன்” என்று எழுதிய தாள்களுடன் அவரிடம் சென்றான், முகிலன்! “அப்படியா! மகிழ்ச்சி! எங்கே உரக்கப்படி” என்றார் தமிழ்ப் பேராசிரியர்!

மாணவன் முகிலன் மடமடவெனப் படிக்க ஆரம்பித்தான்.

“காதலன், காதலியிடம் சென்று
வருத்தமாக உட்காருகிறான்.

காதலி, அவனைப் பார்த்து; ‘ஏன்
வருத்தம்? எதற்காக இந்த முகவாட்டம்?’
எனக் கேட்கிறாள்.

‘ஊடல்’ என்கிறான் அவன்.

“ஊடலா? அப்படியென்றால். . .?”

“சரிதான் போ, ஊடல் என்றால் தெரியாதா?
திருக்குறள் இன்பத்துப் பாலிலேயே

“சிணுங்குவானேன்? பிறகு சமாதானம்
ஆவானேன்?”

“சமாதானமாவதற்காகவே சண்டை
போட்டுக் கொள்வதுதான் ஊடல்!”

“சரி; சண்டையை ஆரம்பியுங்கள்!”

“உனக்குப் பிடிக்காத செய்தி ஒன்று
சொல்லப்போகிறேன்!”

“என்னத்தான் அது?”

“நாளைக் காலையில் உரோமாபுரிப்
பயணம்!”

“மறுபடியும் வெளிநாட்டுக்கா?”

“ஆமாம், தமிழ்நாட்டு முத்துக்களை
ஏற்றிச் செல்ல வேண்டும்”

“அய்யோ! கடல் அலையில் கட்டுமரம்
போல் தவிப்பதற்கோ நான் பிறந்தேன்?
இல்லை; உங்கள் பயணத்தைத்
தடுப்பதற்குத் துணிந்தேன்”

“தடை வேண்டாம். தணல் வேண்டாம்
உன் விழியில்! புனல் கடந்து ஒளிமுத்து
விற்று வந்தால் மடை திறந்த வெள்ளம்
போல் பொற்காசு குவியும்; விடை கொடு
பாவாய்!”

“குத்து விளக்கொன்றை இங்கே
தவிக்கவிட்டு, கத்து கடல் கீறிச்
செல்கின்றீர்; நான் செத்து மடிந்தபிறகு
என்னை வந்து காண்பீர்!”

“அடடா; இதோ பார்! சிப்பியிலே
விளையாத சிரிப்பு முத்து நீ காட்டப்
போகிறாய்! என் சிந்தையிலே உறவாடும்
செந்தமிழே! என்னுடன் நீயும் வருகிறாய்
உரோமாபுரிக்கு! சரிதானே!”

அதுகேட்டு சத்தான முத்தங்கள்
சத்தமுடன் தந்து அவள் அத்தானைத் தழுவிக்
கொண்டாள்.

வகுப்பறையில் முகிலனைப் பாராட்டி
மாணவர்கள் கையொலி செய்தனர்.
பேராசிரியராம் தமிழ் ஆசிரியர்;

“என்ன மாணவர்களே! முகிலனுக்கு
முதற் பரிசு தரலாமா? ஆனால் ஒன்று,
இது முழுமையாக முகிலன்
எழுதியதில்லை; பூம்புகார் நாடக

உரையாடல் சில வரிகளைப் படித்தது போல இருக்கிறது!

முல்லைக்கொடி என்ற மாணவி குறுக்கிட்டாள் –

“ஆசிரியர் அவர்களே! நண்பர் முகிலன் எழுதியது இலக்கிய மரபையும், பழந்தமிழ் மரபையும் ஒட்டியதாக இல்லை! பூம்புகார் உரையாடலும் இப்படி இல்லை!”

“என்னம்மா உன் மறுப்பு? எங்கே; நான் நினைப்பதைச் சொன்னால் உனக்குப் பரிசு வழங்கப்படும்”

“அய்யா; கடந்த வாரம் நீங்கள் நடத்திய தொல்காப்பிய வகுப்பில்; “முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை” என்ற செய்யுளுக்கு, கடல் வழிப் பயணமாக வெளிநாடு செல்லும்போது மனைவியை அழைத்துச் செல்வதில்லை என்று பொருள் கூறி; பழந்தமிழர்கள் மரபை விளக்கினீர்கள் – ஆனால் இப்போது முகிலன் எழுதியது அதற்கு முரண்பாடாக இருக்கிறதே?”

“ஆமாம், முல்லைக்கொடி! நான் நினைத்ததை அப்படியே சொல்லிவிட்டாய்! தம்பீ முகிலன்; உன்



கட்டுரை அருமை! – நீ வர்ணித்த காட்சி
கண்ணிலேயே நிற்கிறது! ஆனால்
முல்லைக்கொடி எழுப்பியுள்ள
மறுப்புக்குத்தான் பரிசு!''

அதற்கும் மாணவர்கள் கையொலி எழுப்பி மகிழ்ச்சி தெரிவித்தார்கள்.

★

''முந்நீர் வழக்கம் மகடூஉ வோடு இல்லை''

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 34)

மகளிர் மடல் !

பரிசளிக்கப்பட்ட புத்தகங்களுடன் முல்லைக்கொடி வகுப்பறையை விட்டு வெளியே வந்தபோது, முகிலன் அவள் அருகில் நெருங்கி; "மகிழ்ச்சி! நல்வாழ்த்துகள்" என்று முறுவல் பூத்த முகத்துடன் சொன்னான் என்றாலும், முல்லைக்கொடி மீது தனக்கிருந்த கோபத்தை வெளிக்காட்டவே விரும்பினான் என்பது தெரிந்தது.

"முகில்! தூக்க முடியவில்லை இந்தப் புத்தகங்களைக் கொஞ்சம் பிடி!"

"ஆங்! நான் என்ன தூக்குத் தூக்கியா?" என்று சொல்லிக் கொண்டே அந்தப் பரிசுப் புத்தக அடுக்கினை முகிலன் வாங்கிக்கொண்டான்.

"ஏன் முல்லை; அது என்ன புதுமைப் பெண் நீ! நீ போய் ஆண் ஆதிக்கத்திற்கு ஆலவட்டம் சுற்றினாய்?"

"நானா? ஆணாதிக்கத்துக்கு ஆலவட்டமா?"

"ஆமாம்; மகளிர், கடல் பயணம்
ஆண்களுடன் போகக்கூடாது – என்ற
தொல்காப்பியக் கருத்துக்கு நீ வக்காலத்தா?"

"அது தொல்காப்பியர் கருத்தென்று
யார் சொன்னது? பழங்காலத்தில் அப்படி ஒரு
பண்பாடு கடைப்பிடிக்கப்பட்டிருக்கிறது;
அதை அவர் மறைக்காமல் அப்படியே
வெளிப்படுத்தியிருக்கிறார்"

"அந்த பிற்போக்கான கொள்கைக்குப்
பெண்களைத் தள்ளக் கூடாது என்றுதான்
அதை நான் குறிப்பிடவில்லை! அதாவது
தனக்கு எதிரான விஷயத்தை ஒரு பெண்
ஆதரித்துச் சொல்லி, அதற்கு ஒரு பாராட்டைப்
பெற்றுவிட்டாய். சரியான பெண்ணடிமைத்
தனம்! தொல்காப்பியமே இப்படித்தான்
பெண்களைச் சித்தரிக்கிறது!"

"இந்த வரலாற்று உண்மைகள், அந்தக்
கால மக்களின் வாழ்க்கை நிலைகள்,
அவர்களின் நம்பிக்கைகள், அதன்
அடிப்படையில் அவர்களது நடவடிக்கைகள்
எல்லாவற்றையும் ஒன்று கூட மறைக்காமல்
எடுத்துக்காட்டுவதே இலக்கியம். ஒன்று
தெரியுமா முகில்; பெண்களுக்குக் கடல்
பயணம் கூடாது என்றிருந்ததை
எடுத்துக்காட்டியவர், பெண்களுக்கு ஒரு
நன்மையும் அந்தக் காலத்தில் இருந்ததைச்
சொல்லியிருக்கிறார்!"



"என்ன அது; முல்லை?"

"காதலியை எப்படியும் அடைய
வேண்டுமென்று ஆண்கள் மடலேறுவார்கள்
அல்லவா அந்தக் காலத்தில். . . . .!"

"ஆமாம்! பனங்கருக்கால் குதிரை
செய்து, அதன்மீது உட்கார்ந்துகொண்டு –
கையில் காதலியின் படம் வரையப்பட்ட
கொடியைப் பிடித்தவாறு, பனங்கருக்கினால்
உடலின் பல இடங்களில் காயம் ஏற்பட்டு
இரத்தம் கசியக் கசிய – பெண்ணைக்
கொடுங்கள் என்று தெருவில் போய்க்கொண்டே
பெண்ணின் பெற்றோரை வற்புறுத்துவார்கள்,
ஆண்கள்; அதற்குத்தான் மடலேறுதல் என்று
பெயர்!"

"அந்த வேதனை எங்களுக்கு வேண்டாம்
என்று; மகளிர் மடலேறுதல் கூடாது என்று
தொல்காப்பிய காலத்திலேயே தடுக்கப்
பட்டிருக்கிறது!"

"எங்கள் காதல் நிறைவேற நாங்கள்
மடலேற வேண்டும்; உங்கள் காதல் நிறைவேற
வேண்டுமென்றால் மட்டும் . . . ."

"நாங்கள் மடலேறத் தேவையில்லை; மடல்
எழுதினாலே போதும்!"

"அப்படியா? அவ்வளவு சுலபமாகவா?
எழுதட்டுமா?"

"மணவிழா மடல் தானே!" என்று கேட்டு
முல்லைக்கொடி நாணத்துடன் நகரத்
தொடங்கினாள், முகிலனிடமிருந்த
புத்தகங்களை வாங்கி அவற்றை மார்பகத்தில்
அணைத்துக்கொண்டு!

"அந்தப் புத்தகங்களாக நானிருக்கக்
கூடாதா?" என்று முகிலன் கேட்கவில்லை.
கேட்டது போல இருந்தது அந்தக் குறும்புப்
பார்வை!

★

"எத்திணை மருங்கினும் மகடூஉ மடல்மேல்
பொற்புடை நெறிமை இன்மையான"

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் –
நூற்பா : 35)

(பெண்கள் மடலேறுதல்
சிறப்பான ஒழுக்கம் இல்லை)

இடையிடை சில எளிய விளக்கம்

பொருளதிகாரத்தில் பழந்தமிழ்ச் சொற்கள் அல்லது சொற்றொடர்களுக்கு உரையெழுதிய உயர்ந்தோர் பலரும்; அன்றும் சரி, இன்றும் சரி அவற்றைப் படிப்போரின் புலமை குறித்துக் கவலைப்படாமல்; இசை நிகழ்ச்சியில் குழுமியிருக்கின்ற ஆயிரக்கணக்கான 'ரசிகர்'களுக்கிடையே சுமார் நூறு பேருக்கும், இசைவாணருக்கும் மட்டுமே தெரிந்த இசை நுணுக்கங்களை வெளிப்படுத்திப் பாடுவதே போல்; இயல்பாக அனைவருமே படித்து எளிதாகச் சுவைக்கக்கூடிய உரைகளையோ, விளக்கங்களையோ வழங்காமல் கற்பாறைப் பாதைகளிலேயே இலக்கியப் பயணத்தை நடத்தியுள்ளனர்.

குறிப்பாக "திணை" என்றால் என்ன என்பதை எத்தனை பேர் புரிந்து கொண்டிருப்பார்கள்!



திணை என்றால் ஒழுக்கம், குலம், நிலம் தொடர்பாக வழங்கப்படும் பெயர் –

உயர்திணை என்பது மக்களையும், அஃறிணை என்பது மக்கள் அல்லாதவற்றையும் குறிக்கும்.

அகத்திணை என்பது தலைவன் தலைவியரின் உள்ளங்கள் இணைதல், பிரிவு, ஊடல் போன்ற செய்திகளையும் பொதுவில் இல்லற வாழ்க்கையையும் கூறுகிற அகம் எனப்படும் உள்ளத்தை அடிப்படையாகக் கொண்டது.

இதில் ஆடவன் காதலித்துப் பெண் காதலிக்காமல் இருந்தாலும், பெண் காதலித்து ஆடவன் காதலிக்காமல் இருந்தாலும் அதைக் "கைக்கிளை" என்றும், வலியச் சென்று கூடுவதற்கு முனையும் பொருந்தாக் காதலை பெருந்திணை என்றும் கூறப்படுகிறது.

ஐந்திணை என்பது, தலைவனும் தலைவியும் அன்பால் பிணைந்து கூடி மயங்குவதைக் குறிஞ்சித் திணை எனவும், கூடிய பிறகு அவர்கள் பிரிந்திடும் நிலையைப் பாலைத் திணை எனவும், ஊடல் கொள்ளுவதை மருதத்திணை எனவும், ஊடல் காரணமாகவோ வேறு காரணமாகவோ பிரிவு காலத்தில்

காத்திருந்து வரவு பார்த்தலை முல்லைத் திணை எனவும், பிரிந்த நாட்களின் எண்ணிக்கை பெருகிடப் பெருகிட இரங்கலுக்குரிய நிலை அடைவதை நெய்தல் திணை எனவும் கூறப்படுகிறது.

தலைவன் தலைவிக்கிடையே கூடலோ, ஊடலோ, பிரிவோ, எதுவும் எல்லாத் திணைகளிலும் நிகழக்கூடியதே! இங்கே திணை என்பதை இடமென்றோ நிலமென்றோ கொண்டிடல் வேண்டும்!

அகத்திணைக்கு மாற்றாக அல்லாமல் வேறொரு திணையாகக் குறிக்கப்படுவதே புறத்திணையாகும்!

அகம் எனப்படுவது; காதல், இல்வாழ்க்கை என்று ஆடவர் பெண்டிர் இருவர்க்கு மட்டுமே உரியதானதும், பிறருடன் பகிர்ந்து கொள்ள முடியாததுமானது என்றிருக்கும் நிலையில், புறம் என்பது இல்வாழ்க்கையைக் கடந்து வெளியே நிகழக்கூடிய போர்கள், பொருளீட்டும் செயல்கள், பொதுப்பணிகள் போன்ற பகிர்ந்து கொண்டு ஆற்றக் கூடியவை என்ற நிலையுடையதாகும்.

ஐவகை நிலங்களிலும் நிகழ்வுற்ற மாந்தர் வாழ்வில் வீசிய தென்றல், அடித்த புயல்,

வெடித்த நில நடுக்கம் போன்றவற்றை அடுத்தடுத்துத் தொடர்ந்து எழுதுவதற்கு இந்த எளிமையான விளக்கம் பயன்படுமென்று நம்புகிறேன்.

அகத்திணையில் காணும் நிகழ்வுகள் போல, புறத்திணை நிகழ்வுகளும் பொதுவாக எல்லா நிலங்களிலும் – சிறப்பாக, குறிப்பிட்ட நிலங்களிலும் காணக் கூடியவை.



மலர் (25)

அவள் தாகனை தாய்!

ஆசைக்கயிறில் ஆணையும்
பெண்ணையும் கட்டிப் போட்டு; ஆனால்
இருவரும் ஒருவரையொருவர் கட்டிப்பிடிக்க
முடியாமல்; இன்பச் சிகரம் எட்டிப் பிடிக்க
இயலாமல் ஊசலாட விடுவது காதல்! அந்தக்
காதல் வயப்பட்ட பெண்ணொருத்தி, தன்னைப்
பெற்ற தாயின் அருகே படுத்திருக்கிறாள்.
தாயின் கை அவள் மீது மெல்லப் படர்ந்த கொடி
போலவும், அதுவும் காற்றில் மெதுவாக அசையும்
கொடி போலவும் அன்பு மகளின் மீது ஊர்ந்தும்,
நகர்ந்தும் அவள் விழித்துக் கொண்டிருப்பதை
அந்த மகளுக்கு உணர்த்திக் கொண்டிருக்கிறது.

முல்லை நிலத்துக்குரிய குளிர் பருவம்
அது. அந்நிலத்துக்குரிய சிறு பொழுது
எனப்படும் நடு யாமத்தில்கூட அந்நிலத்தின்
வழிபாட்டுக்குரிய கண்ணனைப் போற்றி
முழங்கிடும் ஒலி தாயின் செவியிலும்,
தங்க மகளின் செவியிலும் உரக்க ஒலித்து

அடங்கியிருந்தாலும் மலைமுகடுகளிலும் காட்டு மரங்களிலும் இன்னமும் எதிரொலிப்பது போலவே அவர்கள் இருவர்க்கும் தோன்றியது.

திடீரென அந்தத் தலைவி எழுந்து உட்காருகிறாள். தாய் விழித்துக் கொண்டதாகக் காட்டிக் கொள்ளவில்லை. புரண்டு படுக்கிறாள். மகளோ உட்கார்ந்திருந்தவாறே கைகூப்பி, "கண்ணா! உன் கருணைக்கு நன்றி! நான் விரும்பியது போலவே அவரும் என்னை மறப்பதற்கு ஒப்புக் கொண்டார். நானும் அவரை இனி நினைக்க மாட்டேன்".

பரவாயில்லை, முல்லைத் தெய்வம் தன் மகள் மனத்தையும், அவன் மனத்தையும் மாற்றிவிட்டது என்ற மகிழ்ச்சியில் அந்த அன்னை விழி மூடினாள்.

சூழ்ச்சி பலித்ததென்று சற்று நேரம் தாயின் அருகில் படுத்திருப்பதாகப் பாவனை காட்டிய அந்த இளமயில், தனது பூனைப் பாதமும் பூமியில் அழுந்தாமல் நடந்து வந்து, வெளியில் மரத்தின் பின்னால் ஒளிந்திருந்த ஆணழகனின் தோளைப் பற்றிக் கொண்டாள். தொடர்ந்தனர் இருவரும் பயணம்!

பெற்றோர் அறியாமல் இவ்வாறு காதலியைக் கொண்டு செல்லும் "கொண்டு தலைக் கழிதல்" எனும் செயலைக் காதலன் செய்து, அதற்குக் காதலியும் உடன்பட்டு உடன்



சென்றதை வைகைப் பொழுதை அறிவிக்கும் சேவல் கூவியதால்; விழித்துக் கொண்ட, தாய் உணர்ந்து அதிர்ந்து ஆடிப்போனாள். இந்த ஏற்பாட்டுக்குத் துணை புரிந்த தோழியோ; தானும் அந்தத் தாயுடன் சேர்ந்து வருந்துகிறாள்.

பச்சிளம் சிசுவாய்ப் பக்கம் படுத்திருந்து கொவ்வைச் செவ்வாய் கொண்டு என் கொங்கையில் பாலருந்திய நாள் முதல், பலா, வாழை, மா எனப் பழங்கள் உண்டும் தேனுடன் தினைமாவும் தின்று வளர்ந்துப் பருவமடைந்த காலம் வரையில் என் நிழலிலேயே இருந்த நேரிழையாள் நேற்று வந்த உறவுடன், பருத்திக் காய் வெடித்துப் பறக்கும் பஞ்செனப் பறந்து விட்டாளே; அவளை நத்திக் கிடந்த எனை விடுத்துச் சென்றவளும், அவளை அழைத்துச் சென்றவனும் நலமுடன் இருப்பதற்கு சகுன சாத்திரம் பார்க்க வேண்டாமா தோழி? அருள் வாக்கு கேட்க வேண்டாமா? முல்லைத் தெய்வமாம் கண்ணனுக்கு வேண்டுதல் செய்ய வேண்டாமா? செல்லும் வழியில் அவர்களுக்கு என்ன நேர்ந்ததோ? இப்போது அவர்கள் கதி என்னவோ? இனி எத்தகைய தீமைகளை எதிர்கொள்ள வேண்டுமோ? என்று மகளும், மகளின் காதலனும் தன்னை ஏமாற்றியது குறித்து சினம் கொள்ளாமல்; அந்த நல்ல மனம் கொண்ட தாய்; அவர்களைக் கேடு

எதுவும் சூழக் கூடாதேயென்று வழியில்
காணுகின்றவர்களிடமெல்லாம் புலம்புகிறாளாம்;
அவள்தானே தாய்!

★

“தன்னும் அவனும் அவளும் சுட்டி
மன்னு நிமித்தம், மொழிப் பொருள் தெய்வம்
நன்மை தீமை அச்சம் சார்தல் என்று
அன்ன பிறவும் அவற்றொடு தொகைஇ
முன்னிய காலம் மூன்றுடன் விளக்கித்
தோழி தேஎத்தும் கண்டோர் பாங்கினும்
போகிய திறத்து நற்றாய் புலம்பலும்
ஆகிய கிளவியும் அவ்வழி உரிய”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 36)

தோழியின் தொண்டு பெரிதே!

தலைவன், தலைவியைத் தன்னுடன் இட்டுச் செல்லும் வேளையில் இடையில் துணையாக இருக்கும் தோழியின் பொறுப்புமிக்கப் பணிகள் பொருளதிகாரத்தில் பட்டியலிட்டுக் காட்டப்படுகின்றன.

"தலைவியைத் தனி விடுத்து நீ மட்டும் தன்னலத்திற்காகவோ, பொதுநலத்தின் பொருட்டோ பிரிந்து செல்வது எவ்வகையில் நியாயம்?" எனக் கேட்டு;

"உனைப் பிரிந்து அவள் உயிர் வாழ்வாள் என்பது நீரை விட்டுப் பிரிந்த மீன், வாழும் என்ற கதைதான் என்பதை நினைத்துப் பார்த்து, அவளையும் அழைத்துப் போவாயாக!"

என்று தலைவனிடம் கூறுகிறாள்.

அதற்கிடையே தன் உற்றார் உறவினரை விட்டுச் செல்வதால் ஏற்படக்கூடிய துன்பங்களை எண்ணி வருந்தும் காதல்



தலைவியின் கண்ணீரைத் துடைத்து, அவளை அவனுடன் அனுப்பிவைக்க தோழி முயற்சி மேற்கொள்கிறாள். ஆனாலும் அவளுக்கு திடீரென ஒரு ஐயப்பாடு!

"இவன் இவளை உண்மையாக அன்பு காட்டிக் காதலித்தாலும்கூட, ஒரு நாள் மாயோன் கோயில் மலர்ச்சோலையில் இவளைப் போலவே இன்னொருத்தி கையில் எட்டாத கிளையிலிருந்த கனி பறித்துக் கொடுத்து விட்டு, குறும்புச் சிரிப்புடன் கரும்புக் கேள்வியொன்று கேட்டானே; அந்தக் கனி கிடைத்துவிட்டது – இந்தக் கனிகள் கிடைக்குமா என்று! அத்துடன் அவளை ஏற இறங்கப் பார்த்தானே; இப்படி உண்மைக்கும் பொய்க்கும் ஒரே உருவமாய் இருப்பவனை இவள் அறிந்து கொள்ள வேண்டாமா?" என ஒருக்கணம் நினைத்துப் பார்த்தாள். ஆனாலும் ஒரு திருப்பம் அவள் மனத்தில்!

தலைவனைப் பற்றியும், தலைவியின் தாயாரின் நிலைமை பற்றியும் எண்ணிய தோழிக்கு, மாயோன் கோயில் மலர்ச்சோலை நினைவு மன மாற்றத்தை ஏற்படுத்திய போதிலும்; காதலன் பிரிவைத் தன்னால் தாங்கவே இயலாது என்று கலங்கித் தவித்துத்

துடித்துத் துவண்ட சுடர்க் கொடியாளின்
சோர்வகற்ற, அவளின் காதலன் கூறிய
ஆறுதல் மொழிகளைக் கூறித் தேற்றினாள்.
ஆனால் அது, பயனின்றி, "தனிமைத் தணலில்
பசலைக்கொடி போல் வதங்கிடவோ நான்!"
எனக் கேட்டாள்; கேட்கும்போதே தணலில்
விழுந்தது போல! தோழி அவளைத் தேற்றி
மகிழ்வித்து அவனுடன் சேர்த்து அனுப்ப
முன் வந்தாள். தலைவனையும், தலைவியையும்,
தாயையும் நயந்து நலம் செயும் தோழியின்
பணிகள் வியந்து நோக்கத் தக்கதே!

★

"தலைவரும் விழும நிலை எடுத்துரைப்பினும்
போக்கற் கண்ணும் விடுத்தற் கண்ணும்,
நீக்கலின் வந்த தம்முறு விழுமமும்,
வாய்மையும் பொய்ம்மையும் கண்டோர்ச்
சுட்டித்
தாய்நிலை நோக்கித் தலைப்பெயர்த்துக்
கொளினும்
நோய்மிகப் பெருகித் தன்நெஞ்சு
கலுழ்ந்தோளை
அழிந்தது களைஇய ஒழிந்தது கூறி
வன்புறை நெருங்கி வந்ததன் திறத்தோடு

என்றிவை எல்லாம் இயல்புற நாடின்
ஒன்றித் தோன்றும் தோழி மேன.”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 39)

விழுமம் = தொல்லை

கலுழ்தல் = கலங்குதல்

வன்புறை = தலைவன் தலைவிக்கு ஆறுதல்

மேன = மேயின

மலர் (27)

துன்பத்தில் இன்பம்

காதலால் கட்டுண்ட தலைவியை அழைத்துச் சென்றான் தலைவன்! இந்தக் "கொண்டு தலைக் கழிதல்" எனும் செயல், முல்லைத் திணையில் தொடங்கி பாலைத் திணையிலும் பயணம் தொடர்வதால் தொல்காப்பியப் பின்னணியில் கலித்தொகைக் காட்சி யொன்றையும் காணும் வாய்ப்பைப் பெறுகிறோம்.

வைகறைப் பொழுதில் தாயைப் பிரிந்து, காதலனின் கைதனைப் பிடித்துக் கொண்டு புறப்பட்டவள், மான்களும் முயல்களும் கொன்றை, காயா, குருந்தம் எனும் மரங்களிடையே துள்ளிக் குதிப்பதையும் முல்லைப் பூவும், குல்லைப் பூவும், பியவம்பூவும் மலர முனைந்து படர்ந்து கிடப்பதையும்; சாமை, வரகு போன்ற உணவு தானியங்களை வேளாண்

பெரு மக்கள் விதைப்பதற்கு ஓடோடுவதையும் கண்டவாறு அவனுடன் செல்கிறாள்.

வைகறை தேய்ந்து விடியல் வெளிச்சம் தோன்றிவிட்ட நிலையில் அவர்களை யாரும் காணாமல் இருக்க முடியாது. வானில், வாரியிறைக்கப்பட்டது போல மின்னுகின்ற விண்மீன்களோ; எம்மைப்பார் என்று நம்மை இழுக்கின்றன! எண்ணற்ற அந்த விண்மீன்களுக்கிடையே ஒரே ஒரு நிலவைத்தானே முதலில் காண்கிறோம். அப்படி வந்த நிலவுதான் அந்த ஆரணங்கு! அழகில் அவளோர் சிலை! அசைவிலோ அற்புதக் கலை! அவளுக்கேற்ற வனப்பும் வலிமையும் கொண்ட காதலனுடன் அவள் செல்வதைக் காணும்பொழுது அந்த இணையின் பொருத்தத்தை ஒருக்கணம் தமக்குள் பாராட்டிச் செல்லாதார் யாருமில்லை.

தொலைதூரம் கடந்து பாலை நிலத்தில் அவர்களின் பயணம் நடக்கும்போது எப்படியும் அவர்களைக் கண்டுபிடிக்க வேண்டுமெனச் செவிலித்தாய் பின்தொடர்ந்து வருகிறாள். இளைத்துப் போன யானைகளும் செந்நாய்களும் திரியும், நீரில்லாக் குளங்களும் கிணறுகளும் நிறைந்த அந்த நிலத்தில் பறை ஒலியையும், பாலை யாழ் இசையையும் கேட்டுக் கொண்டு, தலைவியின் வளர்ப்புத் தாய், வழியில்



சந்திப்போரிடமெல்லாம் தன் மகளைப் பற்றியும் மகளின் மனம் கவர்ந்தவனைப் பற்றியும் விசாரித்துக் கொண்டு வருகிறாள்.

"தாயே! நீ ஏன் தனியாக அச்சமூட்டும் வழியில் அவர்களைத் தேடி அலைகிறாய்? இருவரையும் நாங்கள் கண்டோம். எங்கள் ஊர் மிகவும் அருகில் உள்ளது. எமது இடத்தில் தங்கிச் செல்லலாம்" என்று சொல்லி, அவர்களும் அவ்வாறே உடன்பட்டுத் தங்கியிருந்து பின்னர் நெடுந்தொலைவில் உள்ள ஊருக்குப் புறப்பட்டனர். சிற்றூரார் சொன்ன இந்தச் செய்தி செவிலித் தாய்க்குச் செந்தேனாய் இனித்தது; ஆனாலும் மகள் பிரிவு செந்தேளாய்க் கொட்டியது!

"அம்மா; உன் நிலை எமக்குப் புரிகிறது. பிரிந்து போனவர்கள் நலமுடன் இருப்பதை அறிந்தே மகிழும் தாய்; அவர்கள் விரும்பியவாறு மணம் முடித்துக் கொள்ளவும் துணையிருப்பது தானே மேலும் மகிழத் தக்கது" எனத் தடுக்கிறார்கள் அந்தத் தாயை!

★

"பொழுதும் ஆறும் உட்குவரத் தோன்றி
வழுவின் ஆகிய குற்றம் காட்டலும்
ஊரது சார்வும் செல்லும் தேயமும்
ஆர்வ நெஞ்சமொடு செப்பிய வழியினும்,

புணர்ந்தோர் பாங்கின் புணர்ந்த நெஞ்சமொடு
அழிந்தெதிர் கூறி விடுப்பினும், ஆங்குஅத்
தாய்நிலை கண்டு தடுப்பினும் விடுப்பினும்
சேய்நிலைக்கு அகன்றோர் செலவினும்
வரவினும்
கண்டோர் மொழிதல் கண்டது என்ப”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 40)

ஆறு = வழி
உட்கு = அச்சம்

நெடுந்தொலைவில் உள்ள ஊரா ?
கவலையில்லை; கொடிய பாதை எனினும்
கடிய பயணம் செய்து என் மகளை மீட்பேன்
எனச் சூளுரைத்துப் புறப்பட்டாள் தாய்!
அன்னை உள்ளமல்லவா; அலை மோதுமே!
நன்றாயிருக்கிறாள் மகள் என நற்செய்தி
கேட்டாலும், அவள்; வளர்ப்புத் தாயான
தன்னுடனும் பெற்ற தாயுடனும் இருப்பதே
சிறந்தது; இல்லையேல் இத்தனை நாள் அவளை
வளர்ப்பதற்கு எடுத்த முயற்சி அனைத்தும்
எங்கோ பறந்தது என்றெண்ணி உளம் புழுங்கி
ஓடினாள், அவர்கள் சென்றதாகச் சொல்லப்பட்ட
திக்கு நோக்கி!

வெயில் சுட்டெரிக்கிறது. எதிரே
இறையன்பர்கள் சிலர் அப்பாலை வழியில்
பயணம் செய்வோர் அந்தத் தாயைக்
காணுகின்றனர். அவள், அவர்களிடம் தன்

நிலையைச் சொல்லி; "மலைத் தோளனுடன் செல்லும் என் மகளைக் கண்டீர்களோ?" எனக் கேட்டுத் துடிக்கிறாள்.

"கண்டோம் அம்மா அவர்களை! காதலாம் பட்டுக் கொடி பறக்கிறது அவர்கள் இதயத்தில், அதைக் கத்தரிக்க நினைக்காதே தாயே!"

"என்ன சொல்கிறீர்கள்? பெற்றவளும் வளர்த்தவளும் புலம்பித் தவிக்க எமைவிட்டுச் சென்றவளுக்காக வாதாடுவது முறைதானா?"

"அம்மையே, கேள்! மணக்கும் சந்தனம் மலையிலே பிறந்தாலும் – வளர்ந்தாலும் அது மலைக்குரியதல்ல; உடலிலே பூசிக் கொள்ளத்தான்! நீரிலே பிறந்தது என்று வெண்முத்து நீருக்குள்ளேயே இருக்க முடியுமா? அணிபவர்க்குத்தானே அழகு தரும்? யாழிலே பிறக்கும் இசை, யாழுக்கே இன்பம் தருகிறதா; அல்லது இசைப்பவர்க்கு இன்பம் தருகிறதா? அன்னையே! உன் மகள் மலையில் பிறந்த சந்தனத்தையும், கடலில் பிறந்த முத்தையும், யாழில் பிறந்திடும் இசையையும் ஒத்தவள் – எனவே இப்போது உரியவரிடம் இருப்பதே உத்தமம்!"

என விவரித்து விளக்கம் கூறி, அவள் கவலையை மாற்றுகின்றனர்.

★

“காணேம் அல்லேம்; கண்டனம், கடத்திடை;
ஆணெழில் அண்ணலோடு அருஞ்சுரம் முன்னிய
மாண்இழை மடவரல் தாயிர் நீர் போறிர்;
பலவுறு நறுஞ்சாந்தம் படுப்பவர்க்கு அல்லதை,
மலையுளே பிறப்பினும், மலைக்கு அவைதாம்
என் செய்யும் ?
நினையுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு
அனையளே!
சீர்கெழு வெண்முத்தம் அணிபவர்க்கு
அல்லதை,
நீருளே பிறப்பினும், நீர்க்கு அவைதாம்
என்செய்யும் ?
தேருங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு
அனையளே!
ஏழ்புணர் இன்னிசை முரல்பவர்க்கு அல்லதை,
யாழுளே பிறப்பினும், யாழ்க்கு அவைதாம்
என்செய்யும் ?
சூழுங்கால், நும்மகள் நுமக்கும் ஆங்கு
அனையளே!”

(பாலைக்கலி)

அருஞ்சுரம் = நிழலற்ற நீளிடம்

சாந்தம் = சந்தனம்

முரல்பவர் = ஒலிப்பவர்

காதல் தலைவனும் தலைவியும் கடும் சோதனைகளை வென்று, நிலையான வாழ்வு கண்டபிறகு, கற்பின் மாண்பு தவழ் இல்லறம் நடத்துகின்றார் என்றறிந்து; அதன் பின்னரும்

தாயும், வளர்ப்புத் தாயும் அவர்களைத் தேடிச்
செல்லும் வேலை விடுத்து; நாடிச் சென்று
நலம்கேட்டு சில நாட்கள் உடனிருந்து
சிந்தை குளிர்ந்தனர் என்பது இயற்கையாக
எங்கும் நடப்பது தானே – அது இங்கும்
நடந்திருக்குமென, பொருளதிகாரச் செய்யுளும்,
பாலைக்கலி பாடலும் இணைந்து கூறுகின்றன
அல்லவா ?

மலர் (28)

தலைமகன் நிலைமையும் கடமையும்

ஆடவர்க்கு, மகளிரைப் பிரிந்து செல்ல எத்தனையோ காரணங்கள் அமைகின்றன. பிரிவு என்றாலே அதனைத் தாங்கிக் கொள்ள முடியாத தவிப்பு தையலர்க்கு ஏற்படுவதும், அத்துன்பம் துடைத்து, அவளிடம் விடைபெற்றுச் செல்லத் தலைமகன் படும்பாடும் சொல்லத் தரமன்று!

போர்ப்பயிற்சி பெறவோ அல்லது அறிவாற்றலைப் பெருக்கிக் கொள்ளும் கல்வி பெறவோ; இவற்றைக் கற்றறிந்தவனாக இருப்பின் அவன் அறக்காவல் காரணமாகப் பிரிய வேண்டியிருக்கிறது; பிரியத்துக்குரியவளை விடுத்து!


போற்றுதற்குரிய காரியம் தானே போய்வரட்டுமே யென்று அந்தப் பொற்கொடியாள் நினைப்பதில்லை. அவன் இல்லாத வெறுமை நிலைக்கு கால அளவு குறைவானதுதான் என்றாலும்

இருவருக்குமிடையே நூலொன்று நுழைந்து வெளியேறுவதற்கும் இடைவெளி கூடாது என இறுகத் தழுவிக் கிடக்கும் அவள் பிரிந்திருக்கும் நாள் ஒவ்வொன்றையும் தன் நெஞ்சைத் துண்டாடும் வாள் என்று தானே கருதுவாள்.

பிரிந்து சென்று தமிழ் இலக்கிய இலக்கணம் அறிந்து வருவதாலும், போர்ப்பயிற்சி பெற்று வருவதாலும் வீட்டுக்கும் நாட்டுக்கும் விளையும் பயன் பற்றித் தலைமகளுக்கு அவன் விளக்கினாலும் அவள் விழியிரண்டும் அருவிகளாக மாறித்தான் விடை கொடுக்கும்.

அந்தத் தலைமகன் நிலமாளும் அரசனாக இருந்து, நட்பினால் கட்டுண்ட பிறிதொரு நிலமாளும் வேந்தனுக்குப் போரில் துணை புரியச் சென்றாலும், அல்லது வேந்தனால் வேற்று நாட்டுக்குத் தூதனாக அனுப்பி வைக்கப்பட்டாலும் போரில் வீரத்தையும் தூதில் விவேகத்தையும் காட்டும் பொறுப்புடையவனாகிறான்.

தன் வலியும், வினை வலியும், துணை வலியும் கணக்கிட்டு ஆட்படையில், குதிரைப்படையில், யானைப்படையில் பகையரசன் மேன்மையுற்றுத் திகழ்வதை அவன் எண்ணிப் பார்க்காமல் இல்லை. எண்ணிப் பார்த்தும்கூட அவனே அவற்றை எதிர்கொண்டு வென்றிட முடியும் என்ற ஊக்கத்துடன் களம் நோக்கிச் செல்லத் தன் கண்மணியாம் காதல் தலைவியிடம் பிரியா விடை கேட்கிறான். நாட்டுக்காற்றிடும் கடமை என்பதற்காக



நங்கையும்; கங்கை காவிரிகள் கண்களாக மாறிய நிலையில் 'வீரரே வெற்றியுடன் வருக' என விடை தருகிறாள்.

போர் நடந்த இடத்தில், புலியொன்று யானைகள் நடுவே சிக்கியது போல் சிக்கி உறுதிப்பாட்டின் வலிமையால் வெளிவருகிறான்.

போர் முடியவில்லை.....இரு தரப்புப் படைகளும் ஒன்றுக்கொன்று குறைந்ததல்ல என்பதை நமது தலைமகன் தன் ஆற்றல் கொண்டு நிலை நாட்டுகிறான். அப்போது தான் ஓர் இரவு போர்ப்பாசறையில் அந்தப் பொன்னவிர்மேனியாள் அவனைக் கனவில் வந்து கலக்குகிறாள். அவளை நினைத்துத் தனித்து வருந்துவதும் போர் வெறியைத் தணிக்குமென; அந்த நினைப்பைத் தவிர்க்கிறான்.

வெற்றிக் கொடி உயரப் போர் முடிகிறது. தேரோட்டியை விரைவுபடுத்துகிறான்; "தேன்மொழியாள் காத்திருப்பாள் – அவள் தரும் கதகதப்பு முத்தங்கள் என் காயங்களை ஆற்றட்டும்; கடுகிச் செல்" என்கிறான்.... "புரவிகளே; உமக்குப் புண்ணியமுண்டு; புயலாய்ச் சென்று என் பூங்கொடியிடம் எனைச் சேர்த்திடுக" என நெஞ்சால் கெஞ்சுகிறான்.

இவனே சில நேரம்; இடையில் – வழியில் – பரத்தையின் கடைவிழிபட்டு அவளையும் சந்தித்துக் குலவியதால்; இல்லத்தில் காத்திருந்தவள் செவியில் இந்தச் செய்தி விழுந்து; உடன் முளைத்திடும் ஊடல்!

அதையும் நீக்கி இல்லற ஓடத்தை இன்ப
ஆற்றில் போக்கிட வேண்டும்; இப்படி
எத்தனை கடமையும் பொறுப்பும் இலக்கியத்
தலைமகனுக்கு!

★

“வாயினும் கையினும் வகுத்த பக்கமோடு
ஊதியம் கருதிய ஒருதிறத்தானும்
புகழும் மானமும் எடுத்து வற்புறுத்தலும்
தூது இடையிட்ட வகையினானும்
ஆகித் தோன்றும் பாங்கோர் பாங்கினும்
மூன்றன் பகுதியும் மண்டிலத் தருமையும்
தோன்றல் சான்ற மாற்றோர் மேன்மையும்
பாசறைப் புலம்பலும் முடிந்த காலத்துப்
பாகனொடு விரும்பிய வினைத்திற
வகையினும்
காவற்பாங்கின் ஆங்கோர் பக்கமும்
பரத்தையின் அகற்சியின் பரிந்தோள் குறுகி
இரத்தலும் தெளித்தலும் என இருவகையொடு
உரைத்திற நாட்டம் கிழவோன் மேன”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 41)

பக்கம் = படை
ஊதியம் = கல்வி
பாங்கோர் = நட்பினர்
தெளித்தல் = ஊடல் தெளிவித்தல்
அகற்சி = பிரிதல்
கிழவோன் = நிலத்தலைவன்

தும் பொய்கையின் புலம்பல்


தொல்காப்பியப் பூங்காவில்
"உள்ளுறை உவமம்" என ஓர் இலக்கண
ரோஜா மலர் உண்டு. ரோஜா என்று குறிப்பிடக்
காரணம் முள்ளில் ரோஜாவாக; இலக்கணத்தில்
இலக்கியமாக இம்மலர் இருப்பதால்தான்.

ஒன்றோடொன்றை ஒப்பிட்டுக் காட்டுவது "உவமம்" எனப்படும். "உள்ளுறை" என்பது மறைபொருளாகச் சொல்லப்படுவது.

எடுத்துக்காட்டாக 'மருதக்கலி' பாடலில் வெளிப்படையாகச் சொல்லப்படும் பொருளைக் கண்டால்; ஒரு இயற்கைக் காட்சியை ஊரின் ஒரு பகுதியில் பார்த்து ரசிப்பது போல் இருக்கும்.

★

"வீங்கு நீர் அவிழ் நீலம் பகர்பவர் வயற்கொண்ட
ஞாங்கர் மலர்சூழ்தந்து ஊர்புகுந்த வரிவண்டு
ஓங்குயர் எழில் யானைக் கனை கடாம் கமழ்
நாற்றம்
ஆங்கவை விருந்து ஆற்றப் பகல் அல்கிக்
கங்குலான்



வீங்கிறை வடுக்கொள வீழ்நர்ப் புணர்ந்தவர்
தேங்கமிழ் கதுப்பினுள் அரும்பவிழ் நறுமுல்லை
பாய்ந்தூதிப் படர்தீர்ந்து பண்டுதாம் மரீஇய
பூம்பொய்கை மறந்துள்ளாப் புனலணி நல்லூர!''

வீங்கு நீர் = மிக்க நீர்

ஞாங்கர் = இடம்

கடாம் = யானை மத நீர்

அல்கி = தங்கி

வீங்குஇறை = பூரிப்பு மிகுதியால் பருத்த முன் கை

நீர் பெருகிய வயலில் பூத்த கருங்குவளை மலர்களை விற்பனைக்குக் கொண்டு வரும்போது, அந்த மலர்களுடன் வண்டுகளும் சுழன்று சூழ்ந்து வருகின்றன. அப்படி வந்த வண்டுகள் யானைகளின் மதநீரில் மொய்த்துப் பருகுகின்றன. பகலில் இவ்வாறு பருகிய வண்டுகள், இரவுப் பொழுதில் முல்லை மலர்களில் பாய்ந்து மணம் நுகர்ந்திடுகின்றன. பிறகு வேறு மலர்களை நினைக்காமலே தங்கள் இருப்பிடத்தையே மறந்து விடுகின்றன!

மேலெழுந்தவாரியாகத் தோற்றமளிப்பவை கருங்குவளை மலர், வண்டு, யானை மதநீர், முல்லை மலர், பூம்பொய்கை என்பதால், இது வண்டுகளையும் மலர்களையும் பற்றிய ஒரு வர்ணனைக் காட்சியாகத் தெரியும்.

தலைவனின் பிரிவை நினைத்து
வருந்தும் தலைவி ஆடவர்களை
வண்டுகளாகவும், யானை மதநீரை தெருவில்
திரியும் பரத்தைகளாகவும், பகல் பொழுதில்
அவர்களுடன் ஆடிக்கிடந்த ஆடவர்கள்,
முல்லைப் பூக்கள் எனும் தமது காமக்
கிழத்திகளுடன் அவர்தம் இல்லங்களில்
இரவுப் பொழுதில் சுகித்திருப்பதாகவும் –
தங்களின் இருப்பிடமான பூம்பொய்கையை
மறந்து விட்டதாகவும் விரிகிறது இந்த
உவமை.

தொடக்கத்திலேயே; தலைவி,
தன்னுடைய தலைவனைப் போன்ற
ஆடவர்களை வெளிப்படையாகக் குறிப்பிடாமல்;
வெறும் உவமையை மட்டும் கூறி வருந்துவதால்;
அவள் சொல்லவந்தது, மறை பொருளாக
வைக்கப்பட்டுவிட்டது.

எனவே இந்த உள்ளுறை உவமத்தின்
வாயிலாக அவள் தன் உள் காயத்தைப்
புலப்படுத்துகிறாள். பாவம்; தலைவி,
பூம்பொய்கையாக இருந்து புலம்புகிறாள்!

மருதக் கலியின் பாடலுக்கு இலக்கணம்
கூறுவதே பொருளதிகாரத்தின் இந்த நூற்பா.

★

"உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள்
முடிகளன
உள்ளுறுத்து இறுவதை உள்ளுறை உவமம்"

(பொருளதிகாரம் – அகத்திணை இயல் – நூற்பா : 48)

உள்ளுறை = மறை பொருளாகச் சொல்லுதல்

உள்ளுறுத்தல் = உட் கருதுதல்



மலர் (30)

மருதநாயகி

நால்வகை நிலமென்றும்,
இடைச்செருகலாக பாலை நிலமென்றும்
ஐவகை நிலம் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு
நிலத்திற்கும், தெய்வங்களும் குறிக்கப் பெற்று,
தொல்காப்பியம் இயற்றப்பட்ட காலத்தில்
வேந்தன் என்று அழைக்கப்பட்ட, மருத
நிலத்தின் தெய்வம்; சில நூற்றாண்டுகளுக்குப்
பிறகு, பிறமொழிக் கலாச்சார நுழைவினால்
இந்திரன் என மாறிவிட்ட கால கட்டத்திலும்;
அக்காலத்து அகத்திணையில் இடம் பெற்றுள்ள
'கைக்கிளை'.

இன்றைக்கும் இலக்கண அடிப்படையில்
'கைக்கிளை'யை அறிந்திடாவிடினும்
நடைமுறையில் காணக் கூடியதாகவே
இருக்கிறது. அதை ஒரு நாடகக்
காட்சியாகவும் அதன் தொடர்ச்சியாக
'கைக்கிளை' விளக்கமாகவும் இங்கே
சித்தரிக்கப்படுகிறது.

மருத நில மக்கள் இந்திர விழா நிகழ்ச்சியை தாமரைப்பூ சூடியும், கழுநீர்ப் பூக்கள் அணிந்தும், காஞ்சி – வஞ்சி – மருதமெனும் மரங்கள் நிறைந்த பகுதியில், மருதயாழ் கொண்டு, மருதப்பண் இசைத்தும், கடா விடுதல், புது நீராடல் போன்ற களியாட்டங்களில் ஈடுபட்டும் – கொண்டாடுகின்றனர். நாடக அரங்கமொன்றும் அமைக்கப்பட்டு; 'சாகுந்தலம்' நாடகம் நடைபெறுகிறது.

இதோ முடிமன்னன் துஷ்யந்தனும், முனிவர் மகள் சகுந்தலையும் சந்திக்கின்றனர்; வனச் சோலையில் வற்றாது பாயும் அருவியோரம்.

"சகுந்தலா; இந்தச் சந்திப்பு நம் அழியாத காதலுக்கு அச்சாரம்!"

"வேட்டைக்கு வந்த வேந்தர் தாங்கள் – ஏதோ, ஒரு மானைப் போல் என்னை வேட்டையாடிவிட்டு; காதலுக்கு அச்சாரம் இது என்று அரண்மனை சொல்வதை ஆசிரமம் ஏற்றுக் கொள்ள முடியுமா?"

"வேட்டையின்போது எத்தனையோ விலங்குகளைக் கண்டேன்; ஆனால் நீயும் உன்பால் எழுந்த காதலும் எனக்கு விலங்காகி



விட்டதை உணர்கிறேன். இனி இந்த இடத்தை விடுத்து அரண்மனை நோக்கி ஓர் அடி கூட எடுத்துவைக்க மாட்டேன்”

“வேண்டாம்; நாட்டுப் பொறுப்பை கைவிடாதீர்கள் – இந்தக் காட்டுப் பூவையும் கைவிடாதீர்கள்!”

“காட்டுப் பூவா நீ? இல்லை – என் உயிர்ப்பூ – ஆம்; என் உயிர்ப்பே நீ தான்!”

“மறந்து விட மாட்டீர்களே?”

“மறதியா? இந்த ரதியையா? இதோ மறக்கமாட்டேன் என்பதற்கு அடையாளம்; இந்தக் கணையாழி!”

துஷ்யந்தன் சகுந்தலையின் விரலில் கணையாழி அணிவித்து, அவள் விரல்களை முத்தமிடுகிறான்....

(நாடகத்தின் மற்றக் காட்சிகள் தொடர்வதற்கு முன்பு மேடையின் பக்கமுள்ள ஒப்பனை அறைக்கு இருவரும் வருகிறார்கள்; ஒப்பனை திருத்தவும், உடைகள், அணிகள் திருத்தவும்)

துஷ்யந்தன் வேடமிட்டவன், சகுந்தலை வேடமிட்டவளை ஒப்பனை அறையில் நெருங்கி வந்து;

“என்ன தாமரை; கணையாழி அணிந்த விரல்களை முத்தமிட்டேனே; இன்னும் சுவைக்கிறதா அது?”

என்று கேட்டுப் பல்லை இளிக்கிறான்.

“நாடகத்தில்தான் நான் சகுந்தலை!
நீங்கள் துஷ்யந்தன்!”

“வாழ்க்கையிலும் அப்படியே இருந்தால்
என்ன?”

“பண்போடு பேசுங்கள்; உமது வயது
என்ன? என் வயது என்ன?”

“திடமான வாலிபன்தான் நான் – நீ
இன்றைய அரும்பு; இன்னும் சில நாட்களில்
மலர்! அரும்பு விரைவில் மலராகும் பெண்ணே;
என் போன்ற ஆடவனை நினைத்து
உருகினால்!”

“வீண் கனவு வேண்டாம்; விலகிச்
செல்வீர்!”

“நாடகத்தில் அடுத்த காட்சி; நான்
உன்னை மறந்து விடுவது போல!”

“கணையாழி காணாமற் போன பிறகு
தானே அந்தக் காட்சி!”

“காணாமற் போவதற்குள் கட்டித் தழுவி
ஒரு முத்தம் கொடுத்தால்....”

“அது இப்போதே காணாமற் போகட்டும்”

என்று அவள் கணையாழியைக் கழற்றி
ஒப்பனை அறைக்குள் வீசுகிறாள் – வெளியே

வேகமாக நடக்கிறாள்; நடக்கும்போதே ஆசிரம முடியலங்காரத்தைக் கலைக்கிறாள்.

"அய்யோ பெண்ணே; கணையாழியை மீனல்லவா விழுங்க வேண்டும்? அதுவல்லவா கதை?"

"அதற்குள் நீ என்னை விழுங்கி விடாதே"

"தாமரை; நீ மிதப்பதற்கேற்ற தெண்ணீர்க் குளம் நான்!"

அவளை இழுக்கிறான். அவள், சீறிச் சினந்து அவனைத் தள்ளிவிட்டு ஓடி விடுகிறாள். அந்தக் கோபத்தையும் ரசித்தவாறு நாடக துஷ்யந்தன் அசைவற்று நிற்கின்றான்.

இந்த ஒரு தலைக்காதலுக்குப் பெயர் தான் கைக்கிளை.

★

"காமஞ்சாலா இளமையோள் வயின்
ஏமம் சாலா இடும்பை எய்தி
நன்மையும் தீமையும் என்று இரு திறத்தால்
தன்னொடும் அவளொடும் தருக்கிய
புணர்த்துச்
சொல்எதிர் பெறாஅன் சொல்லி இன்புறல்
புல்லித் தோன்றும் கைக்கிளைக் குறிப்பே"

(பொருளதிகாரம் – அகத்திணைஇயல் – நூற்பா : 50)

ஆய்வக நூல்
நிலையம்
சென்னை-18
அண்ணா அறிவாலயம்

குறிப்பு :– காம உணர்வே அரும்பாத இளம் பெண் ஒருத்தியிடம், பெருமைக்குரிய துன்பத்தை காதலினால் அனுபவிப்பது போல் புகழ்ந்தும் பழித்தும் தனக்கும் அவளுக்கும் ஏற்ற சொற்களைக் கூறி அவளிடமிருந்து எதிர்பார்த்த பதில் கிட்டாமல் தன்னைத்தானே புகழ்ந்து கொண்டு ஒருவர் அற்பமாகத் தோன்றுவதே கைக்கிளைக் குறிப்பாகும்.

மலர் (31)

பெருந்திணை

கோப்பெருஞ் சோழன்


பனைமட்டையால் உருவாக்கப்பட்ட
குதிரை மீது ஏறி; அந்த மட்டைகளின்
முட்கள் உடலெங்கும் அறுத்துக் கீறி செந்நீர்
ஆடி வருபவனைப் போல ஆண் மகனை
ஆக்குகின்ற மடலேறுதல் வாயிலாக
வற்புறுத்திப் பெண்ணை அடைய முனையும்
முறையும்,

ஆண் பெண் இருபாலார்க்கும்
இளமை தீர்ந்து போன பிறகும் கூடி
முயங்க வேண்டுமென்ற கொள்ளை
ஆசை குத்தீட்டியாகப் பாய்கிற
நிலையும்,

என்னதான் அமைதிப்படுத்தினாலும்
வீறிட்டழுது, துள்ளிக் குதிக்கிற முரட்டுக்
குழந்தையைப் போல அடம்பிடித்து
ஆட்டம் போடும் காம உணர்வின்
உச்ச கட்டமும்,

கடற்கோள் எனக் குமுறிப் பொங்கும்
வலிமையினால் காமந்தணித்துக் கொள்ளப்
பாய்ந்திடும் செயலும்,

‘பெருந்திணை’ எனப்படும்.



இந்த நான்கும் 'கைக்கிளை'க்கும் விலக்கல்ல, அதற்கும் பொருந்தும்.

மடலேறுதல் தலைமகனின் இல்லத்து வாயிலோடு நிற்பதல்ல – அந்தப் பனைமட்டைக் குதிரை தெருவுக்கும் வரும் – ஊரின் பல பகுதிகளுக்கும் வரும். அவன் விரும்பும் பெண்ணின் பெற்றோர்; பெண்ணைத் தருகிறேன் என ஒப்புக்கொண்டு அவளை ஒப்படைக்கும்வரையில் அது நடக்கும். இல்லையேல், அந்த ஆடவன் ஆவி துறப்பது பற்றியும் கவலைப்படமாட்டான். ஆவி துறப்பான்.

இருபாலார்க்கும் – இளமை தீர்ந்த பின்னும்; இனி வரும் சந்ததியினர்க்கும், அந்தச் சந்ததியினர் உள்ளிட்ட மொத்தச் சமுதாயத்திற்கும்; "இருக்கும் காலம் வரையில் என்ன செய்யலாம்" எனும் நினைப்பே இருக்க வேண்டுமேயல்லாமல்; இன்பத்துப் பாலை இறுதிப் பாலாகக் குறளில் வைத்திருப்பதற்குக் காரணமே, "இறுதி! இறுதி!" என இனியும் பருகிக் கொண்டிராமல் "இதுவே இறுதி" என எண்ணி முடிப்பதற்குத்தான் என்பதை உணர்ந்து மன்பதைத் தொண்டினைத் தொடருதல் வேண்டும்.

அடக்க முடியாத காமவெறியினாலும், வெறி தணித்திட நெறி கடந்து

உடற்பசியைத் தீர்த்துக் கொள்ள
முனைவதாலும் – கொலை, கற்பழிப்பு
எனப்படும் சமுதாயத்தைச் சீரழிக்கும்
கீழ்த்தரக் கொடுமைகளுக்கு உள்ளாக்கும்
செயல்களில் தம்மையறியாமல் குறிப்பிட்ட
சிலர் தள்ளப்படுகிறார்கள்.

அதனை விளக்கித் திருத்திட
இந்தப் பெருந்திணைப் பெட்டகம்;
பயன்படட்டும்!

அல்லவை பட்டியலில் வருவது
எவை எனக்காட்டவே; அறிவுச்சுடர்
கொளுத்தி இவையும் அல்லவை என
உணர்த்த பெருந்திணை பற்றிக் குறிக்கப்பட்டது.

★

“ஏறிய மடல்திறம் இளமை தீர்திறம்
தேறுதல் ஒழிந்த காமத்து மிகுதிறம்
மிக்க காமத்து மிடலொடு தொகைஇச்
செப்பிய நான்கும் பெருந்திணைக் குறிப்பே”

(பொருளதிகாரம் – அகத்திணை இயல்,
நூற்பா : 51)

மிடல் = வலிமை



மலர் (32)

மானமும் வீரமும்


காத்த மறவர்

தொல்காப்பியத்தில் புறத்திணையியல் எனப்படுவது; அகத் திணையாகிய ஏழு திணைக்கும் புறத்தே நிகழும் ஏழு திணையை உணர்த்துவதாகும். அந்த ஏழில் ஒன்றுதான் வெட்சித் திணை!

நிலமாளும் தலைவனின் ஆணைக்கிணங்க, பகை நாட்டுக்குச் சென்று, அந்நாட்டுப் பசுக் கூட்டங்களை, அந்நாட்டார் அறியாதபடி கவர்ந்து வந்து அவற்றைப் பாதுகாப்பது வெட்சி!

கவரப்பட்ட பசுக் கூட்டத்தை மீட்பதற்காக அந்நாட்டார் அங்குச் சென்று போரிட்டு, கவரப்பட்ட பசுக்களை மீட்டு வருவதற்குப் பெயர்தான் கரந்தைத் திணை!

இருநிலைகளிலும் பசுக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கப்படுவதால் அறவழியிலேயே ஆநிரை கவர்வதும், மீட்பதுமான போர் நடைபெறும்.



இப்படித் தொடங்கும் போர் ஒரு நிலத்தை இன்னொரு நிலத்தார் தமக்குரியதாக விரிவுபடுத்திக் கொள்கிற அளவுக்குத் தொடர்ந்து நடந்து, நிறைவாக ஒரு சாரார் வெற்றி கொள்ளவும் கூடும்.

ஒருவர் மேல் ஒருவர் போர் நடத்திடப் படையெடுத்துச் செல்வதை "வஞ்சி" என்றும்,

பகைநாட்டின் கோட்டைச் சுவரை வளைத்து முற்றுகையிடுவதை "உழிஞை" என்றும்,

இருசாரார் படைகளும் – படைத் தலைவர்களும், நிலத் தலைவர்களும் எதிர் எதிராக நின்று படைகளுடன் போர் நடத்துவதைத் "தும்பை" என்றும்,

இருசாராரில் ஒரு சாரார் போரில் வெற்றி பெறுவதை "வாகை" என்றும்,

திணை பிரித்துக் கூறப்படுகிறது. இவற்றையன்னியில் காஞ்சித் திணை, பாடாண் திணை பற்றியும் குறிக்கப்படுகிறது.

ஆநிரை கவர்வது, மீட்பது பற்றிய நிகழ்வுகள் இப்போது தொடங்குகின்றன.

★

"வேந்து விடு முனைஞர் வேற்றுப் புலக்
களவின்
ஆ தந்து ஓம்பல் மேவற் றாகும்"

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 2)

நிலமாளும் தலைவனாகிய வேந்தனால் ஏவப் பெற்றவர்கள் பகை நாட்டில் உள்ள பசுக் கூட்டங்களைக் கவர்ந்து வந்து தமது நாட்டில் பாதுகாப்பாக வைத்திடுவர்.

இதற்கெனப் படை புறப்பட்டுச் செல்கின்ற முழக்கம், செல்லும் வழியில் பிறர் பேசும் நல்வாக்குகளை ஆராய்ந்திடுதல், எப்பக்கம் படை செல்கிறது என்பதைப் பகைவர் அறியாமல் பயணித்தல், முன்கூட்டியே நிலை அறிய ஒற்றர்களை அனுப்புதல், அவர்கள் உளவுப் பணியை செம்மையாக நடத்தி வேறோரிடம் இருத்தல், சூழ்ந்து வரும் பகையை அழித்தல், பசுக் கூட்டத்தைக் கவருதல், அப்போது எதிர்ப்போரைத் தாக்குதல், கவரப்பட்ட பசுக் கூட்டங்களை நோய் நொடி அணுகாமல் நாட்டுக்குக் கொண்டு வந்து சேர்த்தல், சொல்லப்பட்ட இடத்திற்குப் பசுக்களைக் கொண்டுவரல், அந்த இடத்தில் அவற்றை நிறுத்துதல், அவற்றை எண்ணிக் கணக்கிட்டுப் பங்கு வைத்தல், சிலவற்றைத் தானமாகக் கொடுத்தல், மகிழ்ச்சியால் உண்டுகளித்தல் ஆகிய பதினான்கு காரியங்கள் ஆநிரை கவரும் போருக்காக முறைப்படுத்திச் சொல்லப்படுகின்றன.

★

“படை இயங்கு அரவம், பாக்கத்து விரிச்சி,
புடைகெடப் போகியசெலவே, புடைகெட
ஒற்றின் ஆகியவேயே, வேய்ப்புறம்
முற்றின் ஆகிய புறத்திறை, முற்றிய

ஊர்கொலை, ஆகோள், பூசல்மாற்றே,
நோயின்று உய்த்தல், நுவலுழித் தோற்றம்,
தந்துநிறை, பாதீடு, உண்டாட்டு, கொடைஎன
வந்த ஈர்ஏழ் வகையிற்றாகும்”

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – பாடல் : 3)

அரவம் = ஆரவாரம்
விரிச்சி = நல்வாக்கு
ஊர்கொலை = ஆநிரைக் காவலரைக் கொல்லுதல்
பூசல்மாற்று = எதிர்ப்போருடன் போரிடுதல்
பாதீடு = பங்கீடு

தொன்மைக்காலச் செய்திகளைத் தொகுத்து வழங்கும் தொல்காப்பியத்தில் மட்டுமல்ல; இந்த ஆநிரை கவரும் நிகழ்ச்சியையும், அதற்காக விளையும் போர்களில் ஒன்றையும் ஔவைத் தமிழச்சி விவரித்துப் புகழ்வதை புறநானூறும் குறிப்பிடுகிறது.

அது இதோ:–

“குயிலின் வாய் அலகு போன்ற கூரிய மொட்டுக்களையுடைய புனலிக் கொடியின் பூக்களால் தொடுக்கப்பட்ட மாலையைக் கரிய முடியில் சூட்டிக் கொண்டு, புலியின் கண்ணைப் போல் வெண்மையான தேறல் எனும் கள்ளை, படை வீரர்கள் ஒருமுறைக்கு இருமுறை அருந்தி மகிழ்ந்தனர். அப்போது

ஆநிரை கவரும் போருக்குப் புறப்படும்
வேளையில்; துடி கொட்டுவோன் துடி கொட்டி
அறிவித்த பிறகு, மீண்டும் அனைவர்க்கும்
தேறல் வழங்கப்பட்டது. அரசனிடமும் சென்று
அருந்துமாறு கோரினர். அரசன், அதை
வேண்டாமென்றுரைத்து உடன் வாளைக்
கொண்டு வருமாறு பணித்தான் என்பதை
ஆங்கிருந்த ஆன்றோர் கூறினர். அத்தகைய நீ
இப்போது வெட்சிப் போரில் வெற்றி மாலை
சூடியிருக்கிறாய். பகைவர் நடத்திய ஆநிரை
மீட்கும் கரந்தைப் போரில் அவர்களை வீழ்த்திய
அந்த வாளைத்தானே வாங்கிச் சென்றாய்.
நின் வீரம் மேம்படுவதாகுக”

பண்டைத் தமிழர் ஒருவருக்கொருவர் போரிட்டு
வெற்றியும் தோல்வியும் அடைந்தனர் எனினும்;
இருநிலையிலும் அவர்கள் வீரம் விளைத்தனர்.
தீரம் காட்டினர். மானம் காத்தனர் என்பதற்கு
தொல்காப்பியத்திற்குத் துணை நின்று
புறநானூறும் ஔவையார் வாயிலாகச் சான்று
கூறுகிறதன்றோ!

★

“குயில்வா யன்ன கூர்முகை யதிரல்
பயிலா தல்கிய பல்காழ் மாலை
மையிரும் பித்தை பொலியச் சூட்டிப்
புத்தகற் கொண்ட புலிக்கண் வெப்பர்
ஒன்றிரு முறையிருந் துண்ட பின்றை
உவலைக் கண்ணித் துடியன் வந்தெனப்
பிழிமகிழ் வல்சி வேண்ட மற்றது

கொள்ளா யென்ப கள்ளின் வாழ்த்திக்
கரந்தை நீடிய வறிந்துமாறு செருவிற்
பல்லா னினநிரை தழீஇய வில்லோர்க்
கொடுஞ்சிறைக் குரூஉப்பருந் தார்ப்பத்
தடிந்துமாறு பெயர்த்தவிக் கருங்கை வாளே!”

(புறநானூறு)

கூர்முகை = கூரிய மொட்டு

அதிரல் = புனலிக்கொடி

மையிரும் பித்தை = கரிய தலைமுடி

பிழிமகிழ் வல்சி = வடித்த இனிய கள்

தழீஇய = சூழ்ந்த

வில்லோர் = கரந்தையராகிய வில்லாளர்கள்

குரூஉப்பருந்து = வளைந்த சிறகினையுடைய பருந்து



மலர் (33)

தேகல்லாவன்

பழந்தமிழர் நடத்திய ஆநிரை கவரும் வெட்சிப் போராயினும், ஆநிரை மீட்கும் கரந்தைப் போராயினும் ஓர் ஒழுங்கு முறையுடன்தான் நடைபெற்றிருக்கிறது. இவர் எப்பக்கமிருந்து வேல் வீசுகிறார்; அவர் எப்பக்கமிருந்து வில்லம்பு பொழிகிறார் – இருவர் கை கலந்து களத்தில் போரிடும்போது நம்மவர் யார், பகைவர் யார் என்று அடையாளம் காண்பதற்காக கையாளப்பட்ட முறை என்ன ?

* “. . . . . உறுபகை
வேந்திடை தெரிதல் வேண்டி ஏந்து புகழ்ப்
போந்தை வேம்பே ஆரென வரூஉம்
மாபெரும் தானையர் மலைந்த பூவும்”

எதிரெதிரே நின்று போரிடும் வீரர்களில் பகைவர்க்கும் தன்படை வீரர்க்கும் வேறுபாடு கண்டறிய பனம்பூ, வேப்பம்பூ, ஆத்திப்பூ முதலியவற்றை சூட்டிக் கொள்ளச் செய்தனர்.

★

* “ஆர்அமர் ஓட்டலும், ஆபெயர்த்துத்
தருதலும்,
சீர்சால் வேந்தன் சிறப்பெடுத்து
உரைத்தலும்,


தலைத்தாள் நெடுமொழி தன்னொடு
புணர்த்தலும்,
மனைக்குரி மரபினது கரந்தை அன்றியும்,
வருதார் தாங்கல் வாள்வாய்த்துக் கவிழ்தல்
என்று
இருவகைப்பட்ட பிள்ளை நிலையும்,
வாள்மலைந்து எழுந்தோனை மகிழ்ந்து
பறை தூங்க
நாடவற்கு அருளிய பிள்ளையாட்டும்,
காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்தல்
என்று
இருமூன்று வகையிற் கல்லொடு புணர”

(பொருளதிகாரம் – புறத்திணையியல் நூற்பா : 5)

இந்த நூற்பாவைத் தழுவிய சொல்லோவியம் வருமாறு:–

போரில் எதிரிகளைப் புறமுதுகிட்டு ஓடச் செய்தனர். வெட்சியார் கவர்ந்து சென்றிருந்த பசுக் கூட்டத்தை மீட்டனர். அதற்கான வீரத்தையும் எழுச்சியையும் தமக்கு ஊட்டிய வேந்தனின் ஆற்றல் மிகு அணுகுமுறையை முரசு கொட்டி முழக்கினர்.

கறந்த பால் முலை புகா என்பதே போல் கவர்ந்த பசுக் கூட்டத்தைக் கரந்தையார் திரும்பப் பெறப் போவதில்லையென்று ‘வெட்சியார்’ உரைத்த சூளுரையை வீணுரை ஆக்கிய தீரர் எம் வேந்தர் எனச் சங்கநாதம் செய்தனர்.



அதற்கிடையே ஆர்த்தெழுந்த அரசிளங்குமரன்; "வேந்தே! ஆணையிடுக! ஆநிரையை மீட்டது மட்டுமல்ல; வீழ்ந்தது பகைவர் பூமி முற்றாக என்று வெற்றிப் பண் இசைத்திட யாழ் மீட்டவும், ஆணையிடுக எமக்கு! பகைவனின் பலமிக்க கோட்டையைத் தகர்த்து, அந்நிலம் காத்திடும் கொடிப்படையை சிதறுண்டு போகச் செய்கிறேன்! பகையை நம் தாள் பணிய வைக்கிறேன்; இதோ இந்த வாள் வலிமையால்! வஞ்சினம் கூறி வணங்கி நிற்கிறேன் தங்கள் முன்னால்! கொஞ்சி மகிழ்ந்தீர் என்னைக் குழந்தைப் பருவத்தில்; குன்றென நான் வளர்ந்து நிற்கும் இத் தருணத்தில் அஞ்சித் தயங்கிடலாமோ ஆணை பிறப்பிக்க?" எனக் கேட்டான்! வேட்டு முழக்கம் அவன் பேச்சு!

"ஒரு வீரத் திருமகனைப் பெற்றதற்காகப் பெருமையடைகிறேன். நீ வாள் சுழற்றிப் பகைப் புலத்தை வெற்றி காண விடை கேட்பது கண்டு வீங்குகின்றன என் தோள்கள்! விம்மிப் புடைக்கிறது என் நெஞ்சம்! உம்; கோட்டை நோக்கிப் புறப்படு! கொடிப்படை, குதிரைப்படை, ஆட்படை, யானைப்படை எதுவானாலும் பொடிப் பொடியாக்கு! ஆணை கிடைத்து விட்டது; அரசிளங்குமரா! புறப்படுக!"

வேந்தனின் ஆணை கிடைத்த வேகத்தில், 'வெற்றி நமதே!' எனப் பறை கொட்டிப் புறப்பட்டது பார் அதிரப்படை!

கோட்டைக் கதவுகள் நொறுங்கின!
கொடிமரம், சாய்ந்தது! நாட்டைக் காத்திட
நாதியற்றுப் போன நிலையில், கரந்தையாரின்
வேட்டைக் காடாயிற்று வெட்சியாளரின் பூமி!
'எமக்கு நிகர் எவருமில்லை' எனும் பாட்டை
இசைத்துக் கொண்டிருந்தனர் கரந்தைப்
போராளிகள்!

அரசிளங்குமரன், தனக்கும் தன்
படையினர்க்கும் வெற்றித் திருமகள்
மாலையணிவிக்கக் காரணமாக இருந்த
வாளை, வலக்கையில் உயர்த்திப் பிடித்தபடி
குதிரையிலமர்ந்து கோட்டைக்குள் நுழைந்தான்.
– நுழையும்போதே எங்கிருந்தோ பறந்து வந்த
ஈட்டியொன்று அவன் மார்பில் நுழைந்தது!
அதைத் தாங்கிப் பிடித்தவாறு பகைவர்
தலைகள் பத்து இருபது என்று பந்துகளாக
உருட்டி விட்டுத்தான் உயிர் விடுத்தான்.

"ஓ; மகனே! நீ பொன்முடி
வேண்டாமெனப் புகழ் முடி சூடிக்
கொண்டாயோ!" எனக் கலங்கிய காவலன்
அவன் நெற்றியில் முத்தமிட்டான். வெற்றியில்
மகிழ்ந்திட முடியாத வீரர் கூட்டம், போரில்
விழுப்புண்பட்டோர்க்குக் கல் எடுத்து நீராட்டி,
நினைவு நடுகல் நாட்டிடும் முறையைப் பின்பற்றி,
களத்தில் மாண்ட மன்னர் மனையின்
இளவலுக்கும் நடுகல் நாட்டி நினைவு
போற்றியதில் புதுமை என்ன இருக்கிறது!

வேலுக்கு வேல்

நிலமெலாம் கட்டி ஆண்டாலும் நீர் மீதும் ஆணை செலுத்தவே நினைத்திடுவர் – நீரும் நிலமும் தமக்குரிமையானால் வானையும் வளைத்துப் போடவே அவாக் கொள்வர். தேனடையில் மொய்க்கும் ஈக்கள்; அது தமக்குச் சிறிய இடம் என்று கருதினால் வான்வெளியில் பறந்து வையமும் வானமும் கைக்குள்ளே என்ற மகிழ்ச்சியோடு வாழும் போது; பாவம்; மனிதனுக்கு மட்டும் குறுநில மன்னன் என்ற நிலை போதுமானதாக இல்லை – மேலும் கோட்டைகள் பலவற்றின் கொற்றவன் என்ற புகழ்கூட அவனுக்குப் புளித்துப் போய் விடுகிறது – நிலம் வருகிறது! நீ மட்டும்தானா? என் கட்டளைக்குப் பணிய கடலும் வரட்டுமே! என்கிறான். அதுவும் வந்துவிட்டால்; பிறகு தனக்குச் சிவப்புக் கம்பள வரவேற்பு தந்திட காலையில் கிழக்கு வானத்தையும், மாலையில் மேற்கு வானத்தையும் விரித்துப் பரப்புக என்கிறான்.

இந்தப் பேராசைக்காரன் நிலை என்ன ஆகும் என்பதை, தொல்காப்பியத்தில்



வஞ்சித்திணை வட்டம் போட்டுக் காட்டுகிறது. மேலும், மேலும் ஆள்வதற்கு அகன்ற நிலப்பரப்பை விரும்பி, அருகில் உள்ள நாட்டின் மீது அணி தேர்ப்புரவி, ஆட்பெரும்படையுடன் மோதிய அரசனை நடுங்குமாறு செய்து; மேற்சென்று அவன் மீதே போர் தொடுத்துப் பணிய வைத்ததைக் குறிக்குமிது!

★

"எஞ்சா மண்நசை வேந்தனை வேந்தன்
அஞ்சுதகத் தலைச்சென்று அடல் குறித்தன்றே"

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 7)

நசை = ஆசை
அடல் = வலிமையால் வெல்லுதல்

பார் சிறுத்தலின் படை பெருத்ததோ; படை பெருத்தலின் பார் சிறுத்ததோ என ஐயுறும் வண்ணம் புற்றீசல் கூட்டமென ஆட்படை வருகிறது. கடிவாளமில்லாப் புரவிகள் எனப் புயல் வேகம் காட்டும் படைவரிசையின் புலிக் கண்ணர்கள்; அவர்கள் காணும் வழி யெல்லாம் "தீ பரவட்டும்; திக்கெட்டும் பரவட்டும்" என்று ஒலியெழுப்பி, பூக்காடென விளங்கிய பகுதிகளைத் தீக்காடாக்கினர்.

வல்லமையினால் வற்றாத பெருமை பெற்றவர், தமது மன்னர் என்று வாய்ப்பறை கொட்டுகின்றனர். பரிசுப் பொருள்களைப் படைக்கலன்களாகவே வழங்கிடும் பண்புடையவர் தமது பார்வேந்தன் என்று

போற்றிப் புகழ்கின்றனர்! சென்ற இடமெல்லாம்
சிறப்பு எம்மன்னர்க்கு; பேரிழப்புத்தான் பிற
வேந்தர்க்கு! இப்படிப் பாடல் இயற்றினர்!
பண் எழுப்பினர்! போர்முறை என்ற
சொற்றொடருக்கும் வெற்றி என்ற மூன்று
எழுத்துக்கும் பட்டை தீட்டி ஒளியேற்றியவரே
அவர்தான்! இவ்வாறு இங்கிதமின்றி உரை
நிகழ்த்தினர்.

கார் காலப் பெருமழை ஊரெல்லாம்
பெருக்கெடுத்து; ஆறெல்லாம் கரையுடைத்து
ஆபத்தை அள்ளிவரும்போது; அதனைத்
தடுத்து நிறுத்தும் அணையொன்றைப் போல்;
ஆசை மிகக் கொண்டு அலை அலையாய்ப்
படையுடன் வந்து நிலம் பறிக்க நினைக்கும்
தார்வேந்தனின் தானையைத் தனியொருவனாக
நின்று; வந்தவர் ஆசை நொறுங்கி நொந்து
போக வாகை சூடி நின்றான். வென்றவர்
ஒளியும் தோற்றவர் தேய்வும்; வென்றவனை
ஆணவம் பிடித்து ஆட்டிடவில்லை.
வெற்றியையும் தோல்வியையும் ஒன்றுபோலக்
கருதுவதே நன்றென நவிலும் நயத்தகு
நாகரிகம் கொண்டவன் ஆனதால் போரில்
புண்பட்டோர் இருபுறத்திலு மிருப்போர்க்கும்
உதவி; உணவளித்து தோற்றோரிடம் பெறப்படும்
கொற்றவள்ளை எனப்படும் கப்பம் பெறுவதை
விலக்கி, தோற்றோர் மீது பழி நினையாமல்
பெருஞ் சிறப்புக்கு இலக்கணமாய் நின்றான்.

படை பெருக்கிப் பாய்ந்து வந்த பேராசை
வேந்தன்; பேரரசு தேவையில்லை, இருக்கும்
அரசே போதுமென்று மீண்டான்; நாடு நோக்கி!

★

“இயங்குபடை அரவம், எரிபரந்தெடுத்தல்,
வயங்கல் எய்திய பெருமையானும்,
கொடுத்தல் எய்திய கொடைமையானும்,
அடுத்து ஊர்ந்து அட்ட கொற்றத்தானும்,
மாராயம் பெற்ற நெடுமொழி யானும்,
பொருளின்று உய்த்த பேராண் பக்கமும்,
வருவிசைப் புனலைக் கற்சிறை போல
ஒருவன் தாங்கிய பெருமையானும்,
பிண்டம் மேயபெருஞ்சோற்று நிலையும்,
வென்றோர் விளக்கமும், தோற்றோர் தேய்வும்,
குன்றாச் சிறப்பின் கொற்ற வள்ளையும்,
அழிபடை தட்டோர் தழிஞ்சியொடு தொகைஇக்
கழிபெருஞ் சிறப்பின்துறை பதின்மூன்றே”

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 8)

எரிபரந்து = தீ வைத்தல்

மாராயம் = வேந்தன் விருது

கொற்றவள்ளை = கப்பம்

தழிஞ்சி = பகை மறந்து பேணித் தழுவுதல்

மலர் (35)

அந்தப் பொற்காலம்!

திருக்கோயில்களில் இன்றைக்கும் குறிப்பிட்டுச் சொல்லப்படும் ஒரு தெய்வத்திற்கு மூலவர் என்று ஒரு சிலை, உட்புறத்தில் கல்லிலும்; உற்சவர் சிலையொன்று பஞ்ச உலோகத்திலுமென்று இரண்டு சிலைகள் உண்டு. இவற்றில் மூலவரை அச்சிலை இருக்குமிடம் சென்றே வழிபடுவர். உற்சவரோ விழாக் காலங்களில் வெளியில் எழுந்தருளி, மூலவரின் பிரதிநிதியாகக் காட்சி அளிப்பார்.

இதுவே தமிழகத்துத் திருக்கோயில்கள் அனைத்திலும் காணக் கூடியது. ஆனால் விதி விலக்காக திருவாரூர் மற்றும் அந்த ஊரையொத்த திருக்குவளை, திருக்கோபுரவாசல், திருமறைக்காடு, திருநாகை, திருவாய்மூர் உள்ளிட்ட ஆறு கோயில்களில் மூலவரும் உற்சவரும்; முறையே கல்லிலும், உலோகத்திலும் தனித்தனிச் சிலைகளாக அமைக்கப்படாமல்

உற்சவருக்கான சிலைகளே மூலவருக்காகவும் அமைக்கப்பட்டிருக்கும்.

இறை அன்பர்கள் உள்ளே சென்று வணங்குகிற தியாகராசரின் உற்சவர் சிலையேதான் வெளியிலும் விழாக்களில் எடுத்து வரப்படுகிற உற்சவர் சிலையாக இருக்கும். தேர் உலா கூட அந்தச் சிலைக்கேதான்!

எனவே இந்த ஆலயங்களில் மட்டும் மூலவரைவிட உற்சவருக்கே சிறப்பு அதிகம்!

அந்தச் சிலையை ஆண்டுக்கொருமுறை திருவாதிரைத் திருநாளில் பக்தர்களும், குருக்கள்மார்களும் பீடத்தில் வைத்துத் தோள் கொடுத்துத் தூக்கி விழாக் கொண்டாடுவர். தேரிலும் வைத்து தேரோட்ட விழா நடத்துவர். விழா முடிந்த பிறகு கோயிலின் உட்புறம் கொண்டு வந்து அமர்த்திடுவர்.

இவ்வாறு ஒரு தெய்வத்திற்கு அளிக்கப்படும் பக்தி நிறைந்த பெருமையை, அக்காலத்தில் மன்னர்கள் தங்களின் போர்வாளுக்கு அளித்துச் சிறப்புச் செய்தனர் என்ற செய்தியையும் இணைத்து, இதோ தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் உழிஞைத் திணை பேசுகிறது.

ஒரு மன்னன், தன் ஆதிக்கத்தையும் ஆட்சியையும் ஏற்றுக் கொள்ளாத பிறநாட்டின் மீது படையெடுத்து அந்நாட்டின்



கோட்டையைக் கைப்பற்ற முற்றுகையிடுவதும்; முற்றுகையிடப்பட்ட கோட்டையின் மன்னன் உள்ளிருந்தவாறு பகைவரை எதிர்த்துப் போரிடுவதும், கோட்டையைப் பகைவர் கைப்பற்றுவதும் உழிஞைத் திணைக்கு இலக்கணமெனக் கூறுவர்.

முற்றுகை நடத்துவோர், முற்றுகையைத் தடுப்போர் எனப்படும் முடி மன்னர்கள் இருவருமே போர் தொடங்கும் காலத்தில், முன்னதாகவே வெண்கொற்றக் குடையையும், அதன் நிழலில் போர்வாளையும் நல்ல நேரம் பார்த்து புறப்படச் செய்வார்கள்.

கோட்டையைக் காத்திடும் வீரர்கள் உள்ளேயிருந்தும், அதைக் கைப்பற்ற முனையும் வீரர்கள் புறத்தேயிருந்தும்; கோட்டைச் சுவரின் மீது பலகைகளைப் பொருத்திச் செய்யப்பட்ட ஏணிகளில் நின்று கொண்டும், ஏறிக் கொண்டும், ஒருவர் மீதொருவர் கடுந்தாக்குதல் நடத்துவார்கள்.

உள்ளேயிருப்போரும், வெளியே இருப்போரும் மோதிக் கொண்டும் விலகிக் கொண்டும் போரிடுவது என்பது; கோட்டை மதிலின் அகழில் உள்ள நீரின் மேல் படர்ந்துள்ள பாசி, ஒரு சமயம் நெருங்கிக் கலந்தும்,

காற்றசைவு, கடும்போரின் அதிர்வு காரணமாக வேறு சமயம் விலகி நின்றும் காட்சி தருவது போல் இருக்கிறதாம்.

கோட்டை முற்றுகையைத் தொடர்ந்து ஊரகத்திலும் பல பகுதிகளில் படைகள் பொருதுகின்றன.

இருதரப்பு வீரர்களையும் மட்டுமே விட்டுவிடாமல் தம்முடைய உறுதி படைத்த வீர நெஞ்சங்களையும் மெய்ப்பித்துக் காட்டும் வண்ணம் கோட்டை மதிலின்கண்ணே பகை மன்னர் இருவரும் வாள் கொண்டு போரிடுகின்றனர் உயிரைப் பற்றிய ஒரு துளி கவலையுமின்றி!

இருவரில் வெற்றி மாலை ஒருவர் கழுத்துக்குத்தானே! தோல்வியைத் தழுவுவதற்கு முன்னே ஒரு மன்னன், மரணத்தைத் தழுவி, மானம் காத்திடுகிறான்.

வென்ற வேந்தனின், வெல்லுதற்குக் காரணமாக அமைந்த போர் வாளுக்கு, புனித நீராட்டும் பூசைகளும் நடைபெறுகின்றன.

மூலவராகவும், உற்சவராகவும் விளங்கி முற்றுகைப் போரில் வெற்றியை நிச்சயித்த அந்த வாளுக்கு வெண்கொற்றக் குடை பிடித்து, சிறப்புச் செய்வது அக்கால வழக்கமாக

இருந்திருக்கிறது! ஆம், வீரத்தை மதித்து மரியாதை செய்யும் காலம்; போர்க்காலமாயினும் அப்போதும் தமிழரின் மாண்புரைக்கும் பொற்காலம்!

மறைந்த வேந்தன் பெயரால் வென்ற வேந்தன் முடி புனைகிறான் என்று "உழிஞை", முடிவுரை கூறுகிறது. அடடா; இதுவன்றோ நமது முன்னோரின் பெருந்தன்மை!

★

"குடையும் வாளும் நாள்கோள், அன்றி
மடையமை ஏணிமிசை மயக்கமும், கடைஇச்
சுற்றுஅமர் ஒழிய வென்று கைக்கொண்டு
முற்றிய முதிர்வும், அன்றி முற்றிய
அகத்தோன் வீழ்ந்த நொச்சியும், மற்றதன்
புறத்தோன் வீழ்ந்த புதுமையானும்,
நீர்ச்செரு வீழ்ந்த பாசியும், அதாஅன்று
ஊர்ச்செரு வீழ்ந்த மற்றதன் மறனும்,
மதின்மிசைக்கு இவர்ந்தோன் பக்கமும்,
இகன்மதில்
குடுமிகொண்ட மண்ணு மங்கலமும்
வென்ற வாளின் மண்ணோடு ஒன்றத்
தொகை நிலை என்னும் துறையொடு
தொகைஇ
வகைநான் மூன்றே துறை என மொழிப"

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 13)

நாள்கோள் = நன்னாள்

மடை = பூட்டு

மயக்கம் = மலைதல், எதிர்த்துப் பொருதல்

முற்றிய அகத்தோன் = வளைக்கப்பெற்ற
அகப்படைத்தலைவன்

நொச்சி = மதில்

அதா அன்று = அதுவுமின்றி

எருமை மறம்!

தன் வலிமைக்கு எதிர் நிற்போர் யாருமில்லை என்ற துணிவுடன் போருக்குப் புறப்பட்டு வந்த மன்னவனை, மற்றொரு மன்னவன் எதிர்கொண்டு அவன் தலைமையைத் தகாப்பதை; துமபைத திணைக்கு இலக்கணமாகக் குறிப்பிட்டு, அதன் சிறப்பியல்பெனக் காட்டும் காட்சியில், தொல் பழங்காலத் தமிழ் வீரம், கல்நெஞ்சையும் கலங்க வைக்கக் கூடியதாகும்.

இரு வேந்தர் பொருதிடும் அந்தப் போர்க்களத்தில் ஒரு வீரனின் அருகிற் சென்று தாக்குவதற்குத் தயங்கி, தொலைவில் நின்றே பகை வீரர், கணைகள் தொடுத்தனர். வேல்கள் எறிந்தனர்.

வாளும் கேடயமும் தாங்கி நெஞ்சுரத்தோடு தாக்குப் பிடித்த வீரனின் வாள், பகை வீரர்களைப் பந்தாடும் போது பாறையில் மோதி பழுதாகி விடவே; கேடயமும் உடைந்த நிலையில் அவனைச் சூழ்ந்து வந்த எண்ணற்ற ஈட்டிகளையும் கணைகளையும் எதிர் கொள்ள அவன் உடலே கேடயமாயிற்று!



அம்மவோ; இறுதியாக ஒரு வாள்
மின்னலெனப் பளபளத்து அந்த மின்னல்
வேகத்திலேயே அவன் மீது பாய்ந்து தலை வேறு
உடல் வேறு எனத் துண்டங்களாக ஆக்கிய
போது, அறுபட்ட அட்டையின் உறுப்புகள்,
பெருநிலத்தில் படியாமல் ஆடித் துடிப்பது போல்
அறவே வீழ்ந்துபடாது அவன் தலையும் உடலும்
கால் கைகளும் ஆடிக்கொண்டும் துடித்துக்
கொண்டுமிருக்கின்றன.

★

"மைந்து பொருளாக வந்த வேந்தனைச்
சென்றுதலையழிக்கும் சிறப்பிற்றென்ப."

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 15)

மைந்து = வலிமை

"கணையும் வேலும் துணையுற மொய்த்தலின்
சென்ற உயிரின் நின்ற யாக்கை
இருநிலம் தீண்டா அருநிலை வகையோடு
இருபாற் பட்ட ஒரு சிறப்பின்றே."

(பொருளதிகாரம், – புறத்திணையியல் – நூற்பா : 16)

இருநிலம் = பெரியபூமி
அரு = அட்டை
இருபால் = இருவகை

போர்க்களத்தில் பகைவரை அச்சமூட்டக்
கூடிய தானை, யானை, குதிரையெனும்
முப்படைகளும் அணி வகுத்து நிற்கின்றன.
போர் தொடங்கிட இரு தரப்பிலும் முரசங்கள்
ஒலிக்கின்றன. ஒன்று கோடை கால இடி
முழக்கம் போல! மற்றொன்று கொந்தளித்துக்
கடல் தாண்டும் புயல் முழக்கம் போல!

களத்தில் மின்னும் வாட்கள்! வீரர் கரம்
விடுத்துக் கிளம்பும் வேல்கள்! காற்று கிழித்துப்
புறப்பட்டுச் சில சோற்றுத்துருத்திகளின் வயிறு
கிழித்திடும் கணைகள்! ஒரு கோழைக்கு இங்கு
இருபடையிலும் இடமில்லையென்றுரைத்து,
மிரட்சியினால் மீட்டி விட்ட யாழ் நரம்பு போல்
மேனி அதிர்வோரை அடையாளம் கண்டு
அவரைக் களம் விட்டு ஓட்டிவிட்ட நிகழ்ச்சிகளும்
ஒன்றிரண்டு விதிவிலக்காக உண்டு!

தம்முடைய உயிரனைய வேந்தனை
மாற்றார் படை வீரர்களும், தளபதிகள் சிலரும்
அயிரை மீன்களின் கூட்டம் போல் சூழ்ந்து
கொண்டு போரிடும் நிலையைச் சற்று
தொலைவில் போரிட்டுக் கொண்டிருந்த ஒரு
வீரன் கண்டுவிட்டான். என் தலைவனுக்கு
ஆபத்தா? என்று கனல் மண்டிவிட்ட
கண்களோடும் கையில் ஏந்திய கட்கமோடும்
அங்குப் பாய்ந்தான் அடிபட்ட புலி போல!
மிதிபட்ட நாகம் போல!

இருபுறத்திலுமே வீரர்கள், தம்முடைய வேந்தர்களைச் சூழ்ந்து முன்னால் நின்று போரிட்டுப் பாதுகாத்திடுகின்றனர். படைத் தளபதியோ தனது படையுள்ளே புகுந்து சென்று; எதிர்பாராது பின்னடைவு தோன்றினால்; அத்தளபதியொருவனே எதிர்த்துப் பொருதிடும் பெரும்படையைத் தனியொருவனாக நின்று தாக்கிடும் "எருமை மறம்" எனும் வலிமைத் திறம் காட்டுகிறான். எதையும் தாங்குமல்லவா எருமை! அதற்கும் இலக்கியத்தில் இப்படியொரு பெருமை!

விரைந்து வந்து வேந்தன் மேல் பாய்ந்த வேழமொன்றின் துதிக்கை பிடித்துப் போரிட்டு; அதன் காலால் மிதிபட்டு மாண்ட எதிர் வேந்தன் முடிவுக்குத் தம் வேந்தனின் போர்த் தந்திரமே காரணமென்று அவனைப் பாராட்டிக் களத்திலேயே வீரர்கள் ஆரவாரத்தில் ஈடுபடுகின்றனர்.

முடிவில் இரு வேந்தருமே போரில் முடிவெய்திவிட, அது கண்ட வீரனொருவன் சீறியெழுந்து சினந்து கிளம்பி தன் வாள் கொண்டு பகைவர்கள் பலரைப் பலி கொள்ளுகிறான்.

வெற்றி யாருக்கு என அறுதியிட்டுக் கூற இயலாத நிலையில்; தன் தலைவனை

இழந்ததற்காகப் பகைவர் தலைகள்
பலவற்றைப் பூமிக்குள் பதியம் போட்ட அந்தத்
தனியொரு வீரனைச் சிறப்பிக்கத் தவறவில்லை
இந்த நூற்பா!

★

“தானை, யானை, குதிரை என்ற
நோனார் உட்கும் மூவகை நிலையும்
வேல்மிகு வேந்தனை மொய்த்தவழி ஒருவன்
தான்மீண்டு எறிந்த தார்நிலை, அன்றியும்
இருவர் தலைவர் தபுதிப்பக்கமும்,
ஒருவன் ஒருவனை உடைபடைபுக்குக்
கூழை தாங்கிய எருமையும், படையறுத்துப்
பாழிகொள்ளும் ஏமத்தானும்,
களிறு எறிந்து எதிர்த்தோர் பாடுங், களிற்றொடு
பட்டவேந்தனை அட்டவேந்தன்
வாளோர் ஆடும் அமலையும், வாள்வாய்த்து
இருபெரு வேந்தர் தாமும் சுற்றமும்
ஒருவரும் ஒழியாத் தொகைநிலைக் கண்ணும்
செருவகத்து இறைவன் வீழ்வுறச் சினைஇ
ஒருவன் மண்டிய நல்லிசை நிலையும்
பல்படை ஒருவற்கு உடைதலின் மற்றவன்
ஒள்வாள் வீசிய நூழிலும் உளப்படப்
புல்லித் தோன்றும் பன்னிரு துறைத்தே.

(பொருளதிகாரம் – புறத்திணையியல் –
நூற்பா : 19)

நோனார் = பகைவர்
தார்நிலை = முன்வரிசை

தபுதி = அழிவு

கூழை = படையின் பின்னணி

அட்டவேந்தன் = பகையரசன்

பாழி = பகைவரூர்

ஏமம் = வலிமை, களிப்பு

அமலை = ஆரவாரம்

நூழில் = கொன்று குவிப்பது

வாகைத் திணை!

பிறருடன் போட்டியிட்டும் வெற்றி பெறலாம்; அல்லது தாமே முயற்சி மேற்கொண்டும் வெற்றி பெறலாம். வாகை என்பது போரில் அடையும் வெற்றியை மாத்திரம் குறிப்பிடுவதல்ல. வாழ்க்கையில் ஒரு உன்னதமான குறிக்கோளை நல்லொழுக்க வழியில் அடைவதுமாகும்.

வாகையின் இயல்பு, இலக்கணம் இவற்றையொட்டி தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் அதன் பாகுபாடு விவரிக்கப்பட்டிருக்கிறது.

அந்த நூற்பா; "அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்" என்று ஆரம்பமாகிறது. அதென்ன "பார்ப்பன பக்கம்"? தொல்காப்பியத்தில் பார்ப்பனர் எங்கே வந்தனர்? கேட்கத் தோன்றும்!

அவர்கள் வந்து விட்டனர் – ஆனால் அவர்கள் வரப்போகின்றனர் என்பது, சொல்லதிகாரத்திலேயே சுட்டிக்காட்டப்படுகிறது! முன்னால் மணியோசை வந்தால், பின்னால்

யானை வரும் என்பதை எப்படியோ அறியாமல் இருந்து விட்டனர் தமிழ் மக்கள்!

கழனிகளில் கதிர் நடுவே களை
முளைப்பது; அறிவித்து விட்டு முளைப்பதில்லை.

அதைத் தொல்காப்பியம் பின்வருமாறு தொட்டுக் காட்டுகிறது.

"வட சொற்கிளவி வடவெழுத் தொரீஇ
எழுத்தொடு புணர்ந்த சொல்லா கும்மே."

வடமொழி ஒலி நீக்கப்பட்ட தமிழ் எழுத்துக்களுடன் அமைந்த சொற்கள் வட சொல்லாகும்.

இதற்கு வாசற்கதவு எத்தனை ஆண்டுகளுக்கு முன்பு திறக்கப்பட்டது?

தொல்காப்பியர் காலம் கி.மு. ஏழாம் நூற்றாண்டு என்று ஆய்வு செய்துள்ள ஆன்றோர்கள் அறுதியிட்டுக் கூறுகின்றனர். அதாவது ஏறத்தாழ 2500 ஆண்டுகளுக்கு முன்பே, வடமொழி, மோப்பம்பார்த்து முடித்து, ஆரியர்கள் நுழைவுக்குத் தமிழ் நிலத்தில் வழி அமைத்துக் கொடுக்கப்பட்டு விட்டது.

அவர்கள் வந்து அமர்ந்து விட்டார்கள் என்பதற்குச் சான்றாகத்தான் வாகைத் திணையில் பாகுபாடு குறிக்கும் இந்த நூற்பா அமைந்திருக்கிறது.

★

“அறுவகைப்பட்ட பார்ப்பனப் பக்கமும்,
ஐவகை மரபின் அரசர் பக்கமும்,
இரு மூன்று மரபின் ஏனோர் பக்கமும்,
மறுவில் செய்தி மூவகைக் காலமும்,
நெறியின் ஆற்றிய அறிவன் தேயமும்,
நாலிரு வழக்கின் தாபதப் பக்கமும்,
பாலறி மரபின் பொருநர் கண்ணும்,
அனைநிலை வகையொடு ஆங்கெழு
வகையின்
தொகைநிலை பெற்றது என்மனார் புலவர்.”

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 20)

ஏனோர் = மற்றோர்
அறிவன் = ஆய்வு செய்யும் நல்லறிவாளன்
தாபதம் = துறவற நிலை
பாலறி = இயல்பு அறிந்த
பொருநர் = அரசர், படைத்தலைவர்

“என்மனார் புலவர்” என்று “புலவர்கள் கூறுவார்கள்” எனக் குறிப்பிடுவதிலிருந்தே, ஆரியர் வரவும், அவர்கள் புதிதாக வகுத்த தமிழர்க்குப் புறம்பான மரபும்; தொல்காப்பியர் வாழ்ந்த காலத்தில் அல்லது அவர் தோன்றுவதற்கு முன்பு நம் நிலத்தையும் இனத்தையும் வளைத்து விட்டன என்பது தெளிவாகும்!

பார்ப்பனர் கடமையாக ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்ற ஆறு

வகையும்; அரசர் கடமையாக ஓதல், வேட்டல், ஈதல், படை உதவி வழங்குதல், குடிகளைப் பாதுகாத்தல் ஆகிய ஐந்து வகையும்; வணிகர்க்கும் வேளாளர் எனும் உழவர் பெருங்குடியினர்க்கும் கடமைகளாக ஓதல், வேட்டல், ஈதல், உழவு, வணிகம், கால்நடை பேணுதல் ஆகிய ஆறு வகையும், கடந்த காலம், நிகழ் காலம், வருங்காலம் எனும் மூவகைக் காலத்தையும் கணித்து ஆய்ந்திடும் நல்லறிவாளன் கடமையும், எட்டு வகை ஒழுக்கம் போற்றும் துறவோர் கடமையும், பாகுபாட்டினை அறிந்த படைத் தலைவர் கடமையும், வாள் கொண்டோ, தோள் கொண்டோ போரிட்டு வெற்றி பெறுதலன்றி இந்தக் கடமைகள் வழியில் வெற்றி விளைப்பதே நிலையானது என்று புலவர்கள் கூறுவார்கள் என்கிறார் தொல்காப்பியர்.

இவற்றில் கோடிட்டுக் காட்டப்படும் கடமைகள் பல வாழ்க்கை நெறியை உயர்த்தக் கூடியவை எனினும்; பார்ப்பனருக்கும் பாராள்பவருக்கும் ஏனையோர் சிலருக்கும் பாகுபாடு செய்த கடமைகளில் இரண்டு; வேட்டலும் வேட்பித்தலும் தமிழ் நிலத்துக்கு வித்தியாசமானவைகளாகும்.

வேட்டல் என்றால் வேள்வித்தீ வளர்த்தல்; வேட்பித்தல் என்றால் வேள்வி செய்ய வைத்தல்!



வேள்வியும் யாகமும் வேதியர்களின் சாதுர்யத்தால் தமிழ் நிலத்தில் வேர் விட்டுக் கிளை பரப்பி விழுதுகளும் விடத்தொடங்கி விட்டன. "வீரத்தால் வெற்றிகளைக் குவிக்கலாம்; அதற்கு வெஞ்சமர் புரிவதுடன் விவேகத்தாலும் வாழ்க்கையின் வெற்றிக்கு விதவிதமான நற்செயல்களை நாடு கடந்த அளவில் கூட நடத்தி மகிழலாம். அவற்றை மறுத்து எதற்காக இந்த வீணான வேலையாக வேள்வியும் யாகமும்? வேண்டாமிது!" வேந்தன் தரப்பு இப்படி வெகுண்டு பேசுகிறதே எனக்கண்டு வேதியர் தரப்பு விட்டுவிடுமா?

சகலகலா வல்லமையுடன் சாதுர்யப் பொடியும் தூவினால்; அந்த மௌடீகச் சாம்பிராணிப் புகையிலே மன்னராயின் என்ன? மயங்கித்தானே தீர வேண்டும்.

எனவே; வேட்டலும் வேட்பித்தலும் மெல்லத் தொடங்கிக் காட்டு வெள்ளமெனக் கரை புரண்டன.

வேல், வாள், ஈட்டி, கட்டாரி எனப் போர்க் கருவிகள் ஏந்தி, புரவி மீதமர்ந்து போர் போர் என முழங்கியவர்கள்,

"காதலிலே கவிதையிலே களம் போகும் பேச்சு; காதல் தலைவனுக்கும் தலைவிக்கும் தாயகமே மூச்சு!"

எனக் குரல் எழுப்பியவர்கள் ஓம
குண்டங்களுக்கு முன்னால் குனிந்து
வணங்கிக் கூன் போட்டுக் கொண்டு
'கோமயம்' பருக வேண்டும்; வேள்விக்கும்
யாகத்திற்குமாக!

இதன் தொடர்ச்சி, இமயம் வரை
சென்று கண்ணகி சிலை அமைக்கக் கல்
எடுத்து, அதைக் கனகவிசயர் தலையிலே
ஏற்றிவந்தானே; அந்த சிலப்பதிகாரத்துச் சேரன்
செங்குட்டுவனையும் விட்டபாடில்லை! வேத
மந்திரம் அந்த வீராதி வீரனையும் வீழ்த்திக்
காட்டியது!

படையெடுப்பும், கண்ணகி சிலைக்கான
கல் எடுப்பும் முடிந்து, கனகவிசயரையும்
கொண்டு வந்து சிறையிலும் அடைத்தாயிற்று.
மாடலமறையோன் எனும் ஆரிய குருநாதர்
அரசனைச் சந்தித்தார். அருள் உபதேசம்
பொழிந்தார். அது பலித்தது. வடவேந்தர்கள்
விடுதலை செய்யப்பட்டனர். மாடலனின்
அறிவுரையை ஆணையாக ஏற்று வேள்விக்கும்
ஏற்பாடு செய்தான். அந்த வேலை, வில்லவன்
கோதையிடம் விடப்பட்டது.

★

"மாடல மறையோன் சொல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக்கொள ஏவி,
ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
பேர் இசை வஞ்சி மூதூர்ப் புறத்துத்

தாம்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளா விக்கோ மாளிகை காட்டி
நன்பெரு வேள்வி முடித்ததன் பின்னாள்
தம்பெரு நெடுநகர்ச் சார்வதும் சொல்லி, ஆம்
மன்னவர்க்கு ஏற்பன செய்க நீ என
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவினான்.''

(சிலப்பதிகாரம்)

தொல்காப்பியத்தில் அகத்திணை புறத்திணை இயல்களில் எங்குமே வடநூலார் கூறும் வருண வகைக் குறிப்பு ஒரு சிறிதும் இல்லையென்று திட்டவட்டமாக மறுக்கிறார் நாவலர் சோமசுந்தரபாரதியார், தமது தொல்காப்பியக் கருத்துரையில்!

அதை எழுத்துப் பிசகாமல் ஏற்றுக் கொண்டு பெரும்புலவர் வெள்ளை வாரணார் தொல்காப்பிய ஆய்வுரைப் பகுதியில் ''வடவாரிய நூல்களில் பேசப்படும் நால்வகை வருணப் பாகுபாடு, பண்டைத் தமிழ் மக்களிடம் வழங்காத ஒன்று'' எனத் திட்டவட்டமாகத் தெரிவிக்கிறார். ''பழந்தமிழகத்தில் மக்களை நிலவகையாற் பகுத்தல் அல்லாது குலவகையாற் பகுத்துரைக்கும் வழக்கம் என்றுமே நிலவியதில்லை'' என்றும் குறிப்பிடுகிறார். இப்பெரியோர் இருவரும் இவ்வாறு கூறிடினும், வெளிப்படையாக அல்லது ஒளிந்து ஒளிந்து இருந்த வருணப் பாகுபாடு; நிலப் பாகுபாடு,

தொழில் பாகுபாடு என்பனவற்றை மாற்றித் தன் ஆதிக்கத்தை நிலைநாட்டியதை மறுத்திட இயலாது.

வருணங்கள் வர; வேள்வி யாகம் என்ற தருணங்கள் தோன்ற வாகைத் திணையிலேயே பார்ப்பனர் வருகை தந்துவிட்டனரே!

சற்று வேதனையுடன் கூறவேண்டுமெனில் இதனை "வாகைத் திணை" என்பதைக் காட்டிலும் "ஆரியர் வருகைத் திணை" என்றால் அற்புதமாய்ப் பொருந்தும்!

இருளிலும் ஒளி

அழகிய முகத்தில் குறுமறுப்போல் தோன்றி அறுவை சிகிச்சையன்றி அடுத்து ஓர் வழியில்லை; குணப்படுத்துவதற்கு, எனும் நிலையில் ஆரியக் கலாச்சாரத்தின் ஆதிக்கம் அடியெடுத்து வைத்து நிலைத்துவிட்ட சூழலிலும் அக்காலத் தமிழர்கள் வாழ்ந்து காட்டிய முறையை, வாகைத் திணை பின்வருமாறு சிறப்பித்துக் காட்டத் தவறவில்லை.

குளிர் காலத்துப் பாசறை, கோடை காலத்துப் பாசறை ஆகிய இருவகைப் பாசறையிடத்தும் வீரர்களும் தளபதிகளும் கூடிப் போருக்குத் தயார் நிலையில் பயிற்சிகளும், வழிமுறைகளும் மேற்கொள்கிறார்கள்.

வாழ வைக்க உழைத்திடும் உழவர்கள் விளைச்சல் வெற்றி கண்டு உவகைக் கூத்தாடுகின்றனர்.

தேர்ப்படை நடத்திப் பகைப் போர்ப்படையைத் தீர்த்துக்கட்டிய நிகழ்வை, தெவிட்டாத

இன்பமெனக் கருதி வீரர்களின் நடுவில் கலந்து
வேந்தனே குரவைக் கூத்து ஆடுகிறான்.

விறலியரும் நாட்டிய விருந்தளிக்கின்றனர்;
வீரர்களுடன் அணிவகுத்து!

வாய்ப்பு நேருமிடத்து வஞ்சினம் கூறித் தம்
உயிரையும் களப்பலியாக வழங்கிட முன்வந்தோர்
வாழ்த்துக் குவியலில் மூழ்கித் திளைக்கின்றனர்.

பகைவரிடமும் அன்பு பாராட்டுகின்ற
பண்பினைப் புலப்படுத்துகின்றனர்; மனித நேய
மாண்பினர்!

சால்பு நிறைந்த சான்றோர் மன்னர்தம்
மணிமண்டபத்திலும் மக்கள் மன்றத்திலும்
மதித்துப் பாராட்டப்படுகிறார்கள்.

வாழ்ந்து காட்டுவோம் எனச்
சூளுரைப்போர், வரையறுக்கப்பட்ட ஒழுக்கம்
பேணும் வைராக்கியத்துடன், வாழ்க்கை
இலக்கியம் வரைந்து காட்டுகின்றனர்.

தவறிழைத்தோரைத் தண்டித்தே
திருத்த வேண்டுமென்றில்லாமல் மன்னித்து
நல்வழிப்படுத்துவதில் தனி இன்பம்
காணுகின்றனர்.

கொடை வழங்கிக் குதூகலிக்கின்றனர்.

காமத்தை வெறுத்து மேற்கொள்ளும்
துறவு மட்டுமல்ல; அரியணை, அரண்மனை,

ஆட்சியின் மாட்சி அனைத்தும் துறந்து
மன்னர்கள்; மக்கள் கடலில் கலந்து
திளைக்கின்றனர்.

இவற்றையெல்லாம் உள்ளடக்கிய
வாகைத்திணை நூற்பாவின் துறைகளுக்கான
விரிவான வடிவம் இதோ:–

★

“கூதிர் வேனில் என்று இரு பாசறைக்
காதலின் ஒன்றிக் கண்ணிய மரபினும்,
ஏரோர் களவழி அன்றிக் களவழித்
தேரோர் தோற்றிய வென்றியும், தேரோர்
வென்ற கோமான் முன்தேர்க் குரவையும்,
ஒன்றிய மரபின் பின் தேர்க்குரவையும்,
பெரும்பகை தாங்கும் வேலினாலும்,
அரும்பகை தாங்கும் ஆற்றலானும்,
புல்லா வாழ்க்கை வல்லாண் பக்கமும்,
ஒல்லார் நாணப் பெரியவர்க் கண்ணிச்
சொல்லிய வகையின் ஒன்றொடு புணர்ந்து
தொல்லுயிர் வழங்கிய அவிப்பலியானும்,
ஒல்லார் இடவயின் புல்லிய பாங்கினும்,
பகட்டினானும் ஆவினானும்
துகள்தபு சிறப்பின் சான்றோர் பக்கமும்,
கட்டில் நீத்த பாலினானும்,
எட்டுவகை நுதலிய அவையத்தானும்,
கட்டுஅமை ஒழுக்கத்துக் கண்ணுமை யானும்,
இடையில் வண்புகழ்க் கொடைமை யானும்,
பிழைத்தோர்த் தாங்கும் காவலானும்

பொருளோடு புணர்ந்த பக்கத்தானும்
அருளொடு புணர்ந்த அகற்சியானும்
காமம் நீத்த பாலினானும் என்று
இருபாற்பட்ட ஒன்பதின் துறைத்தே.

(பொருளதிகாரம் – புறத்திணையியல் – நூற்பா : 21)

ஒல்லார் = பகைவர்

அவிப்பலி = களப்பலி

துகள் = குற்றம்

தபு = கெட

அகற்சி = அகலம், விரிவு



காஞ்சித் திணை

அவலச் சுவை நிறைந்த இத்திணையின் துறைகளைப் பட்டியலிடும் நூற்பாவும் அதற்குச் சுருக்கமான பொழிப்புரையாக உருக்கமிகு ஒரு கவிதையும் காணலாம் :–

★

“மாற்றரும் கூற்றம் சாற்றிய பெருமையும்,
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய
முதுமையும்,
பண்புற வரூஉம் பகுதிநோக்கிப்
புண்கிழித்து முடியும் மறத்தினானும்
ஏமச்சுற்றம் இன்றிப் புண்ணோன்
பேஎய் ஓம்பிய பேஎய்ப் பக்கமும்,
இன்னனென்று இரங்கிய மன்னை யானும்,
இன்னது பிழைப்பின் இதுவாகியர் எனத்
துன்னரும் சிறப்பின் வஞ்சினத்தானும்,

இன்னகை மனைவி பேஎய்ப் புண்ணோன்
துன்னுதல் கடிந்த தொடாஅக் காஞ்சியும்,
நீத்த கணவன் தீர்த்த வேலின்
பேஎத்த மனைவி ஆஞ்சியானும்
நிகர்த்து மேல்வந்த வேந்தனொடு முதுகுடி
மகட்பாடு அஞ்சிய மகட்பாலானும்,
முலையும் முகனும் சேர்த்திக் கொண்டோன்
தலையொடு முடிந்த நிலையொடு தொகைஇ
ஈரைந்தாகும் என்ப; பேரிசை
மாய்ந்த மகனைச் சுற்றிய சுற்றம்
ஆய்ந்த பூசல் மயக்கத்தானும்,
தாமே ஏங்கிய தாங்கரும் பையுளும்,
கணவனொடு முடிந்த படர்ச்சி நோக்கிச்
செல்வோர் செப்பிய மூதானந்தமும்,
நனிமிகு சுரத்திடைக் கணவனை இழந்து
தனிமகள் புலம்பிய முதுபாலையும்,
கழிந்தோர் தேஎத்து அழிபடர் உறீஇ
ஒழிந்தோர் புலம்பிய கையறு நிலையும்,
காதலி இழந்த தபுதார நிலையும்,
காதலன் இழந்த தாபத நிலையும்,
நல்லோள் கணவனொடு நனியழல் புகீஇச்
சொல்லிடை இட்ட பாலை நிலையும்
ஆய்பெரும் சிறப்பிற் சிறுவன் பெயரத்
தாய்தப வரூஉம் தலைப்பெயல் நிலையும்
மலர்தலை உலகத்து மரபு நன்கு அறியப்
பலர் செலச் செல்லாக் காடு வாழ்த்தொடு
நிறையருஞ் சிறப்பின் துறைஇரண்டு
உடைத்தே.”

(பொருளதிகாரம், – புறத்திணையியல் –
நூற்பா : 24)

காஞ்சித் திணைக்கான கவிதை

அகத்திணை புறத்திணையில்
அத்தனை திணைகளுக்கும்
விளக்கம் தருகின்ற பணியினை அகல்
விளக்கின் ஒளிபோலத் தந்துள்ளேன் எனினும்;

அனைத்துத் திணை விரிவாக்கம்
நினைத்தெழுத இயலாவிடினும்

காஞ்சித் திணையை விட்டுவிட்டால்
காஞ்சியே கனவில் வந்து கடிதோச்சி
மெல்ல எறியாதா? அந்த
வெல்ல மனம் எனக்குத் தெரியாதா?

அனுதினமும் அணுப்பொழுதைப் பிளந்து
அதிலொரு
நுனிப்பொழுதை நூறு பங்காக்கி அந்தத்
தனிப்பொழுதைக் காஞ்சிக்கே தந்து நெஞ்ச
இனிப்புடனே காலம் கழிப்பவன் நான்!

நிலையில்லா வாழ்க்கையினை நினைவூட்டி
நீர்மேல் குமிழியெனும் உவமையும் சொல்லி,

அலைகின்ற மனத்துக்கு நங்கூரம் பொருத்தி
மலையளவுப் புகழை மன்பதையில் நிறுத்தி,



நிலைபெறவே வாழ்வதுதான் நிகரில்லாக் காஞ்சி.
தலைகொடுத்துத் தன்மானம் காத்திடச்
சொல்வதுதான் காஞ்சி.

கூற்றுவனின் ஆற்றல் கூறி அச்சுறுத்தும் போதும்
'நேற்றிருந்தார் இன்றில்லை' எனும் கூற்றுதனை

உணர்ந்தவன்தான் நீ யென் றுரைத்து
உலகில் எஞ்சியுள்ள நற்பணியை

ஒரு துளியும் மிச்சமின்றி முடித்திடவே
உத்திரவு தருவதுதான் காஞ்சி.

பேணுதற்கு யாருமில்லாமல் போய்விடினும்,
பேய் கூட உதவிடவே வந்துவிடும், உன்

பேருழைப்பால் தமிழர் நலன்
சீர்பெற்றுத் திகழ்வதையே புகழ்ந்தவாறு!

மாற்றாரை வென்று திரும்பாவிடின் தன்னை
மாங்குடி மருதன் பாடாது போகட்டு மென

வஞ்சின முரைத்த பாண்டிய மன்னனாய்
வஞ்சகப் பகைவரை வீழ்த்திடும் காஞ்சி.

விழுப்புண்பட்டு வீழ்ந்துள்ள கணவனை
விழிநீரால் குளிப்பாட்டு செய்வித்த வீரமகள்,

"இவன் குருதி என் குருதியுடன் கலக்கும் வரை
இருவரையும் யாருமே தொடாதீர்கள்!" என்று

கொழுநனை மாய்த்த கொடுவேல் கொண்டே
குத்திக்கொண்டு சாய்ந்த குலக்கொடியின்
காஞ்சி.

தந்தையும் தாயும் சாவூர் செல்லும் நேரம்
தந்திடுவீர் அவர் மகளை யென்று

பெண் கேட்டுப் போர் தொடுத்து வந்தவனை,
முதுகில்
புண் பெற்று ஓடவைத்த ஒப்பற்ற காஞ்சி.

வேல் பாய்ந்த தன் மார்பையும்
பால் நிலா போல் முகத்தையும்

ஆல் படரும் கொடி போல
ஆளன் தலையோடு அவள் சேர்த் தணைத்த
காஞ்சி.

இன்னொரு மனையில் இறந்த கணவனுக்காகப்
பொன் நிகர் மேனியாள் புலம்பித்தவித்து

பின்னொரு வாழ்க்கை எதற்காக வென்று
மின்னலாய்ப் பாய்ந்து நெருப்புக்கிரையான காஞ்சி.

கன்னல் அல்ல உயிர் என்று காட்டுதற்கும்
கற்பின் பெருமை நிலை நாட்டுதற்கு மட்டுமே

பெண் இனத்தார் செய்யும் இந்தத் தியாகம்;
மண்ணில் ஆண் எவன் செய்வான் எனக் கேட்டு,

கண் இனமாம் பெண் இனத்தை வாழவைத்து,
கண் விழிக்க வைத்த காஞ்சி.

இத்திணையை இதற்குமேல் எழுத எனக்குத்
தினைத்துணையும் தெம்பில்லை; அதனாலே
நிறுத்துகிறேன்.

தமிழ் வழி தனி வழி

களவியலுக்காமென காப்பிய மேலோன்
தீட்டிக் காட்டும்
களவொழுக்க இயல்பு எனும் நூற்பாவுக்கு, தமிழ்

உளங்கொண்ட பெரியோன் வெள்ளை வாரணர்
உரை வகுத்துச் சொல்வதைக் காணின்
மறையோர் தேயத்து மணமுறை எட்டு என்று
தொல்காப்பியர் சுட்டிக் காட்டுவது ஏன் என்று
புரியும்.

குறையுடைய அவ்வழிகள் முழுவதையும்
நிறையுடைய தமிழர் ஏற்றாரில்லை என்றும்
வடமொழியாளர்க்கே அந்த முறையனைத்தும்
வகையாகப் பொருந்துமென்றும் – அவற்றில்

ஒன்றிரண்டே தமிழர் மணமுறைக்கு
ஒத்துப் போனதென்றும் உரையாளர்
மொழிகின்றார்.

எட்டுவகை மன்றல் முறை என்னவென்று
சுட்டும்போது;

அய்ம்பதை நெருங்கிடும் ஆண்மகன்;
ஆறிரண்டு பனிரெண்டு வயதாளை
மணப்பதெனில் –

“பிரமம்” என்று பெயர் பெறுமாம்.
“பிரசாபத்தியம்” எனும் பெயரோ;

பிரியமுடன் மைத்துன கோத்திரத்தானுக்கு
பெண் கொடுத்தல் என்றும்;

பெண்ணுக்கு பசுவும் எருதும் சிலையாகப்
பொன்னாலே செய்து தருதல் “ஆரிடம்” என்றும்;

ஆசிரியன் ஒருவன் வேள்வி மூட்டச் செய்து
அதன் முன்னே ஆரணங்கைக் காணிக்கையாக்கல்
“தெய்வீக மணம்” என்றும்,

ஆணும் பெண்ணும் அவரவரும் தாமே எதிர்ப்பட்டு
அணைத்து மகிழ்ந்து ஆயிற்று எல்லாம் எனிலோ;
அதனைக் “காந்தர்வ” மென்றும்

மற்றும் கொல்லேற்று கொம்பொடித்து
அடக்கியவனை
கற்றவில் வித்தைப் போட்டியிலே கரைகண்டு
வென்றவனை

பற்றுண்டு பொருள்மேல் எனப் பேழை கேட்டுப்
பெற்றவனை
கற்றுணர்ந்த பெண் கழுத்தில் கூட தாலி
கட்டச் செய்வதுண்டு

அதற்குப் பெயர் "அசுர" மணமென்பார்;
அவள் விருப்பத்திற்கு மாறாக நடத்தும் மணம்;
"இராக்கத" மென்றும்

வயதில் மூத்தவளை, தூங்குவதே வழக்கமாகக்
கொண்டவளை
பயமின்றி மதுவருந்திக் களிப்பவளை

கட்டி வைக்கும் மண நிகழ்வுக்கு
அட்டியின்றிப் பெயர் வைத்தார் "பைசாச" மென்று!

இந்த எட்டுவகை மணமுறை ஏற்பாட்டை
ஏற்காத காரணத்தினால்தான்

மறையோர் தேயத்து மணமுறை இவையென்று கூறி
மறைமுகமாக உணர்த்துகின்றார் காப்பியர்
என்றுரைத்து

மணமுறை இவை பெரும்பாலும்
தமிழர்க்குரியதல்லவென
மதிப்புமிகு பெரும்புலவர் மறுப்புரையே
எழுதிவிட்டார்.

களவு என்பது கையாடல்; சிறிய கொள்ளை;
கயவர் செயல் அவை என்று கருதி வெறுப்பது
இயல்பு!

அவ்வியல்புக்கு மாறாக ஆணழகன் ஒருவனும்
ஆரணங்காம் ஒருத்தியும், அருகருகே நின்றாலும்;

உடற்புணர்ச்சிக்கு அவசரம் காட்டாமல்,
உள்ளங்களின் புணர்ச்சியாலே உவகைகொண்டு

நிறை கடவாமல் நினைந்துருகி
மறைமுகமாய்ச் சந்தித்து மகிழ்வர் என்றும்

ஆங்கதற்கான துணை நின்று ஆவன செய்தல்
பாங்கன், பாங்கியர் பாசமிகு பணிகள் என்றும்

அறம் பொருள் இன்ப மொடு
அய்ந்தொழுக்கமிணைந்த அன்பும் கலந்து

அருங்காதல் பிணைப்பு தோன்று மென்றும்
ஆருயிர் இரண்டும் ஒருயிராய் ஆகுமென்றும்

யாழ் மீட்டும் இசைவல்லார் –
ஆழ்கடல் முத்துப் போல்

அருந்தமிழ்ச் சொல்லெடுத்து
வாழ்கதிர்ச் செல்வனை வாழ்த்திடுவர்;

“களவியல்’ குற்றமல்ல;
உளமொன்று படுவதாலே

தாழ்வொன்றும் இல்லையெனப்
பாழ்மனப் பிறவிகட்கும்
விளக்கம் சொல்லி
விரித்து வைப்பார் களவியல் நிகழ்வுகளை!

★

“இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு
அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்
காமக்கூட்டம் காணுங் காலை
மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்
துறையமை நல்யாழ்த் துணைமையோர்
இயல்பே”

(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா : 1)

காமக்கூட்டம் = காதலர்கள் அன்புச் சந்திப்பு

குறிப்பு :– தொல்காப்பியனார் காலத்தே வடவர் நாகரிகம் தமிழகத்தில் மெல்ல மெல்லப் பரவத் தலைப்பட்டமையால் மறையோர் தேஎத்து மணமுறைக்கும் தென்றமிழ் நாட்டு மண முறைக்குமுள்ள ஒற்றுமை வேற்றுமைகளை விளங்கவுணர்த்தல் அவரது கடனாயிற்று. ஒருவன் ஒருத்தியென்னும் இருவரிடையே

உண்டாகும் கூட்டுறவை
ஒருதலைக்கேண்மையாகிய கைக்கிளை, ஒத்த
கேண்மையாகிய அன்பினைந் திணை,
ஒவ்வாக் கேண்மையாகிய பெருந்திணையென
மூவகையாகப் பகுத்துரைத்தல் தமிழ் மரபு.
அவை பிரமம், பிசாபத்தியம், ஆரிடம், தெய்வம்,
காந்தருவம், அசுரம், இராக்கதம், பைசாசம் என
எட்டு வகையாகப் பகுத்தல் வடநூல் மரபாகும்.

(வெள்ளைவாரணனார்)

'தெய்வமகள்' அவள் யாரோ?

குறும்பு செய்யும் தோழன் எனினும்
குணநலன் மிகவும் கொண்டவன்
அலைகடல், கரைமீது கொண்ட காதலேபோல்
தலைமகன் மீது தணியாஅன்பை என்றும்
பொழிபவன்

அந்திசாயும் நேரத்திலே அம்மன்கோயில் ஓரத்திலே
முந்திச் சென்ற தலைமகனை கையொலித்துக்
கூப்பிட்டு

"பந்திக்குச் செல்வது போல் ஏனிந்த பதைப்பு? பாதிச்
சந்திர ஒளி தனிலே பார்த்து வருகின்றேன் ஒரு
தேவதையை!

தெய்வமேதான் அவள்; திருக்கோயிலுக்குள்ளிருந்து
திருவாயில் பக்கம் வந்து நிற்கின்ற காட்சி
கண்டேன்".

பாங்கன் இதைச் சொன்னவுடன், தலைவன்
பார்த்துவிட வேண்டும் அவளையென்று

பருந்தொன்று கிளி நோக்கிப் பாய்வது போல்
பாங்கன் சொன்ன திசை நோக்கிப் பறந்து
சென்றான்.

அய்யப்பாடு அணுவுமில்லை;
அம்பிகை தெய்வம்தான்

அவன் அருகே அவதரித்து
அணிமணியால் அலங்கரித்து

அழகுருவாய் நிற்பதாக எண்ணிக் கொண்டு
அடியளந்து முன்னேறிச் சென்றான் மிக அருகில்!

வாய்திறந்து பேசி சந்தேகம் போக்கிக் கொள்ள
வாய்ப்பில்லை; தெய்வம் பேசாது என்பதாலே!

கண்களாலே ஆய்வுசெய்து கண்டுபிடிப்போம்
கடவுள்தானா அறிவோம் எனத் துணிந்தான்!

கூந்தலில் சரிந்த மலர்களை நுகர்ந்து
ஆங்கொரு வண்டு அலைந்து திரிந்ததால்

மக்கள் சூடும் மலருக்குத்தான் மணம்
உண்டென்று
மனத்தெளிவு தினையளவு பெற்றான் அவள்
'மாதேவி'யல்ல வென்று!



அணிமணிகள் பூண்டிருந்த அங்கம் கண்டு
அத்தனையும் பூவுலகில் பொற்கொல்லர்
செய்ததறிந்து

அரைப்பகுதி ஆய்வை முடித்து
அகமகிழ்ந்தான் அவள் தேவதை அல்லவென்று!

கொங்கை மீதும் தோள்மீதும் வள்ளிக்
கொடியின் தொய்யல் எழுதியிருந்தமையால்

கையில் இருந்த கழுநீர்ப் பூவின்
கடிமணம் நுகர்ந்து கொண்டிருந்தமையால்

வான் கண்ணல்ல ஊன் கண்தான் அந்த
வட்ட நிலா முகத்தில் என்றறிந்தமையால்

தெய்வப் பெண் என்றால் இப்படித்
திறந்து மூடாதே இமைகள் என்று தெரிந்தமையால்

ஆடவன் தன்னைக் கண்டு
அச்சத்தால் தடுமாற்றம் ஏற்பட்டமையால்

தெய்வமகள் அல்ல; அவள்; தன்னைத்
தேடிவந்த மாடப்புறாதான் என – முழுமையாகத்

தெளிந்தான் – குறும்புக்காரத் தோழனோ
நெளிந்தான் – நிலையறிந்து புதரோரம்
ஒளிந்தான்!

★

“வண்டே இழையே வள்ளி பூவே
கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று
அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ
நின்றவை களையும் கருவி என்ப”

(பொருளதிகாரம், – களவியல் – நூற்பா : 4)

இழை = அணிகலன்

அலமரல் = தடுமாற்றம்

இமைப்பே = கண்ணிமைத்தலும்

விழியாலே மொழி பேசி


புதர் மறைவில் வெகுநேரம் மறைந்திருந்து
காதலர்க்கு
இடர் எதுவும் விளைவிக்காமல்

இருமல் ஒன்று தொண்டையிலே எட்டிப்
பார்த்தபோதும்
தருணமல்ல இதுவென்று தடை போட்டு
நிறுத்திவிட்டு

என்ன பேசுகின்றார் இருவரும் எனக் கேட்பதற்கு
இரு செவியும் அகலமாய்த் திறந்துவைத்தான்
அன்புப்பாங்கன்

எதுவுமே ஓசையில்லை; ஏன் என்ற குழப்பத்தால்
“எங்குதான் போய்விட்டார்;

இருக்கின்றாரா இல்லையா?” என்று
எட்டிப் பார்த்துக் கண்டுகொண்டான்



இருவருமே சிலைகளாக நின்றிருந்தார்
வீணாகப் பேச்செதற்கு விழியிரண்டு
இருக்கும்போது

கண்ணொடு கண் இணை நோக்கொக்கின்
வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல என்பதை அறிந்திருந்தார்.

கவின் மலராய் இருந்த காதல் காயாகி விட்டதின்று
கனிந்து பழமாகுமட்டும் காத்திருத்தல் என்பதே

களவியல் காட்டும் தமிழ்நெறி அறிவார்
"உளமிரண்டு இணைந்த கதை சிறுகதையல்ல;

இஃதோர் தொடர்கதையாக வாழ்த்துகிறேன்!
இன்றுபோய் நாளை வருக" என்றான்
இனியதோழன்.

இறையன்பர்கள் கோயிலுக்கு வரும்வேளை
என்பதால்
இன்றிந்தக் கண்மொழி போதுமென்று பிரிந்து
சென்றார்.

தோழனவன் தலைமகனின் தோளைப் பிடித்துச்
சொன்னான்
"தோகையவள் அச்சம் நாணம் மடன் கொண்ட
அழகி"யென்று.

தலைமகனோ பாங்கன் சொல்லைத் திருத்திச்
சொன்னான்; "அத்
திருமகளோ திடுமென மெய் தீண்ட அச்சம்
கொண்டனள்

நாணம் என்பது நங்கையரின் உடன்பிறந்த
நல்லியல்பு.
நான் ஏற்காத ஒன்று, மடன் எனும் அறியாமை,

அணியாக மகளிர்க்கு ஆயிற்று என்பதைத்தான்
– அவளும் நானும்
அறியாமை பூண்டிருந்தால் உடல் உறவு
நிகழ்ந்திருக்குமன்றோ!

காதற் பறவைகளாம் யாமிருவர்
களவியல் வழி என்பது

உளம் சேரும் வழிதான் என்றும்
உடல் சேரும் காந்தர்வ வழியல்ல என்றும்
உணர்ந்து இருந்தோம் – உளம் மட்டும்
புணர்ந்து பிரிந்தோம்!”

உற்ற தலைவன் உரை நிகழ்த்தி முடிந்தவுடன்
உயிர்த் தோழன்; வியப்பாலே விழி விரித்து

“நாட்டம் உணர்த்தியும் நல்ல
குறிப்புகள் காட்டியும்

ஆடவர் வலிமையும்
ஆயிழை பெருமையும்

ஊமை மொழியிலேயே
உறுதிப்படுத்தியிருக்கின்றீர்

ஒருநாள் இதுபோல; ஒவ்வொரு நாளும்
திருநாள் ஆகட்டும் உமக்”கென்று

பாங்கன் வாழ்த்தினான்
பரிவுடன் தமிழ்ப் பண்புடன்!

★

1. “நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக் கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும்”

2. “குறிப்பே குறித்தது கொள்ளுமாயின் ஆங்கவை நிகழும் என்மனார் புலவர்”

3. “பெருமையும் உரனும் ஆடூஉ மேன”

4. “அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப”

(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா : 5, 6, 7, 8)

நாட்டம் = விருப்பம்
உரன் = வலிமை
ஆடூஉ = ஆடவர்
மடன் = அறியாமை
நிச்சம் = நித்தம்

மலர் (43)

காதலால் கசிந்துருகி

அம்மன் கோயில் அருகில் கண்ட
அழகுச் சிலையை நினைத்தவாறு ஆண்மகனும்

அன்றுமுதல் அவன் உருவை நெஞ்சில்
பதித்தவாறு ஆயிழையும்
அடுத்தொரு நாள் எப்போது காண்பதென்று
தவமிருந்தார்.

கண் துஞ்சார் பசி நோக்கார்.
புண்மீது காரப்பொடி பட்டது போல்

இதயத்தின் வேதனையை
இதழ் அழுத்திக் கடித்துக் கொள்வார்

எத்தனை நாள் வெளியிடாமல்
பெற்றவர்க்குத் தெரியாமல்

இருவருமே பொறுத்துக் கொள்வார்?
இருளில் மறைவதுண்டோ மின்னல் ஒளி?

அல்லால்

இருள்தான் தடுத்ததுண்டோ
இருள் கிழிக்கும் அவ்வொளியை!

ஏற்றதொரு பாங்கனைத் தலைமகன் பெற்றது போல்
எழிலார் தோழி யொருத்தித் தலைமகளுக்கும்
உண்டு!

"தெய்வமகளோ நீ யென்று திகைத்தான்
கள்வன் என்றாய்;
தெளிவிக்கும் சான்றுகளால் தெரிந்து
கொண்டான் அவன் உன்னை!

பூமிமகள், பூமகள், புதுமை பொலியும் மகள் எனினும்;
புனலோடும் வழிதனிலே புல் சாய்ந்தாற் போலக்
கருமமே காதலென்று சாய்ந்தாடுகின்றாய்! இருவர்
உருவமும் உணர்வும் ஒன்றிக் கலந்து;" –
தோழன்; தோழி

ஆறுதல் பலவற்றை அடுக்கிக் கூறியும்,
மாறுதல் இல்லை மனத்தே பதிந்த காதலில்!

தோழியும் தோற்கிறாள்;
தோழனுக்கும் வெற்றியில்லை;

தொகை தொகையாய்ப் படை எதிர்த்த போரில்
அல்ல,
தொடருகின்ற காதல்தனை தொடராமல் வேகம்
தடுக்கும் செயலில்!

தோகை மயிலாளும், துணைவனையே
"ஒருதலையுள்ளுதல்" எனும் இலக்கண
நெறியில் கண்டாள்.



இடைவிடாது நினைவில் உண்டாள்;
இவன் என்ன ஆனான்?

தேக்கு மரத் தேகக் கட்டழகு நாயகனும்
ஊக்கமது தளர்ந்து உடல்வாடி; காதல்
உச்சியிலே நின்றான்.

கண்ணிற் காணும் பொருள் எல்லாம்
காதலிக்குக் காதலனாகத் தெரியும்

காதலனுக்குக் காதலியாய்த் தோன்றும்
நாமதற்கு என் செய்வதென்று தோழன் தோழி;

தூணிலுமிருக்கும் துரும்பிலுமிருக்கும்
இறைவனைத்
துணைக்கு வந்து அருள் புரியக் கேட்பர்!

ஆண்மகன் நெஞ்சிலும் ஆயிழை நெஞ்சிலும் நான்
காதலாயிருக்கிறேன், கடவுளாயில்லை எனப்
பதில் வரும்.

காதல் நினைவால் செயல் மறப்பர் – எதையும்
கருதிச் செயல்படும் நிலை மறப்பர்

மயக்கம், மறத்தல் என
மோகமுற்று, பித்தாகி

தயக்கமில்லை சாவதற்கென்று
தலைகொடுக்கத் துணிந்து விடும் காதலால்

களவியலின் மாண்பனைத்துக்கும்
காட்சியாகத் தோன்றி நிற்பர்!

களவியலின் ஒழுகலாறு என்றுரைப்பார் இவற்றை!
காதலியலின் கரை சேர்வதற்குள்ளாக,

கடக்க வேண்டிய தடைக் கற்கள்
இவையெனிலோ;
தடந்தோளும் திட நெஞ்சும் உண்டு
தாண்டுதற்கு என்று

தலைமகனும் தலைமகளும் சூளுரைத்தார் அன்று
நிலைபெற்ற அக்காப்பியத்தை
நினைவூட்டுகின்றேன் இன்று!

★

"வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்
ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்
நோக்குவ எல்லாம் அவையே போறல்
மறத்தல் மயக்கம் சாக்காடு என்று அச்
சிறப்புடை மரபின் அவை களவு என மொழிப"
(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா : 9)

வேட்கை = குறையாத விருப்பம்
ஒருதலையுள்ளுதல் = இடைவிடாது நினைத்தல்
நாணுவரை இறத்தல் = நாணத்தின்
எல்லையைக் கடத்தல்
போறல் = போன்ற
மறத்தல் = பித்தாதல்
மயக்கம் = மோகித்தல்

மலர் (44)

கதிரொளி

ஒரு விழுகு

கல்கா ப்பியப் பூங்கா

“தே**தே**வ மகள் இவள் இல்லை யென்றாலும்
தேவ மகள் இவள் போல் இருக்கமாட்டாள் என்பேன்

தேடியலைந்து பிடித்தாலும், ஒரு
கோடிப் பெண்களில் தேர்வு செய்தாலும்

நிகழ்காலம் மட்டுமல்ல எதிர்காலம் உட்பட
நிலவுக்கு நிகரான இவளைப் போல் வேறொருத்தி

நில உலகிலானாலும் புராணங்கள் கூறுகின்ற
பல உலகிலானாலும்

நிச்சயமாய்க் காணமாட்டோம்
நீ இவளைக் கண்டதனால் மறுக்க மாட்டாய்;

உண்மைதானே நான் உரைப்ப”தென்று;
ஓடாமல் நின்றிருந்த புரவித் தேரினிலே,

உட்கார்ந்து கொண்டு
உயிரனைய தோழனிடம்



ஓராயிர முறை கேட்டுவிட்டான்;
அலுத்துக் கொள்ளாமல் அவனும்

“ஆம், ஆம்” என்று ஒப்புதலும் அளித்துவிட்டான்
அப்போதவள் ஒரு மதிற்சுவரில் மறைந்திருந்தாள்

தலைமகனும் அது தெரியாதது போலத்தான் –
அவள்
தலை முதல் கால் வரையில் வர்ணித்துக்
கொண்டிருந்தான்.

“அழகின் சிகரம் அவள்
ஐம்பால் எனும் கூந்தலை;

அள்ளியெடுத்து வாரி முடித்து,
கொண்டை போட்டுக் கொண்டாலும்;

குழல், பனிச்சை, சுருள் எனவே
கூந்தல் அலங்காரம் செய்து கொண்டாலும்

சுழலும் நம் விழிகள் இந்தச்
சுந்தர மோகினி யார்?

அந்தர தேவதையோ, அல்லால்
அரம்பை, ஊர்வசி என்கிறார்களே; அவர்தானோ
என்று!

அலையும் என் நெஞ்சுக்கு ஆறுதலாக ஒரு
வார்த்தை
அன்புப் பாங்கனே நீ உரைத்தால்தான் என்ன?

ஆயுள் என்ன உனக்கு குறைந்தா போகும்” என்று
அந்தத் தேர்த்தட்டை ஒரு மிதிமிதித்த வேகத்தில்

மிரண்டு போன புரவி இரண்டும், தேரோடு
பாய்ந்து சென்று
மின்னற்கொடியாள் மீது மோதிடும்
நிலைவந்தபோது

அடடா; நீயா? என்றலறி
அவள் கரம்பிடித்து இழுத்துக் கொண்டான்.

“வண்ணமயில் இங்கு
வந்தது எனக்குத் தெரியாதே;

என்னவோ நல்ல காலம்
எப்படியோ பிழைத்து விட்டாய்

கன்னலே; காயமொன்றுமில்லையே” என்று
கவலையால் துவண்டு கேட்டு

தழுவிய கைகளை எடுக்காமல்
தாங்கிக் கொண்டு;

ஏங்கிக் கொண்டிருந்தேன்
எத்தனை நாளாய் எனச் சொல்ல;

“நானுந்தான்” என்று அவள் சொல்லாமல்
நாணம் தடுக்க நின்றாள்.

நாணேற்றி விட்டான் காமன் வில்லை இனி
நமக்கிங்கே வேலை இல்லையென

இரு புரவிகளைத் தேரோடு சேர்த்து
இழுத்துக் கொண்டு – இனிய பாங்கன்;

இடம், வசதிதான் என்பதை
இமை சொடக்கிக் கூறி

இமைப்பதற்கு முன்பே
இடம் பெயர்ந்தான் –

உயர்ந்திருந்த மரம், செடி, கொடிகள் அசைந்து
உதிர்த்திருந்த மலர்கள் எல்லாம் ஒன்றாகச் சேர்ந்து

பயன் தரு நற்பணியாற்றும்;
பஞ்சு மெத்தைப் படுக்கையாக!

பக்கத்தில் யாருமில்லை – சற்று
"பயம்" மட்டும் துணையாக அவனுக்கு!

பாதுகாப்புத் தோழியாக மகளிர்
பண்பாடே பாவைக் கிருந்ததாலே

ஏதுநேரும் என்கின்ற துணிவுடனே
சூதறியாச் சோதி நிலா – அந்தச்

சுந்தரனின் வெளியழகைச்
சுவைத் தமர்ந்தாள் கண்களாலே

ஈர விறகைக் காயவைத்து எரிப்பதற்கு
முனைவதன்றி
இன்றைய கற்பூரம் போல் காம நிகழ்வுக்கு
அவளை எதிர்பார்த்தான்.

உள்ளத்தால் உடன்பட்டு அவளோ
உடல் தீண்டமட்டும் உடன்படாமல்

ஒதுங்கி அமர்ந்து கொண்டாள்;
ஓர விழிப் பார்வையாலே – அவன்

உயிர் மொண்டுவிட்டாள் அதில்
ஒப்பம் கண்டுவிட்டான் அவனும்!

இனியென்ன பயமென்று இன்பக்
கனிகள் பற்றிச் சுவைப்பதற்கும்

ஈருயிர் ஒருயிராக மட்டுமல்ல
ஈருடலும் ஒருடலாக

ஒட்டிக் கிடப்பதற்கும்
அட்டியின்றி உரிமை

அளிக்கப்பட்டதென்று மகிழ்ந்து
அளவுக்கு மேல் சென்றவனை;

அவள் தடுத்த போது;
இரந்து கேட்கின்றேன்

எத்தனை இடையூறுக்கிடையே
நாமிருவர் சந்திக்க வருகின்றோம்

எண்ணிப்பார் இளமானே
எனக்கேட்டு தழுவுகின்ற தலைவனிடம்

“இடையூறு கிடக்கட்டும்; இப்போது என்
இடையிலே ஊருகின்ற விரல்களை எடுங்கள்”
என்று

சைகையால் கூறிவிட்டுச்
சற்றுத் தள்ளிப் படுத்துக் கொண்டாள்.

இனிப் பொறுக்க முடியாது
இளங்கிளியே; என்னை

இறந்து போக விட்டு விடாதேயென்று
வஞ்சியினைக் கெஞ்சிடவே அவளும்

நாணத்தை விலக்கி வைத்து
நாயகனை விலக்காமல் விட்டுவிட்டாள்

இணங்கினாள் முதலில் அவன் விருப்பத்திற்கு
என்றாலும்
இணைந்தனர் பிறகு இருவர் விருப்பமும்
ஒன்றாக ஆனதாலே!

★

"மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல்,
இடம்பெற்றுத் தழாஅல், இடையூறு கிளத்தல்,
நீடுநினைந்து இரங்கல், கூடுதல் உறுதல்,
சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்
தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்
பேராச் சிறப்பின் இருநான்கு கிளவியும். . . ."

(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா : 11)

பயிறல் = ஒலித்தல், கூடுதல்

தழாஅல் = தழுவுதல்

இடையூறு = தடை, துன்பம்

கிளத்தல் = விதந்து கூறுதல்

தேற்றம் = துணிவு, மனம் கலங்காமை

மலர் (45)

நானாமா? மானமா?

காதலனைச் சந்தித்து வருகின்றேன் என்றாள்
காதல் தலைவி
கலை கூந்தல் கண்டவுடன் புரிந்து கொண்டேன்
என்றாள் தோழி!

நிலை குலையுமளவுக்கு நேர்ந்ததேன் பாவாய்;
மனம்
அலைபாயும் விதமாக ஆனதேன் சொல்வாய்!

தோழிக்குப் புரிய வைக்க – தன்
தோளைக் காட்டினாள் தலைவி!

கிழித்து விட்ட குருதிக் கோடு!
கீறிவிட்ட பிறைக் குறிகள்!

ஆறிவிட்டாலும் பின்னர் வடு மறையாத
ஆழமிகு காயங்கள்! அப்பப்பா; மிகக் கொடுமை!

“தலைவனை இகழ்வதாகத்
தயைகூர்ந்து எண்ணிடாதே;

விலங்கினமா ? மனிதன்தானா ?
விழுந்து விட்டாய் அவன் வலையில்; உன்னை,

விழுங்கியிருந்தாலும் பரவாயில்லை; அவன்
வெறி பிடித்து விளையாட ஏன் விடுத்தாய் ?”

“துன்பத்தால் நீ துடிக்கின்றாய் தோழி
இன்பத்துக் களத்தினிலே

இனியவனாம் என் தலைவன் – ஒரு
முனிவனைப் போல் எனை நெருங்காமல்
தானிருந்தான்

நித்த நித்தம் நாங்கள் சந்தித்தாலும் அந்த
நிலைமையிலே மாற்றமில்லை.

களவொழுக்கம் காணும்போது
காந்தர்வம் எங்கோ ஒன்றிரண்டு


விதி விலக்காய் உண்டே தவிர
காம நிகழ்வுக்கு கடுகளவும் உடன்பட்டதில்லை”.

“பின் எவ்வாறு பெண்ணே; உன்
கன்னத்தில் காயம் ?

கையில் கீறல் ?
விரலில் வீக்கம் ?”

“இடம் குறித்து, எப்போதும் போல்
இருவரும் சந்தித்தோம்; பிரிந்தோம்.

பெற்றோரின் சம்மதமும் இருவர்க்கும்
உற்ற தோழி உன்னாலே கிடைத்ததாலே



மணம் விரைவில் நடக்குமென்ற
மகிழ்ச்சியுடன் மணல் திட்டைக் கடந்து

முல்லை மலர் பூத்திருக்கும் கொல்லைவழி; அது
தொல்லை வழி எனத் தெரியாமல் வந்துவிட்டேன்.

பல்லை ஒருவன் இளித்தவாறு
பக்கம் வந்து பேசலானான்.

கதை முடித்து வருகிறாயா? அடுத்த
காட்சி தொடரலாமா என்றவன் கேட்டவுடன்

களவொழுக்கத்திற்கே களங்கம் கற்பித்த
கயவன் அவனைக் காண்பதற்கும் மனமில்லாமல்

நடையினிலே வேகம் சேர்த்து அந்த
நந்தவனம் தாண்டத் துடித்தேன்

அதற்குள் அவன் என்னை
அணைப்பதற்குக் கைகள் நீட்டி

எதற்கும் நீ அஞ்ச வேண்டாம்
எவரும் நமைப் பார்க்க மாட்டார்

நாணம் விடு நங்காய் என்று
நன்றாக வளைத்து விட்டான்

தழுவிக் கொண்டிருந்த அவன் பிடியிலிருந்து
நழுவிக் கொண்டு நான் சொன்னேன்;

நாணம் உயிரினும் சிறந்தது
நாயினும் கீழானவனே அறிக என்று!

நாணத்துக்கு அத்துணை நன்மதிப்பா ?
நங்கையே நாணம் வேண்டாம்

நான் கேட்கும் உன் கற்பை
நாணத்துக்கு மாற்றாகக் கொடுத்துவிடு
என்றான்.

ஓநாய் மனிதனே ஒன்றறிவாய்;
உயிரினும் சிறந்தது நாணம்

நாணத்தை விடச் சிறந்தது கற்பு
நானிப்போது சொல்லுகின்றேன்

நாணத்தை யிழக்கவும் துணிந்துவிட்டேன்
நாணம் பெண்ணின் பலவீனம் என்றுதானே

நடுத்தெருவில் குறுக்கே வந்து என்னைச்
கெடுத்திடவே முனைகின்றாய்!

இதோ நாணத்தை உதறி
என் கற்பை நானே காத்துக் கொள்வேன்

சூறைக் காற்றாகச் சுழன்றேன்
பாறைக் கல் எடுத்து வீசினேன்

அவனும் வாளாயில்லை
ஆங்கொரு வாளாகவே மாறி – எனை

அடக்கியாளப் படபடத்தான்
ஆண்மகனைத் தாக்குவதா ?

என்ற நாணம் மட்டும் நான் கொண்டிருந்தால்
என் மானம் போகக் கற்பு பறி போயிருக்கும்.

காயங்களுக்கு காரணம் புரிகிறதா தோழி
உயிரினும் சிறந்தது நாணம்

அதனினும் சிறந்தது மானம்
அதுதான் பெண்களின் கற்பு" என்றாள்

தோழி மகிழ்ந்து நின்றாள்
தோகையாள் பிரிந்து சென்றாள்.

★

"உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்
செயிர் நீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்
தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு
காமக் கிழவன் உள்வழிப் படினும்
தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்
ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே".

(பொருளதிகாரம், – களவியல் – நூற்பா : 22)

சிறந்தன்று = சிறந்தது
செயிர் நீர் = குற்றம் நீங்கிய
தொல்லோர் கிளவி = மூதறிஞர் மொழி
புல்லிய = பொருந்திய
தாவில் = வருத்தம் இல்லாத

மலர் (46)

இருவரின் ஒரு விளக்கம்!

மாசாத்துவான் மகன் கோவலனுக்கும்
மாநாய்கன் மகள் கண்ணகிக்கும்

மாமுது பார்ப்பான் மறைவழி காட்டிடத்
தீவலம் செய்து திருமணம் நிகழ்த்தினர்

நல்ல நாள் நல்ல நேரம் கணித்துத்தான்
எல்லோரும் மகிழ மணவிழா நடந்தபின்

மாசறு பொன் என்றும் வலம்புரி முத்தென்றும்
காசறு விரை யென்றும் கரும்பென்றும் தேன் என்றும்

மஞ்சத்தில் கொஞ்சிக் குலவிய
மங்கைநல்லாள் கண்ணகியின்

மணவாளன் பிரியாமல் இருந்திடவும் – அவள்
மங்கல நாண் காத்திடவும்,

நாளும் நேரமும் துணையாய் நில்லாது,
வாளும் வேலுமாய் அவள் வாழ்வைத் துளைத்தது!

கணவனை இழந்தாள் கைம்பெண் ஆனாள்
கள்வனின் மனைவியெனக் காவலனும் இகழ்ந்தான்.

பார்ப்பனர் ஓதிய மந்திரமும் – கோள்
பார்த்துக் குறித்த நல் ஓரையுமே

பாதுகாத்திடவில்லை அவர்களையென்று
பகரும் சான்று, சிலப்பதிகாரம்!

சிலம்புக்கு மிக முற்பட்ட காலத்திலேயே
சீர்மிகு இலக்கண இலக்கியப் பூங்காவாக,

தமிழர்க்குக் கிடைத்த கருவூலம்
தன்னேரில்லாத் தொல்காப்பியம்!

வடமொழியாளர் வந்து புகுந்த நேரம்
அடியோடு கெடவில்லை தமிழர் நலன்.

அங்கொன்றும் இங்கொன்றுமாக
ஆரம்பமானது அந்தப் பண்பாடு!


அதனையேன் இல்லையென மறுக்கவேண்டும்?
அய்யன் தொல்காப்பியர் சுட்டிக் காட்டுகிறார்;

கற்பியலுக்கு முன்னால் இடம் பெற்ற களவியலில்
காதலியைச் சந்திக்க வருகின்ற காளை,

காட்டுவழிப் பாதையென்று கருதி நின்றோ
காவல் மிகுதியெனக் கலங்கிச் சோர்ந்தோ,

கடிய துன்பம் கொடிய விலங்குகளால்
நெடிய தொலைவு இருக்குமென அஞ்சியோ;

தலைவியுடன் சந்திப்பைத் தலைவனவன்
தவிர்த்திடுதல் ஒருநாளுமில்லை எனினும்;



களவொழுக்க முறையை ஒட்டி
காதலர்கள் கூடிப் பேச வாய்ப்பு வந்த வேளை

ஓரையும் நாளும் உத்தம மாயில்லை யென்று
ஒத்திப் போடும் வழக்கமட்டும் உண்டாம் என்று;
நச்சினார்க்கினியர் எனும் உரையாளர் நவிலுகின்றார்
நாளும் ஓரையும் பார்த்தல் நலமே என்று.

இன்னொரு உரையாளர் இளம்பூரணர் என்பார்
இதற்கு அதே உரை கூறியுள்ளார் ஏறத்தாழ!

ஆய்வுரை எழுதியுள்ள அறிஞர் வெள்ளைவாரணர்
ஓரை எனில் விழாவும் விளையாட்டும் என்கின்றார்.

உற்ற நண்பர்களுடன் ஊர் விழாவில் கலந்து
கொண்டான்
காதல் தலைவன் எனச் செய்தி ஒன்றும்
சொல்கின்றார்

இல்லையேல் இவன் எங்கே போனானென்று
காதல் தலைவனின் களவொழுக்கத்தை

கண்டுகொள்வார் ஊராரென்றும்
கழறுகின்றார் இப்புலவர்.

ஒன்றல்ல; இரண்டல்ல; ஓரை யெனில் விழா
தானென்று
எடுத்துக்காட்டுப் பலவற்றை அடுக்கிக்
காட்டுகின்றார்.

காப்பியர் நூற்பாவில் ஓரை யென்ற சொல்லுக்கு
காலம் நேரமெனும் பொருள் தவிர்த்து

விழாவெனவும் ஒரு பொருள் கொள்வதானால்
அக்கால வழக்கத்தில் நாள்கோள் பார்ப்பதில்லை

எனும் செய்தி நிலைநாட்டப்படும்!
இல்லை இல்லை பார்ப்பதுண்டு என்று
சொன்னால்;

இடையில் புகுந்த கொள்கையினால்
நாளும் கோளும் நம்மினத்தில் தேளும்
பாம்புமாய் வந்து சேர்ந்தது என்போம்!

★

“மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்
துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை”
(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா:– 44)

“ஆற்றினது அருமையும், அழிவும்,
அச்சமும்,
ஊறும் உளப்பட அதனோரன்ன”
(பொருளதிகாரம் – களவியல்
– நூற்பா : 45)

ஒழுக்கம் = நெறி, நல்வழி
ஓரை = முகூர்த்த நேரம்
கிழவோன் = தலைவன்
ஆற்றினது அருமை = கடிய வழி

கற்பியல்

கரணம் என்பதைக் கற்பியல்;
திருமண மென்றே தெளிவாக்கும்!

இளம்பூரணர் எழுதிய உரையில்,
அந்தணர் அரசர் வணிகர் என

அம்மூவர்க்கே உரியது 'கரணம்' என்றார்.
காரணம்; அவர்கள் மேல் வருணமென்றார்.

'கரணம்' கீழோராகிய வேளாளருக்கும்
ஆகிய காலமும் உண்டென்றார்.

அவ்வாறே நச்சினார்க்கினியரும்
ஆமோதித்தார் வருண பேதத்தை!

மேலோர் மூவர் என்பது
ஆண்டிருந்த மூவேந்தர் மரபே என்றும்

அவர் ஆளுகையின் கீழிருந்த குடிமக்களையே
கீழோர் என்று குறித்தனர் என்றும்



ஆன்றோர் பலர் இன்று
ஆதாரம் தருகின்றார்

“வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்
நாற்போர் எல்லை அகத்தவர் வழங்கும்” என்பதை

சான்றுகளில் ஒன்றாகச்
சாற்றும் தொல்காப்பியம்

கொளற்குரிய மரபின் கிழவன் கிழத்தியை
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வது

‘கரணம்’ எனக் கற்பியல் ஒப்பியதே போல்
களவொழுக்கம் காண்போரிடமும்

கொடுப்போரின்றியும் ‘கரணம்’ உண்டாம்
என்பதை

ஒப்பியதாம்; இணைந்து உடன் போகிய
காரணத்தால்!

★

“கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக்
கொள்வதுவே”

“கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன்போகிய காலையான”

"மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே"

(பொருளதிகாரம் – கற்பியல் –
நூற்பா : 1, 2, 3)

கரணம் = மணம்
கொளற்குரி = கொள்ளுவதற்குரிய

குறிப்பு :– "மேலோர் மூவர்" என்றது,
அந்தணர், அரசர், வணிகர் என்னும்
மேற்குலத்தார் மூவரையும் குறித்தது எனவும்,
"கீழோர்" என்றது நாலாம் வருணத்தவராகிய
வேளாண் மாந்தரைக் குறித்ததெனவும்
கொண்டு உரைவரைந்த இளம்பூரண அடிகள்,
"இதனாற் சொல்லியது, முற்காலத்துக் கரணம்
பொதுப்பட நிகழ்தலின் எல்லார்க்கும் ஆம்
என்பதும், பிற்காலத்து வேளாண் மாந்தர்க்குத்
தவிர்ந்தது எனவும் கூறியவாறு போலும்" என
விளக்கந்தருவர். இவ்விளக்கத்தினைக் கூர்ந்து
நோக்குங்கால் "எல்லார்க்குங் கரணம்
பொதுப்பட நிகழ்ந்த முற்காலம்" என்றது,
தமிழகத்தில் நால்வகை வருணப்பாகுபாடு
இடம் பெறாத தொன்மைக் காலத்தினையும்
அக்காலத்தில் எல்லா மாந்தர்க்கும் வதுவைச்
சடங்காகிய கரணம் பொதுவாக அமைந்த
திறத்தினையும் 'பிற்காலத்து வேளாண்
மாந்தர்க்குத் தவிர்ந்தது' என்றது,
பிற்காலத்தில் ஒரு குலத்துக்கு ஒரு நீதியாக
வருண வேறுபாட்டினை அடிப்படையாகக்

கொண்டு தரும சாத்திரத்தில் வகுக்கப்பட்ட வதுவைச் சடங்கினை வேளாண் மாந்தர் ஏற்றுக் கொள்ளாமையால் அவர்க்கு அது தவிர்ந்தது என்னும் உண்மையினையும் உய்த்துணரவைத்தல் அறியத்தகுவதாகும்.

ஆசிரியர் தொல்காப்பியனார் தமிழ் மக்களை நிலவகையாற் பகுத்துரைத்ததல்லது குலவகையாற் பகுத்துரையாமையாலும், இந்நூற்பாவில் 'மேலோர் மூவர்' என இன்றிவர் என்னும் எண்ணியற் பெயராற் குறிக்கப் பெற்றோர் தமிழகத்தை ஆட்சி புரியும் முடியுடை வேந்தர் மூவருமே என்பதனை 'வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பு' (தொல்–செய்யுளியல் 75) எனவரும் நூற்பாவில் ஆசிரியர் தெளிவாகக் குறித்துள்ளமையாலும் நன்குணரலாம். இனி ஈண்டுக் 'கீழோர்'
என்றது அம்மூவேந்தரது ஆட்சியின் கீழ் வாழும் குடிமக்கள் எல்லோரையும் குறிப்பதாகும்.

நச்சினார்க்கினியரின் உரையும் விளக்கமும் இளம்பூரணர் உரையினை அடியொற்றி அமைந்தன.

– வெள்ளைவாரணனார் –

(தொல்காப்பியம் – கற்பியல்)



சென்னை-18
அண்ணா அறிவாலயம்

மலர் (48)

அயர்
யாத்தனர்
கரணம்

குளக்கரையில் நதிக்கரையில்
குதிரைகள் புரளும் மணல்வெளியில் – அந்தக்
குமரனை நான் அடிக்கடி காணுகின்றேன்
குளத்தில் கெண்டை மீன் துள்ள மறந்தாலும்;

நதியில் வாளை மீன் வர மறந்தாலும்;
குதிரைகள் ஒருநாள் வராத குறை இருந்தாலும்;
இந்தக்

குமரி மட்டும் காத்திருப்பாள் குமரனுக்காக!
குன்றின் மறைவில் குடிலின் அருகில்,
மாமரத் தோப்பில் மல்லிகைப் பொழிலில்
தென்னஞ் சோலையில் தேக்கு மரக்காட்டில்

நிழலுருவம் இரு உருவம் நித்த நித்தம்
நிமிர்ந்து நோக்காமல் கை கோத்துக்கொண்டு

ஒலி எழாமல் பேசுவதும் உருவிரண்டில்
ஒளி விழாமல் உலவுவதும் ஊரார் அறியா

ஒளிமறைவு என்றெண்ணி ஏமாறுகின்றார்
உளிபடாச் சிலை அவளையும் –

உருமறைத்து வருகின்ற அவனையும்
கையும் களவுமாகப் பிடித்து
களவொழுக்கக் காட்சிக்கு நாம்
கட்டாயம் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

கரணம் எனும் திருமணத்தை நடத்தவேண்டும்
– அல்லால்
மரணம் தன்னைத் தழுவிடினும் மறக்கமாட்டேன்
என்று கூறி;

இந்தக் குமரியை அந்தக் குமரன் கைவிடவும்
கூடும் – எனவே
பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்,


பூங்கொடியை நாம் பறி கொடுத்துவிட்டு
புலம்பித் திரிந்து பயனேதுமில்லை

இன்றைக்கே இருவரிடம் பேசிப் பார்ப்போம்
இவர்களின் பெற்றோர் பார்வைக்கும் வழக்கை
வைப்போம்

இப்படி பொது மண்டபத்தில் நல்லோர் கூடி
எப்படி இதனைத் தீர்த்து வைப்பதென்று

ஆளுக்கொரு யோசனை சொல்லி
அவரவர் முடியை அவரவர் பிய்த்துக் கொண்டபோது

அவ்வளவு தொல்லையேன் உங்களுக்கென்று
அவனும் அவளும் அவையில் புகுந்தனர்!



ஊர்த் தலைவர் ஓடிநின்ற தேர் போல வடிவுடையார்
“பார்த்தீரோ பதைக்கின்றார் தெருவோர் எல்லாம்

பகல் குறி யென்றும் இரவுக் குறி யென்றும் –
பதுங்கி மனைஅருகே; ஒதுங்கி மதிலருகே;

கண்ட கண்ட இடமெல்லாம் சந்திக்கின்றீர்
களவொழுக்கம் கடைப்பிடிக்கின்றீர்;

இறுதியில் இவளை ஏமாற்றமாட்டாய் என்பதற்கு
உறுதியாக எங்களுக்கு நீ அறிவிக்கப்
போவதென்ன ?”

என்று கேட்டார் விழியிரண்டும் கனல் உமிழ!
“நன்று கேட்டீர் பெரியவரே – நான்
சொல்லுகின்றேன்

இறப்புலகிலும் யாம் ஒன்றாக இருப்போம்” என்றான்.
ஏய்ப்புலகமாக மாறிவரும் காலமப்பா

எதற்கும் நம் அய்யரை அழைப்போம் என்றார்
ஏனழைத்தீர் எனக் கேட்டவாறு அவரும்
வந்துவிட்டார்

அய்யர் எதற்காக என்று கேட்டொருவர்
அவர் வேறு குலம், நம்மிடையே ஏன் வரவேண்டும்
என்றார்.

அன்பரே அந்த அய்யரல்ல இவர்; அறிக!
அறநெறி வகுத்து தீநெறி விலக்கும்

தக்கவர் இவர் – தலைமைச் சிறப்புடையார் இவர்
களவு ஒழுக்கம் தவறி

பொய்யும் வழுவும் தோன்றியபோது
காரணம் யாத்த அய்யர் இவர்!

ஊர்த் தலைவர் அளித்த விளக்கத்தைத் தொடர்ந்து
உத்தமராம் அய்யர் எழுந்து;

உற்றார் உறவினர் காதலர்க்கு இருந்தால்
பெற்றோர் உட்பட அழைத்து வருக என்றார்

உடன் வந்தனர் அவர்கள்
ஒப்புதல் உண்டா என்றார். . . .

'ஆம்' என்று அசைந்தன தலைகள்
அது நன்று என்றார் அய்யர்....

கவலையில்லை இனிமேலே
களவு ஒழுக்கம் தீர்ந்தது

காரணம் எனும் மணவிழா – அதுவே
காதலர் வாழ்வில் திருவிழா!

★

"அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்
அங்கு அதன் முதல்வன் கிழவனாகும்"
(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா : 48)

"வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று
ஆயிரண்டென்ப வரைதல் ஆறே"
(பொருளதிகாரம் – களவியல் – நூற்பா : 49)

"பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்
அய்யர் யாத்தனர் கரணம் என்ப"

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 4)

அம்பல் = பழிமொழி, புறங்கூறுதல்

அலர் = பழிதூற்றுதல்

கிழவன் = உரியோன்

வரைதல் = மணந்து கொள்ளுதல்

வழு = பிழைபட நடத்தல்

அய்யர் = பெரியோர்

குறிப்பு :– அய்யர் என்னுஞ் சொல் தலைமைச் சிறப்புடைய பெரியோரைக் குறித்து வழங்குந் தனித்தமிழ்ச் சொல்லாகும். அச் சொல் ஈண்டு தமிழ்க்குல முதல்வராகிய முன்னோரைக் குறித்து நின்றது. இதனை 'ஆர்ய' என்னும் வட சொல்லின் திரிபாகப் பிறழ வுணர்ந்து இத்தொல்காப்பியச் சூத்திரத்திற்கு மாறுபடப் பொருள் கூறினாருமுளர். பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர் அய்யர் கரணம் யாத்தனரெனவே, அவை தோன்றாத காலம் மிக முந்தியதென்பதும், அக்காலத்தில் இத்தகைய வதுவைச் சடங்குக்கு இன்றியமையாமை நேர்ந்ததில்லையென்பதும், 'அய்யர் யாத்தனர்

கரணம் என்ப’ எனத் தொல்காப்பியனார்
தமக்கு முன்னோர் கூற்றாக வைத்துரைத்தலால்
இக்கரண வரையறை அவர் காலத்துக்கு
முன்னரே தமிழ் முன்னோர்களால் விதிக்கப்
பட்டதென்பதும் நன்கு துணியப்படும். முன்
பொய்யும் வழுவுந் தோன்றாத களவு மணத்தில்
பின் அவை தோன்றியதற்குத் தமிழொடு
தொடர்பில்லாத வேற்றினத்தாரது வருகையே
காரணமாதல் வேண்டும்.

– வெள்ளைவாரணனார் –
(தொல்காப்பிய வரலாறு)

மலர் (49)

களவும் கற்பும்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் தொலைநிலைக் கல்வி மையம்

காப்பிய நூலில் குறித்துக் காட்டியவாறு
கரணம் என்பது கொடுப்பதற்குரியோர்
கொடுத்திடக் கொள்வது!

களவொழுக்க காலத்தில் உடன் போகியபோது
கரணம் என்பது கொடுப்போறின்றியும் உண்டாம்

என்பதற்கேற்ப இல்வாழ்வேற்றனர் குமரன், குமரி!
மன்பதை போற்ற வாழ்ந்திடத் தொடங்கினர்.

குமரருக்கே முதலிடம் காப்பியர் காலத்திலே
குடும்ப வாழ்விலும் பிறவற்றிலுமிருந்த
காரணத்தால்

காப்பியப் பூங்கா இயற்றிடுங்காலை – தமிழ்க்
காசினி அந்நாள் கண்டிருந்த நிலை மாற்றி

புதுக் கதை புனைந்திட விரும்பினேனில்லை
புலவர் பெருமான் தொல்காப்பியர் போற்றியதாகப்



புகலும் சமயமெது, கடவுள் எது என்பதிலே
பூசல் ஏதும் தோன்றாவண்ணம் இரண்டையும்
பொதுவில் வைத்தார்.

அவர் வழியில்தானே அய்யன் வள்ளுவரும்
அனைவர்க்கும் பொதுவாய்க் குறளில் வாழ்கிறார்!

அவர்களின் நெறியே அகவாழ்வு நெறியாய்க்
கொண்டு
அன்பால் இணைந்து குமரன் குமரி இல்லறம்
நடாத்தினர்.

களவொழுக்கமெனும் கட்டவிழ்ந்த காரணத்தால்
கணவன் மனைவி கூட்டம், மொட்டவிழ்ந்த
மலராயிற்று!

புணர்ச்சி போன்றவையால் ஏற்படும் 'மலிவு'
எனும் மகிழ்ச்சியும்;
புணர்ந்த நினைவு தேயாமல் நிலைக்கும் 'புலவி'
எனும் நிகழ்ச்சியும்;

வாய்த்த காமத்துக்கின்பம் தரும் 'ஊடலும்';
வாயிலோர் தூதுவர் உதவியாலே ஊடல் தீர்த்தல்
எனும் 'உணர்வும்'

பொருளீட்டவும், போர்க்களம் செல்லவும்
புதிய கலை பயிலவுமான

கடமை கருதி; தலைவன் தலைவியிடம் ஏற்படும்
பிரிவும்
காரணத்துக்குப் பின்னர்; காதலர்க்கிடையே
தோன்றுவதே!

தெள்ளமுதே! தெவிட்டாத தேனே!
உள்ளதொன்றும் ஒளிக்காமல் சொல்லிவிடு!

கள்ளவொழுக்க மெனும் களவியல் நாம் கற்றபோது
அள்ளக் குறையா அன்பை நாமிருவர்
பொழிந்தபோது

மெள்ள நீ என் மனம் வருடி – பக்தி
வெள்ளத்தில் எனை ஆழ்த்த முனைந்தது ஏன்?

தலைவன் கேட்டான் தலைவியிடம்!
தலைவி சொன்னாள் "நம்முடைய காதல்,

பழுதேதுமில்லாமல் வெற்றி பெற வேண்டுமானால்
தொழுதேத்த வேண்டும் கடவுளையென்று
தோழி சொன்னாள்;

அதற்கு இப்போதென்ன கோபமா?" என்றவாறு
அன்னத்தை இலையிலிட்டு அருகில் அமர்ந்தாள்
இணைந்து உணவருந்த!

"அஃதென்ன உன் கை பட்டால் அடிசிலும்
அமுதமாகிறது?
அதுமட்டுமா? பூவின் மணம் கூட புதுமணம்
பெறுகிறதே;

இதற்கென்ன காரணம்? இவையும் இறை
அருள்தானோ?" என்றான்.
" என் இறைவன் இங்கென் இதயத்தில்
இருப்பதால்தான்" என்றவுடன்

உலையிலிட்டு, இலையிலிட்ட அன்னத்தை
உண்பதற்கு இருவருமே மறந்துவிட்டு

ஒருவரை யொருவர் முந்திக் கொண்டு
ஒருவர் இதழை ஒருவர் உண்ணலானார்.

உணவருந்தி முடிந்த பின்னர்
ஒரு சுவையே இனிது, அது அமிழ்தமல்ல, இதழே!
என்றார்.

மணமான புதிது என்பதாலே
மதியம், காலை, மாலை, பகல் இரவெனப் பாராது

களவொழுக்கக் காலத்தில் காம தாகத்தில்
கண்ட கனவெல்லாம் செயற்படுத்திக்
களிப்புற்றார்.

அந்தணர் என்போர் அறவோர் எனத் தெளிந்து
அறிவார்ந்த முறை பின்பற்றி நடப்போமென்று

அவர் இருவருமே முடிவெடுத்து நடக்கலானார்;
ஆனாலும் களவு கால நினைவுகளை முற்றாக
மறக்கவில்லை.

அப்போது சந்தித்த தடைகளையும்
அவற்றை தகர்த்தெறிந்த முறைகளையும்

தோழியும் தோழனும் துணை நின்று
தோல்வி காணாது தொண்டாற்றிய
வகையினையும்

பேசிப் பேசி மகிழ்ந்தனர் இருவரும்;
நடந்தவற்றைப்
பூசிப் பூசி மெழுகினர்! 'பொட்'டென ஒலித்தது
ஊடல் முரசம்!

“காலொடியும் மட்டும் காத்திருந்தேன் ஒருநாள்;
காதல் தலைவன் நீ வரவில்லை” என்று
துணைவியும்

“நீ என்ன ஒழுங்காம்? ஒருநாள் இரவு முழுதும்
நித்திரை கொள்ளாமல் நின்றிருந்தபோது

நீயும்தான்வரவில்லை” என்று துணைவனும்
நீட்டி முழக்கினர் என்றாலும்

அந்தக் குற்றச்சாட்டு அனைத்துமே
அந்தரத்தில் எழுதிய எழுத்தாகிப் போனதாம்!

உருவான ஊடல் போரினையே
உடன் வாயிலோர் எனும் தூதுவர்
உணர்த்தி மாற்றிய உணர்வினால்
உவகை பூத்ததாம் மீண்டும்!

ஊடுதல் காமத்திற் கின்பம் எனப் பழகி
உணர்ந்தோர்க்கு உணர்த்தவும் வேண்டுமோ?

★

“காரணத்தின் அமைந்து முடிந்தகாலை
நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்
எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்
அஞ்சவந்த உரிமைக் கண்ணும்
நன்னெறிப் படரும் தொன்னலப் பொருளினும்
பெற்ற தேளத்துப் பெருமையின் நினைஇக்
குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்
நாமக் காலத்து உண்டு எனத் தோழி
ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்

அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும், சொல்லென
ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு என
அடிசிலும் பூவும் தொடுத்தற் கண்ணும்,
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும், ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்
அந்தரத்து எழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்,
அழியல் அஞ்சல் என்று ஆயிரு பொருளினும்
தான் அவள் விழைத்த பருவத்தானும்,
நோன்மையும் பெருமையும் மெய் கொள
அருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தி.....”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 5)

எஞ்சா = நீங்காத
இறந்துவரும் = மிகுந்து தோன்றும்
நாமக்காலத்து = பயந்த காலத்து
ஏமுறு = பெருமைக்குரிய
அடிசில் = உணவு
அழியல் = மனக்கலக்கம்
நோன்மை = பொறுமை
வாயில் = வாயிலோர், தூதுவர்

மலர் (50)

குடும்ப விளக்கு

“**வீ**டெல்லாம் இசையே; வீட்டில்
நெஞ்செலாம் மெருகே; நெஞ்ச
ஏடெலாம் அறிவே; ஏட்டின்
எழுத்தெலாம் களிப்பே; அந்தக்
காடெலாம் ஆடும் கூத்தே;
காகங்கள் குருவி எல்லாம்
மாடெல்லாம் இவ்வா றானால்
மனிதர்க்கா கேட்க வேண்டும்?”

மூத்த தமிழ் ஆசான் முதுபெரும்புலவர்
தொல்காப்பியர்
யாத்த பெருநூலில் யாவரும் போற்றிடும் வண்ணம்

கோத்த மணியாரமாய்க் குடும்ப விளக்கிரண்டைக்
காட்டிவிட்டு
பூத்த மலர்க் கொடி போல் புதுமணம் பரப்புகின்ற
இல்வாழ்வை

பொருளதிகாரக் கற்பியலில் சித்தரிக்கும் சிறப்பு
கண்டால்
புரட்சிக் கவிஞர் பாவேந்தர்; ‘வீடெல்லாம் இசையே’
என்று

ஈராயிரம் ஆண்டுக்குப் பின்னர் எழுதியுள்ள
கவிதை போல
சீராக இருவர் உள்ளம் அமைந்த இல்லம் அன்றே
காண்போம்!

இல்லை குறையேதுமென இனிய வாழ்க்கை
இருந்தாலும்
பிள்ளை ஒன்றில்லை எனக் குறை
உனக்குண்டேயென்று

கிள்ளை மொழிப் பாவையிடம் கேட்டுவைத்தான்
– அவன்
கேள்விக்குப் பதில் சொன்னாள் அவள் ஒரு
விரலைக் காட்டி!

“நில் அங்கே! எனை மிரட்டுகிறாயா?”என்றான்;
கேலியாக!
நின்று ஒரு மாதம் ஆகின்ற தென்றாள்.

நிறுத்தாமல் நகை முழக்கம் செய்தான் – அவள்
தடுத்தாலும் கேட்காமல் தழுவிக் கொண்டாடினான்

கருத்தாக உடல் நலம் காக்க வேண்டும் கண்ணே;
கருத்தரித்தால் கவனம் மிகத் தேவையடி
பெண்ணே – என

ஓரா மாதம் முதல் ஒன்பதாம் மாதம் முடியத்
தீராக் கவலையுடன் அவள் பின்னே
திரிந்துகொண்டு



பேறு பார்க்க மருத்துவச்சி வந்த பிறகே
பிரிந்து வந்தான் பெருமூச்சு விட்டவாறு!

‘ஆண் குழந்தை’ என்ற ஒலி அறைக்குள்ளே
கேட்டவுடன்
ஆனந்தக் கூத்தாடிக் கொண்டு

அனுமதி கிடைத்தவுடன் அங்கே நுழைந்தான்
அவள் வலியெல்லாம் போன இடம் தெரியவில்லை

அரும்பை அணைத்தவாறு புன்னகை புரிந்தது
அந்தப் பூ
துரும்பாய் இளைத்துவிட்டாய் என்று
துடைத்துவிட்டான் நெற்றி வியர்வை

‘ஒருநாள் வலியிலா?’ என்று நாணம் காட்டி
ஓரக் கண்ணால் கேலி செய்தாள்.

பெற்றோர் உற்றார் குறிப்பாக அவள் தாய் தந்தை
நற்றாய் அவளை வாழ்த்திடவே நல்லோர் எல்லாம்
வந்திருந்து

எண்ணெய் தேய்த்து நீராட்டிக் குழந்தைக்கும்
விழா நடத்தி – அந்த
மண்ணை மீட்கும் போரில் அமரரான முன்னோர்
நினைவுபோற்றி

மகிழ்ச்சிக் கடலில் தலைவி மிதந்தபோது
மற்றொருத்தி மீது தலைவன் மையல்கொண்ட
செய்தி

மழுவெனத் தாக்கியது – அவளோ தீயில்
புழுவெனத் துடித்தாள்! அவள்

புலியென மாறிடவும்; இல்லில்
புயல் ஒன்று புகுந்திடவும்

கூடாதென்று குமுறினான்
குன்றாக நின்றவன் குறுகினான்.

தலைவியின் தோழிகளை அணுகி – அவள்
தணல் நெஞ்சம் தணிக்கச் சொன்னான்

ஊடல் நீக்கும் வாயிலோரும்
ஒவ்வொருவராய் முயன்று பார்த்தார்

எதிலும் பயனில்லை என்றவுடன்
இரவு நேரம் கட்டிலறையில்

பாவையின் பாதமிரண்டையும் பற்றிக் கொண்டு
மன்னிப்புக் கேட்டான்; மறுக்க முடியுமா
அவளால்? அல்லால்

மறக்கத்தான் முடியுமா? எனவே
மன்னித்துவிட்டாள்;
‘மன்னிப்பு எனும் சொல்லை இயற்றியவன் வாழ்க’
என நினைத்தவாறு

கோதையிடம் நெருங்கலானான்
‘குழந்தை’ என்றாள், விலகிக் கொண்டான்.

★

".....தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்,
புதல்வன் பயந்த புனிறு தீர்பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
அய்யர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணை புல்லிய புல்லாது
உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப்
புல்கென முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடல் மிகுத்தோளைப்
பிற பிற பெண்டிரின் பெயர்த்தற் கண்ணும் ....."

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 5)

பயந்த = பெற்ற

புனிறு = ஈன்றணிமை, தீட்டு

நெய்யணி = பிள்ளைப்பேற்றின் பின்
முதல் முழுக்கு

உயங்குதல் = வருந்துதல், வாடுதல்

குரைமை = பெருமை

உறல் = உறவு

மலர் (51)

குமரன் கூகை

குமரன் குமரி வீட்டில் குழந்தை பிறந்த
விழாவுக்கு,
கோட்டைத் தெரு வேலனும் வந்திருந்தான் –
மாட்டுக்

கொம்பொன்றில் செய்த சிற்பம்
குழந்தைக் கழுத்திலணிந்து மகிழ்ந்தான்

என்ன வேலா என்றுமில்லாமல் இன்று
தன்னந்தனியாக வந்துள்ளாய்

ஏனழைத்து வரவில்லை வஞ்சியினை, என
வாஞ்சையுடன் இருவருமே அவனைக் கேட்டார்!

பேச்சில்லை சில நாளாய்; பிள்ளையில்லாக்
குறையை
மூச்சுக்கு முப்பது தடவை நான் முணுமுணுத்தேன்
என்று

ஆச்சியின் வீட்டுக்குப் போய் விட்டாள்
ஆயிற்று ஆறு கிழமை என்றான்.

அவன் முகத்தில் படிந்த சோகம் அகற்றுதல்
வேண்டுமென
அடுத்த நாளே குமரன் வேலனுடன் ஆச்சி வீடு
சென்றடைந்தான்.

ஊடலா உறுமலா பெண்ணே
உமக்கோர் குழந்தை இல்லையெனில்

பிரிந்திருந்தால் நீங்கள் இருவரும்;
பிறந்திடுமோ குழந்தைச் செல்வம்? என்

பெற்றோர்கள் சொல்வார்கள்; அவர்கள்
வதுவை முடிந்து வருடம் பத்தான பிறகே

வயிற்றில் உதித்தேனாம் நான்! இன்னும்
வாய்க்கவில்லை பிள்ளையென்று வம்பு செய்து


உம்மைப்போல் என் தாய் தந்தை பிரிந்திருந்தால்
– அவர்கள்
உலகுக்குப் பயந்து நான் பிறந்திருப்பேனா என்ன?

இப்போதும் எங்களுக்கிடையிலேயும்
எத்தனையோ வம்பு தும்பும் வாட்டுகின்ற ஊடலும்!

பொருள் தேட வேண்டுமென்று புறப்பட்டேன்
வெளிநாடு
இருளாகும் தன் வாழ்வு; தானும் வருகின்றேன்
என்றாள்

மகளிர், கடல் பயணம் கூடாதென்கிற
மரபினை நாம் மாற்றலாகா தென்றேன் – நீரின்
ஊற்றாகப் பெருக்கெடுக்கும் நீள் விழி காட்டி
உடல் கொண்டு ஊமையாகச் சில நாள் இருந்தாள்.

முன்னோர் வழக்கம் என்னால் மாற்றுதற்கு
முடியவில்லை
என்னையே நான் மாற்றிக் கொண்டேன் கடல்
பயணம் இல்லையென்று!



பக்கத்துத் தலைநகர் பயணம் போனேன்
பத்து நாட்கள் பாசறைப் பயிற்சிக்காக!

பிரியமாட்டேன் எப்போதும் என்றீரே;
புரியவில்லை அப்போது பொய் சொன்னீர் என்று!

அய்ந்தாம் நாளே எழுதி அனுப்பினாள் ஓலை;
அதன்பிறகு எனக்கு அங்கென்ன வேலை?

பாதியிலே திரும்பி விட்டேன்
பாவை அவள் பிரிவுத்துயர் துடைப்பதற்கு!

விட்டுக் கொடுத்தல் ஒரு வழிப்பாதையாக எம்
வீட்டில் என்றுமே இருந்ததில்லை

மனைவிக்கு செய்யக் கூடாத மாபெரும்
பிழையொன்றை
மகன் பிறந்த நேரத்தில் செய்து விட்டேன் – அவளோ

மலையேற மாட்டேன் என்று சாமியாடத்
தொடங்கிவிட்டாள்
மன்னிப்பு நான் கேட்டவுடன் மறந்துவிட்டாள்
நடந்த கதை!

அப்படி என்னைப் போல் இங்கே யொன்றும்
ஆணாதிக்கப் பிழை நடந்து விடவில்லை

அதனாலே உன் ஆளனுடன் ஊடல் விடுத்து
ஆக்க பூர்வ ஒத்துழைப்பு தருவாயானால்

ஆயிரங் காலத்துப் பயிராம் இல்வாழ்வின்
அரிய பயனை அறுவடையாய்ப் பெறுவாய் என்றும்

இன்னும் எத்தனையோ வாதம் புகன்றும்
இல்லறமல்லது நல்லறமன்று என்றும்

அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன் பழிப்பதில்லாயின் நன்று என்றும் கூறி;

“வேலன்! உனக்கும்தான் சொல்லுகிறேன்;
வீட்டுக்கென்று ஒரு பிள்ளை இல்லையெனில் என்ன
நாட்டுக்கே பிள்ளையாக நாம் உழைப்போம் என்று
சூளுரைத்துச் சுடர்முகம் தூக்கி
வாளும் உறையுமாக வாழ்ந்திடுவீர் என்று
நாளும் நான் வாழ்த்துகிறேன்” என்றான்.

வணக்கமும் நன்றியும் கூறி வாழ்வோம்
சேர்ந்தென்று
இணக்கம் தெரிவித்தனர் வஞ்சியும் வேலனும்!

★

“.....பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பிரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்,
சென்று கையிகந்து பெயர்த்து உள்ளிய வழியும்
காமத்தின் வலியும், கைவிடின் அச்சமும்,
தான் அவள் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறல் செய்கையோடு அன்னவை பிறவும்
மடம்படவந்த தோழிக் கண்ணும்,
வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்தானும்
மீட்டுவர ஆய்ந்த வகையின் கண்ணும்,
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்.....”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 5)

பையுள் = மயக்கம், சிறுமை
அகல்வு = பிரிவு

ஒரு பெண்ணின் வெற்றி!

தாய்மையின் தொல்கதை
தாய்மையைப் போற்றுவோம்

தரையில் ஓடியாடி தண்ணீரில் விளையாடி
நுரையில் குமிழ் ஊதி

தண்டை சதங்கை குலுங்க நடந்து
தமிழ் மழலை இசைக்கும் தளிர் அவன்

தாயிருக்கும் திசை நோக்கிச் சென்ற போது
தடுத்திடையே நிறுத்தி,

தங்கமே எனத் தழுவிக் கொண்டு
தலைமுதல் பாதம் வரை முத்தமீந்தாள்,

உயிராக ஒருத்தி இருக்கும்போது
உபரியாக வந்த மற்றொருத்தி!

உதறி விட்டு அவள் பிடியை
ஓடிவருவான் பிள்ளை நொடியிலென்று

வீட்டோரப் பலகணி வழி
விழி நீட்டிக் காத்திருந்தாள் தாயார் –

வெகுநேரம் காத்திருந்தும் அவன்
வராமையால் வெகுண்டு சொன்னாள்;



விரையொன்று போட்டால்
சுரையொன்றா முளைக்கும்?

தகப்பனைப் போலத்தான் தனயனுமிருக்கின்றான்
தாய் எனக்குத்தான் பெற்ற மனம் பித்து
தமக்கையாம் நான்;
தங்கையர் கூட்டமாம் அவர்கள்!

பதக்கத்தின் மத்தியிலே வைரமுத்து நீ,
உன்னைச் சுற்றி எத்தனை
முத்துக்கள் இருந்தால்தான் என்ன;

அத்தனையும் போலி முத்து; நீ மட்டுமே புகழ்
முத்து என்று
அளவில்லாமல் வர்ணிக்கின்றார்;

அடுத்தடுத்து முத்துக் குளிக்கச் செல்கின்றார்
எதிர்த்தெதற்குப் பேச வேண்டுமென வாய்
மூடியிருந்தால்;

எனக்கென் பிள்ளை கூட உறவற்றுப் போகும்
என்று வாடினாள் வருந்தினாள் – அப்போது

வகைவகையாய் அணிமணி பூட்டப் பெற்று
வாய் நிறைய அம்மா என்றழைத்தவாறு வந்தான்
மகன்.

எரிமலையாய்க் கனன்ற உள்ளத்தில்
பனிமழையே பெய்தது போல்

எங்குதான் ஓடிற்றோ அந்த இதய வெப்பம்?
இங்குதான் இருக்கின்றீரா என்று

குடும்பத் தலைவனைக் கேட்ட குல விளக்கு;
இடும்பை கூர் என் வாழ்வுக்கு

இவன் ஒருவனே இருள் நீக்கும் கதிர் இனிமேல்
இன்றைக்கே கிளம்புகின்றேன் இவனோடு என்
தாய் வீடு!

சந்திரனில் களங்கம் போல் ஆடவர் சிலர்
இருப்பதுண்டு;
இங்குக் களங்கமே சந்திரனாய் நீர் ஆகிவிட்டீர் –

இந்திரனும் இவ்விஷயத்தில் உம்மிடம் பாடம்
கற்கவேண்டும்
அருந்திறன் பெற்றவர் நீர் அணங்குகளை அணி
சேர்க்கும் காரியத்தில்!

திருத்த முடியும் என இத்தனை நாள்
தீப்பாயாமல் இருந்தேன்,
நிறுத்த முடியாதும்மால் நித்திய கேளிக்கையை!

நிம்மதி எனக்கு வழங்குதற்கு இந்த
நிறைமதி ஒருவன் இருந்தால் போதும்!

குறைமதி கொண்டு குடும்பம் குலைத்தீர்
கறைபடு வாழ்வுமக்கு கற்றுத் தரும் விரைவில்
பாடம்!

பேசிக் கொண்டே அந்தப் பேசும் பொற்சித்திரம்;
அவள் மடியில்
வீசிக் கொண்டிருக்கும் தென்றலை
அணைத்தவாறு

வீட்டை விட்டுக் கிளம்பி
வெளியேற முற்பட்டாள்.

வேல்கள் ஆயிரம்; நெஞ்சில் பாய்ந்தது போல
வாள்கள் ஆயிரம்; இதயம் சிதைத்தது போல

கால்கள் நடுங்க நடந்து
கதறி அழுது புலம்பினான்!

“நடந்ததெல்லாம் மறந்து விடு; இனி
நடந்தால் எனைவிட்டு அக்கணமே பறந்து விடு!

வானம்பாடி நீயில்லா வாழ்வு எனக்கெதற்கு?
கானம்பாடி இனி கவலையற்றிருப்போம் வா!

பிறன் பழிப்பதில்லா நல்லறம் நடத்துவோம் வா!
நானும் கற்பு காக்கிறேன் வா!”

சுற்றி வந்து காலில் விழுந்து விழுந்து எழுந்தான்
“சுற்றத்தார் பார்த்தால் மட்டும் போதாது

உமது முன்னாள் சுந்தரிகளும் வந்து
உடனே காணட்டும் இக்காட்சியை” என்றாள்!

★

“காமக்கிழத்தி தன்மகத் தழீஇ
ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்,
சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி
அறம்புரி நெஞ்சமொடு தன்வரவு அறியாமைப்
புறம்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்,
தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்

அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்,
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்,
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்று என
மாதர் சான்ற வகையின் கண்ணும்.....”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 6)

ஒப்பர் = போன்றவர்

கோடல் = பொறுத்துக்கொள்ளல்

அடிமேல் வீழ்ந்த = காலில் விழுந்த

எங்கையர் = எம் தங்கையர்

சிறுவாலை

குட்டி போட்ட பூனை போலக்
குடும்ப வீட்டுக்குள் அலைந்திடாமல்

கூண்டுக்கிளி வாழ்வு நடாத்தி
நாடே இதுதான் என்றிருந்திடாமல்

ஆண்டுக்கு ஓரிரு முறையேனும்
அன்றைக்கே சுற்றுலா செல்லும் வழக்கம்

தலைவன் தலைவி கடைப்பிடித்தனர் என்றும்;
தலைநகர் கடந்து பிறநகர் சென்றார் என்றும்;

குழந்தைச் செல்வங்களையும் கூட அழைத்துக்
கொண்டு
குளிர் நீர்த் துறைகளிலும் கோலமிகு சோலைகளிலும்

இனிதாய் விளையாடிடுவர் இயற்கை
இன்பம் நுகர்ந்திடுவர் என்றும்;



காப்பியர் நூலில் கற்பியலில் காணும்போது
காலம் முளைக்கும்போதே தமிழர் வாழ்வு;

காய்த்துக் கனிந்திருந்ததென்ற
செய்தி நமக்குச் செங்கரும்பாயினிக்கிறது!

★

"யாறும் குளனும் காவும் ஆடிப்
பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப"

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 50)

பதியிகந்து = ஊரைவிட்டுச் சென்று

களத்தில் வீரன்!

மலை யுருண்டு வருவது போல் களத்தில்
யானைகள் வரும்போது
நிலை குலைந்து போகாமல் நேர் நின்று மோதும்
வீரன்,

தலை யிழந்து போனாலும் கவலையில்லை; தன்
நாட்டுக்
கொடி உயர்ந்து பறக்க வேண்டுமெனப் போர்
புரிவான்!

நெற்றியிலே குருதிப் பொட்டிட்டு விடை
கொடுத்தனுப்பிய தலைவி
வெற்றி நீ பெற்று வருக என வாழ்த்தினாளே;

அவளை மறந்தும் அவன் நினைப்பதில்லை
அமர்க்களத்தில்!
பகைவர் கோட்டை மீது அவன் நாட்டுக் கொடி –

ஏறிப் பறந்த பின்னர்தான் என்னருமைப் பாவாய்;
நமதே வெற்றியென்று செய்தி கூறி நாடு கடந்து
செல்கின்ற காற்றினைத்
தூதாக அனுப்புவான் அந்தத் தூய வீரன் என்று
தொல்காப்பியக் கற்பியல்; துந்துபி முழங்குகிறது!

★

"கிழவி நிலையே வினையிடத்து உரையார்;
வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும்"

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 45)

கிழவி = தலைவி

வென்றி = வெற்றி



பொறில் மகளிர்!

மெல்லியலார் என மதிப்பளித்துப் பரிவு காட்டி மகளிரைப் பாராட்டி வாழ்ந்த காலம் என்பதாலே; ஆபத்தான இடங்களிலே அவரை அணுகிடச் செய்யாது அமர்க்களத்துக்கான வெளிப்புறப் பணிகளில் மட்டும் அன்று,

பாசறைகளில் பாவையர் தொண்டு தொடர்ந்ததாம்! இப்போது பண்பாடு மாற்றமில்லை; பழைய கால ஏற்பாடு மட்டுமே மாற்றம்!

★

“எண்ணரும் பாசறைப் பெண்ணொடு புணரார்”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 34)

“புறத்தோர் ஆங்கண் புரைவதென்ப”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 35)



புரவியும் பறவையும் தோற்கும்

கவிஞர் காப்பியப் பூங்கா
கலைஞரின் தொல்கா

வினையொன்றை முடிப்பதற்கு வேற்றூர்
சென்ற வேலன்
விரைவில் திரும்பி வஞ்சியைச் சந்திக்கப்
புரவியிலே புறப்பட்டான்
வான் சிந்தும் கண்ணீர் உழவனுக்கு உவகை
தரும்; மொழியில்
தேன் சிந்தும் வஞ்சிக்கு வேலன் வருகைதான்
உயிரே தரும்!

பூ மொண்டு தருகின்ற மது அருந்த
பொன்வண்டு வராவிடில் பூவொன்றும்
வாடுவதில்லை.

பூங்கொடியோ வேலனைச் சுமந்த அந்தப்
புரவியும் விரைவில் வராவிடில் பூகம்பமாகும்
உள்ளமென,
புயல்போலச் சுவாசித்துப் புழுப் போலத் துடித்திடுவாள்
புரவிக்கு அது புரிந்து ஓடவேண்டும் ஊர்நோக்கி;
வேகமாக!

இடைவழியில் எந்தவொரு இடத்திலும் தங்கித்
தாமதிக்காமல்
தடையேது மின்றித் தட்டிவிட்டான் புரவியை
தன்னூர்த் தடத்திலேயே!



புலவர் பெருமான் சொல்லுகிறார்;
புரவியின் வேகம்; ஒரு பறவையின் வேகமாம்!

அந்தப் பறவையோ அவனுக்கு அவன் உள்ளம் போல்
சொந்த ஊர் போகும் விரைவுக்கு உதவுவதாம்!

ஆனால் பறவை வேகத்தில் குதிரை சென்றதாக
அய்யன் காப்பியர் குறிப்பிடும்போது

அய்யமொன்று தோன்றுவதை அகற்றிட முடியாது!
ஆகாயப் பறவை வேகம் காட்டச் சிறகடித்துப்
பறக்கவேண்டும் – ஆனால்

பறவையானாலும் பறவையனையப் புரவியானாலும்
பறந்தோ அல்லது பாய்ந்தோடியோ ஊர்ப்
போய்ச் சேரக் குறைந்தது

பத்து நாழிகையாகிலும் தேவைப்படும் – ஆனால்
அவள் மீது காதல்
பித்துக் கொண்ட மனமோ; நினைத்தவுடன்
வஞ்சியிடம் போய்ச் சேரும்!

★

“வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை
இடைச் சுர மருங்கில் தவிர்தல் இல்லை;
உள்ளம் போல உற்றுழி உதவும்
புள்இயல் கலிமா உடைமை யான”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 53)

வினை = தொழில், போர்
தவிர்தல் = தங்குதல்
புள் = பறவை
கலிமா = குதிரை

மலர் (57)

வேறு எது?

வாழ்க்கையின் இறுதிக் காலம் பற்றிக் காப்பியர்
வரைவதை
வற்றாத நதியொன்று கடலில் கலப்பதோடு
ஒப்பிடலாம்!

மலைகளில் தோன்றிக் காடுகள் கழனிகள் தாண்டி;
ஆழியை அடையுமுன்னர் ஆயிரம் நன்மைகள்
புரியும்.

முடிவுரையை அலைகடலில் எழுதுவதால்; நதி
முழுதும் முற்றுப் பெற்றதாக நினைப்போரில்லை!

வாழ்ந்து முடித்தோரின் வரலாற்று ஏடுகளும் –
அவர்
வழித் தோன்றல்களால் தொடர்ந்து வாழ்வதுண்டு!

நதிக்கும் அந்த நிலைமைதான்;
நல்லோர்க்கும் அந்தப் பெருமைதான்!

உதயத்தில் 'சுள்' எனக் கதகதப்புடன் பிறந்து
உச்சியேறிக் கடும் வெப்பம் பொழிந்து – மேற்கில்

மறைவதற்கு முன்பு மந்தமாருதம் வீசி; இந்த
மன்பதைக்கே மகிழ்வு தரும் கதிரோன் போல

இல்லற வாழ்வில் பயன்எல்லாம் பெற்றும் தந்தும்
இறுதிக் கட்டத்தில் இருக்கும் முதியோர்,

இனிய மக்கள் தம்மைச் சூழ்ந்து இருக்கவும்,
இதம்தரும் உற்றார் இணைந்து இருக்கவும்;

அறவழியொன்றே இறைவழியென்று
அமைதியிற் கழிப்பதே அரும்பெரும் பேறாம்!


★

“காமம் சான்ற கடைக் கோட் காலை
ஏமம் சான்ற மக்களொடு துவன்றி
அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்
சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே”

(பொருளதிகாரம் – கற்பியல் – நூற்பா : 51)

காமம் சான்ற = விரும்பிய நுகர்ச்சி

கடைக்கோட் காலை = இறுதிக்காலம்



ஒருயாம் கூற்று!

காலையரும்பிப் பகலெல்லாம் போதாகி
மாலை மலர்ந்தது காம நோய் எனும் காதல் நோய்!

மலர்ந்த நோய் மங்கை யொருத்திக்கா அல்லது
அலைந்து மலர் தேடும் ஆண் எனும் வண்டுக்கா?

யாருக்கென்று பிரிவினைப் பேச்சு வேண்டாம்
யாரானாலும் அவர்தம் நெஞ்சொடு கிளத்தல்
கேட்போம்!

இன்பமும் துன்பமும் என இருவகை நிலையும்
அன்புடை நெஞ்சினை ஆட்டிப் படைத்திடும்போது;

இயல்பா யெழுந்திடும் எட்டுவகை மெய்ப்பாடு
எட்டு வகை உறுப்புடன் விளங்குதல் போலவும்
அவை

உயிருடன் உணர்வும் உடையது போலவும்
ஒரு மொழிக்கு உடனே மறுமொழி புகல்வது போலவும்

வாய் பேச இயலாத விலங்குகள் பறவைகள் தமக்காக
வாதாட வந்துற்றது போலவும்

தூது நீ சென்று வாராய் என்று
தூய வெள்ளை அன்னத்தை அனுப்புவது போலவும்

பஞ்ச வர்ணக் கிளி உருவில் பச்சைப் புறா
உருவில்; தன்
நெஞ்சத்துக்கோர் ஆறுதல் கூறுவது போலவும்,

பிறர் எவர்க்கோ பிணியெனில் – அது
பிறர்க்கல்ல; தனக்குற்ற காமப்பிணிதான் என்றும்;

அறிவையே கூட வேறுபடத் தனியே நிறுத்தி –
எதையும்
அறிவதற்கு வாயிலாக அரிதாய்க் கிடைத்த
பொறி புலன்களையும் போ என ஒதுக்கி
பூப்போல மனம் என்ற உவமைப் பெயரையும்

பூவும் மனமும் என்ற உவமிக்கும் பெயர்களையும்
பொருள் மூவகையாம் தொழிலுக்கும்,
பண்புக்கும், பயனுக்கும்

பொருந்துகின்ற உவமம் கூறுதலும்
பூவெனும் தலைவிக்கும் வண்டெனும் ஆணுக்கும்
உரிய கூற்றாம்

ஒருபாற் கூற்றாம்!

★

“நோயும் இன்பமும் இருவகை நிலையில்
காமங் கண்ணிய மரபிடை தெரிய,

எட்டன் பகுதியும் விளங்க, ஒட்டிய
உறுப்புடையது போல், உணர்வுடையது போல்,
மறுத்துரைப்பது போல், நெஞ்சொடு புணர்ந்தும்
சொல்லா மரபின் அவற்றொடு கெழீஇச்
செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்,
அவரவர் உறுபிணி தம்போற் சேர்த்தியும்,
அறிவும் புலனும் வேறுபட நிறீஇ
இருபெயர் மூன்றும் உரியவாக
உவம வாயிற் படுத்தலும் உவமம்
ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபால் கிளவி”

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 2)

உள்ளம் என்ன உரைத்தது?

காப்பியப் பூங்கா
கலைஞரின் தொல்

கொஞ்சம் கொஞ்சமாக உடம்பும் இளைத்து
உயிரும் களைத்து வருவதை
நெஞ்சம் உணர்கிறது –

மஞ்சம் கண்டு மணவாளனைப் பல நாளாயிற்று;
அதனால்
எஞ்சிய உயிர் இருப்பதை மட்டும் உணர்கிறாள்.

நெஞ்சம் அறியாவண்ணம் தனக்குள்ளே
கேட்கிறாள், தவித்து! என்
உடலுக்கு என்ன ஆயிற்று?
உயிருக்குத்தான் என்ன ஆபத்து?
கேள்வியுடன் நிறுத்திவிட்டு உறுதியை ஒரு

வேள்வியாக நடத்துகிறாள் –
காண்பதில்லை அவனை என்பதே அந்த வேள்வி!

★



“உடம்பும் உயிரும் வாடியக் காலும்
என் உற்றன கொல் இவை எனின் அல்லது
கிழவோன் சேர்தல் கிழத்திக்கு இல்லை”

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 9)

அவனைப் போய்க் காண்பதில்லை என்று
அறுதியிட்டுக் கூறி வேள்வி நடத்தும்
வேல்விழியாள்

அவள் நெஞ்சத்தைக் கேட்கிறாள்;
தனது முடிவும் உறுதியும் சரிதானே என்று!

இல்லையடி பெண்ணே; ஊருக்காக நீ
உடலைப் பற்றியும் உயிரைப் பற்றியும்

கவலைப்படாதது போலக் காட்டிக் கொண்டாலும்
கணத்தில் போய் அவனைக் காண
வேண்டுமென்றே

துடிக்கிறேன் என்று அவள்
நெஞ்சு புலம்பியது!

★

“ஒரு சிறை நெஞ்சோடு உசாவுங்காலை
உரியதாகலும் உண்டென மொழிப”

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 10)

மகளிர் மாண்பு!

பழம் பெரும் தமிழ் இலக்கியங்களாயினும், இலக்கணக் கருவூலமாம் தொல்காப்பியமாயினும்; பெண்களை ஊமைகளாகவும், அடிமைகளாகவும் சித்தரிக்கின்றன எனக் குறை கூறுவோர் உண்டு.

எழுச்சியுற்ற பெண்கள் என்றும், பெண்ணுரிமைப் போர் என்றும் முழக்கங்கள், மூலை முடுக்குகளில் எல்லாம் எழுந்துள்ள இந்தக் காலத்திலேயே; இன்னமும் பெண்களின் சுதந்திரம் பல இடங்களில் கேள்விக் குறி யாகவே இருப்பதை அன்றாடம் அறிய முடிகிறது!

அறிவுடையவர்கள் பட்டியலில் ஆடவர் இடம் பெற்றிருப்பது போலவே பெண்டிரும் இடம் பெற்றுள்ளனர்.

இன்னும் சொல்லப் போனால் பள்ளி, கல்லூரிகளில் நடைபெறும் தேர்வுகளில் ஆண் மாணவர்களைக் காட்டிலும், பெண் மாணவர்களே எண்ணிக்கை அடிப்படையில் அதிக விழுக்காடு இருக்கிறார்கள் என்பது அதிகார பூர்வமான ஆதாரமாகவும் அமைந்து வருகிறது; ஆண்டுதோறும்!

ஆட்சி நிர்வாகப் பொறுப்புகளிலும், அலுவல் பொறுப்புகளிலும் கூட அவர்கள் ஆடவர்களுடன் போட்டியிடுகிற அளவுக்குப் புகழ் பெற்று விளங்குவதையும் இக்காலத்தில் காண முடிகிறது.

இந்த அளவு முன்னேற்றத்துக்கிடையிலேயும் அங்கொன்றும் இங்கொன்றுமாகவும் சில பகுதிகளில் பரவலாகவும் ஆணாதிக்கத்தின்பிடியிலே பெண்கள் சிக்கிச் சீரழிவதும்; குருட்டு நம்பிக்கைகளுக்கு ஆட்பட்டு வைதீகப் படுகுழிகளில் வீழ்வதும், மாயம் மந்திரமென்ற அறியாமைக்கு அடிமையாகிப் பகுத்தறிவை இழப்பதுமான செயல்களில் ஆடவர் எண்ணிக்கையைப் பெண்டிர் எண்ணிக்கை மிஞ்சக் கூடியதாகவே இருக்கிறது.

இந்தச் சூழலிலும் பெண்களின் முன்னேற்றம்; விஞ்ஞானம், கல்வி; ஏன் – பாதுகாப்பு போன்ற துறைகளில் கூட கணிசமான அளவுக்கு வளர்ந்து கொண்டே தானிருக்கிறது.

இந்தக் கால கட்டத்துப் பெண்களின் நிலையோடும், அவர்கள் அனுபவிக்கும் உரிமைகளோடும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட கால கட்டத்துப் பெண்களின் நிலை – ஆண்களின் நிலை ஆகியவற்றை பழம் பெரு வரலாறுகளிலோ, இலக்கியங்களிலோ படித்துப் பார்த்து விட்டு அவற்றைத் தவறாகவும், தரக் குறைவாகவும் விமர்சித்துக் கொண்டிருப்பதைவிட; அக்கால நிலையை அறிந்து கொள்ளத் துணை புரியும் சாதனங்களாக மட்டுமே அவற்றைப் பார்க்கவேண்டும் – பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்பதைப் புரிந்து கொள்வதே அறிவுடையோர் செயலாகும்.



அக்கால நிலையைச் சுட்டிக் காட்டும் இலக்கியங்களை, நாம் வழி காட்டிகளாகக் கொள்ள வேண்டும் என்பதில்லை.

அவை நமக்கு நல்லதாகவோ அல்லதாகவோ ஊட்டும் அடிப்படைக் கருத்து என்ன? முழுமையாகவோ, பாதி அளவோ, கால் பகுதியோ அவற்றில் நாம் எடுத்துக் கொண்டு அந்த அடிப்படையில்; எந்தத் துறை யானாலும் அந்தத் துறையில் முற்போக்கு வழியில் நடை பயில நினைக்கக் கூடாதா? அதுவே அடிப்படைத் தவறா?

அடிப்படையையே தகர்த்து விட்டு முற்றிலும் புதுமை காண வேண்டுமென்று வாதிட்டால்; நம் இல்லத்தில் பாட்டன் பாட்டிகள் – தாய் தந்தையர் படங்களோ, பயன்படுத்திய பொருள்களோ கூடப் பழமையின் சின்னங்கள், பயன்பட முடியாதவை அல்லது கூடாதவை என்று ஒதுக்கப்பட வேண்டியவைகள்தான்.

பழமை இலக்கியங்கள்; நடக்க முடியாதவை நடந்ததாகக் கூறுபவைகளை நம்பாமல் விட்டு விடலாம். ஆனால் இன்று மின் சக்தியால் ஓடும் புகை வண்டிகளுக்கும் – அது போல இயந்திர உதவியுடன் பறக்கும் விமானங்களுக்கும் இயக்கும் சக்கரங்கள் இருப்பது போல; அமைப்பில் வடிவில் மாற்றமிருந்தாலும் அவற்றைப் போலத்தான் பழங்கால மன்னர்களின் தேர்களும் இருந்தன; இன்றைக்கும் சிற்றூர்களில் மாட்டு வண்டி சக்கரங்கள் இருக்கின்றன; சீருந்து பேருந்துகளுக்கும்கூட அப்படித்தான்!

அது போலத்தான் பண்பாட்டிலும், பழக்க வழக்கங்களிலும், வாழ்க்கை முறையிலும் மலைக்கத் தக்க மகத்தான மாற்றங்கள் ஏற்படினும் அனைத்துக்குமே அசைக்க முடியாத அளவுக்கு அடிப்படைகள் மாறாமல் இருக்கின்றன.

தொல்காப்பியத்தில் அறுபது தொகுதிகள் எழுதிவிட்ட நிலையில் சற்று நின்று இளைப்பாறுமிடத்தில் "திரும்பிப் பார்த்து முன்னேறுதல்" எனும் அச்சுறுத்தல் உணர்வு தேவை என்பதற்காக இதனைக் குறிப்பிட வேண்டியதாகிறது.

பொருளியலில் இடம் பெற்றுள்ள நூற்பா; அடக்கம், அமைதி, நேர்மை, உண்மையை வற்புறுத்தும் சொல்வன்மை, நல்லறிவு, பிறரிடம் காண இயலாத அருமை – இவை பெண்ணின் பண்புகள் என அறிவிக்கின்றதேயல்லாமல்; பெண்ணுக்கிடப்படும் அறிவுரை ஆணைகள் எனக் குறிப்பிட்டுக் கூறவில்லை.

இவ்வாறு பெண்களுக்கு சொல்லப்பட்டுள்ள இயல்புகள் போற்றத் தக்கவையே தவிர, தூற்றத்தக்கவையல்ல என்பதை நடுநிலையோடு சிந்தித்தால் உணரலாம்.

★

"செறிவும் நிறைவும் செம்மையும் செப்பும்
அறிவும் அருமையும் பெண்பாலான"

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 15)

நரியை நனையாமல்...!

படைக்கலன்கள் உருவாக்கும் உலைக்களம்
பாசறை வீரர் சிலர் பணியாற்றும் நிலைக்களம்

பனையோலை கொண்டொரு இளம்பாவை
ஓடோடிவந்தாள்
வினைமேற் கொண்டிருந்த 'வீரன்' என்பான்;

"நனையாமல் நரியைக் குளிப்பாட்டும் மங்கை நீ;
நாளை வருவாய் என்றிருந்தேன்; இன்று

வாளைச் சீராக்கும் வேளையிலே – இந்தக்
காளை மகிழ வந்து விட்டாய்!

மலர்விழியாள் என்ன மடல் கொடுத்தாள்?
கொடு!" என்று
அலர் தூற்றலுக்கு அஞ்சாமல் பலர் அறிய
வாங்கிக் கொண்டான்.

"நேற்று பகல் முழுதும் வருவீர் என்று
பசியோடிருந்தேன்
காற்றில் எழுதிய எழுத்துத்தான் போலுமெனக்
கண்டுகொண்டேன்.

தோற்றுத் தான் போகுமடி உம்காதல் என்று
தோழியொருத்தி சொன்னது பலித்து விடுமா?



பகலில் வருவது உமக்குப் பயமாக இருப்பின்
பதுங்கிப் பதுங்கி இரவில் வரலாமே கண்ணா!

பாழும் நிலாவொளிக்காக அஞ்சுகின்றீரா?
மாலையில்
வீழும் கதிரவன் மறைந்த பின்னர் வந்திடலாமே!

வழியில் இடையூறு பலவுண்டு, வருவதற்குத்
தடையாக!
வாழ்க்கையெனில் இன்ப துன்பம் இரண்டுந்தான்
உண்டு!

வாடுகின்ற என் நெஞ்சுக்கு மருந்து நீர்தானே
வைத்துள்ளீர்? நான்
சூடுகின்ற மலர் கூட மணப்பதில்லை நீவிர்
வராத நேரங்களில்!

அல்லும் பகலும் ஊர்க்காவல் மிரட்டல் – அதை
வெல்லும் திறனை வீரன் நீரேன் கற்றிடவில்லை?

கல்லும் முள்ளும் நிறைந்த காட்டு வழிதான்
வரவேண்டும்
கடினமான வழிதான்; நானறிவேன் நன்றாக! வரும்

வழியின் நிலையறிந்து வராமலிருப்பதும்
ஒருவகையில் நலம்தான்; என்
விழியின் நீர் துடைப்பதற்கு வந்து போவதே
எனக்கொரு சுகம்தான்!

சந்திப்பதற்கு நாம் பல முறை திட்டம் தீட்டி – பின்னர்
சிந்திக்கும்போது நமக்கே அது குத்தீட்டி!

குழப்பமே மிஞ்சுகிறது; நம்
குடும்பமோ மிக அஞ்சுகிறது!

முந்திக் கொண்டு திருமணத்தை முடித்துக்
கொள்வதொன்றே
பந்திக்குக் காத்திராமல் பசியடக்கிக் கொள்ளும்
வழியாகும்''

காதலியின் பனைஓலை மடல்படித்த வீரன்; தூது
வந்தவளின்
காதை மென்மையாகத் திருகியவாறு;

''அப்போதே சொன்னேன் நரியை நனையாமல்
குளிப்பாட்டுவாயென்று,
தப்பாது என் வார்த்தை இதை உன் தலைவியிடம்
சொல்லிவிடு!

தை பிறந்தால் வழி பிறக்கு'' மென்றான்;
வந்தவளோ, ''பத்தா மாதம்
தவறாமல் குழந்தையும் பிறக்கு'' மென்று
வாழ்த்திவிட்டு;

''நரியை நனையாமல் குளிப்பாட்டுவதென்றால்
என்ன?
தெரியாமல் கேட்கின்றேன்; தெளிவிப்பீர்'' என்றாள்!

''நரி நானே தான்; எனை நனையாமல்
குளிப்பாட்டத் தானே
நங்கை நீ என் காதல் தலைவியிடம்

நறுக்கோலை எழுதி வாங்கி வந்து
நனையாமல் எனைக் குளிப்பாட்டி விட்டாய்''
என்றான்.

★

“பொழுதும் ஆறும் காப்பும் என்று இவற்றின்
வழுவினாகிய குற்றங் காட்டலும்,
தன்னை அழிதலும், அவன் ஊறு அஞ்சலும்,
இரவினும் பகலினும் நீவா என்றலும்
கிழவோன் தன்னை வாரல் என்றலும்
நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்
புரைபட வந்த அன்னவை பிறவும்
வரைதல் வேட்கைப் பொருள என்ப”

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 16)

ஆறும் = வழியும்

ஊறு = துன்பம்

கழிதல் = கலங்குதல்

புரை = பழுது



மலர் (62)

சொல்வோம் கேட்கிறோம்...

"இலக்கியம்" என்பது தமிழா? வட சொல்லா? என்று ஒரு பெரும் விவாதம்! ஏறத்தாழ ஒரு பட்டி மன்றமே நடந்து விட்டது. 1949 ஆம் ஆண்டு மே திங்களில் கோவை மாநகரில் நடைபெற்ற இரண்டு நாள் முத்தமிழ் மாநாடுதான் அப்படியொரு பட்டி மன்றமாக வடிவெடுத்தது. பாவேந்தர் பாரதிதாசன் தலைமையில் மாநாடு. அறிஞர் அண்ணா, ஔவை துரைசாமிப் பிள்ளை, பன்மொழிப் புலவர் அப்பாதுரையார், பெரும்புலவர் வெள்ளைவாரணனார் இன்னும் பல புலவர்கள் கலந்து கொண்ட மாநாட்டில் நானும் மேடையில் இருந்தேன்.

இரண்டு நாட்கள் மாநாட்டிலும், தமிழின் வளர்ச்சி, தமிழரின் எழுச்சி குறித்து உரை நிகழ்த்தியது மிகக் குறைவு!

‘இலக்கியம்’ தமிழா அல்லவா என்பது பற்றியே பெரிய பட்டி மன்றம்; பத்தாயிரம் மக்கள் கூடியிருந்த மாநாட்டுப் பந்தலில்!

இரண்டாம் நாள் நான் பேசும்போது பின்வருமாறு குறிப்பிட்டேன்.

“பத்தாயிரம் மக்களைக் கூட்டி வைத்துப் பல ஆயிரம் ரூபாய்கள் செலவிட்டு மாநாடு நடத்திப் பெரும் புலவர்கள் பேரறிஞர்களையெல்லாம் அழைத்து ஒரே ஒரு பிரச்சினைக்காக; அதாவது ‘இலக்கியம்’ தமிழா அல்லவா என்று முடிவு செய்வதற்கு நேரத்தையும் நினைப்பையும் இருநாட்கள் வீணாக்கியிருக்கிறீர்கள். இதற்குப் பதிலாக இந்தப் புலவர்களெல்லாம் பத்துப் பேரோ எட்டுப்பேரோ ஒரு தனி இடத்தில் கூடி; இந்த ஆராய்ச்சியை நடத்தி முடித்து; இலக்கியம் தமிழா அல்லவா என்பதை உங்கள் சார்பில் ஒருவரே வந்து எங்களுக்குக் கூறியிருக்கலாம்”

இந்த என் கருத்து மாநாட்டில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இன்னமும் இலக்கியம் என்ற சொல் ‘இலட்சியம்’ என்ற சொல்லில் இருந்து தோன்றியதா; ‘இலங்குதல்’ எனும் சொல்லில் இருந்து தோன்றியதா என்ற விவாதம் தொடர்கிறது என்பதற்காகவே

அந்த "முத்தமிழ் மாநாடு" நிகழ்ச்சியைக் குறிப்பிட்டேன்.

அதே போல தொல்காப்பியத்திலும் ஒரு சொற்போர்!

"உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுதல் செய்யுட்குக் கடனே"

என்பது பொருளியலில் வரும் நூற்பா!

"உயர்ந்தோராக இருந்து அவர்தம் கூற்று
வழக்கு வழிப்படுதலின், அவ்வாறு
வழக்குப்படுதல் செய்யுட்குக் கடன்"

என்பது இளம்பூரணம்.

ஆனால் நச்சினார்க்கினியமோ;
"உயர்ந்தோர் கிளவி" என்பதை "உயர்ந்தோர் கிளவியும்" என்று வசதியாக "உம்"ஐயும் சேர்த்துக் கொண்டு; அந்த உயர்ந்தோர் கூற்றும் "வேத நெறி"யோடு கூடுவதால், வழக்கின் நெறியிலே நடத்தல் செய்யுளுக்கு முறைமை என்று கூறுகிறது.

வழக்கு என்பதற்கு இங்கே பொருள்; நீதி மன்றங்களில் தொடரப்படும் வழக்கு என்பதல்ல!

நம் தாய்மொழி தமிழில் வழங்கப்படும் சொற்கள் மற்றும் சொற்றொடர்கள் வழக்கெனக் கூறப்படுகின்றன!

'உயர்ந்தோர் கிளவி' மட்டுமே அச்சிறப்பைப் பெற முடியும் என்கிறது இளம்பூரணம்!

“உயர்ந்தோர் கிளவியும்” என்று குறித்ததின் வாயிலாக; “இழிந்தோர் கிளவி” மட்டுமின்றி “உயர்ந்தோர் கிளவியும்” எனக் கருத நேரிட்டு; இழிந்தோர் கிளவிக்கும் வழக்கில் இடம் கொடுத்ததாகி விடுகிறது.

தொல்காப்பியம் மரபியலில் வரும்;

“வழக்கெனப்படுவதுயர்ந்தோர் மேற்றே”

எனும் மரபியல் நூற்பாவை பெரும்புலவர் வெள்ளைவாரணனார்; தனது தொல்காப்பிய உரை நூலில் மேற்கோள் காட்டி;

“உயர்ந்தோர் கிளவியும்”

என்பது, உயர்ந்தோரல்லாத இழிந்தோர் கிளவியும் என உணர்த்துவதைச் சுட்டிக்காட்டி; மேலும் ‘வழக்கு’ என்பது மொழி வழக்கேயல்லாமல்; ‘வேத நெறி’ என நச்சினார்க்கினியம் கூறுவதும் பொருந்தாது என்கிறார்.

“வழக்கென்று சொல்லப்படுவது உயர்ந்தோர் வழங்கிய வழக்கே; என்னை? உலகத்து நிகழ்ச்சியெல்லாம் அவரையே நோக்கினமையின்”

என்று பேராசிரியம் தெளிவுபடுத்துகிறது.

“என்னடா டபாய்க்கிறே?”

“என்னம்மா மொறைக்கிறே?”

போன்ற இழிந்த சொற்கள் வழக்கு
எனும் இலக்கணத்தில் ஏறிட முடியுமா?
எக்காலத்திலும் முடியாது!

★

"உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்
வழக்கு வழிப்படுத்தல் செய்யுட்குக் கடனே"

(பொருளதிகாரம் – பொருளியல் –
நூற்பா : 23)

நாணம் எனும் உயிர்ப் பண்பு!


கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா

அஞ்சுவது அஞ்சல் அறிவார் தொழில்
என்கிறது குறள். அச்சம் என்பதற்கு அடக்கமென்றும், நாணம் என்றும் பொருட்கள் உண்டு. நாணம் என்பது அச்சம், அடக்கம், மதிப்பு, வெட்கம் என்றெல்லாம் பொருள் படுமென்று புலவர் குழு தயாரித்த அகராதி கூறுகிறது.

நமது செயலால் நமக்குத் தலைக்குனிவு ஏற்படுமெனில் அப்போது அச்சத்தைத் துச்சமாய்த் தூக்கி எறிந்து விடுவேன் எனக் கூறுவது எக்காலத்துக்கும் ஏற்புடையதல்ல. அந்தத் தாழ்நிலை வராமலிருக்க வேண்டுமேயென்று அஞ்சித்தான் தீரவேண்டும்.

நாணம் என்பது; ஆடவரைக் கண்டதும் தலைகுனிவது என்பதல்ல!

அந்த நாணத்தையும்; அறம், பொருள், இன்பம் ஆகிய பொருள்களை எடுத்துரைத்து



விரித்துரைக்கும்போது இணைத்துக் கொள்ள வேண்டுமென்கிறது தொல்காப்பியம்! மக்களின் உயிர்ப் பண்பு நாணம் என்பதால் அதை நீங்காமல் பார்த்துக் கொண்டு, அகமும் புறமுமாகிய பொருள்களையும் சேர்த்துக் கொண்டு 'உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டு'என்பதால்; அந்த உயர்ந்தோர் அறம், பொருள், இன்பத்தை மட்டும் போதிப்பவரில்லை; அவற்றுக்கெல்லாம் உயிர்ப் பண்பாகத் திகழும் நாணத்தையும் போற்றுபவர் என்பதை உணர்ந்திடல் வேண்டும்.

உயர்ந்தோர் எனப் படுவோர், அறம், பொருள், இன்பம் குறித்த அறிவுரையாளர்களாக மட்டுமல்லாமல், அச்சமுற வேண்டியது எதற்கு; அடக்கம் காட்ட வேண்டியது எப்போது என்பதறிந்து, நாணத்தை, அது நீங்காமைக்குரிய நல்வழிக்கண் அமைத்திடுவர் என்பதில் அய்யமில்லை!

இந்த நூற்பா, தலைவன் தலைவிக்கிடையே நிகழும் நாணம் குறித்து சொல்லப்படுவதாகக் கருதாமல்; எந்த நிலையில் நாணுறும்போது அந்த நாணத்திற்கு உயர்வு ஏற்படுகிறது எனக் கணிப்போருக்காகச் சொல்லப்படுகிறது என அறிந்து அதற்கேற்ப வாழ்க்கை முறையை அமைத்துக் கொள்வதே நன்றாகும்!

★

"மிக்க பொருளினுட் பொருள்வகை புணர்க்க
நாணுத்தலைப் பிரியா நல்வழிப் படுத்தே"

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 25)

மிக்க பொருள் = அறம் முதலாகிய பொருள்கள்

பொருள்வகை = அகம் புறமெனும் கூறுபாடு


நாண் = நாணம்

இன்பம் எங்கே?

இன்ப உணர்வு எல்லா உயிர்களுக்கும் பொது இயல்பு எனப்பட்டாலும்; ஆணும் பெண்ணுமாக இணைந்து நுகரப்படுகிற சிறப்பான இயல்பை உடையதாகுமெனப் பொருளியல் நூற்பா குறிப்பிடுகிறது.

இதனை மேலும் விரிவாக விளக்கிடும் இளம்பூரணம்; அந்த இன்ப உணர்வு எனும் பொது இயல்பு கூட, மனம் பொருந்திய நிலை இருக்குமேயானால் பரத்தையரிடமும் சிறப்பாகக் காணக் கூடுமென்றும்; மனம் பொருந்தாத வழியெனிலோ, மனைவியிடம் கூட இன்பத்தைப் பெற முடியாதென்றும் சுட்டிக் காட்டுகிறது.

"எல்லா உயிர்க்கும்" என்பதை நச்சினார்க்கினியம் விளக்கும்போது, மக்களும், தேவரும், நரகரும், விலங்குகளும், பறவைகளும் முதலிய எல்லா உயிர்களுக்கும் – ஆணும் பெண்ணும் என நுகர்ச்சி நிகழும் எனத் "தெளிவு" படுத்துகிறது.



"எல்லா உயிர்கள்" என்பதில் மேல் உலகவாசிகளான தேவர்களையும், கீழ் உலகவாசிகளான நரகர்களையும் நச்சினார்க்கினியம் சேர்த்துக் கூறும்போது; தேவர்களைப் பொருத்தமட்டில் அவர்களுக்கென எழுதப்பட்டுள்ள புராணங்களில் ஆணும் பெண்ணும் என இருபாலாரும் இன்பம் நுகர்வது என்ற இயற்கைக்கு மாறாக – ஆண் தேவர்கள் பெண்ணுருக்கொண்டு இன்னொரு ஆணுடன் பொருந்திப் போகம் நுகர்ந்தமைக்கு எத்தனையோ கதைகள் உள்ளன.

எனவே பரத்தையர் இன்பம், பரலோக தேவர்கள் இன்பம் என்பனவற்றைத் தவிர்த்துவிட்டு; பண்பாட்டுக்கு ஊறு விளையாத அளவு இந்த நூற்பாவுக்குப் பொருள் காணவேண்டுமேயானால் பின்வரும் பொருளே பொருந்துகிறது எனலாம்.

"அறம் பொருள் இன்பம் என்பதில்; இன்பம் எனப்படும் உணர்வு, ஒருவரையொருவர் அன்பினாற் பொருந்தி, மனத்தினால் வெளிப்படத் தோன்றும் பொது இயல்பு உடையதாக இருப்பினும் ஆணும் பெண்ணுமாய் நுகரப்படும் சிறப்பியல்பை உடையதாகும்"

★

"எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது
தான் அமர்ந்து வரூஉம் மேவற்றாகும்"

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா: 29)

அமர்தல் = பொருந்துதல்; ஒன்றுதல்

மேவற்று = ஆணும் பெண்ணும் பொருந்தி நுகர்தல்.

விடை கிடைக்குமா?

நெருப்புக் கதிரவன் குளிரைப் பொழிந்தான்;
நீ என்னருகில் இருந்த போதென்றும்,

குளிர் நிலா வெப்பம் கொட்டியது;
நீ என்னைப் பிரிந்திருந்த போதென்றும்,

நீயும் நானும் நெஞ்சு திறந்து நிருபம் எழுதினோம்
பாயும் புலியெனச் சினந்து சீறாமல்


தாயும் தந்தையும் என் நிலைக் கிரங்கியதை
தயை கூர்ந்து எண்ணிப்பார் அன்ப!

நம் களவு ஒழுக்கம் நடப்பது அம்பலமானது,
நகர் முழுதும் அலர் தூற்றல் ஆரம்பமானது!

உடன்போக்கு உன்னுடன் என்பதற்கும் தயார்
என்றேன்.
ஊரறிய திருமணத்தை முடித்திடலாம் என்றாய்;
ஒப்புக் கொண்டேன்.

கன்னம் தடவி சின்னம் வரைவது பின்னர்
ஆகட்டும்;
என்ன பதில் எனக்கின்று தருகிறாய் சொல்!

உடன் போக்கா? உடனடி மணவிழாவா?
ஊமை நாடகம் எதற்காக நடத்துகிறாய்? உன்



உதடிரண்டும் ஒட்டித்தான் கிடக்குமா? என்
வினாவுக்கு விடையளிக்க ஒரு நொடி நேரம்

திறப்பதற்கும் மறுக்குமா? நான்
இறப்பதற்குள் சொல்லிவிடு என்றாள்!

"படிப்பதற்குத்தான் உனக்குத் தெரியுமே;
பார் இதோ; பனை ஓலையில் மண ஓலை"

என்றான்.

★

"ஒருதலை உரிமை வேண்டினும், மகடூஉப்
பிரிதல் அச்சம் உண்மையானும்,
அம்பலும் அலரும் களவு வெளிப்படுக்கும் என்று
அஞ்ச வந்த ஆங்கிரு வகையினும்
நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்
போக்கும் வரவும் மனைவிக்கண் தோன்றும்."

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 31)

அம்பல் = புறங்கூறுதல்

அலர் = செய்தி பரப்புதல்

உயர்வும், பணிவும்!

மண்ணெலாம் வீரம் துள்ளும் – மாதர்
கண்ணெலாம் கற்பு சொல்லும்;
விண்ணிலே ஏறுகின்ற
கொடிநிழல் பகையை வெல்லும்; நாட்டுப்

பண்ணெலாம் மானம் காட்டும்
எண்ணிலாத் திறம் முகிழ்க்கும் மறவர் கோட்டம்

வெண்முகில் குடை பிடிக்கும்
பொன் சுவர்க் கோட்டை மீது

தண்ணென முத்தமிட்டுத் தடங்கடல் தவமிருக்கும்
இன்னுயிர் பெரிதேயல்ல இங்குவாழ் மக்களுக்கு!

மன்னுயிர் காப்பதுவே மாத்தமிழர் இலக்கணம்
எனக் கூறும்
தென்னிலங்கைப் பெருங்குடியின் வழிகாட்டி;

தன்மானச் சுடர் விளக்கு – தமிழர் தலைவன்;
எந்நாளும் புகழேட்டில் வாழுகின்ற
இராவணன்காண்”

அந்த இராவணனின் மான உணர்வையும் வீரத்தையும் பெரிதும் வியந்து பாராட்டுகின்ற ஒரு கட்டம் கம்ப இராமாயணத்தில் குறிப்பிடப் படுகிறது. அதைச் சுட்டிக் காட்டுவதற்கு முன்பு தொல்காப்பியம் – பொருளியலில் ஊடலுக்கு வழங்கப்படும் பெருமையை அறிந்து கொள்ளலாம்.

என்னதான் பெருமிதமும் பேராண்மையும் கொண்ட ஆண்மகனாக இருந்தாலும்; கணவன் மனைவிக்கிடையே ஊடல் என்று ஏற்பட்டுவிட்டால் மனைவியின் ஊடலைத் தணிக்கக் கணவன்; மனைவியிடம் பணிந்து தான் ஆக வேண்டும் என்பதை

“மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியின் உரிய”

எனும் பொருளியல் நூற்பா சுட்டிக்காட்டுகிறது. இதை மனத்தில் பதிய வைத்துக் கொண்டு இப்போது இராவணனின் மானமிகு உரையொன்றைக் கேட்போம்.

அவன் அவைக்களத்தில் உள்ள ஆன்றோர், சான்றோர், அறிஞர்கள் ஆகியோர்; இராவணனிடம் சென்று அவன் இராமனுடன் நடத்தும் போர் குறித்து முறையிடுகின்றனர்.

“தோற்பது உறுதி! எனவே அழிவைத் தேடிக் கொள்ளாமல் பணிந்து போவதே மேல்” என அறிவுரை கூறுகின்றனர்.



அப்போது இராவணன் சொல்கிறானாம்;

பஞ்சணையில் ஊடல் வேளையிலும்,
பணிந்து போவது என்பது எனக்குக்
கிடையாது என்று!
"பணிதல், ஊடல் நாளினும் உளவோ?"

பணிந்து போவது என்ற நிலை இந்த இராவணனின் வாழ்க்கையில், ஊடல் நாளிலும் இருந்ததுண்டோ? இல்லை! கிடையாது! என்று பேசுகிறான்.

நான் பல ஆண்டுகளுக்கு முன்பு எழுதிய "தென்னவன் காதை"யில்;

"இராவணனின் யாழோசை தோற்பதெல்லாம்;
பத்தினியின் பள்ளியறைக் கனிமொழியின்
முன்னேதான்"

என்று எழுதியிருந்தேன்.

என் கருத்து; தொல்காப்பியப் பொருளியலைப் பின்பற்றியதாகும்!

★

"மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்
நினையுங் காலைப் புலவியுள் உரிய"

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 33)

புலவி = ஊடல்
கிழவோன் = கணவன்

மலர் (67)

மெய்யனைப் அறியாத மெய்!



எந்தவொரு சைவத் திருநாளாயினும்; அன்று எப்படியோ எவராவது ஓர் அதிதியை அழைத்து விருந்தோம்பல் நடத்துவது அந்த சைவ அன்பரின் வழக்கம்.

அன்று மகா சிவராத்திரியென்பதைப் பஞ்சாங்கம் பார்க்காமலே அந்தச் சைவ மெய்யன்பர் அறிந்திருந்தார்.

எனவே அன்றைய விருந்தோம்பலுக்கு அதிதி ஒருவரைத் தேடி அலைந்தார். யாரும் கிடைத்தபாடில்லை. இறுதியாக அவர் பெருமூச்சு விட்டு ஆறுதல் பெறும்

அளவுக்கு அந்த ஊர்ச்சாவடியில் ஒருவர் படுத்துறங்குவதைக் கண்டார்.

ஆனந்த மிகுதியால் அருகில் சென்று பார்த்தார். நெற்றியிலும் – நெஞ்சகத்திலும் – நீண்டு மடங்கியிருந்த கைகளிலும் முறையாக திருநீறு அணிந்தபடி கண்ணையர்ந்திருந்த சிவபக்தரை "அய்யா, பெரியவரே!" என்று சற்று ஒலியெழுப்பிக் கூப்பிட்டார்.

"யார் அது? பசியும் பட்டினியுமாகக் கண்ணையர்ந்து கிடக்கிறேன். என்னை ஏன் துன்புறுத்துகிறீர்?" என்று கேட்டவாறு அந்த மெய்யன்பர் எழுந்தார்.

"தங்கள் பசி போக்க அல்ல; என் பாபத்தைப் போக்கிக் கொள்ளத்தான் தங்களை அழைக்கிறேன்; என் இல்லத்தில் அமுதுண்பதற்காக!" என்றார் வீட்டுக்காரர்.

"அப்படியா? அன்னமிடுகிறீரா? அழைப்பு எதற்கு? அடியேன் ஓடோடி வருகிறேன்; நீர் இப்போது கூப்பிட்டதே போதும்!"

எனக் கூறி எழுந்தார். இருவரும் வீடு நோக்கி வீதியில் நடந்தனர்.

நடக்கும்போதே விருந்துக்கு வருபவர் கேட்டார்;

"சைவ உணவா?



அசைவமா ?''

''அம்மதென்ன அப்படிக் கேட்டு விட்டீர்;
சிவனுக்குரிய நாள் இன்று – சிவராத்திரி – அன்பே
சிவம் – இவை அனைத்தையும் மறந்துவிட்டு;

சைவமா ?

அசைவமா ?

என்று கேட்கலாமா ?''

''பரவாயில்லை! எதற்கும்
முன்கூட்டியே அய்யம் தெளிவித்துக்
கொள்வது நல்லது தானே!
அதற்காகத்தான் கேட்டேன்!''

''சரி; அய்யனே! தாங்கள்
சந்தேகப்படவே தேவையில்லை!
கத்தரி, முருங்கை, வாழைக்காய்
போன்ற காய்கறி! நல்ல கிச்சிலிச்
சம்பா அரிசி! அருந்தி விட்டுச்
சொல்லுங்கள்!''

''அப்படியே ஆகட்டும்!
அரகர சிவ சிவா!
சம்போ மகா தேவா!
அடியேன் திண்ணையிலேயே
அமருகிறேன்;
அழுது தயாரானதும் அழையுங்கள்''

விருந்தாளி, திண்ணையிலே "சிவ சிவா"
என்று முணுமுணுத்தவாறு அமர்ந்துவிட்டார்.

ஓரிரு நாழிகைகள் ஓடியிருக்கும்; ஓர் ஒலி
வந்து விருந்தாளியின் காதில் விழுந்தது.

"இறைச்சி! இறைச்சி!" என்று பலமுறை
கேட்டதே தவிர; அந்தச் சொல் இணைந்த
சொற்றொடர் எதுவும் திண்ணையிலிருக்கும்
அதிதிக்குத் தெளிவாகக் கேட்கவில்லை.

என்ன இது? ஒரு மாதிரியான பேச்சு
காதிலே விழுகிறது என ஐயுற்றார் விருந்தினர்.

மீண்டும் 'இறைச்சி' என்ற பேச்சொலி!
அதிதியாக அழைக்கப்பட்டு வந்த சிவபக்தர்
முகத்தில் வினாக்குறிகள் ருத்ர தாண்டவமாடின!

திண்ணையிலிருந்தவாறே உள்ளே எட்டிப்
பார்க்கிறார்; விருந்தினர்!

மீண்டும் இறைச்சிப் பேச்சு தொடர்ந்து
ஒலிக்கிறது – ஆனால் எதன் தொடர்பாக என்று
விளங்கவில்லை.

உணவருந்தும் வேளை – உள்ளே
கேட்பது இறைச்சி! இறைச்சி! இறைச்சி!

எழுந்தார் வேகமாக அதிதி!
சைவ உணவு என அழைத்து
ஏமாற்றி விட்டானே!

என ஆத்திரமுற்றார்!
அதே வேகத்தில் அங்கிருந்து
கிளம்பிவிட்டார் – ஓடியே விட்டார்!

ஆனால் உண்மையில் நடந்தது என்ன?

வீட்டுக்கார மெய்யன்பர், அதிதியாக ஒரு மெய்யன்பரை விருந்துக்காகத் தேடியலைந்த காரணத்தால்; அன்றைய தொல்காப்பியப் பாடத்தைத் தன் மகனுக்குப் போதித்ததை

அப்படியே அரைகுறையாக விட்டு விட்டு வந்துவிட்டார்.

அதிதியைத் திண்ணையில் அமர்த்தி விட்டு, உள்ளே நுழைந்ததும்; மகன் அய்யப்பாடுகளைக் கேட்கத் தொடங்கிவிட்டான்.

(1) இறைச்சி தானே பொருள் புறத்ததுவே

(2) இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார்
உளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே

(3) அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே.

என பொருளியலில் வரும் 35, 36, 37 ஆகிய நூற்பாக்களில் குறிப்பிடப்பட்டுள்ள 'இறைச்சி' பற்றித்தான், தந்தையும் மகனும் உள்ளே உரையாடினர்.

(1) இறைச்சி என்பது குறிப்புப் பொருளை உணர்த்தும். வெளிப்படக் கூறப்படும் கருப்பொருளின் புறத்தாகத் தோன்றும்.

(2) கருப்பொருளின் புறத்துப் பிறக்கும் இறைச்சியில் தனிப்பட்ட குறிப்புப் பொருள் தோன்றும். அது திறமை யுடையோருக்குப் புலனாகும்.

(3) சோக மேலிட்டு வருந்தும் காலத்தில் அன்பு மிகுதியாவதையும், பொறுமையை வற்புறுத்துவதையும் குறிப்பதே இறைச்சி எனப்படும்.

இப்படி இல்லத்திற்குள் தந்தை, தனயனுக்குத் தந்த 'இறைச்சி'க்கான இலக்கண விளக்கமே; ஒரு சைவ மெய்யன்பரை விரட்டி அடித்துவிட்டது; அவர் இலக்கிய இலக்கணமறியாத மெய்யன்பர் என்பதால்!

★

"இறைச்சி தானே பொருள் புறத்ததுவே"

"இறைச்சியிற் பிறக்கும் பொருளுமார் உளவே
திறத்தியல் மருங்கின் தெரியு மோர்க்கே"

"அன்புறு தகுந இறைச்சியுட் சுட்டலும்
வன்புறை யாகும் வருந்திய பொழுதே."

(பொருளதிகாரம் – பொருளியல் –
நூற்பா : 35, 36, 37)

இறைச்சிப் பொருள் = புறத்துச் சொல்லும் குறிப்புப் பொருள்.

(குறிப்பு :– நாடு, ஊர், நீர்த்துறை போன்றவற்றிற்கு அடைமொழிகளாக அமையும் கருப்பொருளே (காரணப்பொருள்) 'இறைச்சி' எனப்படும்)

மலர் (68)

மாறும் மதிப்பு!

ஆறுவது சினம் என்று ஆன்றோர் அறிவுரை கூறுவர். சினம், உறவைக் கெடுக்கும்; ஒற்றுமையை சிதைக்கும்; நட்பைக் குலைக்கும். எனவே சினம் கொடிது. அதைத் தவிர்த்திடல் வேண்டும். சினத்தை ஏற்க இயலாது. ஆனால் சினம் என்ற சொல்லைச் சிறப்பாகக் கருதியும் பயன்படுத்துவதுண்டு.

எடுத்துக்காட்டாக, எழுச்சிமிக்க இளைஞர்கள் பட்டாளமொன்று தமிழ் மொழி காத்திடத் தடந்தோள் தட்டிப் புறப்படும்போது;

“இனமான முரசு கொட்டி
சின வேங்கைக் கூட்டம் எழுந்தது பார்!”

என்று கவிதை முழக்கம் செய்கிறோம். சினம் எனும் பண்பு, ஏற்கக் கூடாதது எனினும் இப்போது அந்தச் சொல்; போய் ஏறிக் கொண்டிருக்கிற இடம் சிறப்பான இடம்! வேங்கைக் கூட்டமெனும் சொற்றொடருடன் இணைந்து “சினம்” பெருமை பெறுகிறது.

‘பேதைமை’ என்பதற்கு அறியாமை என்று பொருள். ‘பேதை’ என்கிறபோது இளம்பெண் என்றும் அகராதி கூறுகிறது. பேய் பிடித்து விட்டது என்று பெண்களைப்

பூசாரிகளை விட்டு அடிக்கச் சொல்லி வேடிக்கை பார்க்கிறது பெண்கள் கூட்டம். அவர்களை அறிவற்றவர்கள், பேதைகள் என்று ஏசிடும்போது; பேதை என்ற சொல்லை நாம் பெருமைக்குரிய சொல்லாகக் கருதிப் பயன்படுத்துவதில்லை.

ஆனால் ஓர் இளம் பெண்ணை ஒரு முதியவருக்கு மனைவியாக்கி அவர் ஆறு மாதத்தில் இறந்து விடவே; விதவையாகிவிட்ட அந்த யுவதியின் பரிதாப நிலையைப் பார்த்து "பாவம்; உலகமறியாத பேதை" என்கிறபோது, அந்தப் பெண்ணை 'அறியாத பெண்' என்ற பொருளில்தான் குறிப்பிடுகிறோமே தவிர, 'அறிவற்ற முட்டாள்' என்ற பொருளில் பேதை என்ற சொல்லைப் பயன்படுத்துவதில்லை. எனவே பேதை என்ற சொல் இரக்கப்படுவதற்குரிய சிறப்புச் சொல்லாகிறது.

பொறாமை கொண்டவன் என்றோ; பொறாமையால் காந்தாரி ஆகிவிட்டாள் என்றோ குறிப்பிடும்போது; பொறாமை என்ற சொல் வெறுக்கத்தக்க இடத்திலே அமைகிறது.

ஆனால் நான் உரையாடல் தீட்டிய "பராசக்தி" என்ற திரைப்படம் மகத்தான வெற்றி பெற்றுப் புகழ்க்கொடி நாட்டிய போது என் நண்பர் கவிஞர் கண்ணதாசன் என் இல்லம் வந்து என்னைக் கட்டித் தழுவிக் கொண்டு "உம்மைப் பார்த்தால் எனக்குப் பொறாமையாக இருக்கிறதய்யா!" என்று உச்சியில் முத்தம் கொடுத்தார்.

'பொறாமை' எனும் வெறுப்புக்குரிய பண்பை உணர்த்தும் சொல் 'பாராட்டுதல்'



எனும் இடத்தைப் பற்றிக் கொண்டு சிறப்புப் பெற்று விட்டது அல்லவா?

'வறுமை' எனும் நிலைமையும், ஏற்கத் தக்கதல்ல! வறுமையை ஒழிப்போம்! வறுமையே வெளியேறு! இது முற்போக்கு வாதிகளின் முழக்கம்! ஆட்சியாளர்களின் சூளுரைகூட!

"வாடிய பயிரைக் கண்ட போதெல்லாம் வாடினேன்" இது வடலூர் வள்ளலார் இராமலிங்க அடிகளார்; வறுமையில் உழல்வோரைக் கண்டு கண்கலங்கிய நிலையில் கூறிய அருட்பா!

அதாவது 'வறுமை' என்ற சொல் "வாடிய பயிர்" என்று வள்ளலாரின் வாய்மொழியில் மாற்றம் பெற்றுச் சிறப்பு பெறுகிறது.

சினம், பேதைமை, பொறாமை, வறுமை நான்கும் வேண்டத் தகாதவைகள் ஆனாலும்; அவை சிறப்பான சொல்லாகவும் இடத்துக்கேற்ப அமையப் பெறும்.

★

"சினனே, பேதைமை, நிம்பிரி, நல்குரவு
அனைநால் வகையும் சிறப்பொடு வருமே"

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 51)

சினனே = சினம்
நிம்பிரி = பொறாமை
நல்குரவு = வறுமை

மன உணர்வினால் மட்டுமே!

ஒத்த கருத்துடைய வாழ்க்கைத் துணைவர்கள் என்கிறோம். தந்தையைப் போல் அல்லது தாயைப் போல் பிள்ளையென்றோ பெண் என்றோ கூறுகிறோம். இது ஒப்பிட்டுச் சொல்லப்படுவதால் ‘‘ஒப்பு’’ எனப்படுகிறது. இந்த ஒப்புமை; மன உணர்வால் உணர்வதேயன்றி; பொருள் எனப் பாகுபடுத்திக் காட்டலாகாதவை எனும் தொகுப்பில் இடம் பெறுகின்றவற்றில் ஒன்றாகும்.

‘‘ஒப்பு’’ என்பதைப் போலவே ‘உரு’ என்பதும் காணாத ஒன்றைக் கண்டதும் ஏற்படுகிற மன நிகழ்ச்சியாகும். இதனை மனத்தினால் மட்டுமே உணரலாம்.

‘‘வெறுப்பு’’ என்பதற்கு ‘‘அருவருப்பு’’ என்ற பொருளேயன்னியில் ‘செறிவு’ என்றும் பொருள் கூறுகிறது அகராதி! செறிவு எனில் மிகுதி என்றும் அடக்கம் என்றும் பொருள் உண்டு. எப்பொருளில் வரினும் ‘வெறுப்பு’

என்பதும், மனத்தினால் மட்டுமே உணரக் கூடியதாகும்.

'கற்பு' – இதுவும் மன உணர்வின் பாற்பட்டதேயாகும். கற்பு என்பது இப்படித் தானிருக்கும் என்று காட்சிப் பொருளாக்கிக் காட்டக் கூடியதல்ல.

'ஏர்' எனப்படும் பொலிவு ஆனாலும், 'எழில்' எனப்படும் அழகு ஆனாலும்; தனித்துப் பிரித்துக் காட்டப்பட இயலாமைக்குட்பட்டவைகளேயாம்!

'நாண்' எனப்படும் உள்ளமொடுங்கும் உணர்வு; 'மடம்' எனப்படும் மகளிர் இயல்பு, 'நோய்' எனப்படும் நிலை, விரும்பியதைப் பெற்றே ஆக வேண்டுமென்ற 'வேட்கை', 'நுகர்வு' ஆகிய இவைகளும், இவை போன்றே அன்பு, அழுக்காறு, பொறை, அறிவு என்பவையும்; உணரக் கூடியவைகளே என்றும் காட்ட இயலா வரிசையில் இடம் பெற்றவை என்றும் பொருளியல் நூற்பா எடுத்துக்காட்டுகிறது.

★

"ஒப்பும், உருவும், வெறுப்பும் என்றா
கற்பும், ஏரும், எழிலும் என்றா,
சாயலும், நாணும், மடனும் என்றா,
நோயும், வேட்கையும், நுகர்வும் என்றாங்கு
ஆவயின் வரூஉங் கிளவி எல்லாம்



நாட்டியல் மரபின் நெஞ்சுகொளின் அல்லது
காட்டலாகாப் பொருள் என்ப”

(பொருளதிகாரம் – பொருளியல் – நூற்பா : 53)

ஏர் = பொலிவு

ஆவயின் = அவ்விடத்தில்

குறிப்பு :– உலக வழக்கில் மக்களால் மனத்திற்கொள்ளப்பட்டு நாட்டில் வழங்கப் பெற்று வருதலால் “நாட்டியல் மரபு” என்கிறது இளம்பூரணம்.

நிலைநாட்டப்பட்ட மரபு எனக் கொண்டு ‘நாட்டிய மரபு’ என்கிறது நச்சினார்க்கினியம்.

எடுச்சுவை கொட்டும் இயல்!

இருபத்தி ஐந்து ஆண்டுக்கு முன்பு
எழிலும் பொலிவும் இணைந்திட

கலையும் கரையுளோர் நிலையும் சிறந்திட
புதிய பூம்புகார் படைத்திட்ட போது

நனிமிகு சிறப்புடன் நடத்திய விழாவில்
கனிச்சுவைத் தமிழில் கவியரங்கொன்றில்

தலைமை வகித்து நான் படித்த கவிதையில்
தகுதியுள சில வரிகளைத்

தொல்காப்பியம் மெய்ப்பாட்டியலுக்கு
நல்லதோர் தோரண வாயிலாகத்

தழைக்கும் தமிழால்
அமைத்து வழங்குவேன்!

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகையென்று
அப்பால் எட்டே மெய்ப்பாடென்ப”

இலக்கணக் கிழவர் இயம்பிய வழியில்
எட்டுச்சுவையை இனிதே நுகர்வோம்

நகை, அழுகை, இழிவு, வியப்பு
அச்சம், வீரம், வெகுளி, உவகை என
மெய்ப்பாட்டியல் மெய்யாகவே நம்
மெய் சிலிர்க்க வைத்திடு மென்பேன்!

அடம் பிடித்திறுதியில் 'நகை' காட்டி அடையக் கூடும்
"அச்சத்"தால் அடங்குகின்ற ஆளன்
கிடைத்துவிட்டால்!

"இழிவு" வந்தும் "வெகுளா"தார் நிலை கண்டு
"வீரர்"க்கு நெஞ்சில் "வியப்பு"த் தோன்றும்!

"உவகை"யும் "அழுகை"யும் ஒரு தாய் மக்கள்
ஒருவரையொருவர் நிழல்போல் தொடர்வர்!

இந்த,

எட்டுச்சுவை
பிட்டுத் தமிழ்

கட்டித் தயிர்
வட்டில் நிறை

கொட்டித் தர
பட்டுக்கொடி

கொற்றக்குடை
மூவேந்தர் அவை

முத்தமிழ்ப் புலவர்
போற்றிய காப்பியர்

சென்னை-18
அறிவாலயம்

ஆற்றலைக் காண
அடுத்துத் தொடர்வோம்.

★

"நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று
அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 3)

மருட்கை = மருட்சி, வியப்பு

பெருமிதம் = வீரம்

குறிப்பு :– இளிவரல் முதல் உவகை ஈறாக உள்ள மெய்ப்பாடுகளும், அகத்தில் தோன்றும் சுவைப்பொருள்களுக்கேற்பப் புறத்தே நால்வகைப்பட நிகழ்வன என்கிற நுட்பத்தை, அவற்றின் இயல்புரைக்கும் நூற்பாக்கள் புலப்படுத்துகின்றன என்பதை அறியலாம்.


கலைஞரின் தொண்டர் காப்பியப் பூங்கா

மெய்ப்பாட்டுக்கு மேலும் விளக்கம்!

ஒருவரின் உள்ளுணர்வுகளுள்,
மற்றவர்கள் கண்டும் கேட்டும் அறிந்திட
வெளியிற் காணும் உடற் குறிகள் வாயிலாகப்
புலப்படுத்தப்படுபவையே மெய்ப்பாடு எனப்படும்.
மாந்தரின் நெஞ்சத்துத் தாக்கம் அல்லது பாதிப்பு
அவர்தம் விழிகளில் தோன்றும் கலக்கம்,
கண்ணீர் அரும்பல், உரோமம் சிலிர்த்தல்,
வியர்வை, நடுக்கம் போன்ற
காண்பவர்களுக்குப் புலனாகும் தன்மைதான்
மெய்ப்பாட்டிற்கு மேலும் விளக்கமாகும்.

ஒரு மனிதனை மலைப்பாம்பு ஒன்று
விழுங்கிட வாய் பிளந்து விரைந்திடும்போது,
அவன் உள்ளம் நடுங்குவதும், எப்படித் தப்புவது
என்று கலங்குவதும், அதனால் அவன் மேனியில்
தோன்றும் வியர்வையும், இயல்பானவைகளாகும்.

அந்த நிலைக்கு அவனை உள்ளாக்கிய
மலைப்பாம்பு அப்போது இலக்கணப்படி
“சுவைப்படுபொருள்” ஆகிறது. பாம்பைக்
கண்டவுடன் அவனுக்கு ஏற்பட்ட பயம்



“சுவை” எனப்படுகிறது. அச்சம் காரணமாக ஏற்படும் கலக்கமும் தடுமாற்றமும் ‘குறிப்பு’ எனப்படுகிறது. வியர்த்தலும் நடுக்கமும் ‘விறல்’ எனப்படுகிறது. இவையனைத்தும் அவனது புறக்குறிகள் வாயிலாகக் காண்பவர்க்கு புலனாவதால்; அது மெய்ப்பாடு எனக் கூறப்படுகிறது.

அக வாழ்க்கையும் புற வாழ்க்கையும் ஆகிய உலகியல் வழக்கில் புலப்பட்டுத் தோன்றும் இந்த மெய்ப்பாடுகள் புனைந்துரை வகையாகிய நாடக வழக்கத்திற்கும், புலனெறி வழக்கமாகிய செய்யுள் வழக்கிற்கும் தொன்று தொட்டுக் கடைப்பிடிக்கப்படும் இலக்கண மரபாக இருந்து வருகிறது.

இதனையொட்டி வரும் நூற்பா மெய்ப்பாட்டியலின் முதல் நூற்பாவாக அமைகிறது.

★

“பண்ணைத் தோன்றிய எண்ணான்கு
பொருளும்
கண்ணிய புறனே நானான் கென்ப”

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா 1)

★

விளக்கக் குறிப்பு :–

இது, நாடகத் தமிழ்நூலார் மெய்ப்பாடு பற்றி வகுத்துக் கொண்ட கூறுபாட்டின் விரிவினையும் வகையினையும் எடுத்துரைக்கின்றது.

உலக மக்கள் கண்டும் கேட்டும் இன்பம் நுகரும் விளையாட்டின் கண்ணே தோன்றிய முப்பத்திரண்டு பொருள்களையும் குறிப்பிட்டு அவற்றின் புறத்தே நிகழும் பொருள்கள் பதினாறென்றும் சொல்வர், நாடகத் தமிழ் நூலோர்!

பண்ணை என்பது விளையாட்டு என்ற பொருளில் வழங்கும் சொல்லாகும். "கெடவரல் பண்ணை ஆயிரண்டும் விளையாட்டு" என்பது தொல்காப்பியம். முடியுடை வேந்தரும் குறுநில மன்னரும் நாடக மகளிர் ஆடலும் பாடலுங் கண்டுங் கேட்டும் நகை முதலிய சுவைகளுக்குக் காரணமாகிய சுவைப் படுபொருள்களும், நுகரும் நிலையில் உள்ள சுவையும், அச்சுவையினால் தோன்றும் மனக்குறிப்பும், அக்குறிப்பினைத் தொடர்ந்து மெய்யின்கண் வெளிப்படும் விறலும் ஆகிய நான்கும் நகை முதலிய எண்வகை மெய்ப்பாட்டிற்கும் உரிய வகையில் முப்பத்திரண்டாய் விரிந்து தோன்றுதலால்

'பண்ணைத் தோன்றிய எண்ணான்கு பொருளும்' எனக் குறிப்பிடுகிறது இந்த நூற்பா!

"நாலிரண்டாகும் பாலு மாருண்டே"

எனும் நூற்பாவின்படி மேலே சொல்லப்பட்ட "பதினாறு பொருளும் எட்டு என வரும்" என்று இளம்பூரணமும், "முப்பத்திரெண்டு மெய்ப்பாடும் பதினாறு ஆதலேயன்றி எட்டாதலும் உண்டு" என்று பேராசிரியமும் குறிப்பிடுகின்றன.

நகை, நான்கு!

எள்ளல்

எள்ளி நகையாடுதல் என்ற சொற்றொடர் நீண்டகாலமாக வழக்கத்தில் இருந்து வருகிறது. மெய்ப்பாட்டியலில் "எள்ளல்" எனும் மெய்ப்பாடு எப்போது தோன்றுமென்பதற்கு உரை கண்டோர் பலரும்; முடவர் நடந்து செல்வதைப் பார்க்கும்போதும் எள்ளல் காரணமாக நகைச்சுவை உணர்வு தோன்றுமெனக் கூறியுள்ளனர்.

மனித நேய உணர்வும், பிறரை அதிலும் ஊனமுற்றோரைப் புண்படுத்திப் பேசுவதும், நடப்பதும் கூடாது என்கின்ற சமூகப் பிரக்ஞை விரிவாகப் பரவி வரும் இக்காலத்தில், முடவர் நிலையும் செயலும் எள்ளி நகையாடுவதற்குரியதாகக் குறிப்பிடப்படலாகாது. ஆயினும் செவி வழி கேட்ட செய்தியொன்று ஒரு குறுங்கதை நிகழ்ச்சியாக மனத்திற் பதிந்துள்ளதை நகைச்சுவை உணர்வுக்கு எடுத்துக்காட்டாக அமைந்துள்ளதைக் குறிப்பிட விரும்புகிறேன்.

நாகரிகம்; உச்சாணிக் கொப்புக்கு
உயர்ந்து, போக்குவரத்து வாகனங்கள்,
சாதனங்கள் மின்சாரமயமாகவும்
இயந்திரமயமாகவும் இன்றைக்குப்
பெருகியுள்ளன எனினும், ஒரு நகரத்தில்
நடந்த நிகழ்ச்சி இது.

தெருவில் மாட்டு வண்டிகளில் அல்லது
குதிரை வண்டிகளில் ஏறி மக்கள் பயணித்துக்
கொண்டிருக்கிறார்கள். அந்தச் சாலையோரத்தில்
ஒரு கறிகாய் வணிகன் – அவனிடத்தில்
தெருவில் வாழ்வோர் கறிகாய் வாங்குவது
வாடிக்கை! வியாபாரத்தை கவனித்துக்
கொண்டே அந்த வணிகன், தெருவில் போகும்
வண்டிகளைப் பார்த்து, மிகுந்த ஆத்திரத்துடன்
"டேய் குதிரை வண்டி! டேய் மாட்டு வண்டி!
மெதுவாகச் செல்லுங்கடா! ஏண்டா போகிற
வேகத்தில் புழுதி தூற்றிக் கொண்டு போகிறாய்!
நான் எழுந்து வந்தால் நடப்பதே வேறு! சவுக்கால்
வெளுத்துக் கட்டி விடுவேன்; எச்சரிக்கை!"
என்று கத்திக்கொண்டேயிருப்பான்.

எந்த வண்டிக்காரர்களும் அந்த
வணிகனைப் பொருட்படுத்துவதில்லை.
வணிகனோ, தன் வசை புராணத்தை
நிறுத்தியதுமில்லை!

ஒரு நாள் ஒரு குதிரை வண்டிக்காரனை,
வணிகன் வழக்கம் போல் மிரட்டிக் கத்தினான்.

“வந்தால் என்ன செய்வேன் தெரியுமா? உன் வண்டியெல்லாம் உடைந்து நொறுங்கிவிடும்!

என்னடா முறைக்கிறே! வந்தேன்னா தெரியுமா?” என்று வணிகன் வசைபாடத் தொடங்கியதும்; குதிரை வண்டிக்காரன் வண்டியை நிறுத்தி விட்டு, “எங்கே; வா பார்க்கலாம்!” என்று வணிகனுக்கு அறைகூவல் விடுத்தான்.

வணிகன், வாயை மூடிக் கொண்டான்! காரணம்; அவனால் வர முடியாது! காலில்லா முடவன்! அதைப் பார்த்து அனைவரும் சிரித்தனர்.

‘எள்ளல்’ என்பது இப்படியொரு குறிப்பிட்ட நிகழ்வுக்குத்தான் பொருந்துகிறது! பொதுவில் ஊனமுற்றோர் அனைவருக்கும் பொருந்தாது! பொருத்தவும் கூடாது!

★

இளமை

இளைஞன் என்பதற்காக நெடுஞ்செழியப் பாண்டியனை மன்னர்கள் எள்ளி நகையாடியதற்கும், அவர்களை எதிர்த்து அந்த இளைஞன் சூளுரைத்ததற்கும் இதோ என் கவிதை :–

“கலகலவெனக் காலில் ஒலித்த
சதங்கையைக் கழற்றி; வீரக்

கழலினை அணிந்த இளங்கன்று அவன்!
பின்னிச் சடையிட்ட நீள்குடுமி களைந்து
மின்னிடும் வாளேந்தி நிற்கின்ற சிறுவன்
அவன்!

மெல்லிய கரங்களில் எழில் வளையல் நீக்கி
வில்லினைத் தோளில் தாங்கிய இளைஞன்
அவன்!

ஐம்படைத் தாலியினை இன்னும் மார்பில் பூண்ட
அறியாப் பருவத்தினன் அவன்!

வயதில் இளையோன் பாண்டியன் என்று,
வலியோர் ஐந்து வேளிர் துணையுடன்;
சேர சோழ முடி மன்னர் இருவர்,
போரில் குதித்து ஓலை அனுப்பினர்!
வேளிர் வேந்தர் ஐவர் படையும்
வில், புலி பொறித்த கொடியுடை மன்னர்
இருவர் படையும் இணைந்து மோதிட,
எழுவரை எதிர்க்க இயலுமோ என்று
இளைஞன் பாண்டியன் கலங்கவே இல்லை!
"ஒடுங்கி அடங்கிடுக! அல்லால்; உயிர்
ஒழிந்து போக நேரிடும்!" என்ற
ஓலை கண்டு உரக்கச் சிரித்தான்!
ஒளிந்திடும் மரபல்ல போருக்கென்றான்!
பாண்டியத்துப் பெருமண்ணில், வெறும்
ஆண்டிகளோ வாழ்கின்றார்? இல்லை!
இல்லை! குலமாதா பாண்டித்தாய்;
கோழைகளைக் குழந்தைகளாய்ப்

பெற்றெடுக்கவில்லை! இந்த நிலமகளின்
பெருமைக்கு மேலும் பெருமை, நெடுஞ்செழிய
இளைஞனவன் சேர்ப்பான் என்று
நம்பிடுவீர்! நாட்டோரே! நல்லோரே! என முழக்கி;
'நகுதக் கனரே நாடு மீக்கூறுநர்' எனும்
நரம்பெலாம் வீரம் மீட்டும் புறப்பாட்டை
நாடாளும் இளமன்னன் இயற்றலானான்!"

பாண்டியனின் இளமையைக் கண்டு எதிரிகள் அலட்சியமாகச் சிரித்தனர்.

எதிரிகளின் ஆணவம் கண்டு இளைஞன் நெடுஞ்செழியப் பாண்டியன் சிரித்தான் – இறுதியில் இளைஞனின் சிரிப்பே வென்றது.

★

பேதைமையும், மடனும்!

தவலை திருட்டுப் போய்விட்டது என்று காவல் நிலையத்துக்கு எழுத்தில் புகார் கொடுத்தான் ஒருவன். காவல் அதிகாரி படித்துப் பார்த்து விட்டு "உனக்குத் தலைதான் இருக்கிறதே" என்று சிரித்தார். "தவலை" என்று எழுதியிருக்க வேண்டியதை பேதைமை காரணமாக 'வ' எனும் எழுத்தை விட்டு விட்டுத் "தலை" என்று புகாரில் எழுதிவிட்டான். அதிகாரி சொன்னதும் அவனும் சேர்ந்து சிரித்து விட்டு, புகாரை வாங்கி, திருத்தம் செய்து வேறு தாளில் எழுதிக் கொடுத்தான்.

அதிகாரி மீண்டும் சிரித்துக் கொண்டு கேட்டார்;

“எந்தக் கிணற்றிலிருந்து
தவளை காணாமற் போனது?” என்று!

அதாவது ‘ல’கரம் எழுதுவதற்கு பதில் ‘ள’ கரம் எழுதிவிட்டான்.

பேதைமை காரணமாக “தவலை” தலையென்று ஆயிற்று! சுட்டிக் காட்டப்பட்ட பிறகு, அதனை அறிந்தும் அறியாத “மடன்” காரணமாக “தவலை”யை “தவளை” என்று எழுதிவிட்டான்.

இங்கெல்லாம் “நகைச்சுவை” தோன்றாமல் இருக்குமா?

எனவே; “எள்ளல்”, “இளமை”, யிடத்தும், “பேதைமை” எனும் அறிவின்மையிடத்தும், ஓர் இழையளவே அதனின்றும் வேறுபாடுடைய ‘மடன்’ எனும் உன்மத்தமுடையாரிடத்தும் நிகழ்வனவற்றில் நகைச்சுவை தோன்றும்.

★

“எள்ளல் இளமை பேதைமை மடனென்று
உள்ளப் பட்ட நகைநான் கென்ப”

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 4)

அழுகை, நான்கு!

இளிவு = இழிவு

கிரேக்க நாட்டு நீதி மன்றத்தில் சிந்தனைச் சிற்பி சாக்ரடீஸ் கூண்டில் நிறுத்தப்படுகிறார். நாட்டில் இளைஞர்களையெல்லாம் தூண்டிவிட்டு தன்னுடைய பேச்சின் மூலமாகக் கிளர்ச்சி செய்கிறார் என்பது அவர்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டு. அந்தக் குற்றச் சாட்டுகளை முன்மொழிந்தும், வழிமொழிந்தும் நீதி மன்றத்திலே மூவர் முழங்குகிறார்கள். அந்த முழக்கம், அந்த சிந்தனைச் சிற்பியை இழிவுபடுத்தும் முழக்கமாகும். அந்த மூவர் அனிடஸ், லைகன், மெலிடஸ் என்ற பெயருடையவர்கள்.

அனிடஸ் :– குமுறும் எரிமலை! கொந்தளிக்கும் கடல்! இவைகளை விடப் பயங்கரமானவன் சாக்ரடீஸ்!..... அறிவாயுதமாம்..... அனைத்துலகும் அடி பணியும் அஸ்திரமாம்!.....அந்த ஆயுதம் கிரேக்கத்தில் தயாராகுமானால், நாம்

தலைதூக்கவே முடியாது மெலிடஸ்! என்ன சொல்கிறாய், லைகன்?

லைகன் :– நான் கல்லுக்குக் கடவுள் உருவம் தரும் சிற்பி!.....ஒரு காலத்திலே இந்த சாக்ரடீசும் என்னைப் போலச் சிற்பிதான்! இப்போதோ அவன் சிந்தனைச் சிற்பியாக மாறி விட்டான். பரவாயில்லை, கல்லைக் கடவுளாக்கும் நானும், கற்பனை மூட்டைகளுக்குத் தெய்வீக மெருகு தரும் கவிஞனாம் மெலிடசும், அரசியல் நிபுணனாம் நீயும் ஒன்று சேர்ந்துவிட்ட பிறகு ..... சாக்ரடீஸ் – சமுத்திரத்துத் துரும்புதானே; அனிடஸ்!

மெலிடஸ் :– சபாஷ் லைகன், சபாஷ்! பொதுமக்கள் கழுதைகளாயிருந்தால்தான் நாம் தூக்கி வைக்கும் பொய் மூட்டைகளைச் சுமப்பார்கள்! குருடர்களாய் இருந்தால்தான் நாம் காட்டுகிற வழியிலே நடப்பார்கள்! நாம் கீறிய கோட்டைத் தாண்டாத கிரேக்க மக்களுக்கு அந்தக் கிழவன் அறிவுக் கண் வழங்குவதற்குள் அவனை நாம் அழித்து விட வேண்டும்.....

இவை ஈடு இணையற்ற ஒரு பெரியவரை, சிந்தனைப் புரட்சியாளரை இழிவுபடுத்திட வீசப்பட்ட வேல்களாகும்.

இதை 'இளிவு' என்று இயம்புகிறது மெய்ப்பாட்டியல்.

★

இழவு = இழப்பு

இந்தியாவின் முதல் பிரதமர், 17 ஆண்டுக் காலம் பரிபாலனம் செய்தவர், பாமரர் முதல் பண்டிதர் வரையில் பாராட்டுகளைப் பெற்றவர், ஆசியச் சுடர், அமைதிக்கு வெண்புறா பறக்க விட்டவர் – அவர் மறைந்த போது அவருடைய உடையிலேயே எந்நேரமும் சூடியிருந்த ரோஜா மலர் கண்ணீர் சிந்துவது போல் ஒரு கவிதை!

“கோமானே! கொள்கை வேந்தே! உன்னைக்
கொள்ளையிட்ட கூற்றெங்கே?
எனையெடுத்து முத்தமீந்து இதயத்தில்
ஏற்றிக்கொண்டாய் இன்று;
எனைவிடுத்து நீ மட்டும் நெடுந்தொலைவு
போய்விட்டாய் – என்ன நியாயம்?
இதழுக்குத் தேன் தருவாய் – பதிலுக்கு
நான் தருவேன் மறந்தா விட்டாய்?
மகிழ்ச்சி வெள்ளம் கரை புரளும்
மங்கையென்னைப் பிரிவதற்கு உன்
மனம்தான் கல்லோ?”
எனக் கதறும் ஒலி கேட்டு
இனிய நறும் பூப்பெண்கள் அருகே சென்றார்
மடை திறந்த வெள்ளம் போல் கண்ணீர் கொட்டி
மயங்கி விழும் நிலைமையிலே ரோஜா நின்றாள்
மல்லிகை முல்லை அருகே சென்று
“என்னடி ரோஜா இன்னமும் அழுகை?
நல்லவர் இருந்தார் நானிலம் வாழ

வல்லவர் இருந்தார் வாரி அணைக்க
போனது வருமோ ? புலம்பலை நிறுத்து!
பூக்களின் ராணி! புன்னகை காட்டு!”
ஆறுதல் கூறினார்; அழகு ரோஜா
தேறுதல் பெறாமல் தேம்பியழுதாள்.”

★

அசைவு = தளர்ச்சி

எந்தப் பெரியாரால் தமிழன் தலைநிமிர்ந்து நின்றானோ, தன்மானம் பெற்றானோ – அந்தத் தந்தை பெரியார் மறைந்தபோது தரணி யெங்கும் வாழ்கின்ற தமிழன் எந்த அளவிற்கு தளர்ச்சியுற்றான் என்பதை இந்தக் கவிதை வரிகள் விளக்குகின்றன.

“எரிமலையாய்ச் சுடுதழலாய்
இயற்கைக் கூத்தாய்
எதிர்ப்புகளை நடுங்க வைக்கும் இடிஒலியாய்
இன உணர்வுத் தீப்பந்தப் பேரொளியாய்
இழிவுகளைத் தீர்த்துக்கட்டும் கொடுவாளாய்
இறைவனுக்கே மறுப்புச் சொன்ன இங்கர்சாலாய்
எப்போதும் பேசுகின்ற ஏதென்சு நகர் சாக்ரடீசாய்
ஏன் என்று கேட்பதிலே வைரநெஞ்ச வால்டேராய்
எம்தந்தை பெரியாரும் வாழ்ந்திட்டார்.
இன்றைக்கோ
இறப்பின் மடியினிலே வீழ்ந்திட்டார்.
இளவயதில் மறையவில்லை பெரியார்

நிறைவயது வாழ்ந்துவிட்டே ஓய்வுகொண்டார்
எனினும்,
தாஜ்மகால் திடுமெனத் தரைக்குள்ளே
போய்விட்டால்
அதைக் கட்டி; ஆண்டுகள் பலவாயிற்றே என்று
ஆறுதல்தான் பெறுவோமா?
தஞ்சைக் கோபுரம் சாய்ந்துவிட்டால் அதற்கு
வயது அதிகமென்று சொல்லித்
தாங்குதல்தான் எளிதாமோ? இவரோ,
தஞ்சைக் கோபுரம்போல் உயர்ந்தவர்
தாஜ்மகால்போல் சரிதம் படைத்தவர்.''

இது மெய்ப்பாட்டியலில் 'தளர்ச்சி' எனும் பட்டியலில் வந்தாலும் தாங்க முடியாத வேதனையினால் அழவைக்கும் நிகழ்ச்சியாகும்.

★

வறுமை

''வறுமை'' காரணமாக அந்தக் காலத்து நல்லதங்காளிலிருந்து இந்தக் காலத்துத் தாய்மார்கள் வரையில் பெற்ற குழந்தைகளை விற்றுப் பிழைக்கவும்; அல்லால் ஆறு குளங்களில் தள்ளி அவற்றையும் அழித்துத் தாமும் அழிந்து போகும் நிலை கண்டு பெருக்கெடுக்கும் அழுகையும் மெய்ப்பாட்டியலில் சேரும்.

★

“இளிவே இழவே அசைவே வறுமை என
விளிவில் கொள்கை அழுகை நான்கே”

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் –
நூற்பா : 5)

இளிவு = இழிவுபடுத்துதல்

இழவே = இழப்பை உணர்தல்

அசைவே = தளர்ச்சி அடைதல்

கொள்கை = நிகழ்ச்சி இயல்பு

அறிவுரைத் தூக்கு!

மூப்பு = முதுமை

பத்து மாதம் சுமந்தவள், பாலூட்டி வளர்த்தவள், பள்ளிக்கு அனுப்பி வைத்துப் பின்னழகு கண்டு ரசித்தவள். மகனை மணக்கோலத்தில் கண்டு மகிழ்ந்தவள். இப்போது பேரன் பேத்தியும் எடுத்துவிட்டாள். நாடி தளர்ந்து, நரை விழுந்து, பல் விழுந்து, கூன் விழுந்து இல்லத்துச் செல்வங்களின் அரவணைப்பில் அன்பான பாதுகாப்பில் எஞ்சியுள்ள காலத்தைக் கழிக்கலாம் என்று எண்ணியிருந்தவளை; பெற்ற மகனே தூற்றுகிறான் "இன்னும் ஏன் உயிரோடு கிடந்து என் உயிரை வாங்குகிறாய்! முதியோர் இல்லத்துக்குப் போய்த் தொலைந்திடு" என்கிறான். அந்தத் தாய்; தன் "முதுமை"யை எண்ணி வருந்துகிறாளே தவிர; அன்பில்லா மகனை எண்ணி வருந்தவில்லை.

★



பிணி = நோய்

ஓடியாடி உழைத்துச் சம்பாதித்துப் போட்டுக் கொண்டிருந்த வாலிபன்; திடீரென வலிப்பு நோய்க்கு ஆளானான். நாள்தோறும், மருந்து, மருத்துவம்! வாழ்க்கைத் துணையாக வந்தவளோ; வசந்தம் இருந்தவரையில் அவனது இன்பதுன்பங்களில் பங்கு பெற்றாள். சம்பாதித்திட வக்கற்று, நடமாடவும் வழியற்றுப் போன பிறகு; வாழ்க்கைத் துணைவிக்கு இல்லறம் கசந்து போயிற்று – அவன் அவளை அன்போடு அழைக்கும்போதெல்லாம்; "என்ன வேணும்? சொல்லித் தொலை!" என்ற வார்த்தைகளைத்தான் சூடாக வறுத்துக் கொட்டுகிறாள்! அவன் அவளைத் திட்டமாட்டான்; தனக்கு இந்த நிலை வரக் காரணமான "நோய்" மீதுதான் அவனுக்கு ஆத்திரம் வரும்! நோயை இழித்துப் பேசிக் கடிந்து கொள்வான்.

★

வருத்தம் = துன்பம்

அற்ற குளத்தில் அறுநீர்ப் பறவைகளாக – துன்பம் வந்த நேரத்தில் வேறு குளம் தேடிக் கொள்கிற சுயநலமிகளையும் துரோகிகளையும் எண்ணி வருந்துகிறவர்கள்; அவர்கள் மீது கொள்கிற கோபத்தைவிட அதிகமாகத் தங்களைத் தொத்திக் கொண்ட

துன்பத்தின்மீதுதான் கொள்வார்கள். "துன்பம்"
தோழன் ஆன காரணத்தினால்தானே
தன்னலம் நாடும் 'துரோகத் தோழர்கள்'
ஓடிவிடுகிறார்கள்!

★

மென்மை = எளிமை

வசதி படைத்தவர், ஆடம்பரமாக இருத்தலாகாது! அதற்காகக் கிழிந்த வேட்டி, கசங்கிய சட்டை, இவற்றுடனேயே காலங் கழித்தால் அதனை "எளிமை" என்று எவரும் போற்றிடமாட்டார்கள்; கஞ்சத்தனம் என்று கேலி புரிவார்கள். 'எளிமை' என்ற சொல்லே இழுக்குப்பட்டு விடும்.

★

"மூப்பே பிணியே வருத்தம் மென்மையோடு
யாப்புற வந்த இளிவரல் நான்கே"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 6)

மூப்பு = முதுமை

மென்மை = எளிமை

யாப்புற வந்த = தொடர்ந்துவரும்

இளிவரல் = மானக்குறைவு ஏற்படுதல்

மருட்கை நான்கே!

புதுமை

எத்தனையோ தொலைவில் உள்ள எழில் நிலாவை அன்னையர் பாட்டிசைத்து அழைத்து; தன் குழந்தையிடம் வந்து கொஞ்சுமாறு இன்னமுங்கூட கோரிக்கை விடுத்துக் கொண்டுள்ளனர். அழைப்பையேற்று அந்த அழகு நிலா வந்ததில்லை. வராத நிலவை அந்த நிலவுப் பூமிக்கே வந்து காணுகிறோம் என்று, விஞ்ஞானப் புதுமை காரணமாக அமெரிக்க நாட்டு முயற்சியினால் ஆம்ஸ்ட்ராங் என்பவர் சந்திர மண்டலத்தில் காலடி வைத்து, கொடி நாட்டித் திரும்பினார். அங்குக் கிடைத்த ஒருவகைக் கற்களையும் கொண்டுவந்தார். இந்தப் "புதுமை" கண்டு மன்பதை 'மருட்கை' எனும் வியப்புக்கு உள்ளாகியது.

★

பெருமை

ஒரு வழக்கறிஞராகத் தென் ஆப்பிரிக்கா நாட்டுக்குச் சென்ற காந்தியடிகள் அங்கு

நிற வெறிக்கு எதிராகத் துணிந்து நின்று
போராடி – "வார்தா முனிவர்" என்ற
வட்டத்துக்குள்ளேயிருந்து தன்னுடைய அறிவு,
ஆற்றல், தியாக மனப்பான்மை காரணமாக
இந்திய நாட்டு அளவில் என்று மட்டுமல்லாமல்
உலக நாடுகள் அளவில் செல்வாக்கும்,
மதிப்பும், மரியாதையும் பெற்று; பிடிவாதமாக
இறுதிவரையில் பின்பற்றிய 'அகிம்சை'க்
கொள்கையால் நாட்டு விடுதலையும் பெற்றுத்
தந்த பெருமை, வியப்புக்குரியதன்றோ! உலக
அமைதிக்கு அவர் உயர்த்திய அன்பு வழிக்
கொடி இன்னமும் பறந்து கொண்டிருக்கிறதே!

சிறுமை

அணுவைத் துளைத்து ஏழ் கடலைப் புகட்டி
குறுகத் தரித்த குறள் எனப் புலவர் கூட்டம்
புகழும்! ஆம்; அணு அவ்வளவு சிறியது!
ஆனால் அந்த அணுவில் உருவாக்கப்பட்ட
அணுகுண்டுதான் இரண்டாம் உலகப் போரை
முடித்து வைத்ததுமல்லாமல் 'இரோசிமா'
உள்ளிட்ட பல பகுதிகளில் லட்சோப லட்சம்
மக்களின் வாழ்வையும் முடித்து வைத்தது
என்பதை எண்ணிடும்போது அத்துணை சிறிய
அளவிலான அணுவின் பயங்கர பெரிய ஆற்றல்;
வியப்பைத் தருகிறது அல்லவா!

★

ஆக்கம்

நாட்டின் ஆதி மக்கள், நாதியற்றோர் போல நாற்புறமும் எதிர்ப்புக்கும் இழிவுக்கும் ஆளாகி, நலிந்து கிடந்த போது இந்திய நாட்டின் அளவில் அவர்களின் பாதுகாப்பு அரணாக இருந்து வலிமை மிக்க வர்ணாஸ்ரம தர்மத்தை எதிர்த்து வாகை சூடி; இந்த நாட்டின் அரசியல் சட்டத்தையே உருவாக்கித் தந்த அண்ணல் அம்பேத்கர் அவர்களின் கொள்கைக்கு வாய்த்த பரிணாம வளர்ச்சிக்கான சான்றுதானே நாட்டின் குடியரசுத் தலைவராகத் திருமிகு நாராயணன் அவர்கள் வீற்றிருந்த காட்சியாகும். அண்ணல் அம்பேத்கரின் ஆக்க பூர்வமான உணர்வுகள் அஞ்சா நெஞ்சத் துணையுடன் பெற்ற வெற்றிக்கு அடையாளம் அது!

இந்த நான்கையும்தான் வியப்பு தருபவை யென்று பின்வரும் நூற்பா கூறுகின்றது.

★

“புதுமை பெருமை சிறுமை ஆக்கமொடு
மதிமை சாலா மருட்கை நான்கே”

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 7)

மதிமை = அறிவின் தன்மை

சாலா = நிரம்பாத


மருட்கை = வியப்பு

குறிப்பு :– புதுமை, பெருமை, சிறுமை, ஆக்கம் என்பனவற்றின் தன்மைகளை உள்ளவாறு உணரும் அறிவுடைய பெருமக்கள்; அப்பொருள்களின் பெற்றிமை (இயல்பு) என்னவென்று உணர்ந்திருப்பதால் அவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் வியப்புறுவார்கள் என்பதாலேயே "மதிமை சாலா மருட்கை" எனக்கூறப்பட்டது போலும். இவற்றால் அல்லது இவர்களால் இயலும் என்ற உறுதிப்பாடு அறிவுடையோர்க்கு உண்டு என்பதையும் இது உணர்த்துகிறது.

அச்சம் நான்கு!

அணங்கு

இனி இலக்கண இலக்கியத் தமிழிலேயே பேசுவது என முடிவு செய்து கொண்ட ஓர் இளைஞன், தன்னுடைய ஊர்ப் பெரியவரான தமிழாற்றல் கொண்ட ஒருவரிடம் தனக்குத் திருமணம் உறுதி செய்யப்பட்டிருப்பதைக் கூறினான். அவர் அவனைப் பார்த்து "உன் வாழ்க்கைக்கு ஏற்றவாறு ஓர் அணங்கு அமையட்டும்" என வாழ்த்தினார். இளைஞன் அன்றைக்குத்தான் அகராதியில் "அணங்கு" என்றால் பேய் எனவும் பொருள் என்று படித்திருந்தான். அவன் திடுக்கிட்டுப் போய் "அய்யா! பேயை என் தலையில் கட்டச் சொல்கிறீர்களே!" என அலறினான். அணங்கு என்பதற்கு "பெண்" என்றும் "பேய்" என்றும் "மோகினி" என்றும் அகராதியில் பொருள் இருப்பதை அறிய மாட்டாயா என்று பெரியவர் விளக்கினார். பேய், பிசாசு, காத்து, கறுப்பு என எதுவுமில்லாமலே மூட நம்பிக்கையாளர்களின்



கற்பனைப் பொய் கேட்டு அச்சம் கொள்வோர் இன்னமும் இந்த விஞ்ஞான உலகில் இருக்கத்தான் செய்கிறார்கள். எனவே மெய்ப்பாட்டியலில் "அச்சம்" உண்டாக்கக் கூடியவற்றில் ஒன்றாக 'அணங்கு' என்பதும் கூறப்படுகிறது.

★

விலங்கு

சிங்கம், புலி, கரடி போன்ற கொடிய விலங்குகளை நெருங்கி நின்று எதிர்க்கும் வலிமையும், துணிவும் இல்லாமையால்தான்; "அச்சத்"தைப் போக்கிக் கொள்ள வேறு வழியின்றி; தொலைவிலிருந்து ஆதி மனிதன் அம்பு, ஈட்டிகளாலும்; தற்கால மனிதன் துப்பாக்கி கொண்டும் அவற்றை வேட்டையாடுகிறான்.

★

கள்வர்

திருடர்கள், தேட்டை போடும் கள்வர் கும்பல், கொள்ளைக்காரர்கள், வழிப் பறிக் கூட்டம் – அப்பாவி மக்களானாலும், அறிவார்ந்த மக்களானாலும் இவர்களைக் கண்டும், இவர்களைப் பற்றிக் கேட்டும் அச்சத்திற்கு ஆளாவது இயற்கை!

இறை

அச்சம் ஏற்படுத்தும் இந்த வரிசையில் இறையும் சேர்க்கப்பட்டுள்ளது. இறை என்பது அரசைக் குறிப்பிடுவதாகப் பல உரையாசிரியர்கள் கூறுகின்றனர். "இறை" எனத் தனித்துப் பொருள் கொள்ளாமல் "தம் இறை" என்று இருப்பதை "தம்மிறை" எனப் பொருள் கொண்டால் தாம் செய்த பெருங்குற்றம் என்றாகும். பெருங்குற்றம் புரிந்தோர் தண்டனையை எண்ணி "அச்சம்" கொள்வது நாட்டு நடப்புத்தானே! "தம் இறை" என்றும், "தம்மிறை" என்றும் தொல்காப்பியம் இரட்டுற மொழிவதை வெள்ளைவாரணனார் சுட்டிக்காட்டுகிறார்.

★

"அணங்கே விலங்கே கள்வர்தம் இறை எனப்
பிணங்கல் சாலா அச்சம் நான்கே"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 8)

பிணங்கல் சாலா = மாறுபாடு இல்லாத

பெருமிதம் நாண்கு!

கல்வி

புத்தகத்தில் உலகத்தைப் படிக்கின்ற கல்வியும் உண்டு. உலகத்தையே புத்தகமாகப் படிக்கின்ற கல்வியும் உண்டு. இந்த இரண்டு வகைக் கல்வியிலும் ஒருவகையில் உயர்ந்து நிற்கிற ஆற்றலாளர்கள் அறிவின் சிகரங்கள். எடுத்துக்காட்டாக அன்றைக்கும் சிலர் இருந்தார்கள். இன்றைக்கும் சிலர் இருக்கிறார்கள். அவர்தம் ஆற்றல் கண்டு அவனியே புகழும்போது அவர்களால் நாமும்; நம்மால் அவர்களும் பெருமிதம் கொள்ள முடிகிறது.

★

தறுகண்

உள்ளத்தில் உண்மை ஒளியும் – மாறாத உறுதியும் உள்ளவர்கள் எந்த அவையிலும் அஞ்சாமல் வாதாடுகின்ற 'தறுகண்' படைத்தவர்களாயிருப்பார்கள். அந்தத்

தறுகண்ணுடையோர்; பெருமிதம் கொள்வோர் பட்டியலில் தவறாமல் இடம் பெறுவார்கள்.

★

இசைமை

'தோன்றிற் புகழொடு தோன்றுக' எனும் பொன்மொழியை குறிக்கோளாகக் கொண்டு; மக்கள் மத்தியில் புகழ் பெற்றுத் திகழ எந்தத் துறையில் இருப்போர்க்கும் விருப்பம் இருப்பது இயல்பு. புகழை விரும்பாதவர் பின்னால்தான் 'புகழ்', அவரை நிழல் போலத் தொடர்ந்து கொண்டே இருக்கும்.

★

கொடை

"கரும்பெடுத்துத் தமிழ் பிழிந்து மலரில்
சுரும்பெடுத்து வருகின்ற தேன் கலந்து
அரும்பெடுத்துச் சிரிக்கின்ற மகளிர் கூட்டம்
'எறும்பெடுத்துச் செல்கின்ற உணவு கூட
எம்மன்னன் குமண வள்ளல் தந்த' தென்று
எழுச்சி நடை போடுகின்ற கொங்கு நாடு"

அந்நாட்டு மன்னர் குமண வள்ளலின் பெயர்; கொடை என்ற சொல்லை உதிர்த்த இடத்தில் எல்லாம் உச்சரிக்கப்படுவதற்குக் காரணம்; அவர் கொற்றவனாக மட்டுமன்றிக்

கொடை வள்ளலாகவும் திகழ்ந்தார் என்ற பெருமிதம்தானே!

★

"கல்வி தறுகண் இசைமை கொடை எனச்
சொல்லப்பட்ட பெருமிதம் நான்கே"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 9)

தறுகண் = அஞ்சாநெஞ்சம்

இசைமை = புகழ்

★

வெகுளி நூங்கே!

தடியெடுத்தவன் எல்லாம் தண்டல்காரன் என்ற நிலையில், வன்முறை, அடக்குமுறை வாயிலாக; குடிமக்களின் தலையறுத்தல் – கைகால்களை வெட்டுதல் போன்ற வெறியாட்டங்களையும், எதிர்ப்போர் எவராயினும் அவர் பக்கமிருக்கும் நியாயம் உணராமல் அவர்களின் பெண்டு பிள்ளைகளுக்குக் கேடிழைக்கும் கொடுஞ் செயல்களையும், அலையெனப்படும் அடித்தல் உதைத்தல் போன்ற அரசு ஆதரவுடன் நடக்கும் அநீதிகளையும், கேட்பாரற்ற முறையில் தடுப்பாரற்ற நிலையில் நடக்கும் கொலைகளையும் தாங்கிக் கொள்ள முடியாமல் தணலில் இட்ட புழுக்களாய்த் துடிக்கும் குடிமக்கள் புலிகளாக மாறுவதுதான் "வெகுளி" யின் உச்சமாகும்.

★

"உறுப்பறை குடிகோள் அலைகொலை என்ற
வெறுப்ப வந்த வெகுளி நான்கே"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் –

நூற்பா : 10)

உலக நான்கு!

மலையளவு இல்லாவிடினும் மன நிறைவளிக்கும் வண்ணம் கழனிப் பயனால் கிடைத்திடும் தேவையான செல்வமும், புலமையின் காரணமாக ஏற்பட்ட அறிவு முதிர்ச்சியும், உள்ளங்கள் ஒன்றுபட்டு இணைவதும், ஊரார் கூடி உற்சாகம் மேலிட ஆடிப் பாடுவதும்; பிறர் துன்பத்திலே காணும் 'உவகை' என்றில்லாமல்; தங்கள் மன நிறைவினால் ஏற்படும் உவகையாகப் பெருகித் தமிழர் திருநாளாம் தைப் பொங்கலன்று உவகைத் திருநாளாக உணர்ச்சித் திருநாளாக தமிழர்கள் கொண்டாடுவதை இந்த இசைப்பாடல் சுட்டிக் காட்டுகிறது.

பொங்கலோ பொங்கல்
எங்கும் இன்பம் பொழிந்திடும் பொங்கல்
பொங்கலோ பொங்கல்!

உழைக்கும் தெய்வங்களே உம்மால்
பிழைப்பார் பல கோடி மனிதர்களே!

உலகம் உங்கள் தலையில் கட்டிய முண்டாசு –
நீங்கள்
உறுமி எழுந்தால் இமயமே கால் தூசு!



உழவர்கள் பெருமையைப் பேசுவோம் – அவர்
உயரவே வாழ்த்திப் பாடுவோம்;

பொங்குக பால் என்று முழங்கிடுவோம்; அது
எங்கும் புகழ் வள்ளுவன் அருளிய பால்
அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால்
அதற்கும் அப்பால் வேறென்ன பால் வேண்டும்!

தூய்மையாக வீடு வாசல் மாடு கன்று புதுக்கி,
தூசி தும்பு அழுக்குகளைப் போக்கிடுவோம் போக்கி!
அதுதான் போகி!

மூட நம்பிக்கை முடைநாற்றம் நீக்கி,
மூளை நிரம்பப் பகுத்தறிவைத் தேக்கி,
கேடு களைய மீசைதனை முறுக்கி
பாடுபடுவோம் பாவையர் உரிமைகளைப் பெருக்கி!

மஞ்சளும் இஞ்சியும் வானுயர் கரும்பும்
நஞ்சை குலுங்கும் மண்ணையே விரும்பும்
வஞ்சியர் இதழ்களில் மல்லிகை அரும்பு
வாலிபர்க்கு ஏறு தழுவுதல் அன்றோர் துரும்பு

பொதுவாழ்வில் நேர்மை நாணயம் வேண்டும்
– அந்தப்
புதுவாழ்வு புகழ்வாழ்வு பூமியின் எல்லையைத்
தாண்டும்.

(பொங்கலோ பொங்கல்)

★

"செல்வம் புலனே புணர்வு விளையாட்டு என்று
அல்லல் நீத்த உவகை நான்கே"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் –
நூற்பா : 11)

புலன் = வயல், அறிவு

மலர் (80)

முதல்நிலை மெய்ப்பாடுகள்

மெய்ப்பாட்டியலில் ஐந்திணைக்குரிய மெய்ப்பாடுகளை நோக்கும் போது கம்ப இராமாயணத்தில் மிதுலாபுரியில் அரண்மனை மாடத்தில் நின்று கொண்டிருந்த சீதையும் – அப்போது விசுவாமித்திர முனிவருடன் வீதியில் வந்து கொண்டிருந்த இராமனும் – கண்ணொடு கண்ணினை நோக்கினர் என்ற கருத்தில் கம்பர் வர்ணித்திடும் காட்சிக்கும், அதன் தொடர்பான மெய்ப்பாடுகளுக்கும் கவிதை புனைந்திட கம்பருக்கு, தொல்காப்பிய மெய்ப்பாட்டியல், தூண்டுதலாகவும் துணையாகவும் இருந்திருக்கக் கூடுமெனத் தோன்றுகிறது.

"அண்ணலும் நோக்கினான் அவளும் நோக்கினாள்" இது கம்பர்! "அண்ணலும் நோக்கினான், அவளும் நோக்கினாள்; அதை

முற்றும் துறந்த முனிவரும் நோக்கினார்”
என்பது கம்பரின் கற்பனைக்கு நான் தந்த
மெருகு!

பொதுவாக எதிர்ப்பட்டனர் இருவர் எனில்
போர்க்களத்தில் பகையிருவர்

போர்த் தொடக்கத்திற்கு முன்பு ஒருவரையொருவர்
எதிர்ப்பட்டனர் என்ற எண்ணம்தான் எழும்!

போருக்கல்ல; புணர்வதற்கு; முன் தொடக்கமாக
பூவார் குழலியொருத்தியும் புலிப்போத்தாம்
ஒருவனும்

வேறு எவரும் நடமாடாத வீதியிலோ
சோலையிலோ – விழி
கூறு மொழி புரிந்துகொள்ளும் வயதுடையோர்

கண்கள் நான்கும் கரம் குலுக்கிக் கொண்டபோது
கவிதைப் பெண்ணாள் நெற்றியிலே வியர்வை
அரும்பு!

கொள்ளை நாணத்தால் குனிந்து கொண்டாள்;
கோமகன்
கிள்ளைக்கு மேலும் சில குறிப்பு உணர்த்தினான்.

அவன் எண்ணம் புரிந்து கொண்ட அழகரசி –
உடன்
அளவளாவி மகிழத்தான் துடித்தாள் – ஆனால்

தொண்டைவரை வந்த வார்த்தை வெளிவராமல் –
இரண்டு இதழ்க் கதவும் அடைத்தாள்!



“நகு நய மறைத்தலு”க் கேற்ப
நங்கை தன் வேட்கையை ஒளித்துக் கொண்டாள்!

“சிதைவு பிறர்க்கின்மை” என்பதைச் செயலில்
காட்ட
இசைவு தனக்குண்டு என்பதையும் மறைத்துக்
கொண்டாள்!

முந்தியால் முகம் சிறிதே மூடிக் கொண்டாள்
எனினும்
முந்திக் கொள்ளட்டுமே அவன்தானென்று

அந்தி வானக் கன்னமிரண்டும் மேலும் சிவந்திட
அவன் செயல் எதிர்பார்த்துக் காத்திருந்தாள்

★

“புதுமுகம் புரிதல், பொறிநுதல் வியர்த்தல்
நகுநயம் மறைத்தல், சிதைவு பிறர்க்கு
இன்மையொடு
தகுமுறை நான்கே ஒன்றென மொழிப.”

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் –
நூற்பா : 13)

நுதல் = நெற்றி
நகுநயம் = விருப்பம்
சிதைவு பிறர்க்கின்மை = மனநிலையை
மற்றவர்க்கு வெளியிடாமலிருத்தல்.

மலர் (81)

இரண்டாம் நிலை மெய்ப்பாடுகள்

முதல் நிலை மெய்ப்பாடுகளில் யார் முந்தி
என்றிருந்து

நுதலில் வியர்வை துடைத்தவாறு,

உடலழகைக் கூட்டுகின்ற கூந்தல் அவிழ்த்து
உடனதனை ஒழுங்குறவே கட்டிக் கொண்டாள்.

காதல் வேட்கையால் அக்கணமே மெலிந்து மேனி;
காதில் உள்ள கம்மலொன்று கழன்றுளதோ
என்று நோக்கி,

தெரியாதவள் போலத் திண்டாடி
தெருவில் சோலையில் எல்லாம் தேடி நடித்தாள்!

கணையாழி வளையல் எல்லாம் முறையே
கைவிரலில், கணுக்கைக்கு மேலே

இருக்கின்றனவா என்று; அவை
இருக்கும்போதே தடவிப் பார்த்தாள்!

அடங்காத நாணமுடன் காமம் போட்டியிட்டு
ஆடிக்காற்றாய் வீசியதால்;

ஆடை நெகிழ்ந்ததோ வென்று
அவிழ்த்து உடுத்தப் பார்த்தாள்! இப்படி
இரண்டாம் நிலை மெய்ப்பாடுகள் நான்காம்; அவை
இன்ப லீலை தொடக்கத்தின் பாங்காம்!

★

"கூழை விரித்தல், காதொன்று களைதல்,
ஊழணி தைவரல், உடை பெயர்த்துடுத்தலொடு
கெழீஇய நான்கே இரண்டென மொழிப"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 14)

கூழை = கூந்தல்

காதொன்று களைதல் = தோடு விழுந்துவிட்டதாகத் தேடுதல்

ஊழணி தை வரல் = அணிகளைத் தடவிப் பார்த்தல்.



கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா

மூன்றாம் நிலை மெய்ப்பாடுகள்

ஆடை நெகிழ்ந்தவுடன் அவிழ்த்துடுத்த
முனைந்தவள்;
ஓடை நறுமலர்ப் படர்க்கொடி மறைவில்
சென்றாள்

கணவனாக நாளை வரப் போகிறான் எனினும் –
அவன்
காணக் கூடாதென்று நாணம் தடுத்திட
படர்க்கொடி மறைவில் அந்தச் சுடர்க்கொடி
பட்டாடை முழுதும் அவிழ்த்துத் திருத்தி

அடிவயிற்றின் பாகம் ஆடைதனைக் கொசுவி
நுழைக்க
அகங்கையால் அல்குல் வரை தடவிச் சரி செய்தாள்



அப்போது வேகமாய்த் துள்ளி அடித்த சூறைக்காற்று
அவள் மேலாடையைப் பறித்துக் கொள்ள – அவளோ

இரு முழங்கைகள் குறுக்காக மார்பில் ஒடுங்க
ஈரைந்து பத்து விரல்களும் இரு தோளில் பதிந்திட
திருடிய தாமரை மொட்டிரண்டை குளக்
காவலர்க்குத்
தெரியாமல் மறைப்பது போல் தனமிரண்டை
மறைத்துக்கொண்டாள்

இவ்வாறு இல்லாத வலிமை காட்டல் உட்பட
இவை நான்கும் மூன்றாம் நிலை மெய்ப்பாடுகளாம்!

இவர்கள் தனித்து சந்தித்த இடம் விட்டுப் பெயர்ந்து
ஈருடலால் பிரிந்தனர் இதயம் மட்டும் பிரியாமல்!

★

"அல்குல் தைவரல், அணிந்தவை திருத்தல்
இல்வலி யுறுத்தல், இருகையும் எடுத்தலொடு
சொல்லிய நான்கே மூன்றுஎன மொழிப"

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 15)

தைவரல் = தடவுதல்

இல்வலி = இல்லாத வலிமை

மலர் (83)

நோன்காம் நிலை
மெய்ப்பாடுகள்

தனிமையில் நிகழ்ந்த சந்திப்பு காலத்தில்
இனிமையாய்த் திகழ்ந்த மெய்ப்பாடுகள் கடந்து

பிரிந்து சென்றோர் காதல் செறிந்த நெஞ்சுடன்;
பிறிதொருநாள் பட்டனர், சுற்றத்தார் கண்களில்!

மனந்திறந்து தலைவியைப் பாராட்டினான்
தலைவன்;
மணப்பதென முடிவுகட்டி விட்டேன் அவளை
என்றான்.

எல்லாமே முடிந்தபிறகு எங்களுக்குத் தகவலா
என்று
ஏசிப் பேசினர் ஊரார், எகத்தாளம் செய்தனர்!

மதம் பிடித்தோர் போல உற்றார் ஆனது கண்டு
மடம் விலக்கி மங்கைநல்லாள் வீரவுரை ஆற்றினாள்.

இவர் எனக்கு; நான் அவர்க்கு என ஆன பிறகு,
இடையில்
சுவர் எதற்கு சுக்கு நூறாய்ப் போகட்டு மென்றாள்!

ஊரார் உறுமினர் களவொழுக்கம் கண்டவளுக்கு
வெட்கமின்றிப் பேச்சு வேறா என வெகுண்டனர்!

சிந்தை மிகு நொந்து போன சேயிழையாள்,
முந்தையோர் முறைப்படி தலைவன் தந்த பரிசு
ஏற்றுக் கொண்டாள்

எஞ்சியுள்ள வேலை மணவிழா நாள் குறிப்பது
தானென்று,
வஞ்சியவள் சொல்லிவிட்டு வைதோரை
வாழ்த்திவிட்டுச் சென்றாள்.


★

“பாராட்டு எடுத்தல், மடம் தப உரைத்தல்
ஈரமில் கூற்றம் ஏற்று அலர் நாணல்,
கொடுப்பவை கோடல், உளப்படத் தொகைஇ
எடுத்த நான்கே நான்கென மொழிப.”

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல்
– நூற்பா 16)

பாராட்டு எடுத்தல் = காதலர்கள் ஒருவர்
மற்றவரைப் பாராட்டுதல்
மடம் தப உரைத்தல் = பேதைமை ஒழிந்துபேசுதல்
ஈரமில் கூற்றம் = பழி தூற்றும் கடுஞ்சொல்
கொடுப்பவை கோடல் = காதலன் தரும் பரிசைப்
பெற்றுக் கொள்ளல்

குறிப்பு :– மணம் நிச்சயித்துக் காதலன் தருகின்ற பரிசுக்குக் கையுறை என்று பெயராகும்.



மலர் (84)

ஐந்தாம் நிலை மெய்ப்பாடுகள்

தமிழ்ப்பேராசிரியர் முனைவர் தொல்காப்பியப் பூங்கா

‘தெ’ரிந்துடம்படுதல்’ எனும் மெய்ப்பாடு
தொடங்கவும்
‘கொடுப்பவை கோடல்’ எனும் மரபுக்கு
இணங்கவும்

கனிவுடன் காதலன் தந்த பரிசினைப் பெற்றுப்
பணிவுடன் பெற்றோர் கைகளில் வழங்கி
திருமண ஒப்புதல் பெற்றிடத் திருமகள் வந்தாள்.
“தெரு சிரிக்கத் திசையெட்டும் சிரிக்கப்
பெயர்கெடுக்கப் பிறந்தவளே!

இருமனம் ஒன்று கலந்ததென ஊர் கூட்டிச்
சொன்னவளே!
திருமணம் இனிமேல்தான் என்று தெரிவிக்க
வந்தவளே!

உற்றார் உறவினர் ஊரார் அனைவருக்கும்
தெரிந்த செய்தி
பெற்றோர் எமக்குக் காலந்தாழ்த்தித்
தருவதென்ன நியதி?''

''தலைக்கு மேல் வெள்ளம் போய்விட்டது தாயே!
தயை செய்து தடை சொல்ல வேண்டாம் நீயே!

குலப்பெருமை கெடாமல் வாழ்ந்திடுவாள் குமரி; உம்
நல உரிமை நலியாமல் காத்திடுவாள் குமரி'' –
என்று

தலைவியின் தோழி தொடர்ந்து கெஞ்சினாள் –
அந்தத்
தாய், மௌனமாய் தந்தையை நோக்கினாள்

''தாயைப் போல்தானே மகள் இருப்பாள்;
தடையின்றி ஆட்டிவிடு தலையை'' என்றார் தந்தை!

''தலை எனக்கு ஆடிக் கொண்டுதானே
யிருக்கிற''தென
தாய் முத்துதிர்த்தாள்! பல்லாண்டுக்கு முன்பே பல்

முத்துதிர்த்த பழம்பெருங்கிழவி அவள்! – தாய்
ஒத்துக் கொண்டவுடனே; தந்தையும் ஒப்புக்
கொண்டார்.

“தடையென்ன இனித் தழுவிக் கிடக்கலாம் வா”
என்றான் தலைவன்
“நடையில் வேகம் காட்டு; நடக்காது இப்போ”
தென்றாள் தலைவி!

“ஒளிந்திருந்த நாணம் மடமெல்லாம் இன்று ஓடிவந்தது எப்படியோ?” என வியந்தான்.

‘திளைப்பு வினை மறுத்தல்’ இது; எனக்குத் தித்திப்பாக இருக்குமென்றாள்;


இணைப்பு தடுக்கும் திரைகளாக எங்கிருந்தோ வந்தன அச்சமும் நாணமும்!

உடலுறவு மறுத்தாள் எனினும்; ஓர் உருவப் பட மறைவில் நின்று கொண்டு சுவைத்தாள்
அவனழகை!

மறைந்திருந்து மகிழ்வு கொள்பவளை அவனும் மறைந்து வந்து ஓடித் தழுவிக் கொண்டான்.

‘கரந்திடத் தொழிதல்’ எனும் மெய்ப்பாடு காட்டி
‘கண்டவழி உவத்தல்’ எனும் மெய்ப்பாடும்
கண்டார்!

★



"தெரிந்துடம் படுதல், திளைப்பு வினைமறுத்தல்
கரந்திடத் தொழிதல், கண்டவழி உவத்தலொடு
பொருந்திய நான்கே ஐந்தென மொழிப."

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 17)

திளைப்பு வினை = தொடர்ச்சியாக அனுபவித்தல்

கரந்திடம் = ஒளிந்து மறையும் இடம்

மலர் (85)

ஆறாம் நிலை மெய்ப்பாடுகள்

கன்னற் சுவையாகக் கனியின் சாறாகக் காந்தப்
பிணைப்பாக
என்னதான் காதலன் இதயத்தைக்
கவர்ந்திழுத்தாலும்;

சின்னஞ்சிறு சிசுவாக மடியிற்கிடந்த கால
முதல் – பெற்றோர்
பொன்னடி நிழலில் வளர்ந்த காலம் வரை மறந்து
போமோ?

மறக்காத காரணத்தால்தான் மணவிழா
அலங்காரம் நடக்கும்போதும்
மனங்கலங்கி வாடுகிறாள்; பிரிய வேண்டுமே
பெற்றோரை என்று! அந்தப்

"புறஞ்செயச் சிதைதலை" யொட்டிப் "புலம்பித்
தோன்ற"லில் கூட
திறமிகு காதலன் எங்குற்றான்; இங்கில்லாமல்
என்ற ஏக்கம் உண்டு அவளுக்கு!

உற்றார் உறவினர் ஒரு கூட்டமே சூழ்ந்திருந்தும்
– அவள்
ஒருத்தி மட்டும் தனியே இருப்பதாக உணர்ந்தாள்!

காதலனைக் கண நேரம் காணாத குறையால்
கவலையுற்று
'கலங்கி மொழி'ந்தாள் தோழியிடம் எங்குற்றான்
அவன் என்று?

களிப்பும் கவலையும் ஊமை வெயிலாய்க்
காய்ந்ததினாலே
'கையறவு' எனும் செயலற்ற நிலை பெற்றாள்.

இன்ப மாயினும் துன்பமாயினும் எல்லை கடந்து
விட்டால்
என்ன செய்வதென்று தெரியாத நிலை பிறக்கும்!

இது அவளுக்கு மட்டுமில்லை;
இயல்பான ஒன்று எல்லோருக்குமே!


★

"புறஞ்செயச் சிதைதல், புலம்பித் தோன்றல்
கலங்கி மொழிதல், கையறவு உரைத்தலொடு
புலம்பிய நான்கே ஆறென மொழிப."

(பொருளதிகாரம் – மெய்ப்பாட்டியல் – நூற்பா : 18)

புறஞ்செய = புறத்தே அணி செய்தல்

கையறவு = செயலற்ற நிலை



உவமை அறிவோம்!

முனைவர் ப.பாண்டியராஜா
தமிழ்த்துறைத் தலைவர்
கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா

- “வினை பயன் மெய் உரு என்ற நான்கே
வகை பெற வந்த உவமைத் தோற்றம்”
(பொருளதிகாரம் – உவமையியல் – நூற்பா : 1)

ஒரு பொருளொடு ஒரு பொருளை ஒப்புமை கூறி விளக்குவது ‘உவமை’ என்று அழைக்கப்படும்.


‘முத்தாரம்’ போலப் பல்வரிசை என்கிறபோது, பல்வரிசை பொருளாகிறது. முத்தாரம் என்பது உவமையாகிறது.

ஆனால் வடமொழி நூலார்; பொருளை “உவமேயம்” என்றும், அதற்கு ஒப்புமையாகக் கூறப்படும் பிற பொருளை “உபமானம்” என்றும் கூறுவர், எனக் குறிப்பிடுகிறார் வெள்ளைவாரணனார்.

வடநூலார் வழக்கில் பல்வரிசை என்பது உவமேயம்.

முத்தாரம் என்பது உபமானம்.

இவ்வாறே பயிற்றுவிக்கப்படும் நிலையும் கூட உளது!



உவமையும் பொருளும் ஆகிய இரண்டின் கண்ணும் – நிறம், வடிவு, செயல், பயன் பற்றி அமைந்த ஒப்புத் தன்மை 'பொதுத் தன்மை' எனப்படும். அத்தன்மையை விளக்குவதற்கு அவற்றைச் சார்ந்துவரும் அன்ன, ஆங்க, போல முதலிய இடைச்சொற்களை 'உவம உருபு' என்பார்கள்.

உம் :– மயிலன்ன சாயல்
மான் போலத் துள்ளினாள்

தொடக்கத்தில் • குறியிடப்பட்ட நூற்பாவுக்கு விளக்கமாகப் பொருள் காணும்போது,

'வினை' என்றால் செயல் – 'பயன்' என்றால் விளைவு – 'மெய்' என்றால் வடிவம் – 'உரு' என்றால் நிறம் எனக் கொள்ளப்படும்.

மேலும் நூற்பாவில் "வகை பெற வந்த உவமைத் தோற்றம்" என்பதற்குப் "பாகுபட வந்த உவமைக்கண்" என்று பொருள்!

இவற்றில் பார்வைக்குப் புலனாகும் பொருள்களும் ஒப்புவமைகளும் என்று ஒரு வகையும்;

அவ்வாறு அல்லாமல், அந்த உவமைகள் செவியினாலும், நாவினாலும், மூக்கினாலும், மெய்யினாலும், மனத்தினாலும் அறியக் கூடியவை என்று ஒரு வகையும் உண்டு.

மொத்தத்தில் பாகுபட வருதல் என்பதாவது கண் முதலிய பொறிகளுக்குப் புலப்படுபவையும், பொறிகளுக்குப் புலனாகாது மனத்திற்குப் புலனாவனவும் என இருவகையாகும்.

எடுத்துக்காட்டி விளக்க வேண்டுமானால்;

- 'சிட்டுப் போலப் பறந்துவிட்டாள்' என்கிற போது அவள் பறந்துவிட்ட செயல் சிட்டுக் குருவி பறப்பதோடு ஒப்பிடப்பட்டு கூறியமையால் பறப்பது என்ற வினை அல்லது செயல் அடிப்படையில் 'வினை உவமை' ஆகிறது!

- 'மழை நிகர் வள்ளல்' என்றால் மழையைப் போல் பயன்தரக் கூடிய வள்ளல் என்றாகி, 'மழை' என்பது 'பயனுவமை' ஆகிறது!

- 'சங்கனைய கழுத்து' என்றால்; 'வடிவு உவமை' ஆகிறது!

- 'பொன்னார் மேனியள்' என்றால் பொன் போன்ற நிறமுடையவள். எனவே 'உரு உவமை' எனப்படுகிறது.

இவற்றேயன்னியில்;

- 'குழல் போன்ற மொழி' என்பது செவியால் அறிந்து கூறப்படுவது.

- 'தேன் போல் இனிக்கும்' என்பது நாவினால் அறிந்து கூறப்படுவது.

- ‘கோடை வெயிலாய் தகிக்கும்’ என்பது மெய்யினால் அறிந்து கூறப்படுவது.

- ‘மணக்கும் தென்றல்’ என்பது மூக்கால் அறிந்து கூறப்படுவது.

- “. . . . . பசித்த மக்கள்
  சிறிது கூழ் தேடுங்கால்
  பானை ஆரக் கனத்திருந்த
  வெண்சோறு காணும் இன்பம்
  கவின் நிலவே உனைக் காணும்
  இன்பம் தானோ” – (பாவேந்தர்)

  என்பது மனத்தால் அறிந்து கூறப்படுவது.

உவமை இயலின் முதல் நூற்பா இவ்வாறு விரித்துரைப்பதுடன்; மேற்கூறிய உவமைகள் ஒரேயொரு பொருளில் மட்டும் வருவதின்றி இரண்டும் பலவும் கலந்து வரும் என்பதை

★

“விரவியும் வரூஉம் மரபின என்ப”

(உவமையியல் – நூற்பா : 2)

(விரவி = கலந்து)

எனும் இரண்டாவது நூற்பா குறிப்பிடுகின்றது.

மலர் (87)

உவமையின் சிறப்பு

உவமையின் சிறப்பால், உவமிக்கப்படும் பொருள் சிறப்படைகிறது என்பதை,

"உயர்ந்ததன் மேற்றே உள்ளுங் காலை"

(பொருளதிகாரம் – உவமையியல் – நூற்பா : 3)

எனும் உவமையியலின் 3வது நூற்பா சுட்டிக் காட்டுகிறது.

செந்தாமரையன்ன முகம் என்கிறபோது உவமிக்கப்படும் பொருளான முகம்; செந்தாமரையுடன் ஒப்பிடும்போது சிறப்படைகிறது.

உவமிக்கப்படும் பொருளை விட உவமை சிறப்பானதாக இருக்க வேண்டும்.

"சிங்கமென நின்றான்"

என்கிறபோது மனிதன் உயர்ந்தவனா ? சிங்கம் உயர்ந்ததா என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டால் "உவமை"யின் மாற்றுக் குறையும். ஆனால் இங்கே நாம் ஒப்பிட்டு உவமை காண்பது;

சிங்கத்தின் வலிமையையும் அதன் கம்பீரத் தோற்றத்தையும் என்கிறபோது உவமைக்கு எடுத்துக் கொண்ட பொருள், உவமிக்கப்படும் பொருளைவிட சிறப்பானதாகவே அமைந்தது எனலாம்.

பாராட்டுகிற முறையில்;

"பாயும் புலி" போன்றவன் பண்டாரக வன்னியன் என்கிற போது உவமை, சிறப்புற அமைகிறது.

அதே போலப் பாராட்டுகிற வகையிலே "மலை எலி" போன்றவன் மாவீரன் சிவாஜி என்கிற போது, உவமையின் சிறப்பில் மாற்றுக் குறைகிறது. உவமிக்கப்படும் பொருள் சிறப்புக்குரியது என்பதால்;

இதனை விதிவிலக்காகவே கொள்ள வேண்டியுள்ளது.

உவமை நிலைக்களம்!

“**சி**றப்பே நலனே காதல் வலியோடு.
அந்நாற் பண்பும் நிலைக்கள மென்ப”

(உவமையியல் – நூற்பா : 4)

உவமை என்பது அதைவிட
உயர்ந்தவைகளுடன் உவமிக்கப்பட்டாலும்
அவை ‘சிறப்பு’ – ‘நலன்’ – ‘காதல்’ – ‘வலிமை’
ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு வரும்
என்பது இந்த நூற்பாவின் கருத்தாகும்.

இந்த நூற்பாவையொட்டி; நான் எழுதிய
‘ரோமாபுரிப் பாண்டியன்’ எனும் வரலாற்றுப்
புதினத்திலிருந்து சில மேற்கோள்களை இந்த
உவமையியல் இலக்கணத்திற்கேற்ப
எடுத்தியம்ப விரும்புகிறேன்.

கி.மு. 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில்
ஒரு நாள் – சோழப் பெரு மன்னன் கரிகாலனின்

திருநகரம் பூம்புகார்ப்பட்டினம் புதிய பொலிவு பெற்றுத் திகழ்ந்தது. சோழர் கொடியும், பாண்டியர் கொடியும் பூம்புகாரின் மருவூர்ப்பாக்கக் கடற்கரையையொட்டிய மாளிகைகளில் இணைந்து பறந்தன. பாண்டியன் பெருவழுதியும் சோழன் கரிகாலனும் அன்றைய தினம் புகார் நகரில் சந்தித்துத் தமது நட்புறவை நிலைநாட்டுகின்றனர்.

அப்போது புலவர் காரிக்கண்ணனார் இரு வேந்தர்களையும் பற்றிய பாராட்டு வாழ்த்துப் பாடுகிறார்.

"நீயே, தண்புனல் காவிரிக்
கிழவனை; யிவனே....."

என்று தொடங்கி,

"நெல்லும் நீரும் எல்லார்க்கும் எளியவென
வரைய சாந்தமும் திரைய முத்தமும்
இமிழ்குரல் முரசும் மூன்றுடன் ஆளும்
தமிழ்கெழு கூடல் தண்கோல் வேந்தே"

என்று அந்த ஒற்றுமைக்கும் உயர்ந்த நட்புக்கும் புகழ்மாலை சூட்டுகிறார்.

இரு மன்னர்களும் ஒன்றாக அவைக் களத்தில் வீற்றிருப்பது போலவே அந்த அவையில் மட்டுமல்ல; நகர் முழுவதும் இசையும் கூத்தும் ஒன்றிக் கலந்தன எனும்படியாக எங்குநோக்கினும் ஆடலும் பாடலுமாக ஒத்து நிகழ்ந்தன.

இந்த உவமை; சிறப்பினை அடிப்படை நிலைக்களமாகக் கொண்டு தோன்றியதாகும்.

சிறப்பு என்பது இயல்பு வகையாலன்றிச் செயற்கை வகையாற் பெறுவதாகும்.

நூற்பாவில் குறிக்கப் பெறும் 'நலன்' என்பது ஒரு பொருட்கண் இயல்பாய்த் தோன்றிய நன்மை. அதாவது கிணறு தோண்டும் போது ஊற்று இயல்பாகத் தோன்றுவது போல! 'சிறப்பு' என்பதோ, குளம் அமைத்து அதற்கு ஆற்றிலிருந்து வாய்க்கால் வெட்டி அதன் மூலம் குளத்தில் தண்ணீர் நிரப்புவது போல!

அந்தச் சிறப்புதான் சோழன் கரிகாலனும், பாண்டியன் பெருவழுதியும் ஒன்றாக ஓரவையில் அமர்ந்து இணைந்து நட்பு பாராட்டுவது இசையும் கூத்தும் ஒன்றிக் கலந்தது எனும் உவமைக்கு நிலைக்களமாயிற்று.

மருவூர்ப்பாக்கத்தில் வாழும் வணிகர், யவனர், பட்டாடை பருத்தி ஆடை கம்பளி ஆடை நெய்வோர், பொற்கொல்லர், பூ கட்டுவோர், ஓவியர், சிற்பிகள், மாலுமிகள் மற்றும் பட்டினப்பாக்கத்தில் மருத்துவர், மறையோர், அரண்மனை அலுவலர், பாணர், இசைவாணர் அனைவரும் நகரை மேலும் அழகுபடுத்தினர்.

ஏற்கனவே கரிகால் சோழனுக்கு மகத நாட்டு மன்னன் வழங்கிய பட்டி மண்டபமும், வச்சிர நாட்டு அரசன் அளித்த கொற்றப்

பந்தரும், அவந்தி நாட்டு வேந்தன் தந்த தோரணவாயிலும்; என எல்லாமே சேர்ந்து ஒளி உமிழ்ந்து புகார் நகரை ஓர் ஓவியப் பொழில் போலவும், சிற்பக் களஞ்சியம் போலவும் ஆக்கியிருந்தன.

நகரின் நலன் விளங்கக் கூறப்பட்டுள்ள உவமையானபடியினால் இந்த உவமை 'நலன்' என்பதை நிலைக்களமாகக் கொண்டு பிறந்த தாகும்.

அதே வரலாற்றுப் புதினத்தில் பிறிதோர் அத்தியாயத்தில் ரோமாபுரியில் ஜூனோ என்ற அழகியைச் சந்தித்தபோது செழியன் என்பான் எண்ணிக் கொள்கிறான்.

"அடடே; இந்த ஜூனோவைப் பார்க்கும்போது என் தாமரைதான் ஆண்டவனிடம் வரம் பெற்று தேவதைகளைப் போல இறக்கைகளைக் கட்டிக் கொண்டு இப்படி உரோமாபுரி மண்ணிலே திடீரென்று குதித்திருப்பாளோ?"

இவ்வாறு செழியன் நினைப்பது அவன் தாமரை என்ற தன் தமிழ்நாட்டுக் காதலியிடம் கொண்டுள்ள அன்பை வெளிப்படுத்துவதால்; இந்த உவமைக்கு நிலைக்களமாக 'காதல்' அமைகிறது.

அதே புதினத்தில்; முக்கிய பாத்திரங்களில் ஒருவரான கரிகால் சோழனைப் பற்றி கடியலூர் உருத்திரங்கண்ணனார் இயற்றிய பாடல் ஒன்றும் சுட்டிக் காட்டப்படுகிறது.

“திருமாவளவன் தெவ்வர்க் கோச்சிய
வேலினும் வெய்ய கானமவன்
கோலினுந் தண்ணிய தடமென் தோளே”

காதலியின் தோள் மீது கையைப் போட்டுக் கொண்டு காதலன் காட்டு வழி செல்கிறான். அப்போது அவன் அந்தக் காட்டுக்கு உவமை தேடுகிறான்.

“கரிகால் திருமாவளவன், தனது பகைவர் மீது வீசிய வேலைக் காட்டிலும் கடியதாம் அந்தக் காடு! காதலியின் தோள்; கரிகாலனின் செங்கோலைப் போல குளிர்ச்சியானதாம்!”

இவற்றில் கரிகாலனின் வேல் வலிமைக்கு; கடிய காடு உவமையாக்கப்படுவது காணும்பொழுது; இந்த உவமைக்கு ‘வலிமை’ நிலைக்களமாகிறது.

எனவே, சிறப்பு – நலன் – காதல் – வலிமை இந்த நான்கையும் உவமையின் நிலைக்களம் எனக் கூறும்பொழுது; இவற்றை அடிப்படையாகக் கொண்டில்லாமல் எத்தகைய உவமையும் பிறக்காது.

கலைஞரின் தொகுப்பியப் பூங்கா

ஐந்தாம் நிலைக்களமிது

"**கி**ழக்கிடு பொருளோ டைந்து மாகும்"


(பொருளதிகாரம் – உவமையியல் – நூற்பா : 5)

இதற்கு முதல் கூறப்பட்டவாறு உவமை தோன்றிட சிறப்பு, நலன், காதல், வலிவு எனும் நான்கு நிலைக்களங்களையல்லாமல் ஐந்தாவதாக ஒரு நிலைக்களமும் உண்டாம்.

அது தாழ்ந்த பொருளோடும் உவமை பொருந்துமிடத்து உவமிக்கப்படும்.

கிழக்கிடு பொருள் என்றால் கீழ்ப்படுக்கப்படும் பொருள் அல்லது இழிவான – தாழ்வான பொருள் எனப்படுவதாகும்.

"பேரூர் ஒன்றில் ஐந்து கழுதைகளை வைத்துக் கொண்டு சலவைத் தொழில் நடத்திக் கொண்டிருந்தான் ஒருவன். ஒரு நாள் இரவு அவற்றில் ஒரு கழுதை காணாமற் போய் விட்டது. அதைத் தேடியலைந்தான் இரவு முழுதும். கடைசியாக விடியற்காலை நேரம்



ஒரு வீட்டில் கழுதை கத்துகிற குரல் கேட்டது. "ஆகா! கண்டேன் என் கழுதையை!" என்று சப்தமிட்டுக் கொண்டு அவன் அந்த வீட்டுக்குள் நுழைந்தான். வீட்டுக் கூடத்தில் – அந்த விடியற்காலை நேரத்தில் – அந்த வீட்டுப் பாகவதர் சங்கீத சாதகம் பண்ணிக் கொண்டிருந்தார்.

ஓடி வந்தவனைப் பார்த்து வியப்புடன் "என்ன விஷயம்?" என்று கேட்டார் பாகவதர்.

"என் கழுதை காணாமல் போய் விட்டது. தேடியலைகிறேன். உன் சங்கீதம் என் கழுதையின் குரல் போலவே இருந்ததால் இங்கு வந்தேன்" என்றான்.

"சரிதான் போடா! நாய் மாதிரி குரைக்காமல் வெளியே போடா!" என்று ஆத்திரமாகக் கத்தினார்.

இருவருக்கும் வாய்த் தகராறு முற்றிப் போய் பெரிய அமளியே ஏற்பட்டது.

அப்போது எதிர் வீட்டுக்காரர் எழுந்து வந்து "என்னய்யா; நரிகள் மாதிரி ஊளையிடுகிறீர்கள்?" எனக் கேட்டார்.

இருவரும் சேர்ந்து அவரிடம் சண்டைக்குச் சென்றார்கள். அப்போது அவ்வழியாக வந்த இலக்கணப் பண்டிதர் ஒருவர்; அவர்களைச் சமாதானப்படுத்திவிட்டுச் சொன்னார்;

"கழுதையை உவமையாக்கியதும் நாய், நரிகளை உவமையாக்கியதும்

உவமை இயலில் வரும் ஐந்தாவது உவமை நிலைக்களமாகும். அதாவது ஒரு பொருளின் இழிவைப் புலப்படுத்து வதாகும். உவமையினால் அதன் இயல்பு தோன்றக் கூறுவது இயல்பு ஆதலால் கிழக்கிடு பொருள் எனப்படும்''

அவர் சொன்னதைப் புரிந்து கொள்ள முடியாததால்; ஏதோ நல்ல வார்த்தை சொல்லி சமாதானப்படுத்துகிறார் என அவர்கள் நினைத்து; சப்தம் போடுவதை நிறுத்திக் கொண்டார்கள். சண்டை ஒய்ந்தது.

இந்தக் கதையின் மூலம் உவமையின் நிலைக்களங்கள் கிழக்கிடு பொருளையும் சேர்த்து ஐந்தாகிறது.

கற்கண்டும் மயிலும்!

தமிழ்ப்பாப் பூங்கா
இலக்குனரின் தொல்கா

"உவமமும் பொருளும் ஒத்தல் வேண்டும்"

(பொருளதிகாரம் – உவமையியல் – நூற்பா : 8)

உவமையும் பொருளும் படிப்போர் அல்லது கேட்போர் மகிழ்ந்து ஏற்குமளவுக்கு ஒத்தனவென்று அமைந்திட வேண்டும்.

உதாரணமாக "துடியிடை" என்கிற போது "துடி" என்பதற்கு "உடுக்கு" எனப் பொருள் கொள்கிறோம். அடி வயிறுப் பகுதியும், மார்புப் பகுதியும் அகன்று விரிந்த தோற்றத்துடனும் இடைப்பகுதி சுருங்கிய தோற்றத்துடனும் – அதாவது மேல் பகுதியும் கீழ்ப் பகுதியும் விரிந்து இடையே குறுகியிருப்பதால் 'துடியிடை' என உவமை கூறப்படுகிறது.

மேலும் கீழும் விரிந்திருந்து, இடையே குறுகியிருந்தால் போதும் என்பதற்காக இடைக்கு உவமையாக உரலைக் காட்ட முடியுமா? முடியாது! காட்டப்படுவதில்லை!

அதனால்தான் உவமையானாலும் பொருளானாலும் ஒத்தனவாகவும் ஏற்கத்தக்க வகையிலும் இருக்க வேண்டுமென இந்நூற்பா குறிப்பிடுகிறது.

இதுபற்றிக் கூறும் பேராசிரியம்; 'மயில் தோகை போலும் கூந்தல்' என்று சொல்லாமல்,

'காக்கைச் சிறகன்ன கருமயிர்' என்று சொன்னால் அது ஒத்ததெனப் படாது என்கிறது.

அதனால் 'காக்கைச் சிறகே' வெறுத்து ஒதுக்கப்பட வேண்டிய ஒன்றாகி விடாது.

தேசியக் கவி பாரதியார் "காக்கைச் சிறகினிலே நந்தலாலா நின்றன் கரிய நிறம் தோன்றுதையே நந்தலாலா" என இயற்றியுள்ள பாடலில் கரிய நிறமோ, காக்கைச் சிறகோ உவமையாகப் பயன்படுத்தப்படவில்லை யெனினும் – பாராட்டுக்குரிய பொருள்களாகவே குறிப்பிடப்படுகின்றன.

"அருவியன்ன கூந்தல்" என்கிற போது; அப்படியென்றால் நரைத்த கூந்தலா எனக் கேட்கக் கூடாது. அவ்வளவு அடர்த்தியாகவும், நீளமாகவும் அமைந்த கூந்தல் என்று மட்டுமே அந்த உவமையை எடுத்துக் கொள்ள வேண்டும்.

"கருவண்டுகள் போன்ற கண்கள்" எனும் உவமை கூறப்படும் போது, கண்கள் வண்டு போல கால்கள் பெற்றிருப்பதில்லையே; பறப்பதில்லையே என்றெல்லாம் ஐய வினா

தொடுத்து உவமையின் சிறப்பைக் குலைத்து விடவும் கூடாது.

> "தமக்குத் தோன்றியவற்றையெல்லாம் உவமையாகக் கூறாது, எடுத்துக் கொண்ட பொருளுக்கு ஏற்புடையன என உலகத்தார் ஒத்துக் கொள்ளத் தக்கவற்றையே உவமையாகக் கூறுதல் வேண்டும்"

என்று பெரும்புலவர் வெள்ளைவாரணனார் இந்நூற்பா பற்றி விளக்கமளித்திருப்பது கருதத் தக்கது.

மலர் (91)

உருவகமா உவமையா?

“பொருளே யுவமஞ் செய்தனர் மொழியினும்
மருளறு சிறப்பினஃ துவம மாகும்”
(பொருளதிகாரம் – உவமையியல் – நூற்பா : 9)

உவமிக்கப்படும் பொருளை
உவமையாக்கிக் கூறினாலும் குழப்பமற்ற
(மயக்கமற்ற) சிறப்புத் தன்மையினால்;
ஒன்றோடொன்றை ஒப்பிடும் உவமையாகவே
நின்று பொருள் தெளிவதற்குப்
பயன்படுமென்கிறது இந்த நூற்பா!

நூற்பாவில் ‘பொருள்’ என்பதும், ‘அஃது’ என்பதும் உவமேயத்தையே குறிப்பனவாகும்.

இதற்குப் பேராசிரியம்; பின்வருமாறு விளக்கம் தருகிறது.

“வருமுலை யன்ன வன்முகை யுடைந்து
திருமுக மவிழ்ந்த தெய்வத் தாமரை”

எனும் சிறுபாணாற்றுப் படை செய்யுளை நினைவுபடுத்தி அந்த நிலையில் வருமுலையும்

திருமுகமும் இங்கே உவமையாகி, முகையும் பூவும் பொருளாயின; அங்கே முலையும் முகமும் உயர்ந்தவாகச் செய்தமையின் அவையே உவமை ஆயின என்கிறது பேராசிரியம்.

மேலும், இவை உவமைத்தொகை யாங்கால் முலைக் கோங்கம் முகத் தாமரை எனப்படும். முகமொக்கும் தாமரை யென்றால் முகத்திற்கும் தாமரைக்கும் சிறப்புடைமை மயங்கி வராது. முகத்திற்கே சிறப்பாம் என்றும் பேராசிரியம் விளக்குகிறது.

"தாமரை முகம்" என்பதை "முகத் தாமரை" என மாற்றி உவமை கூறுமிடத்துவரும் உவம வேறுபாட்டினைப் பிற்கால அணி இலக்கண நூலார் 'உருவகம்' எனப் பிறிதோர் அணியாகக் கொள்வர். இங்ஙனம் வருவதனை 'உருவகம்' என வேறோர் அணி ஆக்காது, உவமையின் வகையாகக் கொள்ளுதலே தொல்காப்பியனார் கருத்து என்பது இளம்பூரணமும், பேராசிரியமும் தந்துள்ள உரை விளக்கங்களால் புலனாகும் என்கிறார் வெள்ளைவாரணனார்.

உவமம் = உவமை

உபமானம் = ஒரு பொருளுக்கு ஒப்பாக உரைக்கத்தக்க உயர் பொருள்

உவமேயம் = உவமிக்கப்படும் பொருள்

கோங்கம் = ஒரு மலர்

மருள் = மயக்கம்



வெள்ளைவாரணனார் விளக்கம்!

“மரபு என்பது என்னையெனின் – கிளவியாக்கத்து மரபென்று வரையறுத்து ஓதப்பட்டனவும் செய்யுளியலில் மரபென்று ஓதப்பட்டனவும் அன்றி, இரு திணைப் பொருட்குணனாகிய இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிய வரலாற்று முறைமையும், உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும், அஃறிணையுடன் புல்லும் மரமும் பற்றிய மரபும், அவை பற்றி வரும் உலகியல் மரபும், நூல் மரபும் இவையெல்லாம் மரபெனப்படும்” என்கிறது வெள்ளைவாரணனாரின் ஆய்வுரை.

அந்த ஆய்வுரையில் “உயர்திணை நான்கு சாதி பற்றிய மரபு” பற்றி அவர் கருத்தை இக்கட்டுரையின் பிற்பகுதியில் குறிப்பிடுகிறேன்.

இப்பொழுது முதலில் இருதிணைப் பொருட்களின் இளமையும் ஆண்மையும் பெண்மையும் பற்றிக் கருதிப் பார்க்கும்போது உலக வழக்கில் அவை எத்தனையோ



மாற்றங்களைப் பெற்றிருக்கின்றன என்பதை அறிய முடிகிறது.

"மூங்கா வெருகு எலி மூவரி அணிலொடு
ஆங்கு அவை நான்கும் குட்டிக்குரிய"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 6)

மூங்கா = கீரி
வெருகு = பூனை
மூவரி அணில் = முதுகில் மூன்று கோடுள்ள அணில்

கீரி, பூனை, எலி, அணில் ஆகிய இவை இளமையில் குட்டி என அழைக்கப்படுவதாகக் கூறுகிறது இந்த நூற்பா.

ஆனால் வழக்கத்தில் 'கீரிக்குட்டி' என்றும், எலிக்குட்டி என்றும், அணில்குட்டி என்றும் அழைப்பதில்லை.

கீரிப்பிள்ளை, எலிக்குஞ்சு, அணில் குஞ்சு என்றுதான் குறிப்பிடுகிறோம். பூனைக்குட்டி யொன்றைத்தான் 'குட்டி' யென அழைக்கும் வழக்கம் உள்ளது. இவ்வாறு மரபியலில் குறிப்பிடப்படும் பலவற்றைப் பல்லாண்டு கால வழக்கியல் மாற்றியுள்ளது.

நரிப்பிள்ளை, பன்றிப்பிள்ளை என்றெல்லாம் கூட மரபியல் குறிப்பிடுவதை; இன்றைய வழக்கியல் மாற்றி விட்டதை உரையாசிரியர்களும் சுட்டிக் காட்டிடத் தவறவில்லை.

"உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபும் அஃறிணையுடன் புல்லும் மரமும் பற்றிய மரபும், அவை பற்றி வரும் உலகியல் மரபும் நூல் மரபும் இவையெல்லாம் மரபெனப்படும்"

என்று விளக்கியுள்ள வெள்ளை வாரணனார் "உயர்திணை நான்கு சாதி" என்பதை, சமயம் வாய்க்கும் போதெல்லாம் மறுத்துள்ளார்.

"உயர்திணை, நான்கு சாதியையும் குறித்து வழங்குதல் தொல்காப்பியர் காலத்துக்கு மிக மிகப் பிற்பட்ட கால வழக்காகும்" என்று அவர் கருத்தறிவித்திருப்பதுடன் விரிவான மறுப்பு விளக்கமொன்றையும் காய்தல் உவத்தலுக்கிடமின்றி எழுதியுள்ளார். "தொல்காப்பியம் தமிழ் இலக்கிய வரலாறு" எனும் பெரும் நூலில் அது இடம் பெற்றுள்ளது. பெரும் புலவர் வெள்ளைவாரணனார் நடுநிலை நோக்குடைய நல்ல தமிழறிஞர். இறையன்பர். எச்சார்பும் இல்லாதவர். ஒரே சார்பு தமிழ்ச் சார்புதான் அவருக்கு! இதோ; அவர் எழுதுகிறார்.

"உயர்திணை நான்கு சாதியும் பற்றிய மரபுகளைக் கூறுவனவாக 71 முதல் 85 முடியவுள்ள பதினைந்து சூத்திரங்களும் பிற்காலத்தாரால் இவ்வியலிற் புகுத்தப்பட்ட இடைச் செருகல் ஆகும்.

மக்களை நிலவகையாற்
பகுத்துரைப்பதன்றி நிறவகையாகிய
வருணத்தாற் பகுத்துரைக்கும் நெறியினை
ஆசிரியர் தொல்காப்பியனார் மக்களது
ஒழுகலாறுகளை விரித்துரைக்கும் முன்னைய
இயல்களில் யாண்டும் குறிப்பிடவேயில்லை.

இளமை, ஆண்மை, பெண்மை முதலியன காரணமாகத் தம் காலத்திற் பயின்று வழங்கிய மரபுப் பெயர்களைத் தொகுத்துணர்த்தும் முறையிலேயே ஆசிரியர் இம்மரபியலை அமைத்துள்ளார். இதன்கண் 1 முதல் 70 வரையுள்ள சூத்திரங்களும், 86 முதல் 90 வரையுள்ள சூத்திரங்களும் இம்மரபினையே தொடர்ந்து விரித்துரைப்பனவாக அமைந்துள்ளன. இயல்பாக அமைந்த இத்தொடர்பு இடையறவுபட்டுச் சிதையும் நிலையில் உயர்திணை நான்கு சாதிகளையும் பற்றிய பதினைந்து சூத்திரங்கள் 71 முதல் 85 வரையுள்ள எண்ணுடையனவாக இதன்கண் இடையே புகுத்தப்பட்டுள்ளன.

முன், அகத்திணை யொழுகலாற்றுக்குரிய மக்களை வகைப்படுத்துக் கூறிய நிலையிலும் புறத்திணை யொழுகலாற்றில் வாகைத் திணைப்பகுதிகளை விரித்துரைத்த நிலையிலும் மக்களை அவர்கள் வாழும் நிலத்தாலும் அவரவர்கள் மேற்கொண்ட தொழில் வகையாலும் பகுத்துரைத்ததன்றி அவர்களை வேளாண் மாந்தரென்றோ வைசியரென்றோ இவ்வாறு வருணம் பற்றி ஆசிரியர் யாண்டும் குறிப்பிடவேயில்லை. வைசிகன் என்ற சொல், சங்கச் செய்யுட்களில் யாண்டும் வழங்கப் பெற்றிலது. வருணம் நான்கு என்ற தொகையினை ஆசிரியர் முன் தெளிவாகச் சொல்லாத நிலையில் அரசர் வணிகர் என்ற இருதிறத்தாரையும் 'இடையிரு வகையோர்' என இங்குக் குறிப்பிட்டார் எனல் பொருந்தாது.

அன்றியும் அவ்விருதிறத்தோரல்லாத பிறர்க்குப் படைப்பகுதி கூறுதல் இல்லையெனக் கூறும் இவ்வியல் 77ஆம் சூத்திர விதி, பின்னுள்ள 82ஆம் சூத்திர விதிக்கும் சங்க நூல்களிற் காணப்படும் பழந்தமிழ் வழக்குக்கும் முற்றிலும் முரண்பட்டதாகும். வேளாண் மாந்தர் என்றதொரு குலப்பிரிவு தொல்காப்பியனாரால் முன்னர்க் குறிக்கப் பெறவில்லை. உரிப் பொருளாகிய ஒழுகலாறு பற்றிய இச்செய்திகள் முதல், கரு, உரி என்னும் பொருட்பகுதிகளை விளக்க அகத்திணையியல், புறத்திணையியல் முதலாக முன்னுள்ள இயல்களிற் கூறத் தக்கனவேயன்றி, மரபுச் சொற்களின் வழக்குப் பயிற்சியைக் கூறுதற்கமைந்த இம்மரபியலில் இடம் பெறத் தக்கன அல்ல.

ஆகவே, 71 முதல் 85 வரையுள்ள இச்சூத்திரங்கள் பதினைந்தும் நால்வகை வருணப் பாகுபாடு இத்தமிழ் நாட்டில் உலக வழக்கில் வேரூன்றத் தொடங்கிய மிகப் பிற்காலத்திலேதான் இம்மரபியலில் இடம் பெற்றிருத்தல் வேண்டுமென்பதும், பிற்றை நாளில் களப்பிரர் போன்ற அயல் மன்னரது ஆட்சிக்குட்பட்டுத் தமிழ்நாடு அல்லற்பட்ட நிலையிலே தமிழரது உரிமை யுணர்வினைச் சிதைத்ததற்குரிய இத்தகைய அடிமைக் கருத்துக்கள் சில தமிழ் முதல் நூலாகிய தொல்காப்பியத்திலும் அயலாரால் மெல்ல மெல்ல நுழைக்கப்பட்டமை வியப்பிற்குரிய தன்றென்பதும், மனு முதலிய வட மொழி நூல்களால் வளர்க்கப்பட்ட நால்வகை

வருணத்தைப் பற்றிய நம்பிக்கை தமிழ் மக்கள் உள்ளத்தில் வேரூன்றி நிலைபெற்று விட்ட பிற்காலத்திலே வாழ்ந்த உரையாசிரியர்கள் இளம்பூரணர், பேராசிரியர் முதலிய பெரு மக்களாதலின் அன்னோர் தொல்காப்பியத்திற்கு உரை காணும் நிலையில் தம் காலச் சூழ்நிலையில் அகப்பட்டு இடைச் செருகலாகிய இச்சூத்திரங்களைத் தொல்காப்பியனார் வாக்கெனவே உண்மையாக நம்பி உரையெழுத நேர்ந்ததென்பதும் ஆழ்ந்துணரத் தக்கனவாகும்.

(வெள்ளைவாரணனார்

– "தொல்காப்பிய தமிழ் இலக்கிய வரலாறு
– மரபியல் விளக்கப் பகுதி")

மலர் (93)

அன்றே வளர்ந்திருந்த அறிவியல்

தொல்காப்பியத்தில் குறிப்பாகவும் சிறப்பாகவும் பல்வேறு இயல்புகள், பழங்கால வாழ்க்கை முறைமைகள், இன்றைக்கும் போற்றிப் பின்பற்ற வேண்டிய அடிப்படைக் கட்டமைப்பு, ஒரு சில; நவீனப் புது உலகத்திற்கும் வழக்கங்களுக்கும் ஒத்து வர இயலாத நிலையுடையதாயினும் ஈராயிரம் ஆண்டுகட்கு முன்பிருந்த பழந்தமிழர் வரலாற்றுப் பெட்டகம் என்பதை நினைவூட்டும் கருவூலம் என்றெல்லாம் பெருமிதம் கொள்ளும்போது அவற்றுக்கெல்லாம் சிகரமாக மரபியலில் பின்வரும் நூற்பா அமைந்துள்ளதைக் கண்டு வியப்பு மேலிடுகிறது.

★

“ஒன்றறி வதுவே உற்றறி வதுவே
இரண்டறி வதுவே அதனொடு நாவே
மூன்றறி வதுவே அவற்றொடு மூக்கே
நான்கறிவதுவே அவற்றொடு கண்ணே

ஐந்தறி வதுவே அவற்றொடு செவியே
ஆறறி வதுவே அவற்றொடு மனனே
நேரிதின் உணர்ந்தோர் நெறிப்படுத் தினரே”

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 27)

இதன் பொருள் விளக்கம் :–

ஓரறிவுள்ள உயிர் உடம்பினால் அறியக் கூடியது. ஈரறிவுள்ள உயிர் என்பது உடம்பினாலும் வாயினாலும் அறியக் கூடியது. மூவறிவுயிராவது உடம்பினால் – வாயினால் – மூக்கினால் என மூன்றினாலும் அறியக் கூடியது. நாலறிவுயிராவது உடம்பு, வாய், மூக்கு, கண் ஆகியவற்றால் அறியக் கூடியது. ஐயறிவு உயிர் என்பது உடம்பு, வாய், மூக்கு, கண், செவி ஆகியவற்றால் அறியக் கூடியது. இவைகளேயன்னியில் ஆறாவதாக மனத்தினாலே அறியக் கூடியதே ஆறறிவு எனப்படும். இவ்வாறு உயிர்கள் ஆறு வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன.

அது மட்டுமன்றி, ஓரறிவு முதல் ஆறு அறிவு வரை பெற்றுள்ள உயிரினங்கள் எவை எவை என்பதையும் பட்டியலிட்டுக் காட்டுகிற பாங்கினை மரபியல் உணர்த்தும்போது எந்த அளவுக்கு மிகப் பழங்காலத்திலேயே அறிவியல் அடிப்படையில் வாழ்க்கை இலக்கணம் வகுக்கப் பெற்றுள்ளது என்ற மலைப்பு ஏற்படத்தான் செய்கிறது.

உலகில் வாழும் எல்லாவுயிர்களையும் அவற்றின் உடலில் அமைந்துள்ள ஐம்பொறிகளையும் உய்த்துணரும்

உட்கருவியாகிய மனத்தினையும் கொண்டு
அவ்வுயிர்கள் ஓரறிவு முதல் ஆறறிவீறாகப்
படிப்படியே அறிவினாற் சிறந்து விளங்குந்
திறத்தினை நமக்கு நெடுங்காலத்திற்கு
முன்னரே வாழ்ந்த நுண்ணுணர்வாளர்கள்
ஆராய்ந்து வெளிப்படுத்தியுள்ளனர். உயிர்கள்
தாம் பெற்றுள்ள மெய், வாய், மூக்கு, கண், செவி
என்னும் ஐம்பொறிகளின் வாயிலாகவும்
அகக்கருவியாகிய மனத்தின் வாயிலாகவும்
முறையே ஊறு, சுவை, நாற்றம், ஒளி, ஒலி
என்னும் ஐம்புலவுணர்வுகளையும்
உய்த்துணர்வினையும் பெற்று அறிவினால்
வளர்ச்சி பெற்றுள்ள திறத்தை நுனித்துணர்ந்து
அவற்றை அறுவகையுயிர்களாகப்
பகுத்துரைக்கும் இவ்வுயிர்ப் பாகுபாடு பண்டைத்
தமிழர் கண்டுணர்த்திய பொருளிலக்கண
மரபாகும்.

"புல்லும், மரனும் ஓரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"
(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 28)

எனும் நூற்பா; புல்லும் மரமும் எனும்
இருவகைத் தாவரங்களும் உடம்பினால் அறிந்து
கொள்ளக் கூடிய ஓரறிவுடைய உயிர்களாகும்
என்பதைக் குறிப்பிடுகிறது. "பிறவும்" என
இந்த இரண்டிலும் அல்லாத பிற உயிர்கள்
என்றும் உணர்த்தப்படுகிறது. அவற்றுக்கும்
உடலால் அறிந்து கொள்ளக் கூடிய ஓரறிவு
தான். தாவரங்கள் பற்றியும் இரண்டாயிரம்
ஆண்டுகட்கு முன்பே தமிழன் பெற்றிருந்த
அறிவியல் கருவூலம் தொல்காப்பியம் என்பதற்கு
இதைவிடச் சான்று வேறு எதுவும் தேவையா ?

உடம்பால் உணர்ந்து கொள்ளக் கூடிய புழுக்கள், புற்கள், மரங்கள், கொடிகள், செடிகள் எனப்படும் ஓரறிவுடைய பட்டியலுக்கு அடுத்து;

★

"நந்தும் முரளும் ஈரறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 29)

சங்கு, நத்தை, கிளிஞ்சல் போன்றவையும் ஈரறிவு உயிர்களாம். தாக்கப்படும்போது அறியும் உணர்வும், இரை கொள்ளுவதால் வாயுணர்வு மென இரு அறிவு கூறப்படும்.

★

"சிதலும் எறும்பும் மூவறி வினவே
பிறவும் உளவே அக்கிளைப் பிறப்பே"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 30)

ஈசல், எறும்பு, கறையான் இவற்றுக்கும் இவற்றையொத்த பிற உயிர்க்கும் மூவறிவு.

உடலால், வாயால், மூக்கினால் அறியக் கூடிய உயிரினங்கள் இவை.

நண்டும் தும்பியும் நான்கறிவுடையவை எனவும், விலங்குகளும், பறவைகளும் ஐந்தறிவுடையவை எனவும் மரபியல் விளக்குகிறது.

மக்கள் ஆறறிவுடையோராவர் – ஆறில் ஒன்றிரண்டு குறைவதற்கும், நிலையாக இருப்பதற்கும்; இந்த இலக்கணம் பொறுப்பல்ல!

வழக்கில் இருந்தது !

அகராதியில் மட்டுமே கண்டுபிடிக்கக் கூடிய பல சொற்கள் இன்று வழக்கில் இல்லை யென்பதையும், சில சொற்கள் வழக்கொழிந்து போய் விட்டன என்பதையும் இந்த நகைச்சுவைத் துணுக்கு விளக்குகிறது.

"மோத்தையும் தகரும் உதளும் அப்பரும்
யாத்த என்ப யாட்டின் கண்ணே"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 48)

அறிஞர் அண்ணா எழுதிய "நீதி தேவன் மயக்கம்" எனும் நாடகத்தில் இராவணன், கம்பர் மீது ஒரு வழக்கு தொடர்கிறான். "கம்பர் இராவணனை இரக்கமற்ற அரக்கன்" என்று அவரது இராமாயணத்தில் குறிப்பிட்டதை

மறுத்துத் தொடர்ந்த அந்த வழக்கில் இராவணனே நீதிதேவனின் முன்னே வாதாடுகிறான்.

"அகல்யையின் கற்பைச் சூறையாடிய இந்திரனை விட; குரு பத்தினி தாரையைக் கற்பழித்த சீடனாம் சந்திரனை விட;

சூர்ப்பனகையின் மூக்கு முலையை அறுத்த இலக்குமணனை விட; தாருகாவனத்து ரிஷிபத்தினிகளிடம் தகாத முறையில் நடந்து கொண்ட சிவபெருமானைவிட; வாலியை மறைந்திருந்து வதைத்த இராமனை விட, சீதையை அசோக வனத்தில் வைத்து அவள் கற்பு கெடாமல் பாதுகாத்த நான் எப்படி இரக்கமற்றவன் ஆவேன்?" என்பது இராவணனின் வாதம்!

நீதி தேவன், தேவர்களுக்கு விரோதமாகத் தீர்ப்பளிக்க இயலாமல் மயங்கி விழுகிறார்!

அதே போல் இதோ ஒரு கற்பனை – நால்வர் எனப்படும் இறையன்பர்கள் அப்பர், சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோர் ஆவர். நால்வரும் தமிழ்ப் பெரும் புலவர்கள்.

இவர்களில் அப்பர் எனும் திருநாவுக்கரசர் நீதி தேவனிடம் ஒரு வழக்கு தொடருகிறார்.

தொல்காப்பிய மரபியலில் என் பெயர்
அஃறிணைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளது;
அதை நீக்க வேண்டு மென்று!

"உங்கள் பெயரை தொல்காப்பியர்
வேண்டுமென்றே உங்களைக் குறைவுபடுத்திட
சேர்த்ததாகத் தெரியவில்லை – காரணம்;
காப்பியர் காலம் உங்கள் காலத்திற்கு
எவ்வளவோ முற்பட்ட காலம். அவருக்கு
பிற்பட்ட காலத்தவராகிய தங்கள் பெயருக்குக்
குறைவு ஏற்படுத்த முன்கூட்டியே அவர் எப்படி
நினைத்திருக்க முடியும்?"

என்று நீதி தேவன் கேட்டார். அதற்கு அப்பர் சொன்ன பதில்.

"கால வேறுபாடு குறித்த தங்கள் விளக்கத்தை
நான் ஏற்றுக் கொள்கிறேன். எனவே நான்
தொல்காப்பியரைக் குற்றம் சாட்டவில்லை.
என் பெயரை நீக்கினால் போதுமானது!"

என்பதாகும்.

நீதி தேவன்; அப்பர் என்ற பெயரை நீக்கி விடுமாறு ஆணை பிறப்பித்துத் தீர்ப்பளித்தார்.

அதன் பிறகு மோத்தை என்றும், தகரும் என்றும், உதளும் என்றும் இருந்த அந்தச்

சொற்களோடு இருந்த 'அப்பர்' எனும் சொல் நீக்கப்பட்டு விட்டது.

மோத்தை, தகர், உதள் எனில் ஆண் ஆடு என்றும், செம்மறிக் கடா என்றும், ஆட்டுக்கடா என்றும் பொருள். அந்தப் பட்டியலில் அப்பர் என்பதும் இருந்து வழக்கொழிந்துவிட்டது.

இது ஒரு கற்பனையான நகைச்சுவைத் துணுக்கு மட்டுமே!

ஆட்டினத்தில் ஆணுக்குரியதாய் வழங்கிய 'அப்பர்' என்ற வழக்கு பிற்காலத்தில் வீழ்ந்தது என்று தொல்காப்பிய உரைக் கருவூலங்களில் ஒன்றான பேராசிரியம் எடுத்துக் காட்டுகிறது.

மலர் (95)

கலைநிகழ்ச்சியும் களிறு பரிசும்!

“**வே**ழக் குரித்தே விதந்து களிறு என்றல்
கேழல் கண்ணும் கடிவரை இன்றே”

(பொருளதிகாரம் – மரபியல் –
நூற்பாக்கள் : 35, 36)

“கலை யென் காட்சி உழைக்கும் உரித்தே
நிலையிற்றப் பெயர் முசுவின் கண்ணும்”

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 47)

இவற்றில் கூறப்படும் களிறு, கேழல், கலை, முசு ஆகியவற்றை நினைவில் பதித்துக் கொள்ள இதோ ஒரு சிறிய வேடிக்கை நிகழ்ச்சி சொல்லப்படுகிறது.

போருக்குச் சென்ற மன்னர் வெற்றியுடன் திரும்பிவிட்டார். படை வீரர்கள் மகிழ்ச்சிக் கேளிக்கையில் ஈடுபட்டிருக்கிறார்கள். அப்போது அரண்மனை விகடகவிகள் இருவர் தெம்பாக ஆடிப் பாடச் சிறிது தேறல் அருந்திவிட்டுப் படைவீரர் மத்தியில் வெற்றி கீதம் பாடுகிறார்கள். சற்று நேரத்தில் பாட்டை நிறுத்தி விட்டு ஒரு விகடகவி, மற்றொரு விகட கவியைப் பார்த்து “அய்யா! விகட கவியாரே;

உமது செல்வாக்கில் அழகான பெண்களைக் கொண்டு ஒரு கலை நிகழ்ச்சி ஏற்பாடு செய்யலாமே!'' என்றார்.

''அதற்கென்ன இப்போதே கலை நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்கிறேன்''

என்று சொல்லி விட்டுப் போனவர்; ஒரு கருங்குரங்கின் கழுத்திலே கயிறு கட்டிக் கொண்டு வந்து, அதன் கைகளில் ஒரு கம்பு கொடுத்து ஆடச் சொன்னார். படைவீரர்கள் மத்தியில் ஒரே சிரிப்பு! மற்றொரு விகடகவி, ஆத்திரத்துடன் கேட்டார்; ''ஏனய்யா, இதுதான் அழகான பெண்ணா? இதற்குப் பெயர்தான் கலை நிகழ்ச்சியா?'' என்று!

கருங்குரங்கைக் கொணர்ந்து ஆட வைத்த விகடகவி சொன்னார்;


''தொல்காப்பிய மரபியலில் கலை என்பதற்கு முசு என்றும் ஒரு பொருள் உண்டு. அகராதியை எடுத்துப் பாரும்; 'முசு' என்றால் கருங்குரங்கு என்று கூறப்பட்டிருக்கிறது. அதிருக்கட்டும்; நீர் சொன்னவுடன் நிகழ்ச்சிக்கு ஏற்பாடு செய்தேனே; அதற்கு ஏதாவது வெகுமதி தரக் கூடாதா?''

''என்ன வெகுமதி வேண்டும் உமக்கு?''

''வேந்தரிடம் நீர் பரிந்துரைத்தால் 'களிறு' ஒன்றே எனக்குப் பரிசாகக் கிடைக்கும்''

''இதற்கேன் வேந்தரிடம் பரிந்துரை? நானே களிறு பரிசு தருகிறேன்; சற்று காத்திரும், இதோ வருகிறேன்''

என்று சென்றவர் சிறிது நேரத்தில் ஒரு பன்றியை இழுத்துக் கொண்டு அங்கே வந்தார்.



"விகடகவியாரே; இதோ நீர் பரிசாகக் கேட்ட களிறு! நீர் சொன்னீரே தொல்காப்பியம்; அதே தொல்காப்பியம் மரபியலில்தான் ஆண் யானையைக் களிறு என்றும், ஆண் பன்றியையும் களிறு என்றும் குறிப்பிடப்படுகிறது. இதோ வாங்கிக் கொள்ளும்; உம்! அழகான களிறு!"

என்றார். படைவீரர்கள் விழுந்து விழுந்து சிரித்தார்கள். "கலை" நிகழ்ச்சியும், "களிறு" பரிசும் அவர்களை விலா நோகச் சிரிக்க வைத்ததால் அதுவே போர் வெற்றிக்கான களியாட்டமாக அமைந்தது.

நூற்பாக்களுக்கான பொருள் :–

(1) ஆண் யானையைக் 'களிறு' என்று கூறுவர்.
ஆண் பன்றியையும் "களிறு" எனக் கூறுவர்.

(2) மானுக்கு உரித்தான 'கலை' யென்னும் பொருள்
முசு எனப்படும் கருங்குரங்கிற்கும் பொருந்தும்.

வேழம் = ஆண் யானை
களிறு = ஆண்யானை, ஆண் பன்றி
கேழல் = ஆண் பன்றி
முசு = கருங்குரங்கு
உழை = மான்

சென்னை-18
அண்ணா அறிவாலயம்

மலர் (96)

ஐந்து பூதங்கள்

"நிலம் தீ நீர்வளி விசும்போ டைந்துங்
கலந்த மயக்கம் உலகம் ஆதலின்
இருதிணை ஐம்பால் இயனெறி வழாமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 91)

இந்த நூற்பாவுக்கு உரை காணும் இளம்பூரணம்; நிலம், தீ, நீர், காற்று, ஆகாயம் ஆகிய ஐம்பெரும் பூதங்களும் கலந்த மயக்கம் இந்த உலகம் என்று தொடங்கி விளக்கம் கூறுகிறது.

கலத்தல்

மயக்கம்

என இரண்டுக்கும் பொருள் கூறும்போது,
கலத்தலாவது முத்தும் பவளமும் நீலமும்
மாணிக்கமும் கலந்தது போன்று எனவும்,
மயக்கமாவது பொன்னும் வெள்ளியும் செம்பும்
உருக்கி ஒன்றாதற் போன்று எனவும்
குறிக்கப்படுகிறது.

இவற்றில் முதலில் கூறப்பட்ட "கலப்பில்" விரவி நிற்பதும் – இரண்டாவதாகக் கூறப்பட்ட

“மயக்கத்தில்” வேற்றுமைப்படாமல் நிற்பதும் – என இருநிலை காண்பதால், இருநிலையையும் உலகம் உடையதாக இருப்பதால் “கலந்த மயக்கம்” எனும் சொற்றொடரை இளம்பூரணம் குறிப்பிட்டிருப்பது புலனாகிறது.

“கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது என்பாரே
அதன் பொருள் என்ன; புரிகிறதா?
கிணறு வெட்ட ‘மண்’ குவியும் – ஒரு பூதம்
பூமிக்குள் அடைந்திருந்த ‘காற்று’
வெளிக்கிளம்பும் – மறு பூதம்
பொங்கி வரும் புது ‘நீர்’ – அடுத்த பூதம்
பொலிவுமிகு ‘ஆகாயம்’ தெரியும் நீர்மீது –
நாலாம் பூதம்
புவியாளும் ஆதவனின் ‘தீ’க் கதிரால்
அந்நீரும் தூய்மையாகும் ஐந்தாம் பூதம்
இந்தப்
பஞ்ச பூதம் வருவதைத்தான்
பழையவர்கள் அழகாய்ச் சொன்னார்;
கிணறு வெட்டப்
பூதம் புறப்பட்டதென்று!”

இவ்வாறு அமைந்து; கலந்தும் மயங்கியுமுள்ளது இவ்வுலகம் ஆதலால் மேற்கூறப்பட்ட பொருள்களை உயர்திணை, அஃறிணை எனும் இரு திணையும்; ஒருவன் – ஒருத்தி – பலர் – ஒன்று – பல எனும் ஐந்து பால்களும் தவறாமலும் வேறுபடாமலுமுள்ள மரபுச் சொற்களால் வழங்குதல் வேண்டும்.

மரபு நிலை திரிந்து வேறுபடுமானால் சொற்கள் எல்லாம் பொருளிழந்து சிதைந்து விடக் கூடும். எனவே இரு திணைகள், ஐம்பால் இவை இயல்பு நெறி தவறாமல்; வேறுபாடற்ற மரபுச் சொற்களால் உலகப் பொருள்களை உணர்த்துதலின் இன்றியமையாமையை இந்நூற்பா வலியுறுத்துகிறது.

குறிப்பு :– நிலம் நீர் தீ வளி விசும்பு என அவை ஒன்றினுள் ஒன்று அடங்குமுறையில் கூறாது, "நிலந் தீ நீர் வளி விசும்போடைந்தும்" என மயங்கக் கூறியது, ஐம்பெரும் பூதங்களாகிய அவை தனித்தனியே பிரிந்து நிற்றலின்றி ஒவ்வொரு பொருளிலும் மயங்கிக் கலந்து நிற்கும் என்பது பேராசிரியம் உரையில் காணும் கருத்தாகும்.

★

வளி = காற்று

விசும்பு = ஆகாயம்

வழு = தவறு

திரிபு = வேறுபாடு – விகாரம்

தழாஅல் = தழுவுதல்

உணர்ந்தோர் அறிவர்!
அறிந்தோர் உணர்வர்!

“மரபு நிலை திரிதல் செய்யுட் கில்லை
மரபு வழிப் பட்ட சொல்லி னான”

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 92)

மரபு நிலை திரியாச் சொற்களால் செய்யுட்கள் இயற்றப்பட வேண்டும் என வலியுறுத்தப்படுகிறது.

அதற்கான இலக்கணப் பயிற்சியினை முழுமையாகக் கற்றவனில்லை யென்ற காரணத்தினால்தான் இன்றைக்கு அறுபது ஆண்டுகட்கு முன்பு நான் எழுதியவை; கவிதை வரிகளாக இருந்து கவிதையாக அமைந்திடவில்லையென்பதை நானே வெளிப்படையாக அறிவித்து “கவிதையல்ல” என்ற சொல்லோவிய நூல் ஒன்றை வெளியிட் டிருக்கிறேன்.

பெருங்கவிஞர்களாம் தமிழறிஞர்கள் பங்கேற்ற பல கவியரங்குகளில் தலைமையேற்று;

குறிப்பாக திருச்சி வானொலி முதல்
கவியரங்கில் "விடுதலை வீரர்கள்" என்ற
தலைப்பில் 1967 ஆம் ஆண்டு பாடும்போதே,

"சிறை வாழ்ந்தார் செக்கிழுத்தார் – இந்தத்
தரையாண்ட வெள்ளையரை விரட்டுதற்குக்
குறை ஆயுள் பெற்றுப் பலர் கொலையும்
உண்டார். உறை மீறி வெளிவந்த கத்தி போல
உயிர்மீது ஆசையின்றிப் போர் புரிந்தார்;
அவர் பெருமை கூறுதற்கு
அணி வகுத்த இந்த நாளில்
விடுதலைக்கு உயிரீந்த
எவர் பெருமை கூறுதற்கும்
இவர் போலக்
கவி வளத்தைப் பெற்றேனில்லை;
கவிதை பாடக் கற்றேனில்லை.
தளையறுத்த வீரர் கதை பாடுவதால்
தளையகற்றிப் பாடுகின்றேன் நானும் – அவர்
தொடை தட்டித் துரோகிகளை வீழ்த்தியதால்
தொடை தட்டும் என் பாட்டும்! என் கவிதை,
யாப்பின்றிப் போனாலும் போகட்டும் – நம்நாடு,
மொழி, மானம், உணர்வெல்லாம்
காப்பின்றிப் போதல் கூடாதெனும் கொள்கை
யொன்றால்
வாய்ப்பின்றிப் போனாலும் செய்யுள் கற்கக்
காய்ப்பின்றி நிற்கின்ற மரமாக ஆகாமல்
நெஞ்சில்
ஊறுகின்ற உணர்ச்சிகளை வரிகளாக்கிக்
கொள்கை

மாறுகின்ற கோடரிகள் உணர்வதற்கு ஒன்று
சொல்வேன்;
எத்தனை உயிர்கள் எத்துணை ரத்தம்
நித்தமும் தந்து பெற்றது விடுதலை!
இத்தரை குடைந்து மெத்தவும் உழன்று
பத்தரை மாற்றைப் பெற்றபின் அதனைக்
கைத்திறம் காட்டி அணிநகை பூட்டிச்
சித்திரப் பெண்டிர்க் களித்திடலன்றிக்
குப்பைக் குழியில் போடுதல் நன்றோ?
புட்கள் கூவிடும் சோலையின் நடுவே
முட்கள் கீறிடப் பறித்த நல் ரோஜா
கட்கம் ஏந்திய வீரர் முடியில்
வெட்கம் ஏந்திய மாதர் குழலில்
இருந்திடல் மணமா? அதனைத்
துட்டக் குரங்கின் குறுகிய கையில்
கொடுத்திடல் நலமா?
பெற்ற சுதந்திரம் பேணிக் காப்போம்;
பெற்ற மறவர்க்குப் பெருமைகள் சேர்ப்போம்.”

என எழுதியிருந்தேன்.

இப்போது புதுக் கவிதையுகம், ஹைக்கூ போன்ற பல புதுமைக் கவிதைகளின் யுகம்.

இன்னும் சொல்லப் போனால்
வாக்கியங்களை மேலும் கீழுமாக உடைத்துப் போட்டோ அல்லது ஒடித்துப் போட்டோ வண்ணக் கவிதை பாரீர் என வாய்ப்பறை கொட்டும் யுகம்.

இந்த யுகத்தில் கவிதை இலக்கணம்
நிறைவாகக் கற்றுள்ள கவிஞன் நான் என
நெஞ்சை நிமிர்த்திக் கொள்ளாவிடினும்; நான்
இதுவரை எழுதியுள்ள "கவிதை வரி ஓவியம்"
எதுவும் காதறுந்த ஊசிகளாக ஆனதில்லை.
காதறுந்த ஊசிகளையும் கவர்ந்திழுக்கும்
காந்தக் கற்களாகவே விளங்குகின்றன
என்பதைப் பெருமிதத்துடன் அறிவிக்கும் பீடு
எனக்கு உண்டு.

அதற்குரிய ஆதாரங்களாக இதோ சில :–

ஊரெல்லாம் இணைந்து ஒருலகாய்
ஆவதென்பதும்
உறவுகொண்டே மனித குலம் ஒன்றே எனத்
திகழ்வதும்
உயரிய குறிக்கோளாம் என்றுரைத்த புலவன்
கூட
தனது ஊரை மறவாமல் பூங்குன்றமென
இணைத்தே

கணியன் பூங்குன்றன் எனும்
கவிஞனாய் உலவியதைக் கவனமுடன்
எண்ணிப் பார்த்தால் – அந்த மாமனிதனையும்
மண்ணின் பற்று விடவில்லை என்பதுதான்
உண்மையன்றோ ?

★

அடுத்து ஒன்று :

தவழ்ந்து வரும் தன் மகவை
முத்தமிடுவதற்கும் குனிந்திடாமல்

தலைக்கு மேலே தூக்கச் சொல்லிக்
கொஞ்சுகின்ற
தன்மானத் தமிழ்ச் சிங்கம் அவன்!

நிலம் நோக்கும் வழக்கமின்றி
நேர்ப்பார்வை செலுத்தித்தான்

நிலவு முகத்தரசி
நெற்றியிலே இதழ் பதிப்பான்.

படுத்திருக்கும்போதும் பஞ்சணையில்
வினாக்குறி போல் வளைய மாட்டான் வில்லில்
தொடுத்திருக்கும் கணையைப் போல்
கால் நீட்டித் துயில் கொள்வான்!

'வளையாத முதுகெலும்பு பெற்றவனோ?
வணக்கம் எனும் பொருள்
விளையாத வயற்காடோ அவன் இதயம்?'
என வியந்து,

வாய்பிளந்து மூக்கின்மேல் விரல் வைத்து –
அவனை
வாழ்த்தியவர் பலருண்டு!

★

இன்னொன்று :

பனிமுட்டை அடை காக்கும்
பசும்புல்லின் தரைமீது
மணித் தேர் அசைவது போல்
மாதொருத்தி நடந்து வந்தாள்
கனித் தமிழ்ச் சொல் உதிர்க்கும் புலமை
மிக்காள்



காக்கைப் பாடினி பொன்முடியார்க்குத்
தமிழில் அவள் அக்காள்
அதியமான் நெடுமானஞ்சி – வேள்பாரி
வள்ளல் நாடன்
சேரமான் மாவெண் கோவன்,
கானப்பேர் தந்த வழுதி – மற்றும்
சோழனாம் பெருநற்கிள்ளி
ஆகியோர் புகழைப் பாடித் தமிழுக்கு
அணி பல பூட்டி நின்ற
அறிவொளி ஔவை நல்லாள்!

★

மேலும் மற்றொன்று :

மானம்; என் மகன் கேட்ட தாலாட்டு;
மரணம் அவன் ஆடிய விளையாட்டு!
பால் குடிக்கும் குழந்தையாய் இருந்தபோதே
வேல் பிடிக்கும் வித்தையினைக் கற்றுத் தந்தேன்
ஆல் விட்ட விழுது போல் தந்தைக்கு மகனாகி
– ஆட்டு
வால் போலக் குட்டை மனம் கொண்ட பகை; நம்
கோல் பறிக்கக் கூடாதென்று கொந்தளித்து;
அவர்
தோல் உரித்துத் துரத்திவிட்டுப் போரில்
மாளுகிறான்; பெரும் புகழை ஆளுகிறான்!
என் இருவிழி மழைதனைக் காணாதீர்;
என் இதயம் மகிழ்வதைக் காண்பீரே!

★

வேறொன்று :

மணப் பந்தலிலும் அந்த மகிழ்ச்சியில்லை
மகன் பிறந்த போதும் மகிழ்ச்சிக்கு
எல்லையுண்டு!
அவன் இறந்துகிடந்தான் ஈட்டிக்கு மார்பு காட்டி
அறுத்தெறிய இருந்தேன் அவன் குடித்த மார்பை
அடடா!
கருத்தெரிய பொய் சொன்ன கயவன் எங்கே?
வாள் இங்கே! அவன் நாக்கெங்கே?

★

வாள் வீச்சின் ஓசையையும், யாழின்
ஓசையையும் ஒத்ததாய் தமிழர்களை
வீறுகொள்ளவும் வியப்பு கொள்ளவும்
செய்திட்டதும் செய்து கொண்டிருப்பதுமான
இந்தக் கவிதை வரி ஓவியங்கள் போன்ற
பலவற்றைத் தமிழன்னையின் காலடிகளில்
காணிக்கையாக்கி வருகிறேன்.

மரபு நிலை கூட திரியலாம், என் மனநிலை
திரியவில்லை; திரியாது என்பதை இதுவரை
நான் இந்தப் பூங்காவில் பறித்தளித்துள்ள
ஒவ்வொரு மலர் நிலையும் உணர்ந்தோர்
அறிவர்! அறிந்தோர், உணர்வர்!

முதல் நூலும் வழி நூலும்!

கலைஞரின் தொல்காப்பியப் பூங்கா

(1) "வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே
நிகழ்ச்சி அவர் கட்டு ஆகலான"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 93)

(2) "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
முனைவன் கண்டது முதல் நூலாகும்"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 95)

(3) "வழியின் நெறியே நால்வகைத்தாகும்"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 97)

(4) "தொகுத்தல், விரித்தல், தொகைவிரி,
மொழிபெயர்த்து
அதர்ப்பட யாத்தலோடு அனை மரபினவே"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 98)

இந்த நான்கு நூற்பாக்களுக்கும்
விரிவான விளக்கம் வருமாறு :

(1) உலகில் நடைபெறும் நிகழ்ச்சிகள்
உயர்ந்தோர் வழங்கும் சொற் பொருளமைப்பாகிய
வழக்கினைச் சார்பாகக் கொண்டு நிகழ்வதால்,

வழக்கு எனச் சிறப்பித்துக் கூறப்படுவது அந்த உயர்ந்தோர் வழக்கேயாகும். அஃதன்னியில் உலக வழக்கு, செய்யுள் வழக்கு, இயல்பு வழக்கு என்பனவற்றைக் குறிக்கும். சொற்களின் பொருள் நிலை மாறுபடாமல் உயர்ந்தோர் வழக்கினை அடியொற்றி உலக வழக்கு, செய்யுள் வழக்கு ஆகிய இருவகை வழக்குகளையும் எல்லா தரப்பினருக்கும் சென்று சேரக் கூடிய அளவில் எளிமைப்படுத்திப் போற்றிக் காத்தல் மொழி வளர்ச்சிக்கு அரண் செய்வதாகும்.

★

(2) அவ்வாறு அரண் அமைத்திடும் பணியில் அடுத்தடுத்துத் தொடர்ந்து ஈடுபடும் வாய்ப்பு, இந்த நூலின் மூலமும் எனக்குக் கிட்டியது எனலாம்.

தொல்காப்பியம் முதல் நூல் என்றும், அந்த நூலையும் அறிவின் முனைவன் இயற்றினான் என்றும், அதுவும் எத்தகைய முனைவன் என்றால்; வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன் என்றும்; நூலாசிரியரான தொல்காப்பியரே தன்னைப் பற்றிச் சொல்லிக் கொள்வாரா என்ற கேள்வி; இந்த நூற்பாவுக்குத் தவறான பொருள் கொண்டால் நமக்கு எழத்தான் செய்யும்.

வழி நூல்கள் வருவதையொட்டி அல்லது வந்ததையொட்டி அவற்றுக்கு முந்தைய நூல் முதல் நூல் எனப்படும்.

முனைவர் இலக்குவனார் தொல்காப்பியம் பற்றித் "தொல்காப்பிய ஆராய்ச்சி" என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

"தமிழ் மொழியில் நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் மிகப் பழமையானது தொல்காப்பியம் என்று கூறப்படுகின்றது. தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள் நமக்குக் கிடைத்தில. ஆதலின் தொல்காப்பியத்திற்கு முற்பட்ட நூல்கள் இல்லையென்று கூறிவிட இயலாது. தொல்காப்பியம் ஓர் இலக்கண நூலாகும். எம்மொழியிலும் இலக்கியம் தோன்றி வளர்ந்த பின்னரே இலக்கணம் தோன்றும். இதற்குத் தமிழ் மொழியும் புறம்பன்று. தமிழிலும் இலக்கியங்கள் தோன்றிய பின்னரே இலக்கணங்கள் தோன்றியுள்ளன. தொல்காப்பியமும், இலக்கியங்கள் மட்டுமன்றி இலக்கணங்களும் பல தோன்றிய பின்னரே இயற்றப்பட்டுள்ளது என்பதைத் தொல்காப்பியமே தெற்றெனப் புலப்படுத்துகின்றது. ஆதலின் தொல்காப்பியம் இன்று நமக்குக் கிடைத்துள்ள நூல்களில் காலத்தால் முற்பட்டதேயன்றி, அதுதான் தமிழின் முதல் நூல் என்று கருதிவிடுதல் கூடாது."

முதல் நூல் தொல்காப்பியமா என்ற வினாவுக்கு விடை கிடைப்பதற்கு முன்பே தொல்காப்பியரின் ஆசிரியர் அகத்தியர் என்றும் அவர்தான் முதல் நூல் இயற்றியவர் என்றும், வடநூலார் பாணினி என்பார் தொல்காப்பியருக்கு முன்பே இலக்கணம் வகுத்தவர் என்றும், தொல்காப்பியர் சமதக்கினி என்ற ஆரிய முனிவரின் மகன் என்றும், சமதக்கினி பரசுராமனின் தந்தை என்பதால் பரசுராமனும் இராமனும் சம காலத்தவர் என்ற நிலையில்; அகத்தியர் இராமன் காலத்தவர் என்றும், அவரது மாணவரான தொல்காப்பியரும் அதே காலத்தவர் என்றும், பொய்ப் புராணங்கள் புறப்பட்டுவிட்டன புற்றீசல் போல!

வேடிக்கை என்னவெனில் இராமன் காலம் கி.மு. 2000க்கு முற்பட்டது. பாணினியின் காலம் கி.மு. 350. பாணினிக்குப் பின்னர் தொல்காப்பியர் தோன்றியிருப்பின் பனம்பாரனார் பாடிய தொல்காப்பிய சிறப்புப் பாயிரத்தில் "ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன்" எனக் குறிப்பிட்டி ருக்கமாட்டார். "பாணினீயம் நிறைந்த தொல்காப்பியன்" என்றே குறிப்பிட்டிருப்பார்.

ஐந்திரம் நிறைந்த தொல்காப்பியன் என்பது தொல்காப்பியர் பாணினிக்கு முற்பட்டவர் என்பதைச் சந்தேகம் நீங்க நிலை நாட்டுகிறது.

இப்பொழுது இந்த நூற்பா;
தொல்காப்பியம் முதல் நூலா என்பது பற்றிப் பேசவில்லை. மாறாக; வழி நூல்கள் எவ்வாறு அமைகின்றன என்பதைச் சொல்ல வந்து; வழி நூல்கள் என்றால் அவற்றுக்கு ஒரு முதல் நூல் இருக்க வேண்டுமே; அந்த முதல் நூல், யாரால் எப்படிப் படைக்கப்பட வேண்டும் என்பதற்கு அடியெடுத்துக் கொடுக்கிறது அவ்வளவுதான்!

ஆனால் நமது பழம் பெரும் அறிஞர் பெருமக்களான உரையாசிரியர்கள் சிலர் முதல் நூலை இறைவனே படைத்திட்டான் என்பது போல கருத்தறிவித்துள்ளனர்.

அது மட்டுமல்ல; அகத்தியமே முற்காலத்து முதல் நூல் என்றும் அதன் வழி நூல் தொல்காப்பியம் என்றும் கூறுவது எத்துணை பயங்கரமான சூழ்ச்சி என்பதைச் சிந்தித்து உண்மை உணர வேண்டாமா?

தொடக்கத்தில் எடுத்துக் காட்டியுள்ளது போல; முதல் நூல், வழி நூல், வழி நூல் வகை பற்றி விளக்குகிற நூற்பாக்களாக இவற்றைக் கருத வேண்டுமேயல்லாமல் முதல் நூல்; தொல்காப்பியர் இயற்றியதா? அல்லது இறைவன் இயற்றியதா? என்ற ஆராய்ச்சி தேவையில்லை.

> "வினையின் நீங்கி விளங்கிய அறிவின்
> முனைவன் கண்டது முதல் நூலாகும்"

என்பதை,

விளங்கிய அறிவின் முனைவன் கண்டது
வினையின் நீங்கி முதல் நூலாகும்

என்று கருதுவதே பொருத்தமானதாகும்.
"அறிவிற் சிறந்து விளங்குவோர் முனைந்து கண்டதே; குற்றம் குறையில்லா முதல் நூலாக அமையும்" எனப் பொருள் கொள்வதே சிறப்பாகும்.

★

(3, 4) வழி நூல் நான்கு வகைப்படும். முதலில் விளக்கப்பட்டுள்ள நூற்பா சுட்டிக் காட்டும் முதல் நூலின் வழியில் வருவது வழி நூல் எனப்படும்.


அந்த வழி நூல் வகை முதல் நூலில் இருப்பவைகளைத் தொகுத்து நூலாக்குதல், விரித்து நூலாக்குதல், தொகுத்தும் விரித்தும் நூலாக்குதல், மொழிபெயர்த்தல் ஆகிய இவை நான்கும் எனப்படும்.

தென்றத்து விளக்காகும்!

பூங்கா ஒன்று அமைக்கிறோம் என்றால் அங்கே எத்தகைய செடி கொடிகள் மரங்கள், உலவிட வருவோர்க்கான வசதிகள் வேண்டுமென சிந்தித்து அவற்றைச் செயல்படுத்துகிற அதே நேரத்தில் பூங்காவில் எவை எவை இடம் பெறக் கூடாது என்று பார்த்துக் கொள்வதிலும் எச்சரிக்கையாக இருக்க வேண்டியுள்ளது.

பூங்கா அமைப்பு; நூல் அமைப்புக்கும் பொருந்துமென்பதால் ஒரு நூல் அமைப்பில் எத்தகைய சிதைவுகள் (குறைகள்) இருத்தலாகாது என்பதை ஒரு நூற்பா எடுத்துக் காட்டுகிறது.

போக்குவரத்து விதிகளின்படி ஒரு சாலையில் இடது பக்கமாகச் செல்வதும், வலது பக்கமாகச் செல்வதும் நாட்டுக்கு நாடு வேறுபட்டு இரண்டில் ஒன்று விதியாகச் செய்யப்படுகிறது.



எந்தப் பக்கம் என்பது முக்கிய பிரச்சினை ஆனாலும் அதை விட மிக முக்கியமான பிரச்சினை அனுமதி அடையாளம் கிடைக்காமல் சாலையின் குறுக்கே போகக் கூடாது என்பதாகும்.

அதே போல பூங்காவில் ஒரு நீச்சல் குளம் தேவைதான் எனினும்; வேறொரு புறத்தில் தரைக் கிணறு அமைத்திடக் கூடாது. காரணம்; பூங்காவில் தாய் தந்தையருடன் வந்த குழந்தைகள், பெற்றோர் அறியாமல் ஓடி விளையாடிடும்போது தவறிப் போய் அந்தத் தரைக் கிணற்றில் விழுந்து விடக்கூடும்.

பூங்காவில் அமர்ந்து படிக்கலாம் என்று புத்தகமும் கையுமாகச் சிலர் வருவர். அவர்களுக்கென ஒளி மயமான விளக்குகள் ஓரிரு இடங்களில் எரிந்திடல் வேண்டுமெனினும்; நாள் முழுவதும் அலுவலகத்திலும் வீட்டிலும் பணியாற்றிவிட்டு ஓய்வாக உட்கார்ந்து உற்சாகமாக உரையாடிட ஆடவர், பெண்டிர் என வீட்டு விளக்குகள் ஆங்காங்கு தனித்தனியாக அமர்ந்து ஒளி மறைவாகப் பொழுது போக்கிட விளக்குகள் இல்லாதிருக்க வேண்டும். இருப்பினும் மங்கலாக மட்டுமே எரிய வேண்டும்.

அவசரத் தேவைக்குக் கழிவறை வேண்டுமெனினும் அதைப் பூங்கா நடுவே அமைத்திடல் கூடாது.

இவ்வாறு பூங்காவில் அனுமதிக்கக் கூடாதவை, இருக்கக் கூடாதவை பற்றியெல்லாம் கூறியுள்ளது போலவே; ஒரு

நூலில் இடம் பெறலாகாத குறைகளை
வரிசைப்படுத்தி இந்த நூற்பா குறிப்பிடுகிறது.

★

"சிதைவு எனப்படுபவை வசை அற நாடின்
கூறியது கூறல், மாறுகொளக் கூறல்
குன்றக் கூறல், மிகைபடக் கூறல்,
பொருள் இலமொழிதல், மயங்கக் கூறல்
கேட்போருக்கு இன்னா யாப்பிற்று ஆதல்
பழித்த மொழியான் இழுக்கம் கூறல்
தன்னான் ஒரு பொருள் கருதிக் கூறல்
என்ன வகையினும் மனக்கோள் இன்மை
அன்ன பிறவும் அவற்று விரி ஆகும்"

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 109)

முன்பு கூறியதையே பின்பும் கூறுவது
என்ற கூறியது கூறல், முதலில் ஒன்றைக் கூறி
விட்டு பிறகு அதற்கு முரணாகக் கூறல்,
கூற வேண்டியதை நிறைவாகக் கூறாமல்
குறைவாகக் கூறல், ஒன்றை மிகைப்படுத்திக்
கூறல், பொருளற்ற செய்திகளைக்
குறிப்பிடுதல், கேட்போரோ படிப்போரோ
குழப்பமடையுமாறு விளக்குதல், கேட்போர்
செவிக்கு இனிமை கிட்டாத வண்ணம்
சொல்லுதல், பெரியோர் பழித்திட்ட சொல்லை;
அதன் இழிந்த நிலை கருதாமல் எடுத்தாளுதல்,
நூலின் வாயிலாக வெளிப்படுத்த வேண்டிய
அறிவுரை பற்றிக் கவலையுறாமல், தன் கருத்தை
எப்படியும் புனைந்துரைத்து இடைச்
செருகலாற்றுதல், படிப்போரும் கேட்போரும்
சுவைத்திட முடியாத பழுதுற்ற நிலையில்
படைத்தளித்தல் எனப்படும் இந்தப் பத்து குற்றம்

குறைகளும் அவற்றின் குட்டிக் குறைகளும்
ஒரு நூலுக்குப் பெருமை வழங்காது!

இத்தகைய குற்றங்குறைகள்
இல்லாதிருப்பின் "எதிர் மறுத்து உணரின்
அத்திறத்தவும் அவையே" எனும் நூற்பாவுக்கு
ஏற்ப நூலின் சிறப்பு மிகும். குறை நீங்கும்.
குன்றத்து விளக்காகும்.

"சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல்
நவின்றோர்க் கினிமை நன்மொழி புணர்த்தல்
ஓசை யுடைமை ஆழமுடைத் தாதல்
முறையின் வைப்பே உலக மலையாமை
விழுமியது பயத்தல் விளங்கு தாரணத்த
தாகுதல் நூலிற் கழகெனும் பத்தே"

–"நன்னூல்" –

மலர் (100)

நூறாவது மலர்!

மரபியலின் முந்தைய நூற்பாவில் தவிர்க்கப்பட வேண்டிய குற்றங் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டன.

இந்த நூற்பா, நூலுக்கு ஒத்து வரக் கூடிய உத்திவகைகள் முப்பத்திரண்டு எனக் குறிப்பிட்டு; பிறவும் கூட என்று கூறுகிறது.

கூறியதைக் கூர்மையாக அறிதல், அதிகாரங்களை ஒழுங்குற வரிசைப்படுத்தல், இறுதியாகச் செம்மையாகத் தொகுத்துக் கூறுதல், முறைப்படுத்தி உண்மையை உறுதிப்படுத்துதல், சொன்னதைக் கொண்டு சொல்லாததை நிறைவு செய்தல், வராதது கூறுங்கால் ஏனைய வரும் என முடித்தல், வந்ததை வைத்து வராததை உணர்த்தல், முதலில் கூறிய முறையை பிறகு சிறிதளவு மாற்றிக் கூறுதல், அதனைப் பொருந்தும்

வண்ணம் வாய்மையுடன் கூறுதல், ஒன்றே சொல்லுதல், இரண்டும்கெட்டான் நிலை என்றில்லாமல் தன் கொள்கையை வெளிப்படுத்தல், நூலில் கடைப்பிடிக்கப்படும் முறை பிறழாதிருத்தல், பிறர் உடம்பட்டதைத் தானும் ஏற்றுக் கொள்ளல், முதலில் கூறியதை இறுதிவரை பாதுகாத்தல், விதிமுறை போற்றுதல், தெளிவுபடுத்துவோம் எனல், கூறினோம் எனல், புதிதாகக் குறியிடுதல், ஒரு சார்பு இல்லாதிருத்தல், முன்னோரின் முடிவை நினைவூட்டுதல், அமைத்துக் கொள்க எனக் கூறல், பல பொருட்கள் இருப்பினும் அவற்றுள் நல்ல பொருள் கொள்ளுதல், வகுத்தும் தொகுத்தும் வரையறுத்தல், எதிர்க் கருத்தை மறுத்து தன் கருத்தின் வலிமையை நிலைநாட்டுதல், பிறர் கருத்தை சான்றாகப் பொருத்திக் கொள்ளுதல், பெரியோர் கருத்தையேற்று அதையே, தானும் கூறுதல், கருத்து விளக்கத்திற்கு வேறு பொருள்களையும் பயன்படுத்தல், மாற்றுப் பொருளையும் உணர்த்துதல், சொன்ன சொல்லில் உள்ள குறையை திருத்தி நிறைவு செய்தல், தேவைக்கு அதிகமாக தன் கருத்தை வலியுறுத்தாதிருத்தல், எதையும் நன்றாக நினைவுபடுத்திக் கூறுதல், கூறும் கருத்தைக் கேட்போர் உய்த்து உணரும்படி கூறல் என முப்பத்திரண்டு உத்திகளுடன் பிற உத்திகளையும் கருவிகளாகக் கொண்டு நீக்கப்பட வேண்டிய தவறுகளை நீக்கம் செய்து நூல் படைக்கப்பட வேண்டும். இதற்கான நூற்பாதான் இந்தத்



தொல்காப்பியப் பூங்காவின் நூறாவது மலராக மலர்ந்து உங்கள் கரங்களில் நூறு மலர்களும் தொகுக்கப் பெற்று வழங்கப்பட்டுள்ளது.

★

“ஒத்த காட்சி உத்திவகை விரிப்பின்
நுதலியது அறிதல், அதிகார முறையே,
தொகுத்துக் கூறல், வகுத்து மெய்ந் நிறுத்தல்
மொழிந்த பொருளோடு ஒன்ற அவ்வயின்
மொழியாததனை முட்டின்று முடித்தல்,
வாராததனான் வந்தது முடித்தல்
வந்தது கொண்டு வாராதது உணர்த்தல்
முந்து மொழிந்ததன் தலை தடுமாற்றே
ஒப்புக் கூறல், ஒருதலை மொழியே
தன் கோள் கூறல், முறை பிறழாமை,
பிறன் உடம்பட்டதுதான் உடம்படுதல்
இறந்தது காத்தல், எதிரது போற்றல்
மொழிவாம் என்றல், கூறிற்று என்றல்
தான்குறியிடுதல், ஒரு தலை அன்மை
முடிந்தது காட்டல், ஆணை கூறல்
பல்பொருட்கு ஏற்பின் நல்லது கோடல்
தொகுத்த மொழியான் வகுத்தனர் கோடல்
மறுதலை சிதைத்துத் தன்துணிபு உரைத்தல்
பிறன் கோட் கூறல், அறியாது உடம்படல்
பொருள் இடைஇடுதல், எதிர்பொருள்
உணர்த்தல்
சொல்லின் எச்சம் சொல்லியாங்கு உணர்த்தல்
தந்துபுணர்ந்து உரைத்தல், ஞாபகம் கூறல்
உய்த்துக் கொண்டு உணர்த்தலொடு
மெய்ப்பட நாடிச்

சொல்லிய அல்ல பிற அவண் வரினும்
சொல்லிய வகையால் சுருங்க நாடி
மனத்தின் எண்ணி மாசு அறத் தெரிந்து
கொண்டு
இனத்திற் சேர்த்தி உணர்த்தல் வேண்டும்
நுனித்தகு புலவர் கூறிய நூலே”

(பொருளதிகாரம் – மரபியல் – நூற்பா : 111)

காலத்தால் பாணினிக்கும்,
கௌடில்யருக்கும் முற்பட்ட தொல்காப்பியரின்
இலக்கிய இலக்கண இன்பத்தில் நானும்
மூழ்கித் திளைத்து உங்களையும் பூங்கா புக
அழைத்தேன்.

வந்தோரை வெறுங்கையுடன் அனுப்புவது
தமிழர் பண்பாடல்ல என்ற முறையில் நூறு
மலர்களை அள்ளித் தந்திருக்கிறேன் உங்கள்
அமுதக் கரங்களில்!



நூறாக ஒரு நூலாக

‘பூ’ங்கா புகுமுன் எனத் தலைப்பிட்டு – சில
பூக்கள் கொய்து தருகின்றேன் வாரீர் என்றேன்.

“புது முயற்சி செய்யப் போகின்றான்; இந்தப்
பூங்காவில் இவன் நுழைந்து

என்ன மலர் பறிப்பான்” என்று
சின்னவர் முதல் பெரியவர் வரை எல்லாரும்

அவர்க்குள்ளே பேசியது மட்டுமன்றி,
அதையும் என்னிடமே கேட்கலானார்!

“குறளுக்கு ஓவியம் தீட்டினீர் – எமக்குக்
குளிர்ந்தது இதயம்; உண்மை!

சங்கத் தமிழ் இலக்கியம் கண்டீர்;
தங்கத் தமிழ் அதுவென ஒப்புக் கொண்டோம்!

குறள் முழுமைக்கும் உரையே யாத்தபோது
திறன் போற்றி வாழ்த்துச் சொன்னோம்.

இலக்கியப் பசி உமக்கு நிரம்ப உண்டெனினும் –
புலவர்
ஆக்கி வைத்தால் அள்ளி உண்பீர் என
எண்ணியிருந்த எம்கணக்கெல்லாம்
பொய்யாகிப் போனது போல்
பசியாற மட்டுமல்ல இலக்கியத்தைப்
படைப்பதற்கும் தெரியுமெனக் காட்டி – இதோ
பரிமாறியும் இருக்கின்றீர்!

தொல்காப்பியத்தைத் தொடுவதற்கே தனித்
துணிவு வேண்டுமெனத் தமிழ்ப் புலவர்
பேசும்வேளை;

கல் குத்தும் காலில், முள் குத்தும் தோளில்
எனத் தெரிந்தும்
காட்டு வழிக் கடும் பயணம் எப்படி
மேற்கொண்டீர்'' என்றார்!

''அறிவாளிகள் நுழைய அஞ்சும் இடத்தில்
அஞ்சாமல் ஒருவன் நுழைவான்'' எனும்

ஆன்றோர் மொழி மெய்ப்பிக்கும் வண்ணம்
அடியேன் நுழைந்தது காடல்ல பூங்கா என்று;

அழகு மலர் அறிவு மலர் அன்பு மலர்
ஆதி காலத் தமிழ்ப் பண்பு மலர்

பல பறித்து வந்து உம் பாத மலர்களில்
பாசமுடன் காணிக்கை வைத்துள்ளேன்

இலக்கண இலக்கியச் சுரங்கம் அது;
இப்போதுதான் புரிகிறது

தொட்ட இடமெல்லாம் பொன்னும் மணியும்
வட்ட நிலாப் பூவாய் மலர்ந்து வாசம் கமழும்
புதுமை!

எழுத்து
சொல்
பொருள் எனும்

எழிலார் பூங்கொத்து கண்டும்;

வெட்சி
வஞ்சி
உழிஞை
தும்பை
காஞ்சி எனும்

திணைப் பூக்களின் தேன் மணம் நுகர்ந்தும்;

களவியல்
கற்பியல்
பொருளியல்
மெய்ப்பாட்டியல்
மரபியல் எனும்

இயல்களிலே பழமை புதுமை எலாம்
இணைந்தும் – இனிய மலர்

நூறாக வழங்கியுள்ளேன் – இதை ஒரு

நூலாக வழங்கியுள்ளேன்!

நன்றியும் வாழ்த்தும்

"தொல்காப்பியப் பூங்கா" அமைத்துத்
தேர்ந்தெடுத்த
தேன் மலர்களை வழங்கிட
ஓய்வின்றி நான் உழைத்த போது
உடனிருந்து; நான் எழுதிக் குவித்ததை
உடனுக்குடன் தட்டச்சு செய்து கொடுத்தும்,

இஃதோர் நூலாக வடிவெடுத்திட
தொய்வில்லா உழைப்பை வழங்கித்
துணை நின்ற அன்புத் தம்பி
சண்முகநாதனுக்கும்,
இந்நூலை வெளியிடும்
தமிழ்க்கனி பதிப்பகத்தாருக்கும்,
அணிந்துரை வழங்கிய
அருந்தமிழ்ப் பேராசிரியர் அன்பழகனார்
அன்புப் புலவர் நன்னன் ஆகியோர்க்கும்

அழகுற அச்சியற்றி

அளித்துள்ள அச்சகத்தார்க்கும்


ஓவியர்கள் ஜெயராஜ்,

மணியம் செல்வன், ஷியாம்,

பிரேம்குமார், கரோ ஆகியோருக்கும்

நன்றியும், வாழ்த்தும்!

அன்புள்ள



இலவச இணைய நூலகம்
www.tamilvu.org

தொல்காப்பியப் பூங்கா எழுதத் தொடங்கியது

1–9–2002 கோவாவில்!

நிறைவு செய்தது

3–10–2002 சென்னையில்!

கலைஞரின் படைப்புகள்

இலக்கியங்கள்

சங்கத் தமிழ்
குறளோவியம்
திருக்குறள் கலைஞர் உரை
கலைஞரின் கவிதைகள்
சிலப்பதிகாரம் (நாடகக் காப்பியம்)
ஒருதலைக் காதல்
மீசை முளைத்த வயதில்

கதைகள், புதினங்கள்

ரோமாபுரிப் பாண்டியன்
பொன்னர் சங்கர்
பாயும்புலி பண்டாரகவன்னியன்
தென்பாண்டிச் சிங்கம்
புதையல்
கலைஞரின் சிறுகதைகள்
பதினாறு கதையினிலே
ஒரே ரத்தம்
வெள்ளிக்கிழமை

பேச்சுத் தொகுப்புகள்

முத்துக்குளியல்
மேடையிலே வீசிய மெல்லிய பூங்காற்று
கையில் அள்ளிய கடல்

நிலையம்
சென்னை-18
அறிவாலயம்

ஒளிபடைத்த கண்ணினாய்
முக்கனி

கடிதத் தொகுப்புகள்

கலைஞர் கடிதம் – பாகம் 1 முதல் பாகம் 12 வரை

வாழ்க்கை வரலாறு

நெஞ்சுக்கு நீதி பாகம் 1
நெஞ்சுக்கு நீதி பாகம் 2
நெஞ்சுக்கு நீதி பாகம் 3
நெஞ்சுக்கு நீதி பாகம் 4 (அச்சில்)

நாடகங்கள்

அரும்பு
உதய சூரியன்
புனித ராஜ்யம்
மணி மகுடம்
தூக்குமேடை
பரப்பிரம்மம்
மனோகரா
வண்டிக்காரன் மகன்
பராசக்தி
நச்சுக்கோப்பை
நான்மணிமாலை

பயணக் கட்டுரை

இனியவை இருபது

